Koviloor Digital Library

ஸ்ரீ கண்ணனின் பால்ய லீலைகள்

ACC. NO.
12368

Koviloor Digital Library

Koviloor Digital Library

4-2

ஓம்

ஸ்ரீ சத்குரு திருவடி துணை!

ஸ்ரீ கண்ணனின் பால்ய லீலைகள்

அருள்பவர்

ஸ்ரீ சத்குரு தூளி ஸ்வாமிகள்

அன்பின் குடில்
253/1, மேட்டூர் பவானி மெயின் ரோடு, கோம்பூர்,
நெரிஞ்சிப்பேட்டை, பவானி (தாலுகா),
ஈரோடு (மாவட்டம்)
தொலைபேசி : 04256-27655

வெளியீடு :
திருவடிக் குழந்தைகள்
ஈரோடு

ACC No: 12368

Koviloor Digital Library

முதல் பதிப்பு : குரு பூர்ணிமா
ஜூலை 24, 2002

பிரதிகள் : 1000

OOR ANDAVAR ★ LIBRARY, KOVILOOR
A. No. 12368

Printed by :
Pearl Offset Printers & Publishers
89, Rangarajapuram Road,
Kodambakkam,
Chennai - 600 024.
Phone : 4833090, Fax : 4814663

Koviloor Digital Library

4-2

பொருளடக்கம்

1. ஸ்ரீகண்ணன் பால்ய லீலைகள் 1

2. ஸ்ரீசக்குபாயின் திடபக்தி 86

3. ஸ்ரீ நரசிம்மமேதாவின் திடஞானம் 105

4. ஸ்ரீதுகாராமின் திடவைராக்கியம் 119

5. ஸ்ரீநாமதேவரின் பிரேம பக்தி 129

6. இந்த உலக பிரேமையை எப்படி விடுவது? 142

Koviloor Digital Library

ஸ்ரீ சத்குரு திருவடி துணை!

முன்னுரை

அன்பின் குழந்தைகளே!

ஸ்ரீதிரு அருளாலும், ஸ்ரீகுரு அருளாலும் ஸ்ரீபாகவதோத்தமர்களாகிய உங்கள் அனைவரின் ஸ்ரீதிருவடித் தூளியை எம் சிரமேல் தாங்கி, ஸ்ரீகருணையால் ஸ்ரீஞானதீபமலர் என்ற இந்த ஸ்ரீபகவத் புலம்பலை உங்களின் பாதார விந்தங்களில் மிகவும் பணிவன்புடன் சமர்ப்பிக்கிறோம்.

இதன் உள்அடங்கியது பக்தி கலந்த ஞானத் தெளிவாகும். இக்கலியுகத்தில் எளிய முறையில் படித்து, உணர்ந்து பயன் பெறவும் எம் ஸ்ரீசத்குரு தேவரும், ஸ்ரீபரமாத்மாவும் உடன் இருந்து உணர்த்த, உணர்ந்து பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் உபதேச கிரமத்திலிருந்தும், ஸ்ரீபாகவதம், ஸ்ரீபக்த விஜயம் மற்றும் ஸ்ரீமஹான்கள் வாயிலாக கேட்டு உணர்ந்ததும், இவை யாவற்றிலும் சுய அனுபூதியாக உணர்ந்ததை மட்டும் உங்கள் அனுபவத்திற்காக உணர்த்துகிறோம்.

எம் மழலைச் செல்வங்களே!

சிரத்தையே ருது !

உபதேசமே பிந்து !!

ஞானமே கர்ப்பம் !!!

ஆனந்தமே சிசு !!!!

என மஹான்கள் வாக்கியத்திற்கிணங்க, இந்த ஞான சாரத்தை கதை என்ற நோக்கத்தில் காண வேண்டாம். கருத்துடன் நோக்குங்கள். ஓர்மித்த புத்தியுடனும், கூர்ந்த அறிவுடனும் இதை பலமுறை படித்து உணர்ந்தால் புதிய புதிய அனுபவம் பெறுவீர்!

Koviloor Digital Library

ஒரே வாசகம் மறுமுறை வாசிக்கும்போது உங்கள் வினைபரிபாகத்திற்கும், மன பரிபாகத்திற்கும் ஏற்றவாறு கருத்துக்களை அள்ளிக்கொடுக்கும்.

பக்தியின் முதிர்ச்சியே ஞானமாகும்.
ஞானத்திற்கென தனி முயற்சி இக்கலியில் தேவை இல்லை!

" நையாத மனிதர்க்கு உய்யாது கண்டு கொள்ள"

என்ற படியும்,

"அழுதால் உன்னை பெறலாம்"

என்ற படியும்

உங்கள் உள்ளத்தை நையப்பண்ணி பஞ்சு போன்ற தன்மையாக்கிக் கொள்ளுங்கள்.

ஸ்ரீபரிபூரண சரணாகதியே முக்கிய லட்சியமாக கொள்ளுங்கள். தேவைகளையும், ஆசைகளையும் குறைத்துக் கொள்ளுங்கள். இறைவனால் கொடுக்க முடியாத, **"போதும்"** என்ற நிறைவை பெற்றுக் கொள்ளுங்கள்.

எதிலும் **"போதும்"** என்ற திருப்தியுறுங்கள்.

ஆசையும், கோபமும் உங்களுக்கு காலன் ஆகும் என உணருங்கள். இனி இந்த ஸ்ரீபகவத் புலம்பலை படிக்கலாம்.

- தூளி

Koviloor Digital Library

ஸ்ரீசத்குரு திருவடி துணை!

ஸ்ரீபாண்டுரங்க பரப்பிரம்மனே நம:

அருள்ஞானக் குழந்தைகளே!

ஸ்ரீசத்குரு திவ்விய சரணாரவிந்தங்களை பற்றிக் கொண்டு, ஸ்ரீஅவன் ஆகிய திருமேனியில் அன்பை வளர்த்து **"அவன் அருளால் அவன்தாள் வணங்கி"**, அவன் அம்சமாகிய உங்கள் திருவடிகளில் சிரம் புதைத்து, உங்கள் ஸ்ரீபாதமலரை சென்னி சூடி, உங்கள் திருவடித் தூளியை எம் சகஸ்ராரத்திலும், உங்கள் ஸ்ரீபத்ம பாதத்தை எம் ஹிருதய ஹாரத்திலும் தரித்துக் கொண்டு, உங்கள் ஸ்ரீபாதமலரின் கீழ் அமர்ந்து கொண்டு இப்பணியை தொடங்குகிறோம்.

அன்பின் அம்சங்களே! அருந்தவக் குழந்தைகளே! தேவகி மகனாகியும், யசோதையின் புதல்வனாகியும், வசுதேவ தனயனாகியும், நந்தகோப குமாரனாகியும், ஸ்ரீபக்த வத்ஸலனாகியும், சர்வஜீவதயாபரனாகியும், கோகுலத்தில் வளர்ந்த அந்த மாயவனாகிய ஸ்ரீகண்ணபிரானின் திருவடிகளில் அவன் பால்ய லீலைகளை மட்டும் ஸ்ரீபெரியோர்கள் உரைக்கக் கேட்டபடி விண்ணப்பிக்கிறோம். இதன் மூலகாரணத்திற்கு அவனே காரணகர்த்தா! யாம் என்றும் ஓர் கருவியே! பதுமையே! இது உறுதி!

ஸ்ரீகண்ணன் பால்ய லீலைகள்

குழந்தைகளே!

மதுராவில் கம்சனின் தங்கையாகிய தேவகியின் இளஞ்சிங்கமாக ஸ்ரீமந்நாராயணன் திருஅவதரித்தார்! துஷ்டர்களை சம்ஹரிக்கவும், பக்தர்களை ரட்சிக்கவும் தேவகி வயிற்றில் மாயாவடிவைக் காட்டி அயோனி சம்பந்தனாய் ஸ்ரீகண்ணன் அவதரித்தான். தம் வரவை தேவகிக்கும், வசுதேவருக்கும் அறிமுகப்படுத்தி தன்னை கோகுலத்தில் உள்ள நந்தகோபனின் இல்லத்தில் யசோதையிடம் சேர்க்கும்படியாகவும்,

Koviloor Digital Library
அங்கு அவள் கர்ப்பத்தில் பிறந்த குழந்தையை (ஸ்ரீ யோகமாயை) இங்கு கொண்டு வந்து விடும்படியாகவும், இது ரகசியமாக இருக்க வேணுமென்றும் சொல்லி திருஅவதரித்தான்.

வசுதேவர் அஷ்டமியில் அவதரித்த ஸ்ரீகண்ணனை ஓர் கூடையில் எடுத்து வைத்தார். பூட்டி இருந்த சிறைச்சாலை திறந்து கொண்டது. காவலர்கள் மாயையினால் மயங்கி விழுந்தனர். ஸ்ரீகண்ணனை தம் தலையில் தாங்கி மதுராவைத் தாண்டி யமுனை நதி தீரத்திற்கு வந்தார். தேவர்கள் பூமாரி பொழிந்தார்கள். யமுனாபவானிக்கு ஆனந்தம் தாளவில்லை. பொங்கி எழுந்தாள். ஆகாய கங்கையும் ஆனந்தத்தால் வருஷித்தாள். இது தெரிந்த ஆதிசேஷன் ஸ்ரீபரந்தாமன் மேல் மழைத்துளி விழாதபடி குடையாக பின்னாலேயே சென்றான்.

யமுனையின் ஆனந்தத்தால் வெள்ளம் கரை புரண்டு ஓடியது. ஆனால் யமுனைதேவி ஸ்ரீபரமாத்மாவுக்கு வழிவிடும் பாவனையில் மத்தியில் இடைவெளியை தோற்றுவித்தாள். அதன் வழியாக வசுதேவர் நடந்து சென்றார். வசுதேவருக்கு இடுப்பளவு ஜலமே இருந்தது. யமுனைக்கு ஓர் ஆசை ஏற்பட்டது. ஸ்ரீமாதவனின் திருவடியை ஸ்பரிசித்து, அலம்பி தம்மை சுத்திகரிக்கும் பொருட்டு பொங்கி எழுந்தாள். வசுதேவருக்கு கழுத்தளவு ஜலம் வந்துவிட்டது. அவருக்கு தர்மசங்கடமாகி விட்டது. அவரால் நிலைமையை சமாளிக்க முடியவில்லை.

ஓ மழலைகளே!

வசுதேவர் கண்ணீர் மல்கி ஸ்ரீகண்ணனைக் கரைத்தார். ஸ்ரீகண்ணன் கரைந்தான். தற்சமயம் தமக்கு தந்தையாக இருக்கும் வசுதேவருக்கு சிரமமில்லாமல் இருக்க திருவுள்ளம் கொண்டு தம் அபயகரத்தை வசுதேவரின் தலைக்கு நேராக நீட்டி ஆள்காட்டி விரலைக் காட்டி அதைப் பற்றிக் கொள்ளுமாறு சமிக்ஞை செய்தான்.

இதை அறிந்த வசுதேவர் ஸ்ரீ கண்ணனின் விரலைப்

Koviloor Digital Library
பற்றிய மாத்திரத்தில் தன்னை மறந்தார். தலைவனில் கலந்தார். பயம் நீங்கியது. மனோசஞ்சலம் நீங்கியது. அமைதியாக, ஆனந்தமாக நதியைக் கடந்து சென்றார். அதே நேரம் யமுனா தேவியின் விண்ணப்பத்தையும் ஸ்ரீகண்ணன் செவி சாய்க்கலுற்றான். யமுனையின் பிரார்த்தனையாவது: ஹே பரந்தாமா! முன் ஒரு காலத்தில் நீர் திரிவிக்ரமனாக அவதரித்து விண்ணை ஓர் திருவடியால் அளக்கும்போது ஆகாய கங்கை உம் திருவடியை சுத்திகரித்து பாலனமானாள். அதைப்போல் இன்று அடியாளும் உம் திருவடியை முத்தமிட்டு சுத்திகரித்து என் மனோபீஷ்டத்தை பூர்த்தி செய்து கொள்ள அருள வேண்டுமென பிரார்த்தித்தாள். மாயக்கண்ணன் அவள் விருப்பத்தையும் நிறைவேற்ற திருவுளம் கொண்டு தம் இரண்டு திருவடிகளையும் கூடையினின்றும் வெளியே நீட்டி தொங்கும் நிலையில் தம் பாதங்களை ஆட்டி சமிக்ஞை செய்தான்.

இதை அறிந்த யமுனா தேவி முன்பக்கம் வசுதேவருக்கு இடுப்பளவு ஜலமும், பின்பக்கம் எம் பிரபுவின் ஸ்ரீபாத கமலங்களை தொடும் அளவும் எழுந்து பாத கமலங்களை ஸ்பரிசித்து, அலம்பி தம் பாதக மலங்களை போக்கி கொண்டாள். வசுதேவரும் கோகுலத்திற்கு சென்று பிரக்ஞை அற்றுக் கிடக்கும் நந்தகோபன், யசோதை உட்பட சகல கோபாலர்களையும் கண்டு இது மாயவனின் மாயம் என உணர்ந்து தம் ஸ்ரீகண்ணனை அங்கு விட்டு விட்டு, அங்கு பிறந்திருந்த ஸ்ரீயோகமாயை என்னும் சிசுவை தம் கூடையில் ஏந்தி மதுரா சிறைக்கு சென்றதும் உலகம் பழைய நிலையை அடைந்தது.

எம் ஞானசெல்வங்களே!

ஸ்ரீகண்ணனுக்கு வயது இரண்டு ஆகியது. கோகுலத்தில் ஸ்ரீகண்ணன் அவதரித்த தினத்தில் இருந்து எங்கும் மங்களம் பொங்கியது. நந்தகோபனின் தாய் சிந்திக்கிறாள். ஜாதக ரீதிப்படி யசோதைக்கு பெண் குழந்தைதான் பிறக்க வேண்டும். ஆனால் ஆண் குழந்தை பிறந்திருக்கிறது. இது நடக்க முடியாத

Koviloor Digital Library

காரியம். (இந்த நிகழ்ச்சிகள் எல்லாம் பெரியவர்களுக்கு தெரியும். அவர்கள் கணக்கும் தப்பாது).

நமக்கு பேத்தி பிறக்க வேண்டிய நேரத்தில் பேரன் பிறந்திருக்கிறான். எப்படியோ மாயமாக நடந்திருக்கிறது. இந்த மாயம் எப்படி நடந்தது? இதை நடத்தியது யார்? இந்த ஸ்ரீகண்ணனோ பிறந்த ஒரு வயதிற்குள்ளாக பூதனை என்ற அரக்கியையும், சகடாசூரன், த்ருணாவர்த்தன் ஆகியவர்களையும் விளையாட்டார்த்தமாக சம்ஹரித்து விட்டான். நாம் பெண் குழந்தைக்கு போட வேண்டுமென அரைஞாண், அரைமுடி ஆகியவைகளை செய்து வைத்தோம். இதை எப்படி இவனுக்கு பூட்டுவது? என குழம்பியவாறு யோசித்து, ஓர் முடிவுக்கு வந்தவளாய் ஸ்ரீகண்ணனை மட்டும் தனியே அழைத்து ஹே கண்ணா! நீ யார்? இங்கு எப்படி வந்தாய்? நீ ஏன் யசோதையின் கர்ப்பத்தில் பிறக்கவில்லை? நீ எங்கு தோன்றினாய்? யசோதையின் கர்ப்பம் என்ன ஆயிற்று? ஏன் இந்த மாற்றம்? என விழிநீர் மல்க உருகிய வண்ணம் கேட்டாள். இந்த உருக்கத்தை ஸ்ரீகண்ணனால் சமாளிக்க முடியவில்லை.

குழந்தைகளே!

மனம் உருகி வேண்டி அழும் கண்ணீருக்கு உள்ள சக்தி வேறு எந்த மந்திர, தந்திர, யோக, ஆச்சார அனுஷ்டானங்களுக்கும் கிடையாது என உறுதி கூறுகிறோம்.

அன்பின் குழந்தைகளே!

இதைக் கேட்ட ஸ்ரீகண்ணன் மிரளமிரள விழிக்கிறான். பாட்டியின் கரத்தை தம் அபய கரத்தால் பற்றி தனித்த இடத்திற்கு அழைத்துச் சென்று பாட்டியின் கண்ணீரை தம் கரத்தால் துடைத்துவிட்டு அமைதியாக சொல்கிறான். பாட்டி! இவைகள் எல்லாம் தேவரகசியம்; இவை எவர்க்கும் தெரிந்திருக்க முடியாது. இதை நீ எப்படியோ கண்டு கொண்டாய். அதாவது உன் பூர்வ ஜென்ம பூஜாபலனும்,

Koviloor Digital Library
ஸ்ரீஅடியார்களை வரவேற்று உபசரித்து, அவர்கள் கருணையை அதிகமாக பெற்று, அவர்கள் திருவாக்கால் அநேக ஆசி வசனங்கள் பெற்ற தன்மையினால் நீ எம்மை கண்டு கொண்டாய். உனக்கு சர்வமங்களமும் உண்டாகட்டும் என சாதித்து, தம் சொரூப தரிசனமும் காட்டி அருளினானாம் எம் பிரபு.

ஸ்ரீபகவானின் திவ்ய சொரூபத்தை சங்கு, சக்கரம், கதை, பத்மம் இவைகளுடன் கண்ட மாத்திரத்தில் அவன் திருவடிகளில் அடியற்ற மரம் போல் வீழ்ந்து, ஹே தேவதேவா! மஹானுபாவா! வைகுண்டவாசா! சுயம் பிரகாசா! ருஷீகேசா! சித்விலாசா! ஸ்ரீ நிவாஸா! கருணைக்கடலே! காருண்யமூர்த்தி! அடியாள் என்ன தவம் செய்தேன் இத்திருகாட்சியைக் காண என பிரார்த்தித்து நின்றாள்.

ஸ்ரீகண்ணனும் தம் காரியம் கெட்டுவிடக் கூடாதென எண்ணி தம் மாயையால் அவளை திரையிட்டு மூடினான். அவளும் உலக நிலைக்கு வந்தாள். ஸ்ரீகண்ணனும் தாம் சிரித்துக்கொண்டே என்ன பாட்டி அப்படி பார்க்கிறாய்? நான் உன் பேரன்தான் நன்றாக என்னைப் பார் என்றான். அந்த பெண் பேதையும் மயங்கினாள்.

ஸ்ரீகண்ணனை தம் மகன்பிள்ளை பேரனாக கண்டாள். ஸ்ரீகண்ணனும் தம் பாட்டியை கூப்பிட்டு பாட்டி! நான் ஆண்களுக்கு ஆண்தான்! பெண்களுக்கு பெண்தான்! இதோ பார் நீ செய்து வைத்திருந்த பெண்கள் கட்டும் அரைஞாண் ஆபரணங்களை நானே எடுத்து அணிந்து கொண்டேன். இப்பொழுது உனக்கு திருப்தி தானே? என கடகடவென சிரித்தான். இவள் எங்கே மயங்குவது? அந்த மாயவன் மயக்கி விட்டான். ஜீவர்களை மயக்குவதும், மயக்கத்தை நீக்குவதும் அவனால் முடியும்.

அவனைச் சரண் புகுந்தால் எடுப்பதை எடுத்து கொடுப்பதை கொடுத்து அருளுவான். உங்கள் உறுதியான

Koviloor Digital Library
நம்பிக்கையே அவனை காட்டும் வழி. **உங்கள் உள் உணர்வால் அவனை நோக்குங்கள். அவன் அவசியம் அகப்படுவான்.**

ஓர் நாள் மாலைநேரம் யசோதை எம் பிரபுவுக்கு தலைவாரிப் பின்னிக் கொண்டிருந்தாள். அப்பொழுது ஸ்ரீ கண்ணன், அம்மா! ஓர் கதை சொல்லு என கெஞ்சினான். அவளும் பிரஹலாதன் கதை சொன்னாள். ஸ்ரீகண்ணனும் ''உம்'' கொடுத்து கேட்டுக் கொண்டிருந்தான். கதை முடியும் தருவாயில் ஹிரண்யன் தம் கதை கொண்டு தூணை அறையவும், ஸ்ரீஹரி நரசிம்மமாக தூணைப்பிளந்து வந்து சிம்மமாக கர்ஜித்து ஹிரண்யனுடன் யுத்தம் செய்தார் என்றாள்.

கதை கேட்டுக் கொண்டிருந்த ஸ்ரீகண்ணனின் முடி,சிங்கத்தின் முடி போல் குத்திட்டு நின்றது. முகமும் சிங்கமாக மாறியது. இந்த காட்சியை யசோதை காணவில்லை. ஆனால் முடியைக் கண்டு ஏண்டா கண்ணா! முடி படியமாட்டேன் என்கிறது? இவ்வளவு நேரமும் நன்றாக படிந்திருந்தது. இப்பொழுது முரடாகவும் இருக்கிறது. சீப்பு கொண்டு வாரவும் முடியவில்லை என்றாள் யசோதை. ஸ்ரீகண்ணனும் தம் முகத்தை காட்டாமல், அம்மா சீக்கிரம் கதையை முடி என்றான். யசோதையும் முடிவாக பக்தன் பிரஹலாதனுக்காகவும், உலக க்ஷேமத்திற்காகவும் தம் கோர வடிவத்தை மாற்றி சாந்த சொரூபியாக பகவான் காட்சி அளித்தார் என்றாள். உடனே ஸ்ரீகண்ணனின் முடியும் படிந்தது. ஸ்ரீகண்ணனை சரிவர உணராத தாய் இந்த காட்சியை எப்படி கண்டு கொள்ள முடியும்? **அவன் திருவடியே கதி என தம்மை முடித்துக் கொண்டால் அவனை காண முடியும்.**

என் அன்பின் முத்துக்களே!

ஓர் சமயம் மதுராவிலிருந்து ஓர் மூதாட்டி எம் ஸ்ரீகண்ணனைக் காண கோகுலம் வந்தாள். அவளோ பழுத்த பழம். அவள் தொழிலோ நாவல்பழம் விற்கும் தொழில். ஸ்ரீராமாவதார காலத்தில், ஸ்ரீராகவனுக்கு இலந்தைப் பழத்தை

Koviloor Digital Library
கடித்து இனிப்பு, புளிப்பு சரி பார்த்து, சுவைத்து அந்த ஸ்ரீகோதண்டபாணிக்கு ஒவ்வொன்றாக வாயில் கொடுத்தாள். அதை அன்போடு சுவைத்து உண்டான் ஸ்ரீபகவான். அடியார்கள் உச்சிஷ்டம் அவனுக்கு பரமான்னம் போலும். அப்படி வாத்ஸல்யம் உடைய அந்த ஸ்ரீபரம்பொருள் சபரி என்ற மூதாட்டியை அடுத்த ஜன்மாவில் உன் எண்ணம் பூர்த்தி ஆகும் என்றானாம். அந்த மூதாட்டி வேறு யாரும் அல்ல.

அந்த சபரி மூதாட்டியே கிருஷ்ணாவதார காலத்தில் நாவல் கனி விற்கும் நிலையை அடைந்து, அனுதினமும் ஸ்ரீகண்ணனை காண வேண்டுமென பேராவல் கொண்டு, கோகுலம் போகும் நாள் பார்த்துக் கொண்டு இருந்தாள்.

மதுராவும், கோகுலமும் சமீபம்தான் என்றாலும், அவன் அழைத்தால்தானே அவளால் போக முடியும். இந்த ஜீவர்கள் நிலையும் இதுதானே! அவனாக பார்த்து அந்த ஜீவர்கள் நிலை அறிந்து, பக்குவாபக்குவம் அறிந்து திரையை அகற்றி காட்டினால் தான் முடியுமே தவிர இந்த ஜீவனால் என்ன செய்ய முடியும்? இந்த மயக்கம் தெளிய வைப்பார் யார்?

அவனன்றி ஓர் அணுவும் அசையாது! இது உறுதி.

அதைப்போல இந்த மூதாட்டிக்கும் நேரம் வந்தது. அவளும் பழங்களை கூடையில் சுமந்த வண்ணம் கோகுலம் வந்தாள். நந்தகோபன் வீட்டு வாசலில் கூடையை வைத்து விட்டு வீட்டினுள் கூர்ந்து நோக்கினாள். (கூர்க்கத் தெரிந்த மருந்து). எம் ஐயனும் உள் இருந்தபடியே இவளை நோக்கினான். நேரத்தை சரி பார்த்தான் போலும்.

வேண்டியவர்க்கு வேண்டுவன கொடுத்து ஆட்கொள்ளும் ஸ்ரீபரம்பொருள், வேண்டி உருகும் பக்தர்களுக்கு வேண்டுவதெல்லாம் கொடுக்க நான் காத்துக் கொண்டிருக்கிறேன். உங்களுக்கு ஏன் சந்தேகம் வரவேண்டும்? என நோக்கிய வண்ணம் இருநதது.

Koviloor Digital Library

இந்த உலக விளையாட்டுக்களில் இல்லாத ஒன்றை, பொய்யான ஒன்றை அடைவதற்கு எவ்வளவு நேரம் காத்திருந்து எவ்வளவு சிரமப்பட்டு பெறுவதைப் போல் காண்கிறீர்கள். அதை நீங்கள் பெறவும் இல்லை. அது வெளி மயக்கமே. இந்த பொய் பொருளுக்கே இப்படி காத்து நிற்கும் ஜீவர்கள் அவன் அருள் நிலையைப் பெற, சத்சித் ஆனந்தத்தைப் பெற சற்றும் தாமதிக்க முடியவில்லை. அதற்குள் அவ்வளவு அவசரம் போலும். பாவம் இந்த ஜீவர்களின் நிலை.

ஆனால் அந்த அன்னை ஸ்ரீகண்ணனுக்காக விழிநீர் தாரைதாரையாக ஓட காத்திருந்தாள். அந்த ஸ்ரீகண்ணனும் சமயம் அறிந்து தம் இரு பிஞ்சுக்கரங்களிலும் தானியங்களை அள்ளிக் கொண்டு அடிமேல் அடியெடுத்து... அவன் வரும் காட்சியை எப்படி எழுதுவது? விரல் இடுக்குகளின் வழியாக தானியமணி சிந்திக் கொண்டே வருகிறது. அதைக்கண்டு ஸ்ரீகண்ணன் புன்முறுவல் செய்கிறான். உலக ஆசையில் பாய்ந்தோடும் மாந்தர் போன்று தம் அபயகரத்தில் வந்த பின்னும் அதை உணரமுடியாமல் தானியமணிகள் பயந்து கீழே விழுந்து ஓடுகிறதாம். அவன் கண்களை மிரளமிரள விழித்துக்கொண்டு வரும் பாவனையும், திருவடிகளில் சலங்கை ஒலிக்க அமைதியாக நடந்து வரும் காட்சியையும் நேருக்கு நேர் அனுபவித்தால்தான் புரியும். வெல்லம் என்று சொல்லுவதால் மதுரம் தோன்றுமா? சுவைத்தால் தானே மதுரம் தோன்றும். இந்த திருக்காட்சியை அந்த மூதாட்டிதான் உணர்ந்து சுவைத்தாள்.

ஸ்ரீகண்ணனும் தாம் கொண்டு வந்த தானியத்தை அந்த கூடையில் கொட்டினான். அவளும் நாவல் கனிகளை எடுத்து அவன் இரண்டு கரங்களிலும் அடுக்கி வைத்தாள். ஐந்து பழங்களுக்கு மேல் கொள்ளவில்லை. காரணம் ஐந்து பூதங்களினாலானது தூலம். அதன் குணங்களையும், இயக்கத்தையும் யாம் எடுத்துக் கொண்டோம். நீ பழமாக,

Koviloor Digital Library
மதுரமாக, சுவையாக, யாமாக ஆகுவாய் என அவளை முடித்துக் கொண்டான் போலும்.

அவன் போட்ட தானியங்கள் நவரத்தினங்களாக மாறுகிறது. அதைக்கண்ட மூதாட்டி ஸ்ரீகண்ணன் திருவடியைப் பற்றி கதறுகிறாள். ப்ரபோ! இது என்ன சோதனை! இந்த அற்ப பொருளுக்காகவா நான் வந்தேன். இவைகளை விரும்பி கேட்கும் ஜீவர்களுக்கு இதை கொடுப்பது தானே. உண்மை எதுவோ? சத்தியம் எதுவோ? உன் உண்மை சொரூபம் எதுவோ? அதைக் கொடு என்றாள். அவனும் கொடுத்து ஆட்கொண்டான்!

ஆனந்த சொரூபிணிகளே!

ஓர் சமயம் ஸ்ரீகண்ணன் தெருவில் விளையாடிவிட்டு வீட்டிற்குள் சென்றான். வாசலில் இருபுறமும் மாட்டுக்கொட்டில் இருந்தது. அதில் பசுக்களும், கன்றுகளும் தனித்தனியே கட்டப்பட்டிருந்தது. ஒவ்வொரு கன்றுக்கும், பசுவுக்கும் ஸ்ரீகண்ணன் ஒவ்வொரு பெயர் வைத்திருந்தான். அதில் கோமதி என்ற கன்று, கண்ணா! உன் அன்னை இன்னும் எனக்கு அமுதூட்டவில்லை. எப்பொழுது என்னை அவிழ்த்து விடுவாளோ தெரியாது. எனக்கு மிகவும் பசியாக இருக்கிறது என்கிறது.

ஸ்ரீகண்ணனும் பரிதாபமுடன் அந்த கோமதி என்ற கன்றை மட்டும் அவிழ்த்து விட்டான். அது தாயை நோக்கி ஓடியது. இதை யசோதை கண்டு கோபம் கொண்டாள்.

ஏண்டா கண்ணா! இப்படி கன்றை அவிழ்த்து விட்டுவிட்டால் பால் எப்படி கறக்க முடியும்? பால் கறக்க முடியாமல் பாழாக்கிவிட்டாயே உன்னை என்ன செய்கிறேன் பார் என்று சொல்லி ஸ்ரீகண்ணனை பிடித்து ஓர் தூணோடு பிணைத்தாள். முடிச்சு போட கயிறு எட்டவில்லை. அடுத்த கயிற்றை எடுத்து முடி போட்டு பிணைத்தாள். அதுவும் எட்டவில்லை. இப்படியே வீட்டில் உள்ள கயிறு அனைத்தும்

Koviloor Digital Library

சேர்த்து பிணைத்துப் பார்த்தாள். கடைசியில் முடி போட முடியாமலே போயிற்று. கன்றுகள், பசுக்கள் இவைகளின் கயிறுகளை எல்லாம் அவிழ்த்து கட்ட முயன்றாள். அப்பொழுதும் எட்ட வில்லையாம்.

இந்நிலையில் கன்றுகள் அனைத்தும் தம் தாயிடம் சென்று பால் குடிக்க ஆரம்பித்தன. இதை எல்லாம் யசோதை கவனிக்கவே இல்லை. அவள் கவனம் எல்லாம் ஸ்ரீகண்ணனை கட்டும் நிலையிலேயே தான் இருந்தது. வெளி உணர்ச்சியோ, வெளிக் காட்சியோ அவளுக்கு இல்லை. எப்படியும் ஸ்ரீகண்ணனை பிணைத்துவிட வேண்டும் என்ற விடாமுயற்சி, ஆர்வம், தாபம், வேகம், வெறி இவற்றினால் தன்னை மறந்தாள். உலகத்தை மறந்தாள். அபிமானத்தை மறந்தாள். சேலைத் தலைப்பை கிழித்தாவது கட்டிவிடவேண்டும் என்ற ஓர்மை புத்தியுடன் கிழிக்க ஆரம்பித்தாள். இந்நிலையை ஸ்ரீகண்ணன் கண்டான். அதற்கு மேலும் மாயையை கட்டுப்படுத்த முடியவில்லை. யசோதையின் பிணைப்பில் கட்டுண்டான்.

பக்தர்கள் முன்னிலையில் ஸ்ரீபகவான் மாயை பலிக்காது. அது பயனற்றதாகி விடும். பகவான் விலக்காமலேயே மாயை விலகிவிடும். எப்படி என்றால் பகவான் வேறு, பக்தன் வேறு அல்ல. இந்நிலை வர வேண்டுமானால் சிரத்தை வேண்டும். ஓர்மித்த புத்தி வேண்டும்.

இந்நிலையில் யசோதையும் ஸ்ரீகண்ணனை கட்டிய ஆனந்தத்தில், கண்ணா! உன்னை கட்டி விட்டேனடா என கூறினாள். அதைக் கேட்டு ஸ்ரீ கண்ணன் சொன்ன வாசகமாவது: அம்மா! எம்மைக் கட்டி விட்டேன் என்று பெருமைப்படுகிறாயே? யாம் ஒரு கன்றை அவிழ்த்துவிட்டோம். அதற்காக இவ்வளவு சிரமப்பட்டு இந்த தூணில் எம்மைப் பிணைத்தாய். நீ இத்தனை கன்றுகளையும், பசுக்களையும் அவிழ்த்து விட்டு விட்டாயே. இந்த குற்றத்திற்கு உன்னை எதில் பிணைப்பது? என கபடமாகக் கேட்டானாம் அந்த கபட நாடக சூத்திரதாரி.

Koviloor Digital Library

நடந்த விபரீதத்தை யசோதை கண்டாள். இது என்ன மாயமாக இருக்கிறது? இந்த சிறுவனைக் கட்ட இத்தனை கயிறுகளா? இவன் யார்? என ஸ்ரீகண்ணனை நோக்கினாள். தம் தாயை நோக்கி ஓர் மோகன புன்முறுவல் செய்தான். யசோதை மயங்கினாள். கண்ணன் நம் குழந்தை, நாம் அவன் தாய் என மாய திரையிட்டு மூடினான் ஸ்ரீகண்ணன். அவன் புன்னகையில் என்ன மர்மம் உளதோ?

ஓ ஆன்ம ஸ்வரூபங்களே!

ஓர் நாள் ஸ்ரீகண்ணன் மணல் வீடு கட்டி விளையாடிக் கொண்டிருந்தான். உடன் ததிபாண்டன் என்ற நண்பனும் சேர்ந்து விளையாடினான். ஸ்ரீகண்ணன் கணவனாகவும், ததிபாண்டன் மனைவியாகவும் நடித்தார்கள். விளையாட்டில் மணலே சாதமாகவும், இலைகள், காய்கறிகளாகவும் கற்பிக்கப்பட்டன. ஓர் தட்டில் சாதம் போட்டு அதாவது இலை போல் மணலில் படம் வரைந்து, அதில் மணல் சாதத்தை பரிமாறி இலை கலந்த ஜலத்தை சாம்பாராகவும், காய்கறிகளாகவும் மேலே ஊற்றி அந்த ததிபாண்டன் என்ற பெண் தன் ஆத்துக்காரனாகிய ஸ்ரீகண்ணனைப் பார்த்து, அத்தான்! சாதம் ஆறிக் கொண்டு இருக்கிறது, சீக்கிரம் சாப்பிட்டு விட்டு மாடுகளை காட்டுக்கு அவிழ்த்து விடுங்கள் என்றாள். ஸ்ரீகண்ணனும் பெண்ணே ஜலம் கொண்டு வா! கைகால் அலம்பி விட்டு வருகிறேன் என்றான். அவளும் ஓர் கிண்ணத்தில் ஜலம் கொடுக்க கைகால்களை சுத்தி செய்யும் பாவனையில் ஓர் செடி மறைவில் சென்றான் ஸ்ரீகண்ணன்.

ஸ்ரீதிருவடியை சுத்தி செய்ய அந்த ஜலம் பத்தாது போய்விட்டது. இந்நிலை கண்டாள் ஸ்ரீபாதாள கங்கை. உடனே அதே இடத்தில் தாம் உற்பத்தி ஆனாள். ஸ்ரீகண்ணனின் ஸ்ரீபாத கமலங்களை சுத்திகரித்து தம் பாதக மலங்களை போக்கிக் கொண்டாள். இதைக் கண்ட ஸ்ரீகண்ணன், ஓ கங்கா! இங்கு ஏன் வந்தாய்? உன்னை யார் அழைத்தது? என்றான்.

Koviloor Digital Library

அதற்கு பாதாள கங்கை ஓ பரமாத்மா! முன்பு திரிவிக்ரமனாக நீர் அவதரித்த போது ஆகாய கங்கை உமது ஸ்ரீதிருவடியை சுத்திகரித்தாள். சமீபத்தில் பூலோக கங்கையாகிய யமுனாதேவி உம் ஸ்ரீதிருவடியை முத்தமிட்டாள். இன்று அடியாளும் உம் ஸ்ரீ திருவடியை ஸ்பரிசித்து ஜன்ம சாபல்யம் அடைகிறேன். பல காலம் நான் செய்த தவம் இன்று நிறைவேறியது. மேலும் ஆண்கள் திருவடியை அலம்பும் போது அரைகுறையாக அலம்பக்கூடாது. அடுத்து நீர் நடத்தப் போகும் திருக்காட்சியோ தேவர் மூவராலும் உணரமுடியாது. அதை எனக்கு உணர்த்தி என்னை இந்த இடத்திலேயே பிரவர்த்திக்க அனுக்கிரஹிக்க வேண்டுமென பிரார்த்தித்தாள். ஸ்ரீபரந்தாமனும் உன் வரவு ரகசியமாக இருக்கட்டுமென ஆசி கூறி சென்றான்.

ஸ்ரீகண்ணனும் ஆசனத்தில் அமர்ந்து, பெண்பாவாய்! சாப்பிடுவதற்கு ஜலம் கொண்டு வா என்றான். மனைவியாகிய ததிபாண்டனும் இன்னும் ஜலத்திற்கு எங்கே போவேன்? வீட்டில் சென்று ஜலம் கேட்டால் அம்மா கோபிப்பார்கள் என்றான். ஸ்ரீகண்ணனும் அந்த செடி மறைவில் ஜலம் ஊற்றெடுத்து ஓடுகிறது. அதில் கொஞ்சம் எடுத்து வா என்றான். உடனே மனைவியும் அவ்வாறே எடுத்து வந்தாள். அந்த பிரவாகம் எப்படி வந்தது என அறிய வொட்டாமல் தம் மாயையால் மறைத்தான். ஸ்ரீகண்ணன் அந்த ஜலத்தை முன்னால் இருந்த மணல் சோற்றில் புரோட்சித்தான். அது அமுதமாகவே மாறிவிட்டது. இதை மாயையால் மறைக்கப்பட்ட கண்களை உடைய ததிபாண்டன் என்ற பெண் அறியாள்.

ஸ்ரீகண்ணன் மண்ணை உண்பதாகவே மதித்தாள். பதறினாள், அடே கண்ணா! நிறுத்துடா! இது என்ன அநியாயம்? இப்படி மண்ணை தின்கிறாயே என அலறினாள். ஸ்ரீகண்ணன் நிறுத்தவில்லை. சுவாரஸ்யமாக ஆனந்தமாக உண்டான். உடனே ததிபாண்டன் வீட்டில் சென்று நிலைமையை சொல்லி யசோதையை அழைத்து வந்தான்.

Koviloor Digital Library

யசோதையும் நோக்கினாள். அவளும் ஸ்ரீ கண்ணன் மண்ணை உண்பதாகவே மதித்தாள். ஓர் கோலை எடுத்தாள். அடிப்பதைப் போல் பாவனையைக் காட்டி, அடே கிருஷ்ணா! வாயைத் திற! என அதட்டினாள். ஸ்ரீகண்ணனும் வாயை மூடிய வண்ணம் மிரளமிரள விழித்தான். பின் ஏதோ ஓர் முடிவுக்கு வந்தவனாக தம் இரு கரத்தையும் இடுப்பில் ஊன்றினான். ஆ... ! என வாயைத் திறந்தான். அந்த திருவாயில் யசோதை கண்ட காட்சிகளை இங்கு எழுத முடியாது. (அது ரகசியமாகும்)

வாயில் உலகை கண்டதாக சொல்வர். தம் தூலத்தை மறந்த நிலையில் முழந்தாளிட்டு, கண்களில் ஆனந்த பாஷ்பம் ஓட இமை கொட்டாமல், அசையா சித்திரம் போல் பார்த்தாள். (தோற்றம், இருப்பு, மறைவு கண்டாள்) இந்நிலை நீடித்தால் தாம் வந்த காரியம் கெட்டு விடும் என உணர்ந்தான் ஸ்ரீகண்ணன். யசோதையின் சிரம் மீது கரம் வைத்தான். சகலமும் மாறியது. அங்கு அஞ்ஞானம் புகுந்தது. கண்ணனை தாம் பெற்ற குழந்தையாக கண்டாள். பாசம் மறைத்தது. அவளை சொல்லிக் குற்றமில்லை. அது அவன் திருக்கூத்து. அதனாலேயே அவனுக்கு கபடநாடக சூத்திரதாரி என நாமம் வழங்கப்படுகிறது போலும்.

அன்புக் குழந்தைகளே!

இந்த அண்டபிண்ட சராசரங்களும் அவன் மணிவயிற்றில் பத்திரமாக இருக்க இந்த மண்ணை சிருஷ்டி செய்தவன் மண்ணை தின்றது ஓர் இடத்தில். மண்ணை தம் தலைமீது கூடை வைத்து சுமந்தான் ஓர் இடத்தில். அதாவது ஓர் மூதாட்டியின் பாப நிவாரணத்திற்காக அவள் கொடுத்த உலர்ந்த புட்டை தின்று, மண் சுமந்து பாண்டிய மன்னனிடம் பிரம்பால் அடியும் வாங்கிக் கொண்டான்.

இந்த மண்ணைப் படைத்த இறைவனே ஐந்து ஜீவர்களுக்காக ஐந்து ஊர்கொடு, ஐந்து வீடு கொடு என யாசகம் கேட்கிறான். இது என்ன விந்தை! இப்படியும் அந்த

Koviloor Digital Library

ஸ்ரீபரம்பொருள் நடிக்குமானால் பக்தர்களிடம் தான் அவனுக்கு எவ்வளவு வாத்ஸல்யம்? எவ்வளவு கிருபை? இவ்வளவு கருணையும் காருண்யமும் உள்ள மூர்த்தியை எப்படி சந்தேகிக்கலாம்? இது அறியாமை அல்லவா?

கூப்பிட்ட குரலுக்கு ஓடோடி வருகிறான். இட்ட பணிகளை குறைவின்றி செய்கிறான். சில இடங்களில் வேலைக்காரனாகவும், தொண்டனுக்கும் தொண்டனாகவும், அடியவர்க்கும் அடியவனாகவும் பணிபுரிவேன் என கங்கணம் கட்டிக் கொண்டிருக்கும் ஸ்ரீபரவஸ்துவை நம் அறியாமையினால், நம் சபலத்தினால், நம் சந்தேகத்தினால் குறை கூறி என்ன பயன்?

நீங்கள் சிறிது முயற்சி செய்தால் போதுமே. அது பெரும் பலனை கொடுக்கிறதே. அப்படியிருக்க, அந்த ஸ்ரீகருணாமூர்த்தியின் திருவடியில் ஸ்ரீபரிபூரண சரணாகதி செய்வதல்லாமல் வேறு எந்த மார்க்கமும் சாத்தியமாகாது.

ஸ்ரீ திருவடியின் அம்சங்களே!

ஓர் சமயம், ஓர் கோபிகை வீட்டினுள் தம் நண்பர்களுடன் திருடச் சென்றான் ஸ்ரீ கண்ணன். அந்த வீடு திறந்தே கிடந்தது. அவர்களுக்கு சிரமம் இல்லாமல் உள்ளே போக வசதியாக இருந்தது. ஓர் அறையில் தயிர் பானை இருந்தது. அதை எடுத்து தம் நண்பர்களை உண்ணும்படி பணித்து தாம் மட்டும் அடுத்த அறைக்கு சென்றான்.

அங்கு ஒரே இருட்டாக இருந்தது. அங்கு இருந்த ஓர் கை விளக்கை எடுத்தான். அந்த மங்கலான வெளிச்சத்தில் ஸ்ரீகண்ணனின் கடல் மேனியின் பிரகாசம் அந்த ஆயிரம் சிரம் கொண்ட ஆதிசேஷனாலும் வர்ணிக்க முடியாததாக இருந்தது. அங்கு தேவர்களும், தேவமாதர்களும் கூடி விட்டனர். செந்தாமரை மலர் கண்களில் கருவண்டு போல் இரு கரியவிழிகளில் மருட்சியான பார்வை; கோவைப்பழம் போல் சிவந்த இதழ்கள்;

Koviloor Digital Library

சம்சார சாகரத்தில் உழலும் ஜீவர்களை ரட்சிக்கும் தம் அபயகரம் கொண்டு வெண்ணெயை அள்ளி தம் கரத்தாலேயே அனைத்து ஜீவர்களுக்கும் புகட்டும் கருணையின் செயல்; தம் திருவாயில் வெண்ணெயை ஒட்டிக்கொண்டு நிற்கும் காட்சி அழகுக்கு மேலும் மெருகூட்டும் காட்சி. சகல பாபங்களையும் பாலனமாக்கும் ஸ்ரீதிருவடித் தாமரையை அடிமேல் அடியெடுத்து வைத்து, ஸ்ரீகண்ணன் மூன்று வயது சிறுவனாக பவனி வரும் காட்சி ஆகியவைகளை வானவர்கள் கண்டுகளித்தனர்.

இதைக்கண்ட ஸ்ரீகண்ணன் அவர்களைப் பார்த்து, குழந்தைகளே! என்ன எல்லோரும் இங்கு கூடி விட்டீர்கள்? இது தேவலோகம் இல்லையே? பூலோகம் தானே? இங்கு நீங்கள் வரலாமா? என கேட்டான். அதற்கு அவர்கள் சொன்ன மறுமொழியாவது:

ஹே பரமாத்மா! இந்த காட்சி வைகுண்டத்திலும், வேறு எங்கும் நாங்கள் காண முடியாதே. இந்த அவதாரம் முடிந்து விட்டால் இந்த காட்சிகளை வேறு எங்கு காணப்போகிறோம்? இந்த நிலையில் உன்னை காண முடியுமா? இந்த கோகுல மாந்தர்களும், யசோதாபிராட்டியும் என்ன தவம் செய்தார்களோ? என்றனர்.

அதற்கு ஸ்ரீகண்ணன், ஓ விண்ணுலக அதிபர்களே! நீங்கள் தரிசித்தது போதும். இதற்கு மேலும் நீடித்தால் காரியம் கெட்டு விடும் என சொல்லி அவர்களை அனுப்பி வைத்தான். பின் அந்த மங்கிய ஒளியில் வெண்ணெய் எங்கிருக்கிறது என தேடினான். அங்கு ஓர் இடத்தில் சற்று உயரமாக இருந்த ஓர் உறியில் வெண்ணெய் பானை இருந்தது. ஓர் உரலை உருட்டினான். அதன்மேல் ஓர் கூடையை வைத்தான். சிரத்தையுடன் ஏறினான். உறி எட்டியது. அந்த வீட்டு கோபிகை, அந்த உறியின் மேல் ஓர் மணி கட்டி வைத்திருந்தாள். உறி அசைந்தால் மணி அடிக்கும். மணி அடித்தால் நாம்

Koviloor Digital Library
திருடனைப் பிடித்துக் கொள்ளலாம் என தந்திரமாக செய்திருந்தாள்.

அவள் யுக்தி படியே ஸ்ரீகண்ணன் பானையை எடுக்கும் போது உறி அசைந்தது, மணியும் அடித்தது. அதைக் கண்ட ஸ்ரீகண்ணன் மணியைப் பார்த்துக் கும்பிடுகிறானாம். ஏ மணியே! சற்று பொறுமையாக இரு. நீ அடித்தால் கோபிகை வந்து விடுவாள். நான் அகப்பட்டுக் கொள்வேன். என்னைக் காட்டிக் கொடுத்து விடாதே என்றான் ஸ்ரீகண்ணன்.

மணியும் சற்று அமைதியாக இருந்து, அவன் திருக்கூத்தை ரசித்துக் கொண்டிருந்தது போலும். ஸ்ரீகண்ணன் உறியில் இருந்த வெண்ணெய் பானையை உண்ண கீழே இறக்கி வைத்தான். அதன் அருகில் அமர்ந்து வெண்ணெயை உண்ண ஆரம்பித்தான். இரண்டு வாய் அள்ளி புசித்தான். உறியில் உள்ள மணி வேகமாக அடிக்க ஆரம்பித்தது. உடனே ஸ்ரீகண்ணன் மணியைப் பார்த்து நமஸ்கரித்த படியே, ஏ மணியே! என்னைக் காட்டிக் கொடுத்துவிடாதே. திரும்பவும் உன்னை வேண்டிக் கொள்கிறேன் என்று கெஞ்சினான். அந்த மணி சொன்னதாவது:

ஹே மாதவா! ஆலயங்களிலும், வீடுகளிலும் உன்னை பூஜிக்கும் பக்தர்கள் விதவிதமாக பட்சணங்களை செய்து உனக்கு நிவேதனம் செய்கிறார்கள். உன் முன் வைத்து நீ சாப்பிடுவதாக பாவனை செய்து உடனே அதை எடுத்து விடுகிறார்கள். இந்த அவசரம் எதற்கோ தெரியவில்லை? கூடுதலாக கொஞ்ச நேரம் வைத்திருந்தால் நீ எங்கே சாப்பிட்டு விடுவாயோ என்ற பயம் போல் தெரிகிறது. நீயோ இதை கண்டும் மௌனமாக பார்த்துக்கொண்டு இருக்கிறாய். அந்த ஒரு சில நிமிஷத்தில் நீ சாப்பிடாமல் இருக்க நீ சாப்பிடும் பாவனையில் மணியை வேகமாக ஆட்டுகிறார்கள். இதுவே உலக நியதி!

ஆனால் இங்கு நீ உண்மையாகவே உண்கிறாய்! இதைப் பார்த்துக் கொண்டிருக்கும் மணியாகிய நான் எப்படி

M.Varalakshmi
Koviloor Digital Library

சும்மா இருக்க முடியும்? என பணிவுடன் கூறியது. இந்த சப்தத்தில் வீட்டுக்காரி வந்துவிட்டாள். கோபிகை வருவது தெரிந்ததும் நண்பர்கள் ஓடி விட்டனர். ஸ்ரீகண்ணன் எப்படியும் வந்துவிடுவான் என அவர்களுக்கு தெரியும். ஸ்ரீகண்ணனுக்கு ஒன்றும் ஓடவில்லை. தம் அருகில் இருந்த கதவின் இடுக்கில் போய் கூனிக்குறுகி நின்று கொண்டான். கோபிகை தேடிப்பார்த்தாள். ஸ்ரீகண்ணனை காணவில்லை. வெண்ணெய்ப் பானையும், தயிர் பானையும் வெறுமனே திறந்து கிடக்கிறது. கோபிகைக்கும் ஒன்றும் புரியவில்லை. கதவின் அருகே வந்து நின்று கொண்டாள். ஸ்ரீகண்ணனுக்கும் வெளியே வர முடியவில்லை. கைகள் இரண்டையும் கன்னத்தில் வைத்துக் கொண்டு பயந்த நிலையில் நிற்கிறானாம். அந்நிலையில் தலையில் உள்ள மயில்பீலி குஞ்சம் அசைந்து சப்திக்கிறது. மார்பில் அணிந்திருக்கும் நவரத்தின மாலையும் இவன் பதட்டத்தில் அசைந்து சப்திக்கிறது. அரையில் கட்டியிருக்கும் நூதனமான பொருள் நிறைந்த ஒட்டியாணமும் சப்திக்கிறது. கால்களின் ஆட்டத்தால் காலில் உள்ள சலங்கையும் அசைந்து சப்திக்கிறது.

திருவடி தாமரைகளே!

இதைக் கண்ட ஸ்ரீகண்ணனுக்கு இவைகளும் காட்டி கொடுத்து விடுமோ என அஞ்சி, அந்த நான்கு பொருள்களையும் மாறிமாறி அஞ்சலி செய்கிறானாம். நீங்களும் ஏன் இப்படி சப்திக்கிறீர்கள்?என்னை காட்டிக் கொடுத்து விடாதீர்கள் என கெஞ்சுகிறான் ஸ்ரீபரமாத்மா! என்னே அவன் நடிப்பு! அந்த நான்கும் சொல்கின்றன, தேவதேவா! மூவருக்கும் முதல்வா! கமலக் கண்ணா! என்னே உன் நடிப்பு! என்னே உன் மாயம்! ஹே லோகரட்சகா! நாங்கள் நால்வரும் நான்கு வேதங்கள். உன்னால் சிருஷ்டிக்கப்பட்ட நாங்கள் நால்வரும் இந்த நிலையில் உன்னைக் கண்டு புகழாமல் எப்படி இருக்கமுடியும்? நீ பயந்தவன் போல் அஞ்சி நடுங்குவதும், உன் கண்களின் மருட்சியான பார்வையும் ஒரே ஆச்சரியமாக இருக்கிறதே! என இவைகள் புகழ்ந்து சப்தித்ததில் கோபிகை ஸ்ரீகண்ணனை

Koviloor Digital Library

கண்டு கொண்டாள்!

ஸ்ரீகண்ணனின் கைகளைப் பிடித்துக் கொண்டாள். அடே கண்ணா! உனக்கு இந்த திருட்டுப்புத்தி இருக்கலாமா? எங்களிடம் திருடி விட்டு உன் அம்மாவிடம் திருடாதவன் போல் நடிக்கிறாயே? உன்னை பிடிப்பதற்கு அநேக தடவைகள் முயன்றும் என்னால் முடியவில்லை. நான் செய்த சூழ்ச்சியினால் தான் இன்று வசமாக மாட்டிக் கொண்டாய். இனி உன்னை விடப்போவதில்லை என பயமுறுத்தினாள்.

அந்த மாயவனும் முதலில் அவளைக் கெஞ்சும் பாவனையில், மாமி! தெரியாமல் செய்து விட்டேன். என்னை விட்டுவிடு, இனி இவ்வாறு செய்யமாட்டேன் என சமத்துப்பிள்ளையாக கெஞ்சினான். அந்த கோபிகையும் அவனை விடுவதாக தெரியவில்லை.

அவளும் அடே கண்ணா! உன்னை நாலு பேர் பார்த்து அவமானப்படுத்தும்படி செய்கிறேன் பார் என சூளுரைத்தாள். ஸ்ரீகண்ணனும் சிரித்துக் கொண்டே, ஓ அம்மணி! நான் நல்லவனுக்கு நல்லவன் தான், வம்பனுக்கு வம்பன் தான். என்னை அவமானப்படுத்தப் போகிறேன் என்கிறாய், முடிவில் அவமானப்படுபவள் நீ தான். உன்னை திருடி ஆக்கி விடுவேன் என்றான்.

அந்த கோபிகையும் கோபத்துடன், என் வீடு நுழைந்து திருடியதும் அல்லாமல், என்னை திருடி ஆக்கி விடுவேன் என்கிறாயா? உன்னை என்ன செய்கிறேன் பார்? என சொல்லி அண்டை வீட்டுக்காரர்களை வரவழைக்க குரல் கொடுத்தாள். கூட்டமும் கூடிவிட்டது. கோபிகை சொன்னாள்; எல்லோரும் கேளுங்கள். இந்த கண்ணன் என் வீடு புகுந்து வெண்ணெயும், தயிரும் திருடி உண்டான், அதுவும் அல்லாமல் என்னையும் திருடி என மிரட்டுகிறான் என்றாள்.

ஸ்ரீகண்ணனின் நிலை கண்டு எல்லோர்க்கும் கொஞ்சம் இரக்கம் தான்! சிறுவனாக இருக்கிறானே என பட்சாதாபப்பட்டார்கள். ஆனால் திருட்டு குற்றத்திற்கு ஒன்றும்

Koviloor Digital Library
சொல்ல முடியவில்லை. எல்லோரும் சேர்ந்து, ஏண்டா கண்ணா! இப்படி செய்யலாமா? உன் வீட்டில் தான் பால், தயிர், வெண்ணெய் நிறைய இருக்கிறதே. அப்படி இருக்க அயல்வீடு சென்று திருடலாமா? இப்பொழுது நீ திருந்தாவிட்டால் எப்பொழுது திருந்தப்போகிறாய்? இந்த திருட்டு குற்றத்திற்கு உன்னை என்ன செய்வது? என கேட்டார்கள்.

ஸ்ரீகண்ணனும் அனைவரையும் பார்த்து சொல்கிறான். என் மாமன் மாமிகளே! நான் இன்று திருட வரவில்லை. பின் ஏன் இந்த வீட்டிற்குள் வந்தேன் என்றால், எங்கள் வீட்டு செவலைக் கன்று கயிற்றை அறுத்துக் கொண்டு வெளியில் வந்து விட்டது. அதை துரத்தி வந்தேன், அது இவள் வீட்டில் நுழைந்தது. இவள் என் கன்றை எங்கோ மறைத்து வைத்திருக்கிறாள். அதைத் தான் தேடிக் கொண்டிருந்தேன் என்றான். அந்த கோபிகைக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. அந்த ஸ்ரீமாயவனைப் பார்த்து, ஏண்டா கண்ணா! உன் கன்றுக்குட்டி வெண்ணெய் பானையிலும், தயிர் பானையிலுமா இருக்கும்? திருடுவதும் இல்லாமல் இப்படி அண்டப் புளுகு ஏன் சொல்கிறாய்? என்றாள்.

ஸ்ரீகண்ணனும் ஓர் முடிவுக்கு வந்தவனாய், இந்த தாழியில் தான் போட்டு மறைத்து வைத்திருக்கிறாள். நாம் சென்றதும் கன்றை வெளியில் எடுத்து தன் கன்றுடன் சேர்த்துக் கொள்வாள் எனச் சொல்லி அதை நிரூபிக்கும் பொருட்டு அந்த ஸ்ரீமாயவனாகிய கண்ணனும், தம் கன்றின் பெயராகிய கோமதியை கூவி அழைத்தான். இவன் சொல்லுக்காக காத்திருந்தது போல் அந்த கோமதி என்ற கன்றும் தாழி மூடியைத் தள்ளி விட்டு ஓடி வந்து ஸ்ரீகண்ணன் திருவடியை நாவால் நக்கிக் கொண்டு நின்றது.

எல்லோரும் சேர்ந்து அந்த கோபிகையை குற்றம் சாட்டி ஏசிச் சென்றார்கள். அந்த கோபிகை வெட்கித் தலை

Koviloor Digital Library

குனிந்து நின்றாள். ஸ்ரீகண்ணன் அந்த கோபிகையை அர்த்த பாவனையில் நோக்கினான், பரிதாபப்பட்டான்.

அந்த கோபிகை ஒன்றும் தோன்றாதவளாக ஸ்ரீகண்ணனையே கருத்துடன் ஓர்மித்து நோக்கினாள். அந்த குழந்தை உருவத்தை தம் உள்ளத்தில் பதித்தாள். அப்படியே உருகி கரைந்தாள். கேவிகேவி அழுதாள். பக்திப் பெருக்கால் அப்படியே ஸ்ரீமாதவனின் திருவடியின் கீழ் அமர்ந்து ஸ்ரீதிருவடியைப் பற்றினாள். எம் ஐயனும் அவள் நிலை கண்டு அவள் சிரசில் கரம் வைத்து ஆசி கூறினான். அந்த நிலையில் அவள் முன்ஜன்ம தொடர்பு அவளுக்கு கிடைத்தது. ஸ்ரீராம அவதார காலத்தில் சீதையை ராவணன் தூக்கிச் சென்று அசோக வனத்தில் வைத்திருந்த போது விபீஷணனின் மகள் திரிசடை என்பவள் சீதைக்கு காவலாகவும், அனுசரணையாகவும் இருந்தவள்தான் தான் என உணர்ந்தாள்.

அந்நிலையில் ஸ்ரீகண்ணனும் அவளுக்காக ஸ்ரீகோதண்டராமனாக காட்சி அளித்தான். அந்த நங்கையும், ஸ்ரீராமனின் திருவடியை பற்றி, தம் கண்ணீரால் அவர் பாதங்களை அலம்பினாள். ஸ்ரீராகவன் இயம்பினான், ஓ வனிதையே! அன்று எம் தேவிக்கு தோழிப்பெண்ணாக இருந்தாய், எம்மை மிகவும் நேசித்தாய். ஆனால் எம் தந்தையின் வாக்குப்படி யாம் உன் தந்தை விபீஷணனின் மகுடாபிஷேகத்திற்கு இலங்கை நகருக்குள் வரவில்லை. எம் தரிசனத்திற்காக ஏங்கி நின்றாய். நீ அன்று வேண்டிக்கொண்டது இன்று பலிதமாகிறது. எதுவும் முன்ஜன்ம தொடர்பு இல்லாமல் சித்திக்காது. உன் புண்ணிய விசேஷத்தினால் ஒரே நேரத்தில் எம் இரண்டு அம்சங்களையும் தரிசித்தாய். உனக்கு என்ன வேண்டும்? என கேட்டான். அந்த மாது சிரோன்மணியும் ஹே மஹானுபாவா! புருஷோத்தமா! புண்ணியபுருஷா! ஆதிமூலா! கமலபாதா! ஆதிமத்யானந்த ரஹிதா! ஜோதி நித்யானந்த சொரூபா! உம்

Koviloor Digital Library
திருவடிகளில் ஐக்கியமாகும் பெருமையே வேண்டும் என தொழுது நின்றாள். எம் ஸ்ரீமாதவனும் அவளை அப்படியே ஆட்கொண்டான்.

கேட்டவர்க்கு கேட்டபடி அவன் கொடுக்கக் காத்துக் கொண்டிருக்கிறான். நீங்களும் உருக்கமுடன் அழைத்தால் குழந்தையாக ஓடோடி வருவான் எம் ஸ்ரீகண்ணன்.

அருந்தவ சீலர்களே!

எம் ஸ்ரீகண்ணன் கோகுலத்தில் எல்லா வீடுகளுக்கும் போவான், ஆனால் ஒரே வீட்டிற்கு மட்டும் செல்ல மாட்டான். அந்த கோபிகையும் ஸ்ரீகண்ணன் இன்று வருவான், இன்று வருவான் என தினசரி அவனுக்காக வெண்ணெய், தயிர், பால் எடுத்து வைத்து காத்துக் கொண்டிருப்பாள். அவனோ வருவதே இல்லை. இப்படி பல நாள் நடந்து ஓர் நாள் விரக்தியுடன் ஓர் முடிவு செய்தவளாய் ஸ்ரீகண்ணன் வரவில்லை என தெரிந்ததும் வீட்டினுள் சென்று கதவைத் தாளிட்டாள். அவள் வெண்ணெய் வைத்திருந்த பானையின் மூடி 'டமார்' என்ற சத்தத்துடன் கீழே உருண்டு விழுந்தது. அங்கே அதே வெண்ணெய் பானையின் உள் ஸ்ரீகண்ணன் வெள்ளைவெளேர் என காட்சி தந்தான்.

அது மட்டுமல்ல, அக்கம் பக்கம் உள்ள வெண்ணெய்களை எல்லாம் அள்ளி அள்ளி புசித்தான். கோபிகையையும் தன் ஓரக் கண்ணால் நோக்கினான். கோபிகை இந்த காட்சியை கண்டதும் சிலையாக நின்றாள். தாம் காண்பது கனவா என தன்னை கிள்ளி சரி பார்த்துக் கொண்டாள். கனவு அல்ல என்ற முடிவுக்கு வந்தாள். ஸ்ரீகண்ணனும் வெளியே வந்து நின்றான். அவளும் தாரைதாரையாக கண்ணீர் விட்டு ஸ்ரீகண்ணன் திருவடியில் தன் நிலை சாய்ந்து வீழ்ந்தாள். அவன் திருவடியை பற்றினாள். ஹே கண்ணா! உனக்கு ஏன் இந்த பாரபட்சம்? எல்லா வீடுகளுக்கும் செல்கிறாய், அவர்களிடம்

Koviloor Digital Library
அடியும், உதையும் வாங்கிக் கொள்கிறாய். அவர்கள் உன்னை திருடன் என குற்றம் சுமத்தி வசை மாறி பொழிகிறார்கள். அங்குதான் திரும்பதிரும்ப போகிறாய். ஆனால் நான் தினமும் நீ என்று வருவாய் என உனக்காக வெண்ணெய், தயிர், பால் எடுத்து வைத்து காத்துக் கொண்டிருக்கிறேன். என் உருக்கம் நீ அறியாததா? என் எண்ணம் நீ அறியாததா? ஏன் இந்த சோதனை? என உருகி கேட்டாள்.

ஸ்ரீகண்ணனும் பரிவுடன் அவள் கண்ணீரைத் துடைத்து கோபிகா ரத்தினமே! நீ ஏன் இப்படி துக்கிக்கிறாய்? நீ தான் எம்மை தினமும் உன் அகத்தில் கண்டு சேவிக்கிறாயே. அலங்காரம் செய்கிறாய். அமுது ஊட்டுகிறாய். தாலாட்டுகிறாய். இத்தனை சேவையையும் எம் அன்னை யசோதை செய்வாள். அவளுக்கு அடுத்தபடியாக அன்னைக்கும் அன்னையாக இருந்து செய்து வந்தாயே அதை நீ அறியவில்லை போலும்? இதோ பார், நேற்று மாலை நறுமண மல்லிகையில் கொண்டை மாலை செய்து, எம் தலையை அலங்கரித்தாயே, அது இன்னமும் வாடாமல் இருக்கிறது பார் என தம் தலையில் சூட்டி இருந்த மல்லிகை சரத்தை எடுத்து காண்பித்தான். அவள் அதை தம் கையில் வாங்கிப் பார்த்தாள். அதில் அவள் தான் கண்ணன் விக்ரஹத்திற்கு தலையில் வைத்து நிற்கவில்லை என தன் தலையில் உள்ள கொண்டை ஊசியை எடுத்து குத்தி சேர்த்திருந்தாள், அந்த ஊசியும் அப்படியே இருந்தது.

முந்தாநாள், நாம் மதியம் வெளியே விளையாடி விட்டு வீட்டிற்கு வந்தோம், எம் தாய் வீட்டினுள் ஏதோ அவசர வேலையாக இருந்தாள். யாம் எம் தொட்டிலில் படுத்தோம், நீ பாடிய தாலாட்டு அப்படியே எம்மை லயிக்க வைத்து, தூங்கப் பண்ணி விட்டது. அப்புறம் எம் தாய் வந்து பார்த்து விட்டு, இன்று தாலாட்டாமலே தூங்கி விட்டானே என அதிசயித்து சென்றாள் என்று சொல்லி அவள் பாடிய தாலாட்டு பாட்டையும்

Koviloor Digital Library
பாடிக் காண்பித்தான். இப்படி எம் தாயின் அடுத்த ஸ்தானத்தில் நீ இருந்து கொண்டு எம்மை அரவணைத்துச் செல்கிறாய். யாம் உன்னை மறக்கவில்லை, நீயும் எம்மை மறக்கவும் இல்லை. ஆனால் உன் அறியாமை உறக்கத்தினால், எம்மை குறை கூறுகிறாய் என உண்மையை உரைத்தான்.

அவளும் மறுமொழியாக ஓ ஸ்வாமி! மற்றவர்கள் உன்னையும், உன் விளையாட்டையும் தினமும் அனுபவிக்கிறார்களே. அந்த பேறு நான் பெறவில்லையே? என உரைத்தாள். அதற்கு ஸ்ரீமாதவனும் மறுமொழியாக, ஏ பக்த சிரோன்மணியே! அவர்கள் கண்டது அனைத்தும் மாயையே! அவை உண்மையல்ல! எம் விளையாட்டில் லயித்து விட்டால், உண்மையை காண முடியாது. யாம் ஜீவர்களுக்கு அளவற்ற விளையாட்டை கொடுத்திருக்கிறோம். அதில் சலிப்பு ஏற்பட்டு இருதய கமலத்தில் வைத்து அலங்கார ஆராதனை செய்தால்தான் உன் போன்று அனுபவிக்க முடியும். யாம் உன்னை விட்டு எங்கு செல்ல முடியும்? அவர்கள் கண்டது, அனுபவித்தது அனைத்தும் மாயையே! நீ உணர்ந்தது அனைத்தும் உண்மையே! உன் வரலாற்றையும் கூறுகிறோம், உணர்வாயாக.

ஏ வனிதா ரத்தினமே! ஸ்ரீ ராமாவதார காலத்தில் நீ சீதாவின் வளர்ப்புக் கிளியாக இருந்தாய். அவள் திருக்கரத்தாலே போஷிக்கிப்பட்டாய். நாங்கள் கானகம் சென்றதும் நீ எம் நாம தியானத்திலும், ஜானகியின் பாசத்திலும் துடித்துக் கொண்டிருந்தாய். எனக்கு உன் பூரண கடாட்ஷம் என்று? என ஏங்கிக் கொண்டிருந்தாய். உன் ஜீவன் பிரியும் சமயம் யாம் வானர வீரர்களை வைத்து சேது பந்தனம் செய்து கொண்டிருந்தோம்.

அதுசமயம் ஓர் அணில் சேது பந்தன சேவையில் ஈடுபட்டுருந்தது. எப்படி என்றால் ஜலத்தில் தம் உடம்பை நனைத்துக் கொள்ளும், கரையில் வந்து தரையில் புரளும்.

Koviloor Digital Library

அதன்மேல் மணல் ஒட்டிக் கொள்ளும், உடனே ஜலத்தில் சென்று, அந்த மணலை உதறும். இப்படியாக மணலை போட்டு பாலம் கட்ட உபகாரம் செய்தது. அந்த காட்சியை, யாம் கண்ட போது யாம் அந்த ஜீவன் மீது அன்பு ஏற்பட்டு, அதை எடுத்து கையில் வைத்துக் கொண்டு மூன்று விரல்களால் தடவிக் கொடுத்தோம். அந்த கோடுகள் அதன் முதுகில் அப்படியே பதிந்து விட்டது. அந்நிலையில் அதற்கு ஓர் வரமும் கொடுத்தோம். அதாவது நீ எவ்வளவு உயரத்தில் இருந்து விழுந்தாலும் உனக்கு மரணம் சம்பவியாது என சாதித்தோம்.

அந்த அணிலுடன் உறவாடும்போது, உன் அபய குரலும் கேட்டது. உன் எண்ணம், அடுத்த ஜன்மாவில் பூர்த்தியாகும் என உனக்கு அருளினோம். உன் எண்ணத்தின் படியும், எம் அனுக்ரஹத்தின் படியும், இன்று இந்த கோகுலத்தில் பிறந்து எம்மை அந்தரங்கமாக பூஜித்து, எம் சேவையையும் பெற்றாய். இன்னும் சிறிது காலம் இங்கிருந்து உன் பிராரப்தத்தையும் முடித்து விட்டு எம்பதத்தில் சேர்வாய் என அருள்பாலித்தான்.

பிரேமை பக்தியின் சொரூபங்களே!

ஓர் சமயம் கோகுலத்தில், ஓர் கோபிகை வீட்டில் வெண்ணெய் திருடச் சென்றான் ஸ்ரீகண்ணன். அந்த வீட்டு வாசலில் கோபிகை உட்கார்ந்திருந்தாள். அவளை திசை திருப்புவதற்காக ஓர் யுக்தி செய்தான். வீட்டின் பின்புறம் சென்று, கன்றுகளை எல்லாம் அவிழ்த்து விட்டான். கன்றுகள் எல்லாம் துள்ளிக் குதித்து, தம் தாயிடம் ஓடிச் சென்று பால் அருந்தின. உடனே கண்ணன் வாசலுக்கு வந்து, மாமி! உன் கன்றுகள் எல்லாம் கயிற்றை அறுத்து கொண்டு பால் குடிக்க ஓடுகின்றன என்றான்.

அந்த கோபிகையும் எழுந்து ஓடி கன்றுகளை பிடித்துக் கட்ட முயன்றாள். அதுசமயம், ஓர் டப்பாவில்

Koviloor Digital Library
பால்கோவாவை அடுக்கி வைத்துக் கொண்டிருந்தாள். அவள் ஸ்ரீகண்ணனை அழைத்து அடே கண்ணா! நீ சமத்துப் பிள்ளை, நான் வரும் பரியந்தம் இந்த பால்கோவையை பார்த்துக் கொள் என சொல்லிப் போனாள். திருடனை காவல் வைத்தால் என்ன ஆகும்? அவள் சென்றவுடன் அருகில் மறைந்திருந்த தம் நண்பர்களை அழைத்தான். அவர்களுக்கு அவைகளைப் பிரித்துக் கொடுத்தான்.

அவர்களும் அதை ஆசை தீர உண்டார்கள். அதற்குள் அந்த கோபிகை வந்துவிட்டாள். நிலைமையை கண்டாள். அடே கிருஷ்ணா! உன்னை நம்பினேனே, இன்று உன்னை காவல் வைத்தேன் பார்! நீயோ பக்காத் திருடன், ஏனோ இன்று உன்னைப் பார்த்ததும் எனக்கு நம்பிக்கை வந்து விட்டது. என்னை எப்படியோ இன்று மயக்கி விட்டாய்(அவன் மயக்கத்தில் தானே அகிலமே 'மயங்கி இயங்குகிறது)உன்னை என்ன செய்கிறேன் பார், என அவன் கையைப் பற்றி தாய் யசோதையிடம் அழைத்துச் சென்றாள்.

அடுத்து ஓர் வீட்டின் பின்புறமாகச் சென்றான் ஸ்ரீகண்ணன். அந்த கோபிகை ஏதோ ஓர் வேலையாக இருந்தாள். அவள் வீட்டுப்பசு மிக உயர்ந்த ரகம்; நிறையப் பால் சுரக்கும். அதிக சுவையாகவும் இருக்கும். இதை ஸ்ரீகண்ணன் அறிந்தான் போலும்? கன்றினை அவிழ்த்துவிட்டான். கன்று துள்ளிக் குதித்தோடி, தம் தாயிடம் பாலை முட்டிமுட்டி குடித்தது. உடனே ஸ்ரீகண்ணனும் அந்த கன்றினைப் பார்த்து சற்று விலகிக் கொள், நான் கொஞ்சம் குடித்துக் கொள்கிறேன் என்றான். அந்த கன்றும் ஸ்ரீகண்ணன் உரைக்குச் செவி சாய்த்து சற்று விலகிக் கொண்டது. ஸ்ரீகண்ணனும் மண்டியிட்டு பாலை சுவைத்துக் குடித்தான்.

கன்றுக்குப் பசி தாளவில்லை. ஸ்ரீகண்ணனை முட்டிக் கொண்டு வந்தது. ஸ்ரீகண்ணனும் அதன் தலையை ஓர் கரத்தால்

Koviloor Digital Library

தாங்கிக் கொண்டு சற்று பொறு, இன்னும் கொஞ்சம் குடித்துக் கொள்கிறேன் என சொல்லி குடித்துக் கொண்டிருந்தான். கன்றுக்கு ஆத்திரம் தாளவில்லை. அது அம்மாஅம்மா என அலறியது. கன்றின் குரல் கேட்டு கோபிகை ஓடி வந்தாள். நிலைமையை உணர்ந்தாள். ஆத்திரத்துடன் ஸ்ரீகண்ணன் கரங்களை பற்றி அவன் தாய் யசோதையிடம் அழைத்துச் சென்றாள்.

அடுத்து ஓர் கோபிகை வீட்டில் வெளியூரிலிருந்து விருந்துக்கு அவள் மருமகன் வந்தான் போலும். அந்த கோபிகையின் மகள் அதாவது இந்த மாப்பிள்ளையின் மனைவி குளத்திற்கு குளிக்கச் சென்றிருந்தாள். அந்த மாமியாரும் மருமகனுக்கு ருசியான பலகாரங்களை எடுத்து வைத்து விட்டு, தன் மகள் தோழிகளுடன் குளக்கரைக்குச் சென்றிருப்பதாகவும், சீக்கிரம் வந்து விடுவாள் என சொல்லி பலகாரங்களை சாப்பிடும்படி வைத்துவிட்டு ஏதோ வேலையாக வீட்டினுள் சென்றாள். அங்கு நம் ஸ்ரீகண்ணன் வந்தான். நிலைமையை உணர்ந்தான். அந்த மருமகனுக்கு அவன் மனைவியாக தோன்றினான். அத்தான் என அன்பாக அழைத்தான். தன் மனைவியைக் கண்டதும், பசி பறந்து போய் விட்டது. எழுந்து சென்று அவள் கையைப் பற்றினான். அந்த மாயை கோபிகையும், அந்த அத்தானை ஆசை காட்டி குளக்கரைக்கு அழைத்துச் சென்று அவனுடைய உண்மையான மனைவியிடம் விட்டு விட்டு மறைந்தான். இங்கு வீட்டில் ஸ்ரீகண்ணன் அந்த ருசி மிகுந்த பலகாரங்களை ஆசையாக புசித்தான். திருப்தி ஆனதும் ஓர் டம்ளரை வீட்டினுள் வீசி எறிந்தான். அந்த கோபிகை திடுக்கிட்டாள். உள்ளே வந்து பார்த்தாள். - மருமகனைக் காணாது, மன்னவனாம் ஸ்ரீகண்ணனைக் கண்டாள். ஆத்திரம் தாளாது ஸ்ரீகண்ணன் கையை பற்றி அவன் தாய் யசோதையிடம் அழைத்துச் சென்றாள்.

அடுத்து ஓர் கோபிகை வீட்டின் முன், ஓர் மாட்டு வண்டி வந்து நின்றது. அதிலிருந்து ஓர் முதியவர் இறங்கினார். வண்டிக்காரர் அந்த முதியவரை கரங்களைப் பற்றி இறக்கி

Koviloor Digital Library
விட்டான். இறங்கிய பெரியவர் வீட்டினுள் நுழையும்போது தம் மகளை யமுனா என சப்தம் கொடுத்தார். உள் இருந்த கோபிகையும் தம் அப்பாவின் குரல் கேட்டு ஓடோடி வந்து உள்ளே அழைத்துச் சென்றாள். சற்று நேரம் உலக வார்த்தைகளைப் பேசி விட்டு, அப்பா! கை, கால்களை சுத்தி செய்து வாருங்கள், ஆகாரம் எடுத்து வைக்கிறேன் என சொன்னாள். முதியவரும் கைகால்களை சுத்தி செய்யும் இடத்திற்கு சென்றார். அந்த கோபிகையும் அடுத்த அறையில், தம் தந்தைக்கு தேவையான பலகாரங்களை எடுத்து வைத்துக் கொண்டிருந்தாள்.

நம் ஸ்ரீகண்ணன் அங்கு வந்தான். நிலைமையை உணர்ந்தான். கை, கால் அலம்பிய முதியவரை, அவர் மகளாக தாம் வடிவெடுத்து பக்குவமாக அடுத்த அறைக்கு அழைத்துச் சென்றான். அவர் பல்லுக்கு மிருதுவான பலகாரங்களை கொடுத்தான். அவரும் ஆனந்தமாக புசித்துக் கொண்டிருந்தார். அந்த கோபிகை அடுத்த அறையில் தம் தந்தைக்கு பலகாரங்களை எடுத்து வைத்து காத்துக் கொண்டிருந்தாள். அடுப்பறையில் பால் பொங்கி வரும்படியாகவும், சில பாத்திரங்கள் உருண்டு விழும்படியாகயும் திருவுளம் பற்றினான். உடனே அந்த கோபிகை அடுப்பறைக்கு எழுந்து ஓடினாள். அந்த அறையில்தான் தயிரும், வெண்ணையும் இருந்தன. அதனால் இந்த நாடகத்தை இப்படி நடத்தி விட்டு தம் நண்பர்களை அழைத்து அதை காலி செய்ய வைத்தான். பின்னர் கோபிகை வரும் சப்தம் கேட்டு நண்பர்கள் அனைவரும் ஓடி விட்டனர். நம் ஸ்ரீமதுசூதனன் மட்டும் அகப்பட்டுக் கொண்டான். அந்த கோபிகை அந்த ஸ்ரீகள்வனின் கரம் பற்றி, அவன் தாய் யசோதையிடம் அழைத்துச் சென்றாள்.

அடுத்து ஓர் கோபிகை தன்வீட்டின் உள் இருந்து தயிர் கடைந்து கொண்டிருந்தாள். அந்த தாழியில் வெண்ணெய் திரண்டு பந்துபந்தாக வந்து கொண்டே

Koviloor Digital Library
இருந்தது. அங்கு வந்த ஸ்ரீகண்ணனுக்கு அந்த வெண்ணையை கண்டதும் நாக்கில் ஜலம் ஊறியது. அந்த கோபிகையும் ஸ்ரீகிருஷ்ணனின் கானாம்ருதத்தில், தன்னை மறந்து, கண்களை மூடியபடி, தயிர் மத்தை கயிறு கொண்டு இழுத்துக் கொண்டிருந்தாள். நம் ஸ்ரீகண்ணனும் மத்து இருந்த இடத்தில் தாம் தோன்றினான். சுற்றி வரும் வெண்ணெய்களை ஆனந்தமாக அள்ளிப் புசித்தான். மத்து கண்ணனாகியதை அவள் உணரவில்லை. சற்று நேரத்தில் கோபிகைக்கு சுய நினைவு வந்தது, உலக நினைவு பெற்றாள். கண்ட காட்சி அவளை திடுக்கிட வைத்தது. அத்தனை வெண்ணெயையும் தின்று விட்டானே என ஆத்திரத்துடன், அந்த சூத்திரதாரியின் கரம் பற்றி அவன் தாய் யசோதையிடம் அழைத்துச் சென்றாள்.

அடுத்து ஓர் வீட்டில் ஓர் கோபிகை சேர்ந்த வெண்ணெய்களையெல்லாம், ஓர் பானையில் மொத்தமாக சேர்த்து வைத்துக் கொண்டிருந்தாள். அவைகளை சாப்பிட ஸ்ரீகண்ணன் ஓர் யுக்தி செய்தான். அந்த கோபிகையினுடைய மகள் அவள் தந்தைக்கு காட்டிற்குச் சென்று உணவு கொடுக்கச் சென்றிருந்தாள். இதை ஸ்ரீகண்ணன் அறிந்தான். உடனே அவள் மகளாக தான் வடிவெடுத்தான். தம் தாயிடம் வந்தாள். அம்மா எனக்கு தலை வாரிவிடு என்றாள். அந்த கோபிகையும் தன் மகளான ஸ்ரீகண்ணனைக் கண்டு ஏண்டி! அதற்குள் வந்து விட்டாய்? உன் அப்பா சாப்பிட்டாரா? என கேட்டாள். இந்த ஸ்ரீமாயவனும் அவள் மகள் வடிவத்தில், அம்மா! அவர் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார். எனக்கு நேரம் போகவில்லை வந்துவிட்டேன். எனக்கு தலையை வாரிவிடு, என் தோழிகளை பார்க்க போக வேண்டும் என்றாள். அவளும் உண்மையென நம்பி ஸ்ரீகண்ணனாகிய தன் மகளை அழைத்து வீட்டு முற்றத்தில் வைத்து தலைவாரிக் கொண்டு இருந்தாள்.

அங்கு நின்ற நம் ஸ்ரீகபடநாடகன் தன் நண்பர்களை

Koviloor Digital Library
அழைத்து, பின்புறமாகச் சென்று வெண்ணெய், தயிர் வேண்டியவற்றை உண்டு பாத்திரங்களை உருட்டினான். சப்தம் கேட்ட கோபிகை உள்ளே ஓடி வந்தாள். அதற்குள் நண்பர்கள் ஓடிவிட்டனர். ஸ்ரீகண்ணன் அகப்பட்டுக் கொண்டான். அந்த கோபிகையும் ஆத்திரத்துடன் அந்த ஸ்ரீமதுசூதனனை கரம் பற்றி அவன் தாய் யசோதையிடம் அழைத்துச் சென்றாள்.

ஓர் காய்கறி விற்கும் வியாபாரி, அன்று காய்கறி வாங்க பணம் இல்லாமல் கவலையுடன் ஓர் வீட்டு திண்ணையில் அமர்ந்திருந்தான். அவன் பார்வை எல்லாம் எதிர் வீட்டில் புடலங்காய் வரிசைவரிசையாக தொங்கிக்கொண்டிருப்பதை கவனித்து, தனக்குள் சிந்திக்கிறான். நம்மிடம்தான் பணம் இல்லையே, இருந்தால் இந்த வீட்டு அம்மாவிடம் கேட்டு இந்த காய்களை எல்லாம் வாங்கி விற்றால் நல்ல லாபம் கிடைக்கும் என எண்ணிக் கொண்டிருந்தான். இவன் நிலை அறிந்த நம் பிரபு, அவனுக்காக ஓர் நாடகம் நடத்தினான். அந்த வீட்டு கோபிகையாக மாறி அனைத்து காய்கறிகளையும் பறித்துக் கொடுத்து அனுப்பி விட்டான். மேலும் சில காய்களை, தாம் ஸ்ரீகண்ணனாகவே மாறி சிலருக்கு தானம் செய்து கொண்டிருந்தான். அடுத்த வீட்டுக்காரி இதைக் கண்டாள். ஓடிச் சென்று அந்த வீட்டு கோபிகையிடம் நடந்ததை சொன்னாள். அந்த கோபிகை நடந்ததை அறிந்து வெளியே வந்தாள், நிலைமையை உணர்ந்தாள். அடையாளத்திற்கு இரண்டு புடலங்காய்களை எடுத்துக் கொண்டு, எம் ஸ்ரீமாதவனின் கரத்தைப் பற்றி அவன் தாய் யசோதையிடம் அழைத்துச் சென்றாள்.

எம் அருந்தவக் குழந்தைகளே!

இப்படி நாடகம் நடத்திய அந்த திருட்டு ஸ்ரீகண்ணன், தம் வீட்டில் தம் தாய் யசோதையிடம் அவளை விட்டுப் பிரியாமல், விளையாடவும் போகாமல், சமத்துப் பிள்ளையாக தாயின் பார்வையிலேயே இருந்தான். அந்த தாயும், தம்

Koviloor Digital Library

மகன் ஸ்ரீகண்ணனுக்கு அமுதூட்டி, தொட்டிலில் இட்டு, தாலாட்டி தூங்கப் பண்ணினாள். மேலே சொன்ன ஏழு கோபிகைகளும் ஆளுக்கு ஒரு கண்ணனாகப் பிடித்துக் கொண்டு, யசோதையின் வீட்டு முற்றத்தில் நின்று யசோதையை கூப்பிடுகிறார்கள். யசோதையும் வெளியில் வந்து என்ன? எனக் கேட்கிறாள். யசோதையிடம் கூட்டிக் கொண்டு வந்த ஏழு பேரும் கண்ணனாகத் தெரியவில்லை. ஆனால் அந்த ஏழு பேருக்கும் தங்கள் கண்களுக்கு தங்கள் கைகளில் இருப்பது ஸ்ரீ கண்ணனாகவே தோன்றுகிறது. ஆனால் ஒருத்தி கண்களுக்கு ஒருத்தி பிடித்திருப்பது மாற்றமாக தெரிந்தது.

அதாவது, முதலாமவள் கொண்டு வந்தது அவள் மகனாகவும், இரண்டாவது கோபிகை கொண்டு வந்தது அவள் வீட்டில் பால் கறக்கும் கோனாராகவும், மூன்றாமவள் கொண்டு வந்தது அவள் வீட்டின் மருமகனாகவும், நான்காமவள் கொண்டு வந்தது அவளை பெற்றெடுத்த தந்தையாகவும், ஐந்தாமவள் கொண்டு வந்தது தயிர் கடையும் மத்தாகவும், ஆறாமவள் கொண்டு வந்தது அவள் வீட்டில் உள்ள அருமை மகளாகவும், ஏழாமவள் கொண்டு வந்தது அவள் அருமை கணவனாகவும் காட்சி அளித்தார்கள். இது அந்த ஸ்ரீமாயவனின் லீலையாகும்.

உடனே யசோதை எல்லோரையும் கோபித்து, இது என்ன கூத்து? ஒவ்வொருவரும் உங்கள் உடைமையை கொண்டு வந்து என் குழந்தை ஸ்ரீகண்ணன் என பொய்க்குற்றம் சாட்டுகிறீர்களே? இது நியாயமா? இது அடுக்குமா? இது தர்மமா? என் குழந்தை பேரில் உங்களுக்கு என்ன அவ்வளவு துவேஷம்? நீங்கள் கொண்டு வந்தவர்களையே விசாரித்துப் பாருங்கள், உண்மை தெரியும் என்றாள். முதலாமவள் கையில் உள்ளவன் சொல்கிறான், ஏனம்மா! நான்தானே டப்பாவில் பால்கோவாவை அடுக்கி வைத்துக் கொண்டிருந்தேன். எல்லாம் குறையாமல் அப்படியே இருக்கிறதே என்றான்.

Koviloor Digital Library

இரண்டாமவள் கொண்டு வந்த கோனார், ஏனம்மா! நான் தானே கன்றை அவிழ்த்து விட்டு பால் கறந்து கொண்டிருந்தேன் என்றார். மூன்றாமவள் கொண்டு வந்த மருமகன், என்ன அத்தை! நான்தானே சாப்பிட்டுக் கொண்டிருந்தேன் என்றான். அதற்குள் அவன் மனைவி, அங்கு வந்து சேர்ந்தாள். தம் அன்னையை கண்டித்தாள்.

நான்காமவள் கொண்டு வந்த முதியவர், என்ன யமுனா! நீ தானே எனக்குப் பிடித்தமான பலகாரங்களை செய்து சாப்பிடச் செய்தாயே என்றார். ஐந்தாமவள் கையில் வைத்திருந்து தயிர் கடையும் மத்தாக இருந்தது. ஆறாமவள் அழைத்து வந்திருந்த அவள் மகள் சொல்கிறாள், அம்மா! நான்தானே வெண்ணெய்களையெல்லாம் ஒரே பாத்திரத்தில் எடுத்து வைத்துக் கொண்டிருந்தேன், அவை ஒன்றும் குறையவே இல்லையே என்றாள்.

ஏழாமவள் கொண்டு வந்தவளுடைய கணவன், ஏண்டி! நான்தானே ஒரு வியாபாரியை கூட்டி வந்து புடலங்காயைப் பறித்துக் கொடுத்து விற்றுப் பணம் தரும்படி சொல்லி அனுப்பியிருக்கிறேன் என்றான்.

இந்த குழப்பங்களைக் கண்ட அந்த கோபிகைகளின் நிலை தடுமாறியது. என்ன நடந்தது? என்ன நடக்கிறது? என்றே புரியவில்லை. எல்லோரும் ஏககாலத்தில் ஸ்ரீகண்ணனை நோக்கினார்கள். அந்த ஸ்ரீமதுசூதனனும் அப்பொழுதுதான் தூங்கி விழித்து வந்தவன்போல கண்களை கசக்கி விட்டுக் கொண்டு, தம் அன்னையின் முந்தானையை பற்றிய வண்ணம் கடைக்கண் பார்வையால் எல்லோரையும் நோக்கினான். அந்த கோபிகைகளை நோக்கி, ஓ எம் மாமியர்களே! ஏன் அப்படி பார்க்கிறீர்கள்? உங்கள் பார்வையில் கோடானுகோடி அர்த்தங்கள் தோன்றுகிறதே! காரணம் என்ன? எனக் கேட்டான்.

Koviloor Digital Library

அவர்களும் ஸ்ரீகண்ணனை நோக்கி, ஹே கமலக்கண்ணா! இதுவரை நாங்கள் கண்டவை, அனுபவித்தவை, அனைத்தும் கனவா? இல்லை நனவா? என்றார்கள். ஸ்ரீகண்ணனும் அவர்கள் திரையை விலக்கி, இப்பொழுது உற்று நோக்குங்கள் புரியும் என்றான். அவர்களும் தன்னை மறந்து தலைவனில் கலந்து, உறவை மறந்து, உணர்வை மறந்து கூர்ந்து நோக்கினார்கள். அந்த திருக்காட்சியில் ஸ்ரீமந் நாராயணனாகவே காட்சி தந்தான். அதுவும் மின்னலைப் போல் தோன்றி மறைந்தது. இன்னமும் கொஞ்ச காலம் பொறுத்திருங்கள், உங்கள் கர்மா முடியட்டும் என அந்த ஸ்ரீ பரம்பொருள் சாதித்தது. இப்பொழுது இவர்கள் கண்களுக்கு உண்மை கனவாகி விட்டது.

வினை முடிந்தால் உண்மை புரியும்; வினைப்போகம் ஓர் மேக மூட்டம். அது சாஸ்வதமாக மறைப்பது இல்லை. ஆகவே இந்த வினைகளுடனேயும் அந்த உண்மைக் காட்சியை விட்டு விட்டு அனுபவிக்கலாம். அதற்கு விடாமுயற்சி தேவை. அந்த முயற்சியும், அவன் அனுக்ரஹமும் இல்லாமல் உண்மை பிரகாசிக்காது. அவன் அருளால் அணுப்பிரமாணம் காணும் காட்சியை மேலும்மேலும் தரிசிக்க ஆவலைப் பெருக்கி, அந்த ஆவலையும் அவனுடன் இணைத்து விடுங்கள். இது போகப்போக புரியும்.

அன்பின் அமுதங்களே!

ஓர் நாள் யசோதை, எம் குழந்தை ஸ்ரீகண்ணனுக்கு அமுது ஊட்டுவதற்காக தேடினாள். ஸ்ரீகண்ணனை காணவில்லை. தெரு எங்கும் தேடினாள். அவன் அகப்படவில்லை. எதிரே ததிபாண்டன் என்ற ஸ்ரீகண்ணனின் நண்பன் வந்து கொண்டிருந்தான். அவனைக் கூப்பிட்டு கண்ணனைக் கண்டாயா? என்றாள். அவனும் முதலில் காணவில்லை என்றான். அவனை

Koviloor Digital Library
பார்த்து, உன்னிடம் சொல்லாமல் அவன் எங்கும் போக மாட்டான், உள்ளதை சொல்? என அதட்டினாள். ததிபாண்டனும் சிரித்துக் கொண்டே, ராதையும், ஸ்ரீகண்ணனும் ஓர் வனத்தில், ஓர் மரத்தடியில் அமர்ந்திருக்கிறார்கள் என்றான். அது எங்கே இருக்கிறது? என கேட்டாள். அவனும் அது ரகசியம் என சொல்லி ஓடி விட்டான்.

யசோதை பிருந்தாவனத்திற்கு வந்தாள். அங்கு ஓர் மரத்தடியில் சற்று உயரமான பாறை ஒன்றில் எம் பெருமான் இடது காலை தொங்க விட்டுக் கொண்டு ஸ்ரீபிரம்மதேஜசுடன் அமர்ந்திருந்தான். ராதை அவன் காலடியில் அமர்ந்த வண்ணம் திருவடியை வருடிக் கொண்டிருந்தாள். இந்த காட்சியை யசோதை மறைந்து இருந்து கவனித்தாள். அவளுக்கு ஒன்றுமே தெரியவோ, உணரவோ முடியவில்லை. அது ஸ்ரீசத்குரு-சத்சிஷ்ய பாவனை.

கண்ணன்: ராதா! இந்த உலகில் எத்தனையோ அழகான, அற்புதமான, ஆச்சர்யமான, ஆனந்தமான வஸ்துக்கள் எல்லாம் மனதைக் கவரும் நிலையில் இருக்க, யாம் ஓர் இடையன், ஓர் அறிவிலி, எம்மைச் சுற்றி சுற்றி வருகிறாயே? எம்மிடம் அப்படி என்ன சுகம் கண்டாய்? மலர்களை தேடி வண்டுகள் செல்வது வழக்கம். ஆனால், அதற்கு மாறாக வண்டைத் தேடி மலர் செல்வது போல் இருக்கிறது உன் செய்கை. இது விந்தையாக இருக்கிறது!

ராதை: ஷ்யாம்! (கண்ணனை ராதை ‘ஷ்யாம்’ என்று அழைப்பது வழக்கம்) இந்த உலகத்தில் என்னால் வேறு எதையும் காண முடியவில்லையே! உலகம் என ஒன்று இருக்கிறது என்று கூட என்னால் நம்ப முடியவில்லையே! அப்படி இருக்கும்போது எனக்கு உன்னையன்றி வேறு கதி எது? நீ குறிப்பிடும் வாக்கியார்த்தத்தில் நான் மலர் என்று சொன்னாய், அது உண்மையே. ஹே பிரபு! உன் உந்திக் கமலத்தில் ஸ்ரீபிரம்மன் உதித்தான்! உன் ஆணையின் பேரில் மாயையால்

Koviloor Digital Library

இல்லாத ஒன்றை இருப்பதைப் போல் தம் சாமர்த்தியத்தால் சிருஷ்டித்தான். அந்த யோக மாயையின் வித்து நீ! உன் தேஜசில் இருந்து கதிர் இயக்கமாக ஜீவ அணுக்கள் அச்சிருஷ்டியில் பிரதிபலித்தன.

அவைகளை மயக்கும் வண்ணம் உன் விஷ்ணு மாயை, இவைகளை உண்டு பண்ணி இந்த அணுப்பிரமாணம் உள்ள ஜீவர்களை மயக்குகிறது. அந்த மயக்கத்தால் ஏற்பட்ட வினைகளே பிராரப்த்தம் என அமைகிறது.

நீயோ விளையாட்டாக இந்த பிராரப்தம் என்ற சூட்சுமக் கயிற்றில், அந்த ஜீவர்களை ஆட்டி வைத்துக் கொண்டிருக்கிறாய். ஹே பிரபோ! உன் அருளால், உன் சக்தியால் என்னை அறியும் தன்மையும் கொடுத்தாய். நான் யார்? பூமி மாதா அல்லவோ? எல்லோருக்கும் இல்லாத சிறப்புப் பெயரான 'மாதா' என்ற பட்டத்தை கொடுத்தாய். தாய் என்றால் பொறுமையின் இலக்கணம். அந்த இலக்கணமாக என்னை அமைத்திருக்கிறாய். என் மீது மரம், செடி, கொடிகளில் மலரும் பல மலர்கள் இருக்கும்போது, மலராகிய நான் உன் திருவடியை நாடி வருவது உன் மஹிமை பிரவாகமாகும். இந்த மலருக்கு உன் இதயத்தில் இடம் உண்டு, அதை எப்போதும் நான் உணர்வேன்.

கண்ணன்: ராதா! நீ தத்துவத்திற்குப் போய் விட்டாய். அந்த அளவுக்கு யாம் வரவில்லை, யாம் ஓர் சாதாரண இடையனின் மகன், படிப்பு வாசனை கிடையாது, சரீர சுத்தம் கிடையாது, சரீர அபிமானமும் கிடையாது. நீ எம்மை புகழ்ந்து அழைத்தாலும், இகழ்ந்து உரைத்தாலும் சமமாக ஏற்றுக் கொள்வோம். ஆகவே கல்வியின் தராதரம் எமக்குத் தெரியாது. எவர் எந்த வேலை கொடுத்தாலும் தாஸானுதாஸனாய் அதை ஏற்றுக் கொள்வோம். அவர்கள் திருவடியைத் தாங்கி அந்த ஸ்ரீபாத ஸ்பரிசத்தில் கிடைக்கும் தூளியை எம் சிரசில் தாங்கிக் கொள்வோம்.

Koviloor Digital Library
அவர்கள் உச்சிஷ்டம் அமிர்தமென்று உண்போம்.

எமக்கு அபிமானம், சூடு, சுரணை என்பது எதுவும் கிடையாது. யாம் பங்களாவாசி அல்ல. எமக்கு எந்த ஊரும், வீடும் கிடையாது. யாம் அனாதை. தற்காலிக இந்த பொய்யான தாய், தந்தையரை தவிர எமக்கு உண்மையான தாயும், தந்தையும் கிடையாது. துர்நாற்றமுள்ள பாம்பையே எம் வாஸஸ்தலமாக கொண்டுள்ளோம். யாம் அணிந்திருப்பதோ தரித்திரத்திற்கிடமான துளசிகட்டை மற்றும் தாமரை கொட்டையினாலான மாலைகள் தாம். உயர்ரக வாகனங்கள் எதுவும் கிடையாது. இழிந்த பறவை மீது பறந்து வருவோம். எம்மை தரித்திரம் உடையவர்களே விரும்புவர்.

ஏனென்றால் எம்மை விரும்புபவர்களிடமிருந்து முதலில் செல்வத்தைப் பறிப்போம், பிறகு அவர்களை தரித்திரர்களாக்கி விடுவோம். உலகத்திற்கு உதவாத ஆண்டிகளின் கூட்டமே எம் கூட்டம். யாம் சுகவாசி அல்ல. எம்மை நேசிக்கும் அடியார்கள் தீர்த்தம் தந்தாலும் அதில் திருப்தியுறுவோம். கண்ணா! இன்று ஒன்றுமே இல்லை என்று அவர்கள் சயனித்தாலும், அவர்களுடனே யாமும் எதுவும் கேட்காமலேயே சயனித்து கொள்வோம். எந்த ஓர் இடத்தில் யார் கூப்பிட்டாலும் உடனே ஓட வேண்டும். சில சமயங்களில் யாம் ஆழ்ந்த நித்திரையில் இருந்து விடுவோம். அது சமயம் யாம் போக முடியாது, எம் நாமா காப்பாற்றுமாம். இதை அனுபவித்தவர்கள் சொல்கிறார்கள். எமக்கு இதைப் பற்றி ஒன்றுமே தெரியாது. இப்படி பராரியாய், பரதேசியாய், அனாதையாய், ஒன்றுக்கும் உதவாத நடை பிணத்தை நீ ஏன் ராதா விரும்புகிறாய்? என தம்மை தாழ்த்தி உரைத்தான்.

இதைச் சொல்லும் போது ராதாவின் முகத்தைப் பார்க்காமலேயே ஆகாயத்தைப் பார்த்துச் சொன்னானாம் எம் பிரபு! சொல்லிவிட்டு ராதாவை நோக்குகிறான். அங்கு

Koviloor Digital Library

ராதையைக் காணவில்லை. அவள் உருகி பாகாகக் தரைந்து விட்டாள். இந்நிலை கண்ட ஸ்ரீகண்ணனுக்கு ஒன்றுமே ஓடவில்லை! தாரா, தாரா என்று கண்களில் ஆனந்த பாஷ்பம் ஒழுக பேரானந்தத்துடன் (அப்பொழுது ஸ்ரீகண்ணனுக்கு எத்தனை கைகள் முளைத்தன என கூற முடியாது) அனந்தம் கைகளால் உருகிப் போன பாகை ஒன்று திரட்டினானாம் எம் பிரபு.

அதை திரட்டி உருட்டி வடிவமாக்கி பின் ராதையாக மாற்றினானாம். அந்நிலையில் அந்த தாரா, தாரா என்ற ராதையை தம் கரங்களால் முகத்தை நிமிர்த்தி கருணையுடன், தம் கண்களில் ஆனந்த பாஷ்பம் ஒழுக ராதையை தம்மைப் பார்க்கச் செய்தானாம் எம் பிரபு. ராதை கனிவுடன், ஸ்ரீகண்ணனின் முகத்தை நோக்கினாள். தம் அன்புக் கரத்தால் ஸ்ரீகண்ணனின் கண்ணீரை துடைத்தாள். ஸ்ரீகண்ணனும் ராதையின் கண்ணீரைத் துடைத்தான். இருவரும் எதுவும் பேசவில்லை. ஞானத்தின் சிகரமான ஸ்ரீமஹாமௌனானந்தமாய் இருவரும் கரைந்த நிலையில் மயமாகி இருந்தார்கள்.

குழந்தைகளே!

ராதே ஷ்யாமாகவும், ராதா கிருஷ்ணனாகவும் உள்ள இவர்களது உண்மை பாவனையை காதலன் காதலியாக உலகின் நிலையில் பார்ப்பதோ, வர்ணிப்பதோ மஹாபாபமாகும். அது பாகவத அபசாரமும் ஆகும். அது ஸ்ரீசத்குரு நிந்தனையுமாகும். இவைகளை ஸ்ரீசத்குரு-சத்சிஷ்யை என்ற நிலையில் பார்த்து அனுபவியுங்கள்.

இந்த காட்சிகளையெல்லாம் யசோதை கவனித்தாள். யசோதைக்கு ஒன்றுமே புரியவில்லை. இந்த உயர்ந்த நிலைகள், அறியாமையால் மயங்கும் ஜீவர்களுக்கு ஓர் படக் காட்சியாகக் கூடத் தோன்றாது. காரணம் அவர்கள் பார்க்கும் நிலை வேறு, காணும் நிலை வேறு, அனுபவசாரம் வேறு. ஏதோ நடக்கிறது என்று மாத்திரம் உணர்ந்தாள் யசோதை. ராதை ஸ்ரீபிரம்மானந்தத்தில்

Koviloor Digital Library
லயித்திருந்தாள். கண்களை மூடியபடி மெய்யுணர்வில் ஒன்றி இருந்தாள். யசோதை அருகில் வந்தாள். நம் ஸ்ரீகண்ணனைக் காணவில்லை. அவள் நிலை கண்டு யசோதை அருகில் அமர்ந்தாள். ராதை தம் பரவச நிலை கலைந்து, யசோதையை கண்டாள். யசோதை கேட்கிறாள், ராதா! சற்றுமுன் என் கண்ணன் இங்கு இருந்தானே அவன் எங்கே? என்றாள். ராதையும் புன்முறுவலுடன் என் ஷ்யாம் இல்லையா? அவனைக் காணோமா? என்னம்மா, நீங்கள்தாம் அவனைப் பெற்றதாக உலகம் சொல்லுகிறது. நீங்கள் ஷ்யாமை காணவில்லை? என்கிறீர்கள்.

ஏனம்மா! ஷ்யாம் இல்லாத இடம் ஏது? அவன் அறியாத பொருளேது? சொல்லுங்கள் பார்ப்போம். அவனை எங்கும் காண்கிறேன் என்றாள் ராதை. யசோதைக்கு ஒன்றுமே புரியவில்லை. ராதையின் திருவடியை யசோதை பற்றினாள். அம்மா ராதா! என் ஸ்ரீகண்ணனை நீ கண்ட விதத்தை எனக்கும் அருள்வாய் என்றாள் யசோதை. அதற்கு ராதை சொன்னாள், அம்மா! அந்த நிலையை நீங்கள் அடைவதற்கு இன்னும் அனுபவம் பெற வேண்டும், அந்த பக்குவம் இன்னும் நீங்கள் பெறவில்லை. அந்த ஷ்யாமை நீங்கள் உங்கள் மகனாக கருதுகிறீர்கள். அவனோ உலக ரட்சகன்! சர்வ வியாபி! அவனை உள்ளபடி காண உங்கள் பாசம் என்ற திரை அகல வேண்டும் என்றாள்.

யசோதைக்கு இந்த வாசகங்கள் ஒன்றும் மனதிற்கு எட்டவில்லை. மேலும் அம்மா ராதா! என்னடியோ அம்மா, நீ என்னென்னவெல்லாமோ சொல்கிறாய். அது எல்லாம் எனக்கு வேண்டாம் என்றாள். ராதையும் அம்மா! இப்பொழுது உங்கள் கண்ணன், உங்கள் வீட்டில் உங்களைத் தேடிக் கொண்டிருக்கிறான் என்றாள். யசோதையும் உடனே வீட்டிற்கு சென்றாள். அங்கு ஸ்ரீகண்ணன் யசோதையைக் கண்டதும்

Koviloor Digital Library
என்னம்மா? எங்கு போயிருந்தீர்கள்? எவ்வளவு காலமாக உங்களைத் தேடுவது? எமக்குப் பசிக்கிறது, ஏதாவது கொடு என கபடமாக அவளுக்குத் திரையிட்டு மறைத்தான். அவளும் மறந்தாள், ஸ்ரீகண்ணனுக்கு அமுது ஊட்டினாள். கண்ணனும் உலக உபகாரமாக உண்டான் போலும்? தொட்டிலிலே யோக நித்திரை செய்தான். அவன் துயிலை யார் அறிவர்? அவன் உணர்த்தினால் தான் அறியமுடியும்.

கோபிகா ரத்தினங்களே!

இப்படி அறியாமையினால் மயங்கிய யசோதை பின் ஒரு காலத்தில், ஸ்ரீகண்ணன் மதுரா சென்று திரும்பி வராத காரணத்தினால், ஸ்ரீபிரபுவை காணத்துடித்தாள். ஸ்ரீகண்ணனைக் காணாத வாழ்க்கை, ஓர் வாழ்க்கையா என வெறுத்தாள். மானசீகமாக கரைந்து உருகினாள். இந்த உருக்கத்தினால் சகல பிடிப்புகளும் கழன்றன. சொந்த பந்தங்களை மறந்தாள். அன்று ராதா சொன்ன வாசகம் ஞாபகத்திற்கு வந்தது. ராதையை தேடி ஓடி அலைந்து அவளைக் காணாமல் ஆகா! மெய்யுணர்வு தர இருந்த அந்த ஒன்றும் மறைந்து விட்டதே என உருகி ராதா! ராதா! என்று கதறினாள்.

அந்த இடத்தில் ராதை காட்சி கொடுக்கிறாள். யசோதை ராதையின் திருவடிகளை பற்றிக் கொண்டு, அம்மா ராதா! நீ ஸ்ரீகண்ணனை கண்ட விதம் என்ன? நீ சர்வ சதா கண்ணனை கண்டு அனுபவிக்கிறாய் என்பது முன்பே தெரியும்.

ஆனால் என் அறியாமையினால் உன்னை சரிவர உணர முடியவில்லை. அந்த தெய்வீக நிலையை அடியனேுக்கும் அருள்வாய் என கெஞ்சினாள். உருகி பிரார்த்தித்தாள். ராதையும் யசோதையின் பரிபக்குவ நிலை கண்டு பேர்உவகை கொண்டு, தாம் ஆசானாக அமர்ந்துகொண்டு, யசோதையின் சிரசில் கரம் வைத்து ஆசீர்வதித்து, எஞ்சி உள்ள வினைகளையும் சாம்பலாக்கி, ஸ்ரீதாரகப் பிரம்மமாம் ஸ்ரீகண்ணனை உருவமாகவும்,

Koviloor Digital Library

அருவமாகவும் தரிசிக்கும் பாக்கியத்தை அருளினாள்.

யசோதையும் உள் அடக்கத்தோடு பகிர்முக காட்சியை மறந்து, ஸ்ரீகண்ணனைக் கண்டு அனுபவித்தாள். **அந்த பக்குவம் வரும் பரியந்தம் நிதானமாக பொறுமையாக மிகுந்த சகிப்புத் தன்மையோடு தியாகபுத்தியுடன் காத்திருக்கவும்.**

எம் இதய தெய்வத்தின் அம்சங்களே!

ஓர் சமயம் எம் பிரபுவுக்கு பசி வந்தது போலும்? அது காரணப் பசியாகும்! அம்மா பசிக்கிறது, பசிக்கிறது என அலறினான்! தாய் யசோதையும் சற்று பொறு, அடுப்பு வேலையை முடித்துவிட்டு பசி ஆற்றுகிறேன் என சமாதானப்படுத்தினாள். ஸ்ரீகண்ணனுக்கு கோபம் உண்டாயிற்று. ஓர் தயிர் மத்தை கையில் தாங்கினான். ஸ்ரீருத்ராவேசம் பூண்டு அந்த மத்தினால் தயிர்பானை, பால் பானைகளை உடைத்து தூளாக்கினான். தாய் பார்த்தாள். வீடு பூராவும் பால், தயிர் ஆறு போல் பெருகி ஓடியது. உடைந்த பானை ஓடுகள் வீடு பூராவும் சிதறி கிடந்தன. ஆத்திரம் அடைந்தாள். தாளாத கோபத்தினால், அடே கிருஷ்ணா! உன் அடத்திற்கு ஓர் எல்லையே கிடையாதா? உன்னை என்ன செய்கிறேன் பார் என சொல்லி, ஸ்ரீகண்ணனை ஓர் உரலில் பிணைத்தாள். உரலில் பிணைத்த உடன் எம் பிரபு சாந்தி ஆனான். இதைத்தான் அவன் எதிர்பார்த்து கொண்டிருந்தான்.

அவன் எதிர்பார்த்த காரணம்:

குபேரனது புத்திரர்களான நளகூபன், மணிக்ரீவன் என இருவர் ஓர் தடாகத்தில் ஆடையில்லாமல் நிர்வாணமாக நீராடிக் கொண்டிருந்தார்கள். அந்த வழியாக ஸ்ரீபிரம்மரிஷி நாரதர் வந்து கொண்டிருந்தார். அவர் வருவதை அறிந்தும், அறியாதது போல இருவரும் குளித்துக் கொண்டிருந்தனர். அதைக் கண்டதும் நாரதர், தாம் வருவது தெரிந்தும் மமதையினால் அறிவிழந்து கங்கையில் நிர்வாணமாக மரம் மாதிரி நின்று குளித்து

Koviloor Digital Library
கொண்டிருந்ததனால், நீங்கள் மரமாக ஆகக்கடவது என சபித்து விட்டார். உடனே இருவரும் தம் தவறை உணர்ந்து, ஆடைகளை அணிந்து கொண்டு, நாரதரின் திருவடிகளில் வீழ்ந்து மன்னிப்பு கேட்டார்கள். நாரதரும் அமைதியாக யாம் கொடுத்த சாபம் கொடுத்தது தான், அதை மாற்றமுடியாது. இந்த நிகழ்ச்சியை நடத்தியது அந்த ஸ்ரீபரமாத்மாவே. இதற்கு யாம் காரணம் அல்ல.

இதற்கு பரிகாரமாக, நீங்கள் இருவரும் கோகுலத்திற்கு சென்று மரமாக நில்லுங்கள். ஸ்ரீமந் நாராயணன், ஸ்ரீகிருஷ்ணனாக அவதரிப்பார். அதுசமயம் ஓர் உரலை இழுத்து வந்து உங்கள் இருவர் மீதும் இடிப்பார். அவர் அருளால், அந்த உரல்பட்ட மாத்திரத்தில் உங்கள் சாபம் விமோசனம் அடையும் என அனுக்கிரஹித்தார். அவர்களின் சாப விமோசனத்திற்காக ஸ்ரீகண்ணன் இப்படி ஓர் நாடகம் ஆடினான். அவன் விருப்பப்படியே ஓர் உரலில் பிணைக்கப்பட்டான். ஆனந்தமாக உரலை இழுத்துக்கொண்டு வந்து அந்த இரண்டு மரங்களுக்கும் நடுவில் நுழைந்து இடித்தான். மரம் இரண்டும் வேருடன் சாய்ந்தன. அதில் இருந்த குபேர குமாரர்கள் இருவரும் சாப நிவர்த்தி ஆகி ஸ்ரீகண்ணனைக் கண்டு வணங்கி ஆசி பெற்று சென்றனர்.

அவன் நடத்தும் நாடகத்தை யார் அறிவர். **ஒவ்வொன்றிற்கும் ஓர் காரணம் உண்டு.** அதை இந்த ஜீவர்களால் அறிந்து கொள்ள முடிவதில்லை. காரிய வசத்தர்களான இந்த ஜீவர்கள் அவன் காரணத்தை உணர முடியாது. **இந்த காரியத்தை மறந்தால் அதை நடத்தும் காரணத்தை உணரமுடியும்.**

அவித்தையினால் விளைந்த காரியம் அது தோன்றிய காரணமாகிய மாயையில் தான் ஒடுங்க முடியும்.

எம் ஞானத்தில் விளைந்த முத்துக்களே!

மதுராவில் ஓர் ஏழை குடும்பம் வசித்து வந்தது. அது

Koviloor Digital Library
தாழ்த்தப்பட்ட ஜாதி. தம்பதிகள் இருவருக்கும் திருமணமாகி அனேக காலமாக குழந்தை இல்லாமல் இருந்தது. சதிபதிகளுக்கு வயதும் ஆகிவிட்டது.

ஸ்ரீராம அவதார காலத்தில் வாலியின் மனைவி தாரை எனப்பட்டவள் உத்தம பத்தினி. அவள் வாலிக்கு அனேக தடவைகள் புத்திமதி சொல்லியவள். ஸ்ரீராமன் கணையால் தம் கணவன் மாண்டான் எனக் கேட்டதும் அழுது புலம்பினாள். இறந்த கணவனுக்காக ஸ்ரீ ராமனிடம் மன்னிப்பு கேட்டாள். ஸ்ரீராகவனும் சில நீதிகளை சொன்னான். அதாவது ஒருவன் அதிக வரங்கள் இறைவனிடம் பெற்றாலே அது அழிவுக்கு அறிகுறிதான் என்றும், சகோதரர்களிடம் எக்காரணம் கொண்டும் பகைமை இருக்கக்கூடாது என்றும், தன் மனையாளைத் தவிர பிற மனையாளையும், பெண்களையும் தாயாகத் தான் கருத வேண்டுமென்றும், ஆணவம் அழிவைத் தரும் என்றும், சில தர்மங்களை அப்போது எடுத்துரைத்தான்.

அப்போது தாரை எனப்பட்டவள் மானசீகமாக ஸ்ரீராமனை விரும்பி ஹே ஏழை பங்காளா! உமது பிரதிக்ஞைபடி நகருக்கு நீர் வராவிட்டாலும் என்றாவது ஓர் நாள் உமது நகருக்குள் என்னை அழைத்து ஏற்று கொள்ளவேண்டும் என வேண்டினாள். ஹே ஜானகிராமா! அந்த நிலை எனக்கு எப்பொழுது கிட்டும் என கண்ணீர் உகுத்தாள்.

அவளது உள்ளக்குறிப்பை நம் ஸ்ரீகோதண்டராமன் உணர்ந்து, பெண் பாவாய்! இந்த ராஜாராமன் ஏக பத்தினி விரதன். இதில் எம் ஜானகியைத் தவிர வேறு எவருக்கும் இடம் கிடையாது. உன்னைப் போலவே அனேக மகரிஷிகளும் வேண்டியுள்ளார்கள். அவர்கள் கோரிக்கையையும் நிறைவேற்ற வேண்டும். எமது அடுத்த அவதாரமான ஸ்ரீகிருஷ்ணாவதாரத்தில் உன் கோரிக்கை பூர்த்தி ஆகும் என சாதித்தருளினார். அந்த தாரையே இந்த தம்பதிகளுக்கு ஸ்ரீகண்ணன் பிறந்த அஷ்டமி தினத்தன்று பிறந்தாள். இந்த குழந்தை பிறந்த நேரம், அந்த

Koviloor Digital Library

தம்பதிகளை அதிகமாக சோதித்து வறுமையையும், கஷ்டத்தையும் உண்டு பண்ணியது. அதை இந்த தம்பதிகளால் தாளமுடியவில்லை. அந்த நிலையில் இந்த குழந்தைக்கும் ஸ்ரீகண்ணனுக்குரிய வயது ஆகியது போலும்.

ஸ்ரீகண்ணன் கோகுலத்தில் வளர்ந்து வருவதை இந்த தம்பதிகளும் அறிவர். ஆனால் ஏனோ போக முடியவில்லை. திருவருள் கூட்டி வைத்தால்தானே முடியும். இறை சம்மதமும் இசைந்து வர தம்பதிகள் அந்த குழந்தையுடன் மதுராவில் இருந்து கோகுலத்திற்கு புறப்பட்டனர். இந்த சிறு பெண் குழந்தையும் சதா தன் தாயின் அரவணைப்பிலேயே வளர்ந்து வந்தது. அது தாயை விட்டு பிரிந்ததே கிடையாது. ஓர் வழியாக கோகுலம் வந்தார்கள். அப்பொழுது ஸ்ரீகண்ணனுக்கு வயது மூன்று. கோகுலத்தில் அந்த தம்பதிகளுக்கு எவரும் உறவோ, பந்தமோ கிடையாது.

இதை எம் பிரபு அறிந்தான். யமுனை நதிக் கரையில் ஓடத்தில் வந்து இறங்கும் அத்தம்பதியரை முகமன் கூறி வரவேற்றான். அந்த நதிக் கரையிலேயே ஓர் பர்ண சாலையை நிர்மாணித்தான். அது பழங்காலத்தியது என அதில் அவர்களை குடியேற வைத்தான். ஒரு மாத பரியந்தம் அந்த குடும்பத்திற்கு வேண்டுவனவெல்லாம் கொடுத்து போஷித்தான். அந்த தம்பதியர் இருவருக்கும் தம் மஹத்துவத்தை மறைத்து வைத்தான். அந்த குழந்தையின் தந்தை சொன்னதாவது:

ஸ்ரீகண்ணா! இந்த குழந்தை அஷ்டமியில் பிறந்ததனால் அதிக சிரமத்தை அனுபவித்து விட்டேன். இது இங்கேயே இருக்கட்டும் என சொல்லி தம் மனைவியையும் சமாதானப்படுத்தி குழந்தையை அவன் வசம் ஒப்படைத்துவிட்டு மதுரா சென்று விட்டனர்.

அவர்கள் சென்றதும் மறுநாள் குழந்தைக்கு வழக்கம் போல பழம், பால், தயிர் மற்றும் என்னென்ன தேவையோ

Koviloor Digital Library

அவை அனைத்தையும் கொடுத்தான். ஆனால் அந்த பெண் குழந்தை தனக்கு எதுவுமே வேண்டாம் என அடம்பிடித்தது. உனக்கு என்னதான் வேண்டும்? என ஸ்ரீகண்ணன் கேட்டான். அந்த குழந்தையும் எனக்கு அம்மாதான் வேண்டும், என் அம்மா கொடுத்தால் தான் சாப்பிடுவேன் என பிடிவாதம் செய்தது. இதை அறிந்த எம் ஸ்ரீதயாநிதியும் அவள் தாயாக மாறினான். தேவையறிந்து வேண்டுவென கொடுத்து ரட்சித்தான். ஓராண்டு ஆகியது. மதுராவில் அந்த குழந்தையின் தாயாருக்கு தம் குழந்தையை மறந்து இருக்க முடியவில்லை. அவர்களுக்கும் இறை அருளால் கஷ்டம் விலகியது போலும். இந்நிலையில் கோகுலம் போக வேண்டுமென உரைத்து தம் கணவனையும் அழைத்து வந்தாள்.

யமுனைக் கரையில் தம் மனைவியைப் போலவே ஓர் பெண் துணிமணிகளை அலசி தோளில் போட்டுக்கொண்டு ஓர் குடத்து ஜலத்துடன் செல்வதை அந்த கணவன் கண்டான். தம் மனைவியையும் சரி பார்த்தான். அவள் தம் அருகிலேயே இருக்க கண்டான். அப்படியானால் அந்த பெண் யார்? என அவனால் ஊகிக்க முடியவில்லை. தம் மனைவியையும் கூப்பிட்டு காண்பித்தான். இருவருக்கும் ஆச்சரியம் தாளவில்லை. அந்த பெண் பின்னாலேயே சென்றார்கள். அந்த பெண்ணும் அதே வீட்டினுள் நுழைந்தாள். குழந்தைக்கு ஆகாரத்தை எடுத்து வைத்து விட்டு கொல்லைப்புறம் சென்று துணிகளை உலர்த்திக் கொண்டிருந்தாள் போலும். இந்த தம்பதிகள் உள்ளே சென்றதும் அந்த குழந்தை கேட்கிறது, அம்மா! அப்பா எப்பொழுது வந்தார்? நீ நதியில் நீராடச் சென்ற போது வந்தாரா? நீ கூட்டி வந்தாயா என வினவினாள். அதன் தாயார் சொன்னாள், குழந்தாய்! நாங்கள் இப்பொழுது தானே மதுராவில் இருந்து வருகிறோம். அப்படியானால் இங்கு இருக்கும் என்னைப் போன்ற அந்த பெண்மணி யார்? என்றாள். குழந்தைக்கு ஒன்றும் புரியவில்லை.

Koviloor Digital Library

எம் செல்வங்களே!

அப்பொழுது எம் பிரபு அங்கு வந்து உரைத்ததாவது: அம்மா! உன் குழந்தைக்கு நீயாக இருந்து பாதுகாத்து வந்தது யாம் தான் என்று அவர்கள் அறியாமையின் திரையை விலக்கினான். அவர்களுக்கு அப்பொழுதுதான் கண்ணனின் அவதார மஹிமை புலனாகியது. மெய்யுணர்வு எய்தினார்கள். அவர்கள் உரைத்த வாசகமாவது: கண்ணா! நீயாக உன் மாயையை விலக்காவிட்டால் இந்த ஜீவர்களுக்கு என்ன புரியும்? உன்னிடம்தான் எவ்வளவு கருணை இருக்கிறது. இதை உணராத ஜீவர்கள் உன்னைக் குறை கூறுகிறார்களே!

நீயே சகலத்தையும் நடத்த சித்தமாக இருக்கிறாய். ஆனால் இந்த ஜீவர்கள் நான், நான் என சிக்கி கொள்கிறார்கள். அவர்கள் வினையே அவர்களை பந்தப் படுத்தி அறியாமையை உண்டு பண்ணுகிறது.

பிரபோ! உன் கருணையின் திரத்தை உணர்ந்தால் இந்த ஜீவர்களுக்கு எள்ளளவு கூட பயம் வராது. மயக்கம் இல்லை, கலக்கமும் இல்லை. பிராரப்தம் முடியட்டும் என உன் திருமேனியிலேயே ஓர்ந்து அமைதியாக, உன் நாமதியானத்திலேயே ஆழ்ந்திருந்தால் அதுவே பேரானந்தமாக முடியும். குழந்தையும் நீயே! தாயும் நீயே! தந்தையும் நீயே! இங்கு எதற்கும் எந்த கவலையும் கிடையாது என அன்பின் மேலீட்டால் அவன் பரிபூரண கிருபை பெற்று ஜீவசமாதி ஆகிவிட்டார்கள். இன்றும் அவர்களது சமாதியை யமுனைக் கரையில் காணலாம். இதை அவன் அருளால் தரிசிக்க வைத்தான். மெய்யுணர்வினால் அவனை உணருங்கள். பெற்றோர் சமாதி ஆனவுடன் அந்த குழந்தை ஸ்ரீகண்ணன் அரவணைப்பிலேயே வளர்ந்து பதினாறாயிரம் கோபியர்களுள் ஒருவளானாள். பின் அவள் பிறவியின் ரகசியமும் உணர்ந்தாள்.

Koviloor Digital Library

ஓ உத்தமோத்தமர்களே!

ஓர் நாள் கோகுலத்தில் ஸ்ரீகண்ணனும் அவன் நண்பர்களும் செய்யும் உபத்திரவம் தாங்காது அவர்களை ஆனிரைகளை மேய்க்க அவரவர் தாய் தந்தையர் கட்டளை இட்டனர். அதன்படி எல்லா சிறுவர்களும் அவரவர் பசு, கன்றுகளை ஓட்டிக்கொண்டு அருகில் உள்ள வனத்திற்குச் சென்றனர். ஒவ்வொருவரும் கட்டு சாதத்தை அவரவர் குச்சுகளில் தொங்க வைத்துக்கொண்டு வருவார்கள். ஆனால் நம் ஸ்ரீகண்ணன் மட்டும் எதுவும் கொண்டு வருவதில்லை. அவன் தாயார் கொண்டு போகச் சொன்னாலும் வேண்டாம் என்றிடுவான். ஏனென்னறால் அவன் நண்பர்கள் கொண்டு வருவதில் கொஞ்சம் கொஞ்சம் வாங்கியாவது அல்லது வாயில் உள்ளதைப் பிடுங்கியாவது ஆனந்தமாக உண்பான். இதுதான் வழக்கம். ஓர் நாள் கோபாலர்கள் எல்லோரும் சேர்ந்து கண்ணா! நாம் செய்த அட்டகாசத்தினால் நம் பெற்றோர் இப்படி மாடு மேய்த்து வரும்படி அனுப்பி விடுகிறார்கள். இனி நாம் பால், தயிர், வெண்ணெய்க்கு எங்கே போவோம்? விடிந்தால் இங்கு வந்து விடுகிறோம், அடைந்தால் வீட்டிற்கு போகிறோம். இனி அதைப் பற்றி நினைக்கவே முடியாது போலிருக்கிறதே! என்று நாக்கில் எச்சில் சொட்டச்சொட்ட சொன்னார்கள்.

எம் பிரபுவும் உங்களுக்கு பால், தயிர், வெண்ணெய் தானே வேண்டும். கவலையை விடுங்கள். நாம் அங்கு போகாவிட்டால் என்ன? அவைகள் இங்கு வந்து விட்டால் போதுமல்லவா என்றான். அவர்களும் அவைகள் இங்கு வருமா? எப்படி வரும்? என ஆவலுடன் வாயைத் திறந்த நிலையில் சொன்னார்கள். ஸ்ரீகண்ணனும் ஏதோ ஓர் முடிவு செய்தவனாய் மரத்தின் மீது ஏறினான். வேணு கானத்தை இசைக்க ஆரம்பித்தான். அந்த நாதத்தில் கட்டுப்படாதது என்னதான் இருக்கிறது? அந்த

Koviloor Digital Library
நாதம் இல்லையானால் நடப்பன, நீந்துவன, பறப்பன, ஊர்வன ஆகிய இந்த ஜீவர்கள் அசையாதே. அசையும் தன்மையும், உணரும் தன்மையும் கிடையாது. இந்த இசையில் கோகுலத்தில் வீடுகளில் அடுக்கில் உள்ளனவும், உறியில் உள்ளனவும் ஆகிய தயிர், பால், வெண்ணெய் பானைகள் சகலமும் அந்த இசைக்குத் தக்கபடி ஆடிக்கொண்டு வீதியில் வந்து ஒன்று சேர்ந்து வரிசைக் கிரமமாக ஸ்ரீகண்ணன் இருந்த மரத்தடியில் வந்து வரிசையாக அமர்ந்து விட்டன.

இதை கோகுல மாந்தர்கள் கண்டு அதிசயித்தனர். அவர்களும் இந்த இசையில் மயங்கி அதன் பின்னாலேயே வந்து விட்டனர். தேவர்களும் இந்த அதிசயத்தை கண்டு ஆச்சர்யப் பட்டனர். உயிர் உள்ள வஸ்துக்கள்தாம் நாதத்தில் கட்டுப்படும். ஆனால் உயிர்ற்ற அஃறிணைப் பொருள்களும் நர்த்தனம் செய்தன என்றால் யார்தான் பிரமிக்காமல் இருக்க முடியும்? அந்த ஸ்ரீமதுசூதனன் அனைவருக்கும் ஆணையிட்டான். தேவை உள்ளவர்கள் தேவையானதை சாப்பிடலாம் என்றான். அத்தனை ஆணும், பெண்ணும் போட்டி போட்டுக் கொண்டு உண்டார்களாம். அத்தனை பேரும் எவரெவர் எதை எடுக்கிறார்களோ அவரவர்க்கு பிரியமானது அந்தந்த பாத்திரங்களில் இருந்ததாம்.

எல்லோரும் திருப்தியாக புசித்துவிட்டு பாத்திரங்களை காலி செய்து கீழே வைத்து விட்டனர். அவைகளும் வரிசையாக எப்படி வந்தனவோ அப்படியே சென்று அதனதன் யதாஸ்தானத்தில் அமர்ந்து விட்டன. வந்திருந்த கோபால கோபியரும் அவரவர் இல்லம் சேர்ந்தனர். அதன் பிறகு அவரவர் தம் கற்பனையின்படி சிந்திக்கின்றனர். நாம் எங்கு போனோம்? என்ன சாப்பிட்டோம்? என்ற உணர்வு வந்ததாம். ஆகா ! நம் வீட்டில் உள்ளவை வெளியே போயின. நாமும் பின் தொடர்ந்து சென்றோம். அவைகளைத்தானே நாம் சாப்பிட்டோம். நம் வீட்டில் உள்ள அனைத்தும் காலியாகி விட்டனவே என கவலை

Koviloor Digital Library
கொண்டு அவரவர் வீட்டு பாத்திரங்களை சரி பார்த்தார்களாம்; அவை ஒன்றுமே குறையவில்லையாம்; வைத்தது வைத்த படியே இருந்ததாம்! என்னே ஸ்ரீமாயவனின் மாயம்!

ஆனந்த ஜோதி ஸ்வரூபங்களே!

ஓர் சமயம் சத்ய லோகத்தில் உள்ள ஸ்ரீபிரம்ம தேவனுக்கு எம் ஸ்ரீபிரபுவின் திருவிளையாடலை சரி பார்க்க ஓர் எண்ணம் உண்டாயிற்று. நேராக பிருந்தாரண்யத்திற்கு வந்தார். பசுக்களையும், கன்றுகளையும் ஓர் ஓரமாக மேய விட்டு விட்டு அனைவரும் ஓர் மடுவில் குளித்துக் கொண்டிருந்தனர். ஸ்ரீகண்ணன் மட்டும் தனியாக ஓர் மரத்தில் அமர்ந்த வண்ணம் தம்மை மறந்த நிலையில் ஆனந்தமாக யோக நித்திரையில் ஆழ்ந்திருந்தான். இதை கண்ட ஸ்ரீபிரம்மதேவர் இதுதான் சமயம் என பசுக்களையும், கன்றுகளையும், கோபால சிறுவர்களையும் மாயமாய் மறைத்து, ஓர் தனித்த இடத்தில் மறைத்து வைத்து விட்டார்.

தாம் ஓர் இடத்தில் தனித்திருந்து ஸ்ரீகண்ணன் என்ன செய்கிறான்? பார்ப்போம் என சரி பார்த்து கொண்டிருந்தார். ஸ்ரீகண்ணனும் யோக நித்திரையை முடித்துக் கொண்டு சுற்றும் முற்றும் பார்த்தான். ஒன்றும் புலப்படவில்லை. கன்றுகளையும், பசுக்களையும், கோபால சிறுவர்களையும் காணோம். அதன் காரணத்தை அறிந்தான். ஓர் புன்முறுவல் செய்தான். அத்தனை பசுக்களும், கன்றுகளும், கோபால சிறுவர்களும் தாமே ஆனான்.

சூரியன் அஸ்தமனமாகும் நேரத்தில் குறிப்பிட்டபடி வழக்கம் போல் மாற்றம் இல்லாமல், சகலமும் அவரவர் இடம் போய் சேர்ந்தது. மறுநாளும் வழக்கம் போல் சகலமும் நடந்தது. இதில் சந்தேகத்திற்கு இடம் ஏது?

ஸ்ரீபிரம்ம தேவருக்கு மட்டும் சந்தேகம் வந்தது. இந்த நிலையிலும் ஸ்ரீகண்ணன் நம்மை நினைத்துக் கூப்பிடவில்லையே, இப்படி எத்தனை நாளைக்குத் தான் நடத்துவான்? எப்படியும்

Koviloor Digital Library
நம்மை நினைத்துத் தானே ஆகவேண்டும். அப்பொழுது சொல்லிக் கொள்ளலாம் என மௌனமாய் ஸ்ரீபிரம்மதேவரும் சும்மா இருந்தார்.

ஸ்ரீகண்ணனாவது இவரை நினைப்பதாவது? ஸ்ரீபிரம்மாவும் சலித்து விட்டார். இந்த கோபாலர்களும், பசுக்களும், கன்றுகளும் எப்படி ஆனால் நமக்கு என்ன? என்று வெறுப்புடன் தம் சத்ய லோகத்திற்கு சென்றார். என்ன ஆச்சரியம்! அங்கு தம் ஆசனத்தில் ஓர் ஸ்ரீபிரம்மதேவர் பிரம்ம தியானத்தில் ஆழ்ந்திருந்து தம் கடமைகளை ஒழுங்காக செய்து கொண்டிருந்தார். அங்கு உள்ள ஸ்ரீஅன்னை கலைவாணி மற்றும் தேவ கணங்கள் எவரிடமும் எவ்வித மாற்றமும் இல்லை.

சத்ய லோகத்தின் நுழைவு வாசலில் இருக்கும் துவார பாலகர்கள் இந்த ஸ்ரீபிரம்மதேவரை உள்ளே செல்ல விடாமல் தடுத்தார்கள். அதற்கு ஸ்ரீபிரம்மதேவர் நான் யார் என உங்களுக்குத் தெரியவில்லையா? என்னையா நீங்கள் தடுக்கிறீர்கள்? உங்களை என்ன செய்கிறேன் பார் என மிரட்டினார். காவலர்களும் சற்றும் அஞ்சவில்லை. ஏனையா மிரட்டுகிறீர்! நான்கு தலைகளோடு வந்துவிட்டால் நீர் பிரம்மா ஆகி விடுவீரோ? எங்கள் கர்த்தவாகிய ஸ்ரீபிரம்மதேவர் எப்பொழுதும் எங்களை விட்டு பிரியாமல் இருக்கிறாரே! நீர் யாரோ வேஷதாரி என்று விரட்டினார்கள். ஸ்ரீபிரம்ம தேவருக்கு ஒன்றும் புரியவில்லை. உடனே பூலோகம் சென்றார். பிருந்தாரண்யத்தில் ஸ்ரீகண்ணனைக் கண்டார்.

மாதவா! மதுசூதனா! திரிவிக்ரமா! மஹானுபாவா! சத்ய சொரூபா! நாராயணா! ஹரே கிருஷ்ணா! எல்லாம் நீயே! (என தஞ்சம் புகுந்து) உன் மகிமை பிரபாவத்தை அறியாமல் உம்மை சிறு பிள்ளையாக மதித்து சோதிக்க நினைத்தேன். என் அறியாமையை மன்னித்து விடுவாயாக!

தந்தையே பிள்ளையை சோதித்தால் நிலைமை

Koviloor Digital Library

என்ன ஆகும்? உன் சோதனை போதும் ஐயா என தெண்டனிட்டு வணங்கினார். ஸ்ரீகண்ணனும் மோகனப் புன்னகையுடன் ஸ்ரீபிரம்மதேவரே! யாம் அறியாத பிள்ளைதானே? ஏதோ விளையாட்டாக செய்து பார்த்தீர், யாமும் உம்முடன் விளையாடினோம். எம்மை விளையாட்டு பிள்ளை என சொல்கிறார்கள். எம் விளையாட்டில் ஏதேனும் குற்றம் இருக்கிறதா? இருந்தால் சொல்லும்; திருத்திக் கொள்வோம் என்றான்.

அதற்கு ஸ்ரீபிரம்மதேவரும் கண்ணா! உன் விளையாட்டு இல்லையேல் உலகம் ஏது? இயக்கம் ஏது? சகலமும் நீயே ஆகிறாய்! என பணிந்துரைத்து தாம் ஒளித்து வைத்திருந்த பசுக்கள், கன்றுகள், கோபால சிறுவர்கள் அனைவரையும் திரும்பக் கொடுத்தார். தம் இருப்பிடம் சென்று நாமகளிடம் நடந்ததை இயம்பி விஷ்ணு மாயையை விரித்துரைத்தார். இங்கு ஸ்ரீகண்ணன் மேலும் ஓர் விசித்திரம் உண்டு பண்ணினான். அதாவது இப்பொழுது முன்பு இருந்ததைவிட சிருஷ்டிப்பு இரண்டு மடங்கு ஆகிவிட்டது. பசுக்களும், கன்றுகளும் ஒன்றுக்கு இரண்டாகி விட்டன. அதே போல் கோபால சிறுவர்களும் ஒன்றுக்கு இரண்டாகி விட்டனர். முன்பு இருந்ததைப் போன்ற பழக்க தோஷங்கள் எல்லோர்க்கும் வந்து விட்டன. தாய் தந்தையரும் தமக்கு இரட்டை குழந்தைகள் பிறந்தன என்ற நிலைக்கு வந்து விட்டனர்.

கோகுல நிகழ்ச்சிகள் வழக்கம்போல் நடைபெற்றன. அவன் ஆட்டி வைத்தால் ஆடாதார் யார்? இந்த ஆட்டத்தை அருள் ஆட்டமாக, பகவத் சொரூபமாக மதிக்காமல் பாசமாகவும், பந்தமாகவும், ஆசை, கோபம், பயத்திலும் உழன்றால் இது யார் குற்றம்? அவன் நடத்தும் நாடகத்தில் காரியத்தை மறந்து, அதாவது அவித்தையை மறந்து காரணமாகிய மாயையின் விளையாட்டு, அதாவது ஈசன் லீலை என அமைதி பெறுங்கள்.

Koviloor Digital Library
எம் அறிவு சொரூபங்களே!

கால ஓட்டத்தினால் தை மாதம் பிறந்தது. அந்த பொங்கல் திருநாளை வானவர் அதிபதியான தேவேந்திரனுக்கு இடுவது வழக்கம். அந்த வருஷமும் அதேபோல் நடத்த நந்தகோபன் முடிவு செய்து அந்த விழாவை பற்றிய நிகழ்ச்சிகளை யாதவ மணிகளுக்கு சொல்லிக் கொண்டிருந்தான். இதை ஸ்ரீகண்ணன் அறிந்தான். அதை மாற்றி அமைக்க திருவுள்ளம் கொண்டான் போலும். உடனே தந்தையின் முன்பாக சகலரையும் வரவழைத்து அவர்களிடம், சூரிய கதிர்களால் ஜலம் நீராவியாக மேலே போய், மேகங்களாக மாறி காற்றினால் தள்ளப்பட்டு மலைகளின் முகட்டில் மோதி குளிர்ச்சியாகி மழை பெய்கிறது. இதற்கு மூல காரணம் மலையே! ஆகவே மலையின் தேவதைக்கு பொங்கல் இட்டு பூஜை செய்யலாம் என சொன்னான். எல்லோரும் ஸ்ரீகண்ணன் வார்த்தையை மறுக்காமல் ஏற்றுக் கொண்டனர்.

ஸ்ரீகண்ணனும் மலைதேவதையை அழைத்து வருவதாகச் சொல்லி தாமே மலைதேவதையாக வடிவெடுத்து, இதோ பாருங்கள்! இவர்தான் மலைதேவதை, இவருக்கு பூஜை செய்யுங்கள், செழிப்படைவீர்கள்! என உரைத்தான். சகல யாதவர்களும் இந்த முறை மலைதேவதைக்கு பொங்கல் இட்டு பூஜை செய்தார்கள்.

இதை அறிந்த இந்திரன் கடும் கோபம் கொண்டான். அந்த கோபத்தினால் அறிவிழந்தான்; ஸ்ரீகண்ணனை மறந்தான். ஓர் ஆயர்பாடி சிறுவன் சொன்னான் என என்னை மதிக்கவில்லையே! என்று கொதித்தான். அஹங்காரத்துடன் ஊழிகால மேகங்களை அழைத்து நீங்கள் ஆயர்பாடிக்குச் சென்று அந்த கோகுலத்தை இருந்த இடம் தெரியாமல் அழித்து வாருங்கள் என கட்டளையிட்டான்.

Koviloor Digital Library

சண்டமாருதத்தின் துணையால் ஊழிகால மேகங்கள் கோகுலத்தின் மேல் நின்று காற்றும், மழையுமாக கலந்து யானைத் துதிக்கையளவுள்ள மழைத்துளிகளாக வருஷித்து அழிக்க ஆரம்பித்தன. பசுக்களும், கன்றுகளும், கோகுல மாந்தர்களும் அலறித் துடித்து, உலகம் அழியப் போகிறதோ என பயந்து, கண்ணா! மணிவண்ணா! இது என்ன சோதனை? எங்களுக்கு ஒன்றுமே புலப்படவில்லையே! இந்த அழிவில் இருந்து எங்களைக் காப்பாற்று என ஓலமிட்டு முறையிட்டனர். ஸ்ரீகண்ணனும் காரணத்தை உணர்ந்தான். இந்திரன் கர்வத்தை அடக்க திருவுள்ளம் பற்றினான். ஓர் மோகனப் புன்னகையுடன் தம் இடக்கரத்தால் கோவர்த்தன கிரியை எடுத்து குடையாக பிடித்தானாம் எம் பிரபு. அந்த மலையும் ஸ்ரீபகவான் திருக்கரம் நோகக்கூடாது என நான்கு விரற்கிடை உயரத்தில் விரலில் படாமல் நின்றதாம்.

எம் அருந்தவ சீலர்களே!

இதை உணர்ந்து பாருங்கள். அப்பொழுது ஸ்ரீகண்ணனுக்கு வயது ஏழு. ஒரு ஏழு வயது சிறுவன் ஓர் மலையை குடையாகப் பிடித்தான் என்றால் அந்த கோகுல வாசிகளும் அறியாமையினால் மயங்கி தாங்கள் காப்பாற்றப்பட்டால் போதும் என மட்டும் எண்ணி அது எப்படி நடக்கிறது என்று கூட ஊகியாமல் மயங்கி தத்தம் வேலைகளைப் பார்த்தார்களாம். இந்த ரகசியம் ததிபாண்டன் ஒருவனே அறிந்தான்.

ஏழு தினங்களும் காற்றும், மழையும் ஓயவில்லை. மலையைச் சுற்றி மழை பொழிகிறது. ஒரு பொட்டு ஜலம் கூட உள்ளே வரவில்லை. சகல கோபால கோபிகைகளும், ஆவினங்களும் அவன் திவ்ய ஸ்ரீசரணாரவிந்தங்களில் அடைக்கலமானார்கள். பிரளய முடிவில் சகல ஜீவர்களையும் தம் உந்திக்கமலத்தில் பத்திரமாக பாதுகாக்கும் ஸ்ரீபரம்பொருளுக்கு இந்த காரியம் ஒன்றும் பெரிதல்ல. இதில் ஐக்கியமாய் கரைந்தவள்தான் ஸ்ரீபக்தமீரா. தம் பிஞ்சு உள்ளத்தில் ஓர் குழந்தை பருவத்தில்,

Koviloor Digital Library
ஏழு வயதில் மலையை தூக்கி குடையாக பிடித்தானா? என உணர்வால் வியந்து உள்ளத்தால் கரைந்து அந்த ஸ்ரீநீலமேக சியாமள ஸ்வரூபனை தனக்குள் வரித்தாள். ஆகவே அவள் நம் கமலக்கண்ணனை **கிரிதாரி** என அழைப்பது வழக்கம்.

இந்த கிரிதாரியை ஏழு தினங்களும் அன்ன ஆகார நித்திரையின்றி ஒரே நோக்கமாக உணர்ந்தான் ததிபாண்டன். இந்த செய்கையை எவரும் செய்ய முடியாது. அப்படியானால் இவன் யாராக இருக்க முடியும்? என நம் ஸ்ரீகண்ணனை இறைஞ்சி மனம் ஒன்றி உணர்ந்தான். அந்த மெய்யுணர்வால் ஸ்ரீராமாவதார காலத்தில் தாம் குகன் என உணர்ந்தான். கண்ணீர் தாரை தாரையாக ஓட ஸ்ரீகண்ணனை இறைஞ்சி கேட்கிறான் ஹே தயாநிதி! ஹே சீதாராமானாகிய கண்ணா! உன் மஹிமையை உன்னால் உணரப் பெற்றேன். உன் அருளால் என்னையும் அறிந்தேன், அன்று நான் உன்னையும், உன் மனைவி ஜானகியையும், உன் தம்பி லக்குவனையும் கங்கா நதியில் படகில் வைத்து கரை சேர்த்தேன். அதுசமயம், ஹே ஸ்ரீராமா! இந்த நதியில் உனக்கு உபகார கர்த்தாவாக என்னை மாற்றி படகு ஓட்ட வைத்து கரை ஏறினாய். அடியேன் இந்த சம்சார சாகரத்தில் திக்கு திசை தெரியாமல் தவிக்கிறேன். என்னை எப்பொழுது கரையேற்றி விடுவாய்? ஹே கருணை கடலே! தயாசாகரா! உன்னையன்றி வேறு கதியில்லை என பிரார்த்தித்துக் கேட்டேன்.

அப்பொழுது நீ மானசீகமாக அடுத்த ஜன்மாவில் யாம் ஸ்ரீகிருஷ்ணனாக அவதரிப்போம். அப்போது உன் எண்ணம் பூர்த்தி ஆகும் என சாதித்தாய். அவ்வண்ணமே இப்போது நான் கோபால சிறுவனாகவும், நீ என் நண்பனாகவும் காட்சி அளிக்கிறாய். என்னே உன் மஹிமைப் பிரபாவம். உன் கருணையை எப்படி சொல்லி புகழ்வது என உருகி வேண்டினான். ஸ்ரீபரந்தாமனும் தம் கடைக்கண் பார்வையால் அவனை நோக்கி இந்த ரகசியத்தை உனக்குள்ளேயே வைத்துக்கொள்; இதை வெளியே விட்டு

Koviloor Digital Library

விடாதே என மறைத்தான். ததிபாண்டனும் அமைதியில் அடக்கமாக மௌனமானான்.

ஏழு தினங்கள் கழிந்தன. இந்திரன் பார்த்தான். கோகுலம் இருந்த இடம் தெரியாமல் அழிந்திருக்கும் என மதித்து வந்து பார்த்தான். நிலைமை மாறாக இருந்தது. நடந்ததை உணர்ந்தான். கண்ணனை சாமானியன் என மதித்து விட்டேனே? எல்லாம் வல்ல ஸ்ரீபரம்பொருளை என் அஹந்தையால் நிந்தித்து அறிவிழந்தேனே? என நொந்து, ஓடோடி வந்து ஸ்ரீகண்ணன் கழலடியில் வீழ்ந்து மன்னிக்கக் கோரினான். ஸ்ரீகண்ணனும் கருணையுடன், இந்திரனை கோகுலத்தை புதிதாக நிர்மாணிக்க கட்டளையிட்டான். இந்திரன் கட்டளைப்படி விஸ்வகர்மாவும் கோகுலத்தை புதிதாக நிர்மாணித்தார். இனி தைப்பொங்கல் விழா அனைத்தும் ஸ்ரீபரமாத்மாவுக்கே நடக்கட்டும் என மக்களுக்கு சொல்லிவிட்டு தம் உலகு ஏகினான். எம் ஸ்ரீகண்ணனும் மலையை கீழே வைத்தான். கோகுலவாசிகளும், ஆனிரைகளும் புதிய கோகுலத்தில் ஆனந்தமாக குடியேறினர்.

ஹே பாகவதோத்தமர்களே!

ஓர் சமயம் ஓர் நாள் பிருந்தாரண்யத்தில் ஸ்ரீகண்ணனும், கோபாலர்களும் ஆனிரைகள் மேய்த்துக் கொண்டிருந்தனர். அங்கே ஓர் மடு இருந்தது. அதில் ஓர் சர்ப்பம் தன் குடும்பத்துடன் வாழ்ந்து வந்தது. அதன் பெயர் காளியன் போலும். அந்த சர்ப்பத்திற்கு ஆயிரம் தலை உண்டாம். அது விஷம் மிகுந்தது ஆகும். அந்த விஷாக்கினியால் அந்த குளத்து ஜலம் முழுவதும் விஷம் ஆகிவிட்டது. அந்த விஷாக்கினியால் அருகில் உள்ள மரம், செடி, கொடி முதலியன சகலமும் கருகி விட்டது. ஆனால் அருகில் ஓர் கடம்ப விருட்சம் ஒன்று மட்டும் அந்த விஷாக்கினியால் தாக்க முடியாதபடி செழிப்பாக இருந்தது. காரணம் ஓர் சமயம் பெரிய திருவடியாகிய கருடன் தேவலோகத்தில் இருந்து அமிர்த கலசத்தை கொண்டு சென்றார்.

Koviloor Digital Library
வரும் வழியில் சிரமபரிகாரமாக இந்த மரத்தில் தங்கி இளைப்பாறினார். அது சமயம் அமிர்தம் கொஞ்சம் சிந்தி விட்டது. அதை இந்த மரம் கிரஹித்து கொண்டது.

அதனால் இந்த மரத்தை அந்த விஷம் ஒன்றும் செய்ய முடியவில்லை. அதை அடுத்து ஓர் நாள் இந்தக் குளக்கரையில் ஓர் முனிவர் தவம் செய்து கொண்டிருந்தார். பெரிய திருவடி ஓர் நாள் தற்செயலாக வந்து இந்த மரத்தில் அமர்ந்தது. இந்த மடுவில் உள்ள மீன்களை ஒவ்வொன்றாக பிடித்து தின்ன ஆரம்பித்தது. இதை இந்த முனிவர் கண்டார். உடனே அவர் இந்த கருடனுக்கு, நீ இனி இந்த மடுவின் பக்கம் வந்தால் உன் சிரம் வெடித்து விடும் என சபித்து விட்டார். அன்றிலிருந்து கருடன் இந்தப் பக்கம் வருவதில்லை. இது காளியன் வரும் முன் நடந்த சம்பவமாகும்.

ஓர் சமயம் காளியனுக்கும், கருடனுக்கும் கடுமையான சண்டை நடந்தது. அதில் காளியன் தோற்றுப் போய், தம் குடும்பத்துடன் இந்த குளத்தில் வந்து பதுங்கி கொண்டான். அவனுக்கு கருடன் இங்கு வரமாட்டான் எனத் தெரியும். பறவைகள் அந்த குளத்தின் மேலாக பறந்து சென்றாலும் இந்த விஷாக்கினியின் காற்றுப்பட்ட மாத்திரத்தில் சுருண்டு விழுந்து விடும். அப்படிப்பட்ட கொடூரமான விஷ ஜலத்தை வனத்தில் மேய்ந்து கொண்டிருந்த பசுக்கள் சில தாக சாந்திக்காக பருகி விழுந்து விட்டன. சில கோபால சிறுவர்களும் இதனால் மயக்கம் அடைந்தனர். மற்ற கோபால சிறுவர்கள் இதை ஸ்ரீகண்ணனிடம் சென்று முறையிட்டனர். இதை ஸ்ரீகண்ணனும் முன்பே அறிவான். ஆனால் அதற்கு காலத்தையும், கணக்குகளையும் சரி பார்த்துக் கொண்டிருந்தான். அந்த காலம் வரவே மற்ற கோபாலர்களை சற்று தூரத்தில் நிறுத்திவிட்டு தான் மட்டும் வந்து, அந்த மடுவை உற்று நோக்கினான். காளியனின் இருப்பிடத்தை உணர்ந்தான். கடம்ப மரத்தின் மீது ஏறினான். உள்ளே குதித்தான். ஸ்ரீகண்ணன்

Koviloor Digital Library

குதித்த வேகத்தில் அந்த குளத்தின் ஜலம் சமுத்திரம் போல் பொங்கி அலைகள் எழுந்தன.

இதை காளியன் உணர்ந்தான். ஓர் சிறுவனுக்கு இவ்வளவு துணிச்சலா? என கோபத்தோடு வெளியில் வந்தான். ஸ்ரீகண்ணனை வாலால் ஓர் அடி அடித்து உள்ளே இழுத்துக் கொண்டு சென்று விட்டான். இதைக் கண்ட கோபாலர்கள் ஓவென கதறி அழுதார்கள். இதற்கு முன்னதாகவே நந்தகோபன் யசோதை ஆகியோருக்கு தகவல் கொடுத்திருக்க, எல்லோரும் குளக்கரைக்கு வந்து விட்டனர். பசுக்களும் ஸ்ரீகண்ணனை காணவில்லை என்றதும் தம் வாலை முறுக்கிக் கொண்டு ஜலத்தில் பாய முனைந்தன. எல்லோரும் ஸ்ரீகண்ணனைக் காப்பாற்ற ஜலத்தில் இறங்க முற்பட்டனர். ஆனால் அண்ணன் பலராமன் மட்டும் தடுத்தான். சற்று பொறுங்கள்! கண்ணனுக்கு எதுவும் ஆகாது என சாந்தப் படுத்தினான். இருந்தாலும் ஆத்திரம் தாளவில்லை. கண்ணா! கண்ணா! என கதறினார்கள்.

தேவர்களும் மேலே இருந்து இந்த திருக்காட்சியை பார்த்துக் கொண்டிருந்தனர். மடுவின் உள்ளே காளியனுடன் சென்ற ஸ்ரீகண்ணன் ஒரு கணம் காளியனை உற்று நோக்கினான். காளியனின் அகந்தையை அகற்றும் நேரமும் வந்தது. காளியன் தன் முழு பலத்தாலும் ஸ்ரீகண்ணனை சுற்றி இறுக்கினான். ஸ்ரீகண்ணன் ஓர் புன்முறுவலுடன் தம்மை விராட் ரூபமாக்கினான். காளியன் எலும்புகள் எல்லாம் நொறுங்க ஆரம்பித்தன. காளியனால் வேதனையை சகிக்க முடியவில்லை. பிடியைத் தளர்த்தி கடைசி முயற்சியாய் ஸ்ரீகண்ணனை வாலில் சுற்றி ஆகாயத்தில் தூக்கி எறிந்தான். ஸ்ரீகண்ணனும் புன்சிரிப்புடன் ஆகாயத்தில் சென்றான். கீழே விழும் ஸ்ரீகண்ணனை விழுங்கி ஏப்பம் விடுவதற்காக தன் ஆயிரம் சிரசில் ஒரு சிரசை மட்டும் குகை வாயில் போல் திறந்தபடி நின்றான். இதை வெளியில் உள்ள மாந்தர்கள் கண்டு ஆ..! ஆ..! என அலறினார்கள். ஸ்ரீகண்ணன் புன்சிரிப்புடன் வந்த

Koviloor Digital Library
வேகத்தில் காளியன் சிரசின் மீது நின்றான்; நின்ற வேகத்தில் வாய் படக்கென மூடியது. அந்த வேகத்தில் அதிலிருந்து விஷப்பற்கள் இரண்டும் நொறுங்கிக் கீழே விழுந்தது.

உடனே காளியன் அடுத்த தலையை தூக்க ஆரம்பித்தான். அதிலும் ஸ்ரீகண்ணன் திருவடிப்பட்டது. இப்படியாக அவன் எந்த தலையை தூக்கினாலும் அதில் ஸ்ரீகண்ணன் திருவடி மிதித்து கொண்டே இருந்ததாம். ஆயிரம் சிரசுகளிலும் அவன் திருவடி பட்டது என்றால் ஸ்ரீகண்ணனுக்கு திருவடிகள் அதிகமா என கேள்விகள் எழலாம்? இல்லவே இல்லை. **ஆணவம் எங்கு முளைக்குமோ அங்கெல்லாம் ஸ்ரீபரமாத்மா திருவடி வருகிறதாம்.**

அவித்தையை சத்தியமாக பற்றி அனுபவிக்கும் ஜீவன், அந்த அவித்தையாகிய அஞ்ஞானத்தை களைவது என்றால் ஞானமாகிய திருவடி அங்கங்கே பிரத்யட்சமாய் களைந்தெறியுமாம். அதாவது ஒளி வந்தவுடன் இருள் விலகுவது போல ஆகும் என உணர்க.

அந்த ஸ்ரீபரம்பொருளாகிய, ஸ்ரீகமலக்கண்ணன் ஸ்ரீஅடியார்களுக்கென்று நிர்ணயித்தது இரு திருவடிகள் தான்! கரங்களும், சிரங்களும் கோடானுகோடி இருக்கலாம். ஆனால் இறைவனுக்கென இருப்பது இரண்டு திருவடிகள்தான். அதற்கு காரணம்: அவன் அடியார்களுக்கு இருப்பது இரண்டு கரங்கள் மட்டும் தான். அந்த இரண்டு கரங்களால் இரண்டு திருவடியைத்தான் பற்றமுடியும். ஆகவே பக்தனின் கரமும் இரண்டு, ஸ்ரீபகவானின் திருவடியும் இரண்டு. காளியன் வாலைத் தூக்கினான், ஸ்ரீகண்ணன் அதை பற்றிக் கொண்டு ஆனந்த நர்த்தனம் ஆடினான். ஆயிரம் சிரங்களையும் தூக்க விடாமல் ஸ்ரீகண்ணன் ஆடினான் என்றால் அந்த திருநடனத்தை யார் தான் அறிவர்? இதே நடனத்தை அந்த ஸ்ரீஅம்பல கூத்தனிடமும் காணலாம். அந்த ஸ்ரீபரம்பொருள் நர்த்தனத்தில் தானே இந்த உலகமே இயங்குகிறது. அந்த நர்த்தனம்

Koviloor Digital Library
நின்று விட்டால் இந்த உலக இயக்கமே நின்று விடும். அந்த தில்லை சபேசனின் திருநடனத்தைக் காண்பதற்காகவே ஸ்ரீகாரைக்கால் அம்மையார் அவன் திருவடியின் கீழேயே அமர்ந்து விட்டார். இந்த நடனத்தைத் தான் பெரியவர்கள் பாடுகிறார்கள்.

ஒரு பாதம் தன்னைத் தூக்கி
ஒரு பாதம் தன்னை மாற்றி
ஒரு பாதம் ஆடுகின்ற இயல்பை
நீ அறிந்தாயானால் குரு பாதம்
உனக்குள் ஆச்சு.

அன்பின் மழலைகளே!

இதை உணர்ந்து பார்க்க வேண்டும். ஸ்ரீபரந்தாமன் பாம்பின் சிரசின் மேல் ஆடினான். ஸ்ரீபரமன் சுடுகாட்டில் ஆடினான். இந்த இரண்டு ஆட்டங்களையும் ஒன்றுப்படுத்திப் பார்த்தால் ஓர் உண்மை புரியும். அதை எழுதவோ, சொல்லவோ முடியாது. அதை உங்கள் ஞான நேத்திரத்தால் தான் கண்டு அனுபவிக்க வேண்டும். இனி கதைக்கு வருவோம்.

ஸ்ரீதிருவடியின் அம்சங்களே!

காளியன் நிலை கவலைக்கிடமாகிவிட்டது. அவனுடைய ஆயிரம் சிரசுகளிலிருந்தும் ஆணவமும், அகந்தையும் இரத்தமாக வெளியேறின. கண்விழிகள் பிதுங்கியது, மூச்சு விட முடியவில்லை. இந்நிலை கண்ட காளியன் மனைவிகள் ஐந்து பேரும் ஸ்ரீகண்ணன் முன் மண்டியிட்டு மாங்கல்ய பிச்சை கேட்டனர். தேவர்கள் பூமாரி பொழிந்தார்கள். கரையில் உள்ள கோகுல மாந்தர்கள் அந்த நர்த்தன காட்சியை கண்டு மெய்மறந்து பரவச நிலையில் இருந்தார்கள். அவர்களுக்கு ஸ்ரீகண்ணனை மதிக்க முடியவில்லை. இவன் கண்ணனா? இல்லை ஸ்ரீநாராயணனா? இப்படி பிரமித்து மெய்யுணர்வு எய்தி இருக்கும் சமயம் ஸ்ரீகண்ணன் அந்த நாக கன்னிகைகளுக்கு ஆறுதல் கூறி

Koviloor Digital Library
காளியனையும் மன்னித்து வேறு இடத்திற்கு குடியேறும்படி கட்டளையிட்டான்.

காளியனும் குடும்பத்துடன் சென்றுவிட்டான். ஆயர்பாடி மாந்தர்கள் கண்ட காட்சிகளையெல்லாம் அந்த வினாடியே மறக்கும்படி திரையை மூடினான் போலும்! அவர்களும் கனவு என்று கூட எண்ண முடியாமல் ஏதோ சர்ப்பம் மடுவை விட்டுப் போய் விட்டது, கண்ணன் விரட்டிவிட்டான் என மதித்தார்கள். மதிக்கப் பண்ணினான் அந்த ஸ்ரீமாயவன்.

அன்பில் விளைந்த முத்துக்களே!

ஸ்ரீபரமாத்மாவின் ராஜகிரீடை, ஜலக்கிரீடை இவைகளைத் தெரிந்து கொள்ளும்முன், சில கருத்துக்களை தெரிந்து கொள்ள வேண்டும். ஸ்ரீகண்ணன் என்னும் கடவுளே இப்படி நடந்தால் நாமும் ஏன் அவ்வாறு நடக்கக் கூடாது என கேள்வி எழுகிறது? அது பாவம் இல்லையா? அதர்மம் இல்லையா? என சந்தேகம் தோன்றுகிறது. காரணம் இந்த ஜீவர்கள் இந்த காட்சிகளை காமத்தோடும், ஆணவத்தோமும், சந்தேகத்தோடும், தன்னிடம் உள்ள குணானுபவத்தை வைத்தும் நோக்குகிறார்கள். அது தவறு.

முதலில் காலத்தையும், அனுபவத்தையும் வைத்து உணர வேண்டும். துவாபரயுக கடைசியில், அப்போது உள்ள ஜீவர்களின் வயது, அனுபவம், குணங்கள் எப்படி? என சற்று சிந்திக்க வேண்டும். இந்த கலியுகத்திலேயே ஒரு நான்கு தலைமுறைகளுக்கு முன்பு இருந்தவர்கள் எப்படி இருந்தார்கள்? அந்த காலத்தில் ஆண், பெண் காமம் எந்நிலையில் அனுபவிக்கப்பட்டது? பெண்கள் எந்த வயதில் பூப்பெய்துவார்கள்? அன்று ஆண், பெண்களிடையே பழக்க வழக்கங்கள் எப்படி இருந்தது? இதை ஆழ்ந்து ஆணித்தரமாக உணர வேண்டும்.

மது, மாது, மாமிசம் இந்த மூன்றையும் முந்தைய

Koviloor Digital Library
யுகத்தில் எப்படி செய்து அனுபவித்தார்கள் என்பதை முதலில் உணர வேண்டும்.

மது:

வேள்விகளை செய்யும்போது தேவதைகளின் திருப்திக்காக கொடுப்பது வழக்கம். அந்த மது தயாரிக்கும் முறையே வேறு. இன்று போல் அல்ல.

மாது:

ஒரு ஆணுக்கு ஒரு பெண் என்பதை ஸ்ரீராமாவதார காலத்தில் வாழ்ந்து காட்டினான் ஸ்ரீராமன். மேலும் பிரஜா சிருஷ்டிக்காகத்தான் அது நடைபெறும். உடல் இன்பத்திற்காக அல்ல. இந்த கலியுகத்திலும், முந்தைய காலங்களிலும் காலம், நேரம், பக்குவம் சரிபார்த்துதான் இதை நடத்துவார்கள்; மற்ற காலங்களில் பெண்களை தேவியாகவும், தாயாகவும் மதித்து போற்றி வந்தார்கள்.

மாமிசம்:

ராஜஸூய யாகம், அஸ்வமேத யாகம், சுதர்ஸன யாகம் இப்படி பல எஃயங்கள் பண்ணும்போது பசுவை ஆகுதியாக கொடுப்பது உண்டு. அவைகளை மந்திர பூர்வமாக சொல்லி அதன் தேவதைகளை தருவித்து அவர்கள் வசம் ஒப்படைக்கும் போது, பசுவின் தூலத்தில் இருக்கும் ஜீவன் ஓர் உயர்ந்த பிறவியை எய்தி பிறவியின் பயன் பெறும். இப்படி ஒவ்வொன்றையும் உயர்ந்த கருத்துக்களாக வைத்து உணர வேண்டுமே தவிர தாழ்ச்சியான நிலையில் கருதக் கூடாது. தாழ்வாக கருதும் மனம் மீளாது. உயர்வாகக் கருதும் மனம் உறுதி மாறாது.

இந்த ஒப்பற்ற செயல்களை வினை வசத்தாலும், இச்சை வசத்தாலும் தவறாகப் புரிந்து கொண்டு இந்த மாந்தர்கள் மது, மாது, மாமிசமாகப் புசித்து அனுபவிக்கிறார்கள். உண்மை நிலையில் நிலைத்து நிற்க வேண்டும். சந்தேகம் அறவே தொலைய வேண்டும். வைகுந்தம் சென்று திரும்பி வந்துகொண்டிருந்த

Koviloor Digital Library

நாரதரை இரு யோகிகள் கண்டு, இப்பொழுது ஸ்ரீபகவான் என்ன செய்து கொண்டிருக்கிறார் என கேட்டார்கள். அதற்கு நாரதர், இறைவன் ஓர் ஊசிக் காதின் துவாரத்திற்குள் ஒட்டகங்களை போகவும், வரவும் செய்து விளையாடிக் கொண்டிருக்கிறார் என்றார். இந்த வாசகத்தைக் கேட்ட முதலாமவர், அது எப்படி ஊசி துவாரத்திற்குள் ஒட்டகம் போக முடியும்? நீர் இறைவனைக் காணவில்லை என்றார். இது பகுத்தறிவாகும். இரண்டாமவர், ஆகா! இறைவானால் ஆகாத காரியம் ஒன்று உண்டா? அவரால் சகலமும் முடியும் என நம்பினார். இது உண்மை அறிவாகும்.

அதாவது ஸ்ரீபரமார்த்தீகத்தில் ஸ்ரீமகான்கள் வார்த்தைகளை தம் புத்திக்கு தக்கபடி விரித்துப் பார்க்கக்கூடாது. உண்மையை உணர்ந்து நடக்கும் வழியில் உறுதியான நம்பிக்கை வேண்டும், சந்தேகம் அறவே தொலைய வேண்டும். லௌகீக வார்த்தைகளை பிரித்தறிந்து சத்தாக மாற்றி அதை வைத்துக்கொண்டு மற்றவைகளை மறந்து விட வேண்டும்.

இதில் முதலாமவர் இறைவனைக் காணமுடியாது. இரண்டாமவர் இறைவனை காணமுடியும். ஆகவே நம்பிக்கையே உண்மையின் பிடிப்பு. உங்கள் மனம் உருவகம் எப்படி ஆகிறதோ அப்படியே அமையும். உங்கள் மனதை சர்வசதா இறைவன் திருவடியிலேயே பதித்து எந்தக் காரியத்திலும் அவனை முன் வைத்து உங்கள் செயல்களைப் பின் வைத்து அனுபவித்தால் உண்மை விளங்கும்.

ஸ்ரீ திருவடியின் அம்சங்களே!

கோகுலத்தில் கோபிகைகள் பாவை நோன்பு நோற்றார்கள். இந்த நோன்பு மார்கழி மாதம் 30 நாளும் இருக்க வேண்டும். ஆனால் 27 நாட்களில் முடிகிறது. இந்த 30 நாட்களிலும் அதிகாலை பிரம்ம முகூர்த்தத்தில் (3மணி முதல் 6மணி வரை) அலங்காரம், ஆடம்பரங்களைத் தவிர்த்து பால் சம்பந்தமான உணவுகளை நிறுத்தி, அவரவர் மனோ பீஷ்டம்

Koviloor Digital Library

எதுவோ அதை அம்பாள் வடிவில் ஸ்ரீகண்ணனை வைத்து (அம்பாளும், கண்ணனும் ஒன்று என இங்கு உறுதி ஆகிறது) தாயாகவோ, தந்தையாகவோ, கணவனாகவோ,தெய்வமாகவோ மனதில் வரித்து காமத்திற்கும், கோபத்திற்கும் இடம் கொடாமல் இச்சை கேளிக்கைகளை தவிர்த்து, அவன் நாமாவையே அனுதினமும் தியானித்துக் கொண்டு வந்தால், ஸ்ரீஅவன் தரிசனம் அவசியம் கிடைக்கும்.

இந்நிலையில் கோபிகைகள் ஸ்ரீகண்ணனை கணவனாக வரித்து, அதிகாலை ஒருவருக்கொருவர் துயில் எழுப்பி, யமுனை நதியில் நீராடி அவரவர் விரதங்களை காத்து வந்தார்கள். இந்த இருபத்தி ஏழு தினங்களிலும் தாய் தந்தையரைத் தவிர வேறு எந்த ஆடவர் முகங்களையும் பார்க்கக் கூடாது. இப்படி கடினமாக விரதம் இருந்தால் ஸ்ரீகண்ணனைக் காணலாம்.

இவ்விதமாக கோபிகைகள் விரதம் இருந்து வந்தார்கள். விரதம் பூர்த்தி ஆகும் தினத்தில் ஓர் நாள் விரதம் முடிவுறப் போகிற ஆனந்தத்தில் தாம் விரத காலங்களில் அனுபவித்த உண்மைகளை ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொண்டு ஸ்ரீகண்ணனைக் காணுவோம் என்ற பரவசத்தில் ஆடைகளைக் கரையில் வைத்து விட்டு வஸ்திரஹீனர்களாய் நீராடிக் கொண்டிருந்தார்கள். சர்வ ஜீவ தயாபரனான ஸ்ரீகண்ணன் சகல தூல உணர்வுகளும் அற்று, மெய்யுணர்வில் கலந்த பக்குவ ஆன்மாக்கள் ஏழு பேரைத் தவிர, மற்ற ஜீவர்களை தம் மாயையால் நீராடி முடித்துச் செல்லும் படியாக கிருபை செய்து, இந்த ஏழு பேரை மட்டும் நீரை விட்டு செல்லாமல் வைத்திருந்தான் போலும். புன்னை மரத்தின் மேல் ஸ்ரீகண்ணன் அமர்ந்திருக்க, அதில் இருந்தபடியே வேய்ங்குழல் இசைக்க, அந்த ஏழு பேருடைய வஸ்திரங்களும் இசையில் லயமாகி மரத்தின் மீது தாவி நாதத்தில் லயித்திருக்க, அவர்களுக்கு அந்த நாதத்தை கேளாமல் மறைக்க, அவர்கள் துகிலைக் காணாமல் திகைக்க, அப்பொழுது ஸ்ரீகண்ணன் குழல் ஓசை

Koviloor Digital Library
அவர்கள் காதிலும் ஒலிக்க, அவர்களும் புன்னை மரத்தை ஏறிட்டு நோக்க ஸ்ரீகண்ணனின் அமுத கானத்தையும், அதை இசைக்க அவன் வீற்றிருக்கும் அழகைக்கண்டு, மெய் மறந்து தாங்கள் வஸ்திரஹீனர்களாக இருப்பதையும் மறந்து ஆனந்த பாஷ்பம் கண்களில் பெருக்கெடுத்து யமுனையுடன் சேர, எம் ஐயனை ஸ்ரீபரமபுருஷனாக கண்டு ஆனந்தம் கொண்டு ஜலத்தை விட்டுக் கரைக்கு வந்து, ஸ்ரீகண்ணன் வீற்றிருக்கும் மரத்தை பிரதட்சணமாக வலம் வந்து ஜீவகளை களைந்து, ஜீவன் என்ற தன்மை மாறி, ஜீவாத்மா (ஜீவன்+ஆத்மா)வாக மாறி அந்நிலையும் கடந்து ஸ்ரீஆத்மாவில் ஒன்றி, ஸ்ரீபரமான்மா என்ற நிலைக்கு வந்து ஸ்ரீகண்ணன் என்ற பரமாத்மாவுடன் ஐக்கியமாகி கலந்து விட்டார்கள்.

அந்த ஏழு கன்னிகளும் ஸ்ரீபரமாத்மாவுக்குள் ஐக்கியமாகி பிறவிப் பெரும் பயனை அடைந்தார்கள். மற்ற கோபிகைகள் விரதத்தை அனுஷ்டானப்படி அனுஷ்டித்து, ஸ்ரீகண்ணனின் ரூபலாவண்யத்திலும் (அழகு), மஹிமைப் பிரபாவத்திலும் (மாயை) மயங்கி அவனுடைய பதினாயிரம் மனைவியர்களுள் இவர்களும் சேர்ந்தார்கள்.

இறைவனுக்குத் திருமணமா? அவனுக்கு இரண்டு மனைவியா? என பார்க்கக் கூடாது. கந்தனுக்கும் இரு மனைவியர். கண்ணனுக்கும் இரு மனைவியர். இப்படி பார்ப்பது உலக இயல்பு. அந்த பார்வையில் பார்க்க வேண்டாம். அந்த இரு மனைவிகளும் இச்சா சக்தி, கிரியா சக்தி ஆனார்கள். இறைவன் ஞானசக்தி ஆனான். இச்சை+சக்தி=இச்சா சக்தி; உலக சங்கல்ப நாம ரூப குணங்களாகும். கிரிகை+சக்தி=கிரியா சக்தி; சங்கல்பிக்கப்பட்ட நாமரூப குணத்தை வைத்து கர்மாவாக இயக்கி வைப்பதாகும். உலகம், கர்மா ஆக இந்த இரண்டையும் இரு மருங்கிலும் வைத்துக் கொண்டு தாம் பற்றற்ற ஞானமாக இருந்து கொண்டு இந்த உலகை ஆட்டிப் படைக்கிறான் இறைவன். ஆகவே அவன் குழந்தைகளாகிய நீங்கள் உங்கள்

Koviloor Digital Library

இச்சையாகிய சகல போக போக்கியங்களையும், இயக்கமாகிய சகல செயல்களையும் பரிபூரணமாக விட்டு விட்டு ஸ்ரீ அவன் (ஞானம்) ஆகிய மேனியில் உங்களையும் கரைத்து அவனுடன் மயமாகி விடுங்கள். இந்த முயற்சியே அனுபவமாக வேண்டும். மற்ற செயல்கள் அனைத்தும் படிகளே தவிர உண்மை ஆகா!

கிரீடை

ஞான மழலைகளே!

கிரீடை என்பது ஐக்கிய விளையாட்டு. ஸ்ரீகண்ணனின் வேய்ங்குழல் நாதத்தில் கட்டுப்பட்ட ஜீவர்கள் மட்டும் யமுனை ஆற்றங்கரையில் ஓர் மரத்தில் வீற்றிருக்கும் ஸ்ரீகண்ணன் முன் வந்து, அசைவற்று நின்று அவன் ரூபலாவண்யத்தில் கட்டுப்பட்டு, தம் ஜீவ களையைக் களையும்படி பிரார்த்திக்கிறார்கள். ஸ்ரீகண்ணனும் அவர்கள் வேண்டுதலை அறிந்து, மரத்தில் அமர்ந்திருக்கும் ஸ்ரீகண்ணனிடம் இருந்து ஒவ்வொரு ஸ்ரீகண்ணனாக பிரிந்து அதாவது சமுத்திரத்திலிருந்து ஒரு துளி பிரிந்தது போல் (அப்படி பிரிந்தாலும் துளி வேறு, சமுத்திரம் வேறு அல்ல) ஸ்ரீஆத்மாவாகி (இந்த இடத்தில் மரத்தில் அமர்ந்திருக்கும் கண்ணன் ஸ்ரீபரமாத்மா, அவனிலிருந்து பிரிந்த ஸ்ரீகண்ணன் ஆத்மா, வந்திருக்கும் கோபியர்கள் ஜீவாத்மா என கொள்க) கோபிகைகளுடைய ஜீவான்மாவை தம்முள் ஐக்கியப்படுத்தி பேரானந்தம் அடைகிறது. இப்பொழுது ஸ்ரீபரமான்மாவாகிய அந்த ஒன்று, மேல் நிலையில் இருந்து இதை சரி பார்க்கிறது.

இச்சையின் வசம் செல்லாத ஜீவான்மாக்களை அவர்கள் ஜீவ களையைப் போக்கி, ஆன்மாவாக்கி தமக்குள் ஐக்கியப்படுத்திக் கொண்டது. இச்சை வசம் கொண்ட ஜீவான்மாக்கள் அந்தந்த கர்மானுசாரம் அனுபவித்து வரும்படி திரும்பவும் அந்தந்த தூலத்திற்குள் சென்றதுகள். ஸ்ரீபரமாத்மா—ஜீவாத்மா ஐக்கிய தத்துவத்துடன் தான் இவைகளை உணர வேண்டுமேயன்றி

Koviloor Digital Library

லௌகீக கருத்துடன், மனோமய கற்பனையுடன் இதை காணவே கூடாது.

உலகமாகக் கண்டால் உலகம்தான். ஸ்ரீபரமார்த்தீகமாகக் கண்டால் ஸ்ரீபரம்தான் சித்திக்கும். இதன் கருத்துக்களை பின் வரும் உரையாடல் உங்களுக்கு உணர்த்தும்.

ஸ்ரீஎம்பிரான் ஓர் உயர்ந்த பீடத்தில் நின்றிருந்தான். எம் பிரபு இந்த கோபிகா ரத்தினங்களைப் பார்த்து கேட்கிறான்.

ஸ்ரீகண்ணன்: ஹே கோபிகா வனிதாமணிகளே! நீங்கள் இப்படி இங்கு வரலாமா? உங்கள் கணவன் தானே உங்களுக்கு தெய்வம். ஆண்களுக்கு ஸ்ரீமாதா, பிதா,குரு, தெய்வம் என்றும், பெண்களுக்கு ஸ்ரீமாதா, பிதா, கணவன், தெய்வம் என்றும் வேதம் முறையிடுகிறது. ஆனால் இதில் திருமணம் ஆனவர்களும், திருமணம் ஆகாதவர்களும் வந்திருக்கிறீர்களே. இது முறையா? இது தர்மமா? உங்கள் கணவனுக்கு சேவை செய்வது ஒன்றே போதும் என்ற விரதத்தை கொள்ள வேண்டும். ஸ்ரீபதி சேவையை மிஞ்சியது எதுவும் இல்லை. பெண்கள் ஆலயம் செல்ல வேண்டியதில்லை. தெய்வத்தை தொழவும் வேண்டியதில்லை. இதைத் தான் ஸ்ரீவள்ளுவர் சொல்கிறார்.

தெய்வம் தொழாள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை.

ஸ்ரீபதியின் பணிவிடையை மீறி ஓர் கர்மா செய்யக் கூடாது. அது மஹாபாவமாகும். ஸ்ரீ பதிக்கு செய்யும் தொண்டு ஸ்ரீயப்பதிக்கு செய்யும் தொண்டு ஆகும். இங்கு திருமணம் ஆகாத யுவதிகளும் வந்திருக்கிறீர்கள். உங்களுக்கு ஸ்ரீஅன்னையும், பிதாவும் முன்னறி தெய்வமல்லவா! அவர்கள் சேவையே உங்களுக்கு பரமபதத்தைக் கொடுக்கும். நீங்கள் உங்கள் ஸ்ரீமாதா, பிதாவுக்கு சேவை செய்து வந்தால் யாம் உங்களை தேடி வருவோம். நீங்கள் இப்படி இங்கு வருவது அபசாரம் இல்லையா? யாமோ ஓர் சிறுவன்.

Koviloor Digital Library
ஏதோ விளையாட்டார்த்தமாக ஓர் குழலை ஊதுகிறோம். இதைக் கேட்டு இப்படி வரலாமா? எல்லோரும் அவரவர் இல்லங்களுக்கு சென்று அவரவர் இல்லற தர்மங்களைக் கடைபிடித்து நடந்து வாருங்கள். இல்லற தர்மங்களை புறக்கணிக்கலாகாது! என உலக தர்மத்தை சொன்னான்.

கோபிகை: (திருமணம் ஆனவர்கள் சார்பில் பேசுகிறாள்)ஆழி மழைக்கண்ணா! மணி வண்ணா! மதுசூதனா! ஹரே கிருஷ்ணா! இது என்ன கேலிக்கூத்து? எங்களை எங்கே போகச் சொல்கிறாய்? நாங்கள் எங்கே போக முடியும்? உன்னுள் எங்களை ஐக்கியப்படுத்திக் கொண்ட பிறகு எங்களுக்கு போக்கிடம் ஏது? தெரியாதவன் போல் எங்களை அசைத்துப் பார்க்கிறாயா? நீ இங்கு பிறந்து வளர்ந்து வந்த நாள் முதலாக உன் தரிசனம் கண்டு நீ உணர்த்த உணர்ந்து, படிப்படியாக மேல்நிலைக்கு அழைத்துச் சென்றாய்.

ஆனால் இன்று நாங்கள் ஏறி வந்த கீழ்படிகளை சுட்டிக்காட்டி கீழே போகச் சொல்கிறாயா? அக்கீழ் நிலைகளை பார்க்கவும், அனுபவிக்கவும் சொல்கிறாயே இது என்ன விந்தை? இப்படிச் செய்வாரும் உண்டா? ஹே பிரபு! இல்லற தர்மம் என்றால் என்ன? இல்லாத தர்மமாகும். அது உலகியல் ஜீவர்களுக்கு அவசியம் வேண்டும். அவர்கள் அதைப் பற்றிக் கொண்டுதான் மேல் நிலைக்கு வரமுடியும். மேலே வந்தவர்களையும், கீழே உள்ளதைப் பார் என்று சொன்னால், அது என்ன அர்த்தமோ தெரியவில்லை? ஆமாம், உன்னைத் தான் கேட்கிறோம், எங்களுக்கு கணவன் யார்? தூல வடிவில் உள்ளவரா? உள் இருந்து இயங்கும் நீயா?

இந்த தூல திரேகத்தில் ஜீவனாக நீ இருந்து இயங்கும் பரியந்தம் இந்த தேகத்தின் அழகில் மயங்கி கண்ணே! மணியே! மரகதமே! மாணிக்கமே! முத்தே! என உச்சி முதல் உள்ளங்கால் வரையிலும் வர்ணிக்கும் இந்த மாந்தராகிய கணவர் இந்த ஜீவனாகிய நீ பிரிந்துவிட்டால் ஒதுங்கி நிற்பார். பிணம் என

Koviloor Digital Library

வெறுப்பர். இதுவே இந்த கணவன் என்ற ஸ்தானத்தில் இயங்கும் ஜீவர்கள் நிலையாகும். இதை எல்லாம் எங்களுக்கு அறிவுறுத்தி தோன்றாத் துணையாக இருந்து கொண்டு மேலான உன் பதத்தில் வைத்துக் கொண்டு, உன்னுள் எங்களையும், எங்களுக்குள் உன்னையும் கலந்து விட்ட பிறகு ஏதோ சாக்கு போக்குச் சொல்லி விளையாட்டு காட்டுகிறாயே, இது என்ன லீலை? என்றாள்.

கன்னிப்பெண்: எங்கள் அன்புத் தந்தையே! நீர் சொல்வது விந்தையே! நீரே எங்களுக்குத் தந்தையும், தாயும் ஆவீர். இந்த ஜன்மாவில் வந்த தாய் தந்தையரை காட்டுவீராகில், கோடானு கோடி ஜன்மா எடுத்திருக்கிறோம். கோடானு கோடி தாய் தந்தையரை பெற்றிருக்கிறோம். நாங்களும் ஆகி இருக்கிறோம். அப்படி இருக்கும் உமது சக்கரமாகிய ஜக வாழ்வில் நாங்கள் எந்த தாய் தந்தையரைப் போற்றி ஆதரிக்க முடியும்? எவர் மீது பாசம் வைக்க முடியும்? இதைத்தான் ஒரு சித்தர்,

''கட்டி அணைத்திடும் மக்களும் பெண்டிரும்
கால தச்சன் வெட்டி முறிக்கும் மரம்போல்
சரீரத்தை வீழ்த்தி விட்டால் கொட்டி முழக்கி அழுவர்
மயானம் குறுகியப்பால் எட்டி அடி வைப்பாரோ இறைவா''

எனப் பாடுகிறார்.

அவரே இன்னொரு இடத்தில்

''பத்தும் புகுந்து பிறந்து வளர்ந்து பட்டாடை சுற்றி
முத்தும் பவளமும் பூண்டு ஓடி ஆடி முடிந்த பின்பு
செத்துக் கிடக்கும் பிணத்தருகே இனி சாகும்
பிணங்கள் கத்துவதன் கணக்கென்ன காண்?''

என கணக்கும் கேட்கிறார்.

எங்களுக்கு கணக்கும் வேண்டாம், வழக்கும் வேண்டாம், உன் திருவடி ஒன்று மட்டும் போதும். எங்கள் ஐயனே! இந்த ஒப்புயர்வு அற்ற ஸ்தானமாகிய உன் பதத்தை எங்களுக்கு அருளினாய். பின்

Koviloor Digital Library

நீயும் நானும் கனிகாண் நடு இருப்பதே ருசி காண்
தேனும் பாலும் போல் சிவம்

என்ற உண்மை உணர்வை அருளி ஐக்கிய பான்மையைக் காட்டி ஆட்கொண்ட பின் இப்பொழுது உன் கபட நாடகத்தையும் ஆடிக் காட்டுகிறாய். தாய் என்றும், தந்தை என்றும், குழந்தை என்றும் நாங்கள் ஏறி வந்த படிகளைக் காட்டுகிறாய். ஹே பிரபோ! மாதவா! யாதவா! அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகா! உன் திருவடியே கதி என ஸ்ரீபிரபுவின் திருவடிகளில் வீழ்ந்தார்கள். வீழ்ந்தவர்கள் எழவே இல்லை. அவர்களை ஆட்கொண்டு அருளிய ஸ்ரீபகவான், உலக சம்ரட்சனைகளையும் ஒழுங்காக பரிபாலித்து வந்தார். எப்படி என்றால் எந்தெந்த வடிவில் எந்தெந்த வீடுகளிலிருந்து எந்தெந்த ஜீவன்கள் வந்தார்களோ, அந்தந்த வீடுகளில் அந்தந்த பதவியை ஏற்று ஒரு குறைபாடும், மாற்றமும் இல்லாமல் ஒழுங்காக நடத்தி வந்தானாம் எம் பிரபு. என்னே ஸ்ரீமாயவனின் மாயம். மஹா மாயையே ஸ்ரீபகவானின் அவதாரங்களை நடத்தி வைக்கிறதென உணர வேண்டும். உலகம் இந்த நிகழ்ச்சியை எங்கே அறியப் போகிறது? பொய்யை பொய்யாகவே பாவித்து பொய் நாடகம் நடந்தேறியது. உண்மையை உணர்ந்த உள்ளங்கள் மட்டும் உண்மையில் ஐக்கியமாயின.

ஹே பாகவதோத்தமர்களே!

இந்த கோபியரின் பிரேம பக்தியை உணர வேண்டும். இந்த பக்தியின் முதிர்ந்த இடமே ஞானமாகும். பிருந்தாரண்யத்தில் ஸ்ரீகண்ணன் அதிகாலையிலேயே கோபிகைகளை தம் வேணுகானத்தால் கவர்ந்து இழுத்து ஜீவாத்ம-பரமாத்மா ஐக்கிய தத்துவத்தை உணர்த்தி வருவான். இதை அண்ணன் பலராமன் பரீட்சிக்க யத்தனித்தான். அதாவது இந்த கோபிகைகளின் பக்தி உண்மையானதா? போலியானதா? என பரீட்சிக்கும் பொருட்டு, ஓர் நாள் ஸ்ரீ கண்ணன் வருவதற்கு முன்பே தாம் பிருந்தாவனம்

Koviloor Digital Library
சென்று ஸ்ரீகண்ணன் நிற்கும் இடத்தில் தான் நின்று கொண்டு ஸ்ரீகண்ணனாகவே வடிவெடுத்து வேய்ங்குழல் இசைத்தான்.

கோபிகைகளும் பலராமனை ஸ்ரீகண்ணனாகவே பாவித்து அவனைச் சுற்றி நின்றார்கள். பொய், மெய் வடிவம் தாங்கி வந்ததால் கோபிகைகளின் அந்தரங்க பக்தியானது, இந்த பொய்யையும் மெய்யாக்கி விட்டது. இது அவர்களின் பிரேமை பக்தியாகும். இதை பலராமன் அறியான். அவன் தன் சொரூபத்தை எடுத்து ஸ்ரீகண்ணனிடம் சென்று, ஹே கண்ணா! உன் கோபியர்கள் யார் உன் வேஷத்தை போட்டு சென்றாலும் மயங்கி விடுகிறார்கள். ஆகவே இவர்கள் பக்தி உண்மையான பக்தி இல்லை, இது போலி பக்தியாகும் என்று சொல்ல யத்தனித்து தம் மாயையினால் தம் பலராமன் சொரூபத்தை எடுக்க யத்தனித்தான். அங்கு அவன் மாயை செயலற்றதாகி விட்டது. தன் முயற்சி பலிக்காதது கண்டு ஆச்சர்யமும், பயமும் கொண்டான். இவை அனைத்தையும் ஸ்ரீகண்ணன் மறைந்திருந்து கவனித்துக் கொண்டிருந்தான்.

ஸ்ரீகண்ணனைக் கண்ட பலராமன் ஸ்ரீகண்ணனிடம் ஓடிச் சென்று, நிலைமையைச் சொல்லி தம்மை ரக்ஷிக்குமாறு வேண்டினான். அதற்கு ஸ்ரீகண்ணனும் எம் அண்ணா! இது எம் சக்தியும் இல்லை, உம் சக்தியும் இல்லை. இது இந்த கோபியர்களின் உண்மை பக்தியாகும். இனி அவர்களாக பார்த்து மனம் இரங்கி தம் ஓர்மையை நீக்கி உன்னை பலராமனாக பார்த்தால்தான் உனக்கு உன் உண்மை சொரூபம் கிடைக்க வாய்ப்புண்டு. நீ அவர்களிடமே சென்று மன்னிப்பு கேள்! என பதில் சொன்னான். உடனே பலராமனும் கோபியர்களிடம் வந்து பணிந்து, எம் அன்னையர்களே! அடியேன் பலராமன்; அதோ உங்கள் ஸ்ரீகண்ணன் இருக்கிறான். என் அறியாமையினால் உங்கள் பக்தியை சோதிக்க யத்தனித்தேன். அவமானமும் பெற்றேன். உங்கள் பிரேம பக்தியின் மூலம் இந்த உலகத்தை ஸ்ரீகண்ணனாக மாற்றும் வல்லமையை பெற்று விட்டீர்கள். என்னை மன்னித்து

Koviloor Digital Library

என் வடிவமாகிய பலராமன் வேஷத்தை தந்தருள வேணுமென்று பிரார்த்திக்க, அந்த கோபியரும் நீ கண்ணன் இல்லையா? பலராமன் தானா? என தம் எண்ணத்தை மாற்றி அமைக்க, அவனுக்கு அவன் வேஷம் கொடுக்கப்பட்டதாம்.

குழந்தைகளே! எந்த ஓர் வடிவத்தையும், ஸ்ரீபரமாத்ம சொரூபமாக மாற்றிப்பார்த்து அனுபவிக்கத் தொடங்கி விட்டால் உண்மையாகவே அது அதுவாகவே மாறிவிடும். இது எம் அனுபவ சித்தாந்தமாகும்.

மரத்தில் மறைந்தது மாமத யானை
மரத்தை மறைத்தது மாமத யானை
பரத்தில் மறைந்தது பார் முதல் பூதம்
பரத்தை மறைத்தது பார் முதல் பூதம்.

ஸ்ரீமஹான்கள் வாக்குப்படி கணவன், மனைவி, குழந்தைகள் உறவாக பார்க்கும் நிலை மாறி சகலமும் ஸ்ரீ பரமாத்ம சொரூபமாக மாற்றிப்பார்க்கப் பழகி விட்டால், ஆசை ஏது? கோபம் ஏது? பயம் ஏது? பிறவி ஏது?

சாந்தமாக காணுங்கள். சமாதானமாக பேசுங்கள். கோபதாபவேகத்திற்கு ஆளாகாதீர்கள். உங்கள் உண்மை உள்ளத்தின் முன் ஸ்ரீபகவான் மாயை செல்லாக் காசாகி விடும். அவன் அருளால் அவன்தாள் வணங்கும் நிலை பெற வேண்டும்.

ஞான சீலர்களே!

இந்த பிரேம பக்தியை இன்னொரு இடத்தில் எம் கோபிகைகள் உணர்த்துகிறார்கள். அதாவது ஸ்ரீகண்ணன் துவாரகையில் இருக்கிறான். அரசாட்சியும் செய்தானாம். அது எந்த அரசோ தெரியவில்லை. அது சமயம் சில கோபிகைகள் ஸ்ரீகண்ணனைக் காண வேணுமென்று பால், தயிர், வெண்ணெய் இவைகளை பானைகளில் சுமந்த வண்ணம் துவாரகை சென்றார்கள். துவார பாலகர்களிடம், ஸ்ரீகண்ணனைக் காண வேணுமென்று சொன்னார்கள்.

Koviloor Digital Library

அவர்களும் ஸ்ரீகண்ணனிடம் அனுமதி பெறுவதாக சென்றார்கள். இதை கண்ட கோபிகை ஒருத்தி சொல்கிறாள், அடியே பார்த்தாயா? இந்த ஸ்ரீகண்ணனைக் காண அனுமதியும் வேண்டுமாம். இந்த சுட்டிப்பயலை காண அனுமதியும் வேண்டுமோ? இது என்ன கூத்தாக இருக்கிறது? இந்த ஸ்ரீகண்ணனுக்கு இத்தனை பவுசா வந்திருக்கிறது? அப்படி இங்கு என்ன வேலை பார்க்கிறானாம்? என்றாள்.

அடுத்தவள் சொல்கிறாள், சற்றுப்பொறுடி பார்ப்போம். அவன் என்ன வேலை பார்த்தால் நமக்கென்ன. நம்மை இப்படி காக்க வைத்து விட்டானே. அவன் வரட்டும் என் கை பரபர என்கிறது, நாலு சாத்து சாத்த வேண்டும், கண்ணனாம் மன்னனாம் வரட்டும் என்றாள்.

இன்னொருத்தி சொன்னாள், அடியே! சும்மா இரு, ஸ்ரீகண்ணனோ குறும்புக்காரன், நம்மை என்ன பாடுபடுத்தப் போகிறானோ? அவனைக் கண்டாலே பயமாக இருக்கிறது என்றாள். இவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே உள்ளே போக அனுமதி வந்து விட்டது. துவார பாலகர்கள், அம்மா! இந்த பானைகளையெல்லாம் ஓர் ஓரமாக வைத்துவிட்டு உள்ளே சென்று வரும்போது எடுத்துக் கொள்ளலாம் என்றார்கள்.

அதற்கு அவர்கள், அட போய்யா! நீ என்ன சொல்வது? நாங்கள் என்ன கேட்பது? இங்கே இவைகளை வைத்துவிட்டு அங்கே சென்று என்ன செய்யப் போகிறோம்? இவைகளை அவனுக்காகத் தானே கொண்டு வந்திருக்கிறோம். நீங்கள் உங்கள் வேலையைப் பாருங்கள். எங்கள் விஷயத்தில் நீங்கள் தலையிட வேண்டாம் என கடிந்து கூறிவிட்டு, அவர்கள் பதிலுக்குக் கூட காத்திராமல் உள்ளே சென்றுவிட்டார்கள்.

அங்கே நம் ஸ்ரீகண்ணன் ராஜகம்பீரத்துடன் கொலு வீற்றிருந்தான். இந்த கோபிகைகள் அந்த தர்பார் மண்டபத்தை

Koviloor Digital Library

பார்த்து பிரமிக்கிறார்கள், ஒன்றுமே புரியவில்லை. இது என்னடி! இந்த இடம் இப்படி இருக்கிறது? அவன் இங்கே எங்கே இருக்கப் போகிறான்? இங்கே எல்லோரும் பொம்மையாட்டமாக அல்லவா இருக்கிறார்கள்; இந்த இடத்தில் நம் ஸ்ரீகண்ணன் இருக்க மாட்டான் என்றாள் ஒருத்தி. அடுத்தவள், அடிபோடி நம் ஸ்ரீகண்ணனோ திருடன். அவன் இங்கு எங்காவது ஒளிந்திருப்பான், வந்ததற்கு பார்த்து விட்டுப் போகலாம் என்றாள்.

எல்லோரும் ஸ்ரீகண்ணனைப் பார்த்துவிடுவது என்ற முடிவுடன் தாங்கள் கொண்டு வந்த பானைகளை ஓர் ஓரமாக வைத்து விட்டு, அந்த அரச சபையில் ஒவ்வொருவரையும் முகத்தைப் பிடித்து, கூர்ந்து கவனித்து விட்டு இவனில்லை என சொல்லிக் கொண்டே வந்து சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் ஸ்ரீ பரமாத்மாவின் முகத்தையும் உற்றுப் பார்த்து விட்டு இவனும் இல்லை என முடிவு செய்து, சரி வாங்கடி நாம் போவோம், நம் திருட்டுக் கண்ணன் இங்கே இல்லை என தத்தம் பானைகளை எடுத்துத் தலையில் வைத்துக் கொண்டு புறப்பட்டார்கள்.

இந்நிலையில் ராஜதர்பாரில் உள்ள பிரமுகர்கள் அனைவரும் அதிசயம் கொண்டார்கள். இதோ ஸ்ரீபரமாத்மா ராஜ கம்பீரமாக வீற்றிருக்க இல்லை என்று போகிறார்களே! இவர்கள் யாரை தேடுகிறார்கள்? என பேசிக் கொண்டார்கள். இந்த காட்சி அனைத்தும் கண்ட ஸ்ரீபரமாத்மா ஓர் புன்னகையுடன் அடுத்த நாடகத்தை ஆரம்பித்தான்.

ஹே கோபி ஜன வல்லவர்களே!

எம் ஸ்ரீபரமாத்மா உடனே காட்சியை மாற்றினான். தாம் பாலகோபாலனாக ஐந்து வயது சிறுவனாக மாறினானாம். தலையில் ஓர் மயில் பீலியுடன் சேர்ந்த குஞ்சம்; மருண்ட பார்வை; கொவ்வை செவ்வாயில் குறுஞ்சிரிப்பு; மார்பில் ஓர் பவள மாலை; இரண்டு கைகளிலும் கங்கணம்; இடையில் ஓர் அழுக்கான மஞ்சள்பட்டு; தோளில் ஓர் பச்சை பீதாம்பரம்;

Koviloor Digital Library
இடையில் எம் ராதா சகிதமான ஓர் புல்லாங்குழல்; காலில் சலங்கை; திவ்விய ஸ்ரீசரணார விந்தங்களில் அந்த கோபியர் இட்ட மஞ்சள் குங்குமத்துடன் கோலங்கள்; ஸ்ரீபாத மலரில் சங்கு சக்ர ரேகை இத்யாதி பழைய கோகுல ஸ்ரீகண்ணனாக, வெண்ணெய் திருடும் கள்வனாக, ஓடி வந்து அந்த கோபியர்களின் துகிலைப் பற்றி இழுத்து, மாமி! உங்கள் பால், தயிர், வெண்ணெய் இவைகளை உண்டு எவ்வளவு நாட்களாகின்றன? இதற்காகவே இவ்வளவு காலமும் காத்திருந்தோமே! இப்படி எம்மை ஏமாற்றி விட்டுச் செல்லலாமா? உங்களுக்குக்காகவே யாம் காத்திருக்கிறோம்.

உங்களுடைய பால், தயிர், வெண்ணெய் சாப்பிடாமல் எம் பசி ஆறுவதில்லை. உங்களிடம் அடி வாங்காத இந்த உடல் மதமதப்பாகி விட்டது. நீங்கள் கிள்ளாத இந்த கன்னம் ஒட்டி போய் விட்டது. உங்கள் வார்த்தைகளை கேட்காத இந்த காதும் எதிலும் சுவையற்றதாகிவிட்டது என குறும்பு மொழிகள் பேசிய வண்ணம் ஒரு கோபிகையின் துகிலைப் பற்றி இழுத்து கீழே விழும்படி செய்தான். அவள் தடால் எனக் கீழே விழுந்தாள். அடுத்த கோபிகையின் தலையில் உள்ள தயிர் பானையை, தம் புல்லாங்குழலால் தட்டி ஓட்டையிட்டான். அதில் பீறிட்டு வரும் தயிரில் குளித்தான். அந்த தயிர் ஏடுகளை எடுத்து எடுத்து உண்டானாம் எம் ஸ்ரீபிரபு.

ஓர் கோபிகை வைத்திருந்த பால் பானையை துவாரம் பண்ணி அதிலிருந்து கொட்டும் பாலை தம் பவள வாயை திறந்து பருகினானாம் பிரபு. அந்த ஸ்ரீபரமாத்மாவின் பவள வாயில் பால் செல்லும் காட்சியை அந்த ஐந்து கோபியர்களும் உற்று நோக்கினார்களாம். அந்த திருவாயில் பாற்கடலில் ஆதிசேஷன் மீது அரிதுயில் கொண்ட ஸ்ரீபரம புருஷனை தேவர்கள் புடைசூழ தரிசித்தார்கள். எல்லோரும் இந்த காட்சியை காண முடிந்ததாம்.

அந்த ஸ்ரீமாயவனும் தம் மாயைத் திரையால் மூடினான். சகலமும் மறைக்கப்பட்டன. கோபியரும், சபையோரும் பழைய

Koviloor Digital Library

நிலையை அடைந்தனர். கோபியர் உலக நிலைக்கு வந்தனர். ஹே கண்ணா! இவ்வளவு காலமும் எங்கு சென்றாய்? இப்படி எங்களை மறந்து விட்டாயே? இது முறையா? இது அடுக்குமா? என அழுது புலம்பினார்கள். ஸ்ரீகண்ணனும் உங்களுக்கு என்ன வேண்டும்? என்று கேட்டான். அவர்களும் கண்ணா! எங்களுக்கு எதுவும் வேண்டாம். உன்னை இந்த வடிவில் நாங்கள் வேண்டும்போது தரிசிக்க வேண்டும். இந்த ஒன்றே நாங்கள் கேட்கும் வரமாகும் எனக் கேட்டார்கள். ஸ்ரீகண்ணனும் அவ்வாறே ஆகுக! என்றான். அவர்களும் ஸ்ரீகண்ணன் உருவத்தை உள்ளத்தில் கொண்டு சென்றார்கள். இதுவே பிரேம பக்தியாகும்.

ஹே உத்தமோத்தமர்களே!

அன்று விநாயக சதுர்த்தி,கோகுலத்தில் இந்த சதுர்த்தியை கோலாகலமாக கொண்டாடினார்கள். மூலப்பொருள், ஓங்காரத்தின் தத்துவம், பிரவண சொரூபி, ஸ்ரீபரப்பிரம்மத்தின் பூரண வடிவமான ஸ்ரீகணநாதனுக்கு மோதகம், அவல், பொரி, முக்கண்காய் முதலியவைகளும், விதவிதமான பலகாரங்களும் நெய்யில் தயாரித்து கொண்டாட ஆரம்பித்தார்கள். ஸ்ரீகண்ணனும் இதை உணர்ந்து ஸ்ரீவிக்ன விநாயகனை உருகி அழைத்தான். அந்த ஸ்ரீபரம் பொருளும் ஓர் குழந்தையாக ஸ்ரீகண்ணன் முன் தோன்றினார், ஸ்ரீகண்ணன் கேட்கிறான்.

ஸ்ரீகண்ணன்: ஹே பிரபு! இன்று உம் ஜனன தினமாம். உம்பாடு குஷிதான். எந்த வீட்டில் பார்த்தாலும் நெய் மணக்கிறது. எம் வீட்டிலும், எம் தாய் உமக்காக விதவிதமான பலகாரங்கள் செய்து வைக்கிறாள். முதலில் எமக்கு தரமாட்டாள் போல் தெரிகிறது. எப்பொழுது உம் பூஜையை முடிப்பது? எப்பொழுது நாம் உண்பது?

ஸ்ரீகணநாதன்: கண்ணா! உன் ஜன்மாஷ்டமியாகிய கோகுலாஷ்டமி தினத்தன்று உன்னையும் கொண்டாடத் தான் செய்கிறார்கள். அன்று நீ எமக்குக் கொடுக்கிறாயா? இன்று யாம் முதலில் கொடுக்க.

Koviloor Digital Library

ஸ்ரீகண்ணன்: மூலப் பொருளே ! உம் நிலை வேறு. எம் நிலை வேறு. நீர் பிடித்த இடத்தில் பிள்ளையாக அமர்ந்து விடுகிறீர். எம்மால் அப்படி அமர முடியாதே. உம் நிலையை உணர்ந்து இந்த மக்கள் பார்த்தால் இச்சை என்பதே அற்று போகுமே. உம் தத்துவமே ஞானத்தின் முதிர்ந்த தத்துவமாகும். அதாவது எம் போல் கல்லாக சும்மா இருந்தால், சகலமும் உன்னைத் தேடி வரும் என அமைகிறது. உம் தத்துவத்தை இந்த ஜீவர்கள் உணராமல் தம் மனோமய கற்பனைகளை பெருக்கி தேவைகளையும், ஆசைகளையும் பெருக்கிக் கொண்டு அவஸ்தைப் படுகிறார்கள்.

மௌனத்திலே சகலமும் சித்திக்கும்.

இந்த அண்ட பிண்ட சராசரங்கள் அனைத்தும் உம் பேழை வயிற்றில் அடக்கம் என்றும், ஓம் என்ற மந்திரத்தின் வடிவமே உம் சொரூபம் என்றும், இகத்திற்கும், பரத்திற்கும் உம்மை நினைக்காமல் எக்காரியமும் சித்திக்காது என்றும், மேலும் சித்தியாக சித்தமும், புத்தியாக சத்சங்கல்பமும் உம் இரு மருங்கிலும் வைத்துக் கொண்டு சித்தி,புத்தி விநாயகனாக நீர் அமர்ந்திருக்கும் மஹத்துவத்தை வேதத்தாலும் விரித்துரைக்க முடியாது. அப்படிப்பட்ட தாங்கள் இச்சிறு குழந்தையிடம் தர்க்கம் பண்ணினால் அது பொருந்தாது.

''சிறியோர் செய்த சிறு பிழையெல்லாம் பெரியோர்
ஆயினும் பொறுப்பது கடமை''

என்றபடி எம் குறைகளையும், குற்றங்களையும் பொறுத்து மன்னிக்க வேண்டும் என பணிந்து உரைத்தான்.

ஸ்ரீகண நாதன்: (ஸ்ரீகண்ணனை மார்புற இறுகத் தழுவி) ஸ்ரீகண்ணா! உன்னை யார் என எமக்குத் தெரியும். சகல கலைகளிலும் நீ வல்லவன். உன் நிலையில் இருந்து அனுபவித்துத் தான் எம் நிலையை அடைய முடியும். உன் நிலை இல்லாமல் எம்

Koviloor Digital Library

நிலைக்கு வர முடியாது. வந்தால் வழுக்கி விழுவர். ஆனால் உன் மஹத்துவத்தை எம்மால் உரைக்க முடியுமா? இப்படி உரைக்கும் பொழுது அந்த இருவர் கண்களிலும் ஆனந்த கண்ணீர் பனித்து நின்றதாம்! இருவர் ஒருவருக்கொருவர் கண்ணீரைத் துடைத்து விடுகின்றனர். ஸ்ரீகண்ணன் ஸ்ரீகணநாதனின் திருவடியை நமஸ்கரித்து எழுந்தான். ஸ்ரீவிநாயக பெருமானும் கண்ணா! இன்று உனக்குத் தான் முதல் நிவேதனம் என்றார்.

யசோதை வீட்டில் பூஜை ஆரம்பம் ஆனது. யசோதை நினைக்கிறாள். இந்த ஸ்ரீகண்ணனோ குறும்புக்காரன். பூஜை முடியும் முன்னரே பலகாரங்களை எச்சில்படுத்தி விடுவான் என எண்ணி கண்ணா! நீ சமத்துப் பிள்ளை, கெட்டிக்காரப் பிள்ளை, நல்ல பிள்ளை பூஜை முடியும் வரை பார்த்துக் கொண்டிருக்க வேண்டும். இவரே முழுமுதற் பொருள்; அவரை வேண்டி நினைத்துக் கொண்டே இரு; அவர் உனக்கு சகலமும் தருவார்; நான் சும்மா விளையாட்டிற்காக உன் கைகளை கட்டி வைக்கிறேன். நீயும் இந்த ஆசனத்தில் அமர்ந்து கொண்டு கண்களை மூடிக்கொண்டு கணேசா! கணேசா! என சொல்லிக் கொண்டே இரு என்றாள்.

ஸ்ரீகண்ணனும், அம்மா! ஸ்ரீ கணேசர் எனக்கு முதலில் கொடுப்பாரா, கடைசியில் கொடுப்பாரா? என்றான். கடைசியில் தான் கொடுப்பார் என்றாள். ஸ்ரீகண்ணனும், சரி அம்மா! அவர் கொடுத்தால் சாப்பிடுகிறேன். எம் கரத்தால் எடுத்துப் புசிப்பதில்லை, நீ தான் எம் கரத்தை கட்டி விட்டாயே! நீ விநாயகர் பூஜையை ஒழுங்காக பண்ணு! என அவளுக்குப் புத்தி சொன்னானாம் கள்வனாகிய ஸ்ரீகண்ணனும்.

அந்த யசோதை தியானத்தில் கண்ட காட்சி மிக அற்புதமானது. வெள்ளிப் பனிமலையில் உலக மாதாவாகிய ஸ்ரீபரமேஸ்வரியின் மடியில் நம் ஸ்ரீகண்ணன் வீற்றிக்கிறான். ஸ்ரீஜடாதாரியும், ஸ்மஸானவாசனும், கங்காதரனாகியும், சந்திரசேகரனாகியும், ஆலமுண்ட நீலகண்டனுமாகிய ஸ்ரீ பரமேஸ்வரனும்,

கந்தன், கடம்பன், கார்த்திகேயன், வேலவனாகிய ஸ்ரீமுருகனும், ஓம்காரப் பொருளாகிய ஸ்ரீகணநாதனும் ஆகிய நால்வரும் விதவிதமான பலகாரங்களை ஊட்ட அதை ஆனந்தமாக உண்டு களிக்கின்ற ஸ்ரீபால கோபாலனைக் கண்டாள்.

யசோதையால் தம் கண்களை திறக்க முடியவில்லை. அந்த காட்சியை மறக்க முடியாமல் கண்களை மூடியபடியே தரிசித்துக் கொண்டிருந்தாள். இங்கு ஸ்ரீவிநாயகப் பெருமானும் ஸ்ரீகண்ணனை தம் மடி மீது வைத்துக் கொண்டு பலகாரங்களை ஒவ்வொன்றாக ஸ்ரீகண்ணனுக்குக் கொடுத்துக் கொண்டிருந்தார். அவள் காட்சியும் மாறியது. இங்கு நிலைகளும் மாறியது. யசோதை கண்களை திறந்துப் பார்த்தாள்.

இங்கு பலகாரங்கள் ஒவ்வொன்றிலும் அளவுகள் குறைந்திருந்தன. யசோதை கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. ஸ்ரீகண்ணனை கண்டாள்; அவன் கையில் கட்டுகள் அப்படியே இருந்தது. அவளுக்கு ஒன்றும் புரியவில்லை, கண்ணா! நீ இங்கு உண்டாயா? அங்கு உண்டாயா?எனக் கேட்டாள்.

ஸ்ரீகண்ணனும் மறுமொழியாக, அம்மா! யாம் எங்கும் உண்கிறோம். யாம் உண்ணா விட்டால் இந்த ஜீவர்களின் கதி ஏது? என்றான். இந்த வாசகம் யசோதைக்கு புரியவில்லை. கண்ணனா இப்படி பேசுகிறான் என கூர்ந்து கவனித்தாள். அந்த உண்மைகளை உணர ஒட்டாமல் மாயை என்னும் திரை கொண்டு மூடினான்.

ஹே பாகவதோத்தமர்களே!

ஸ்ரீகண்ணனுக்கு வயது எட்டு ஆகியது. கம்சனின் முடிவும் நெருங்கியது. கம்சன் நினைக்கிறான், இதுவரையிலும் எத்தனையோ வீரர்களை அனுப்பினோம். ஒருவரும் திரும்பி வரவே இல்லை. முடிவாக அந்த ஸ்ரீகண்ணனை இங்கு வரவழைத்து அழித்து விடலாம் என தன் முடிவை வகுத்துக்

Koviloor Digital Library

கொண்டான். தனக்கு பந்துவாயும், ஸ்ரீகண்ணனின் பக்தனாயும் உள்ள அக்ரூரரை அழைத்து, நீர் கோகுலம் சென்று நான் நடத்தும் தனுர்யாக பூஜைக்கு ஸ்ரீகண்ணனை அழைத்து வாரும் என கட்டளையிட்டான்.

அக்ரூரரும் மிகுந்த ஆனந்தத்துடன் ஸ்ரீகண்ணனைக் காண வாய்ப்பு கிடைத்ததே என வெகு துரிதமாக ரதத்தைக் கிளப்பிக் கொண்டு கோகுலம் வந்தார். கோகுலம் நெருங்க நெருங்க அவருக்கு ஏற்பட்ட ஆனந்தத்தை எழுத முடியாது. இந்த கோகுல மாந்தர்கள் என்ன புண்ணியம் செய்தார்களோ? அந்த ஸ்ரீபரம்பொருள் உடன் இருந்து அனுபவிக்க என எண்ணி, கண்ணீர் பெருகி ஓட வந்து கொண்டிருந்தார். அவர் திருஷ்டியில் படுவது எல்லாம் ஸ்ரீகண்ணனின் திருவடியே. மணலை நோக்கினாலும் அங்கு ஸ்ரீகண்ணனுடைய திருவடி பதிந்த தடமும் அதில் சங்கு சக்கர ரேகையும் தான்; உடனே ரதத்தை விட்டு கீழே குதிக்கிறார். அந்த மணலில் விழுந்து புரளுகிறார். அந்த தூசியை அள்ளி தம் தலையில் போட்டுக் கொள்கிறார். இந்த ஆனந்தத்தில் அவர் கோகுலம் வந்து சேர்ந்தார். நந்தகோபன் வீட்டின் முன் ரதத்தை நிறுத்தினார். இதை அறிந்த நந்தகோபன், யசோதை மற்றும் கோபாலர்கள் அவரை முகமன் கூறி வரவேற்கிறார்கள். அவரும் மதுராவில் உள்ள நிலைகளை சொல்கிறார். அப்பொழுது ஆனிரை மேய்த்துவிட்டு ஸ்ரீகண்ணனும், அவன் சகாக்களும் வந்து சேர்ந்தனர். ஸ்ரீகண்ணனையும், பலராமனையும் கண்ட அக்ரூரருக்கு ஆனந்தம் தாளவில்லை. அப்படியே ஸ்ரீகண்ணன் திருவடிகளில் வீழ்ந்தார்! ஸ்ரீகண்ணனும் அவரை தூக்கிவிட்டு, அவர் திருவடிகளில் விழுந்து வணங்கினான். அக்ரூரருக்கு சிரமபரிகாரம் செய்வித்து, அன்னபானாதிகள் கொடுத்து, விடியற்காலையில் பேசிக் கொள்ளலாம் எனச் சொல்லி எல்லோரும் சயனத்திற்கு சென்றனர்.

ஸ்ரீகண்ணனும் மாட்டுக் கொட்டகையில், ஓர் கட்டிலில்

Koviloor Digital Library

அக்ரூரரை சயனிக்கச் செய்துவிட்டு தாமும் ஓர் ஓரமாக சயனித்துக் கொண்டான். அக்ரூரர் பிரயாணக் களைப்பினால் ஸ்ரீகண்ணனின் மெய்யுணர்வுடன் ஒன்றி, அயர்ந்து நித்திரை செய்தார். பாதி இரவு நேரம் ஸ்ரீகண்ணன் மட்டும் எழுந்து, அக்ரூரர் அருகில் சென்று, அவர் திருவடிகளின் கீழே அமர்ந்து அக்ரூரரின் திருவடியை பற்றி வருடத் தொடங்கினான். சரீர அசதியினால், முதலில் கவனியாதிருந்த அக்ரூரர் சேதனாசக்தி ஏற்பட்டு நிலைமையை உணர்ந்தார்.

ஆகா! அபசாரம் அபசாரம் என அலறி எழுந்தார். உடனே அவர் வாயை ஸ்ரீகண்ணன் பொத்தினான், எது அபசாரம்? ஹே பாகவதோத்தமரே! உம்மைப் போல மெய்யுணர்வு பெற்ற ஸ்ரீஅடியார்கள் இல்லையானால் யாம் கிடையாது; உங்கள் திருவடி நிழலும், திருவடி தூசியுமே எம் சொரூபம் என்றானாம் பிரபு. அக்ரூரருக்கு சேதனாசக்தி ஒழிந்தது. ஸ்ரீகண்ணன் மேல் அப்படியே சாய்ந்தார். ஸ்ரீகண்ணனும் தாங்கிக் கொண்டான். ஒரு குழந்தையைப் போல அக்ரூரர் ஸ்ரீகண்ணனை நோக்கினார்.

எப்படி பிரகாசம் உள்ள தன் திருமேனியை ஸ்ரீகண்ணன் இப்படி மறைத்துக் கொண்டுள்ளானே என எண்ணி, ஹே கண்ணா! உன் உண்மை சொரூபத்தை யாம் காண வேண்டும் என சொல்லிய வண்ணம் ஸ்ரீகண்ணனின் தோள்பட்டையை தம் நகம் கொண்டு கீறிப் பார்த்தாராம் அக்ரூரர். ஒரு விரல் கனத்திற்கு புழுதியுடன் அழுக்காக சேர்த்து தம் உடலை மூடியிருந்தானாம் பிரபு. அவர் தோண்டியதில் இருந்த பிரகாசத்தைக் கண்டு அக்ரூரர் ஏன் இந்த அலங்கோலம்? இப்படியா திருமேனியை மறைத்துக் கொள்வது என்று கேட்டார். ஸ்ரீகண்ணனும் சரிதான் நீர் கண்டு கொண்டீரல்லவோ? இனி போதும் என அதை மறைத்தானாம்.

யோக நித்திரையில் ஸ்ரீகண்ணன் சயனத்திருக்க, ஸ்ரீகண்ணனின் திருவடியில் பஞ்சு போன்ற கரங்கள் வருடுவதை உணர்ந்தான். கண் விழித்து கனிவுடன் நோக்கினான். அங்கு

Koviloor Digital Library

ராதை அமர்ந்திருந்தாள். ராதா! இந்த நேரத்தில் இங்கு ஏன் வந்தாய்? உனக்கு என்ன வேண்டும்? என கேட்டான்.

ராதையின் கண்களில் கண்ணீர் அருவியாக பெருகி ஓடியது. பிரபோ ஷ்யாம்! தாங்கள் இந்த கோகுலத்தை விட்டுப் பிரிவதாக தெரிந்தது. இந்த அடியாளையும் மறக்க போகிறீரா? உம்மைவிட்டு அரைகணமும் பிரிந்து உயிர் தரியேன் என்றாள் ராதை. அதற்கு மாயவனும் யாமே உன்னைத் தேடி வரலாம் என்றிருந்தோம், நீயே வந்து விட்டாய். உன்னை மறக்க முடியுமா? எனச் சொல்லி ராதாவை உச்சி மோந்து சிரசில் முத்தமிட்டு, அவள் சிரசில் கை வைத்தான். அவள் ஓர் வேய்ங்குழல் ஆனாள். ராதா இனி நீ எம்மை விட்டு என்றும் பிரிய முடியாது என்றானாம். ராதையாகிய குழலை தம் மடி மீது செருகி கொண்டான்.

பொழுது விடிந்தது. அக்ரூரர் ஸ்ரீகண்ணனை கூட்டிச் செல்ல வந்திருக்கிறார் என கோகுல மாந்தர்களுக்கு தெரிந்தது. கோகுல மாந்தரும், பசுக்களும், கன்றுகளும், பறவைகளும், மிருகங்களும், சகல உயிரினங்களும் அழுததாம். மரம், செடி, கொடிகளும் அழுததாம். அன்று அயோத்தியை விட்டு தசரதராமன் பிரிந்த போது ஏற்பட்ட நிகழ்ச்சி இங்கும் நடந்தது. பூமியில் உள்ள புல், பூண்டுகளும் செடி கொடிகளும் கண்ணா! இனி உன் திருவடி எங்கள் மேல் எப்பொழுது படும்? இனி நாங்கள் இருந்து என்ன பயன்? என்றதாம். சகல ஜீவராசிகளுக்கும் ஆறுதல் கூறினானாம் பிரபு! சகலரையும் மயக்கிச் சென்று விட்டான். கோகுலத்தை விட்டு அண்ணனுடனும், அக்ரூரருடனும் எம் பிரபு... சற்று பொறுக்கவும்; இதை எழுத முடியவில்லை!

அன்பின் சொரூபங்களே!

ரதத்தில் பலராமனையும், ஸ்ரீகண்ணனையும் ஏற்றிக்கொண்டு அக்ரூரர் மதுராவை நோக்கி சென்று

Koviloor Digital Library

கொண்டிருந்தார். செல்லும் வழியில் சந்தியாவந்தனம் செய்வதற்காக அக்ரூரர் ரதத்தை நிறுத்தினார். ஸ்ரீகண்ணனும், பலராமனும் ரதத்திலேயே இருந்தனர். அக்ரூரர் மட்டும் தனியே சென்று யமுனையில் இறங்கினார். பகவான் நாம ஸ்மரணையுடன் ஜலத்தில் மூழ்கினார்? அங்கு அவர் கண்ட காட்சி, ஸ்ரீயப்பதி ஸ்ரீ வைகுந்தத்தில் அனந்த ஸ்ரீபத்மநாபனாக, கோடி சூரிய பிரகாசத்துடன் தேவரும், முனிவரும் புடை சூழ சயனத்தில் இருப்பதைக் கண்டார்.

அவர் அனுபவித்த நிலைகளை எப்படி எழுதுவது? கற்கண்டு என்றால் மதுரம் தோன்றுமா? கடித்து சுவைத்தால்தானே உணரமுடியும். அக்ரூரர் நீருக்கு மேலே வந்து நோக்கினார். ரதத்தில் ஸ்ரீகண்ணன் கடைக்கண் பார்வையால் நோக்குவதைக் கண்டார்.

மறுமுறையும் ஜலத்தில் மூழ்கினார். மீண்டும் அதே காட்சி! மேலும் கரையை நோக்கினார். இப்படியாக மூன்று முறை நோக்கினார். இதே காட்சி மாறி, மாறி தெரிந்தது.

மெய்யுணர்வு எய்தியவராய் கரையில் ஓடி வந்து ஸ்ரீகண்ணன் திருவடியை பற்றிக் கொண்டு ஆனந்த பாஷ்பத்தால் இறைவன் திருவடியை அபிஷேகம் செய்தார். அப்படியே ஸ்ரீகண்ணனை உள்ளத்தில் இருத்தினார். உள்ளக் கதவுகளை மூடினார், இனி அவன் அவர் இதயத்தை விட்டு வேறு எங்கும் செல்ல முடியாது.

எம் இதய தாமரையின் அம்சங்களே!

ஸ்ரீகண்ணன் மதுரா நகரை அடைந்தான். ரதத்தையும் அக்ரூரரையும் அனுப்பி விட்டு இருவரும் மதுரா வீதியில் நடந்து சென்றனர். செல்லும் வழியில் கம்சனுக்கு சலவை செய்து கொண்டு போகும் ஓர் ஏகாவியனை சந்தித்தனர். அவனிடம் தமக்குத் தேவையான ஆடைகளை கேட்டனர். அவன் அசுரகுணம் உள்ளவனாகையால் தூஷணமாகப் பேச, அவனை சம்ஹரித்து

Koviloor Digital Library

இருவரும் தேவையான ஆடைகளை அணிந்து கொண்டு சென்றனர். அடுத்து கூனி குறுகி ஓர் மூதாட்டி கம்சனுக்கு சந்தனமும், வாசனை திரவியங்களும் கொண்டு சென்று கொண்டிருந்தாள். ஸ்ரீகண்ணனையும், பலராமனையும் கண்டாள். அவர்கள் இவளிடம், பெண்ணே! எங்களுக்கு சந்தனம் தருகிறாயா? எனக் கேட்க, அந்த கூனியும் ஸ்ரீகண்ணனை கண்ட மாத்திரத்தில் அடியற்ற மரம் போல வீழ்ந்து வணங்கி, ஹே பிரபோ! இப்பொழுதாவது கருணை வந்ததே! உங்கள் தரிசன பாக்கியம் என் ஜன்ம சாபல்யம் என ஆனந்தித்து சந்தனத்தையும், வாசனை திரவியங்களையும் இருவருக்கும் பூசி அலங்கரித்தாள்.

ஸ்ரீகண்ணனும் கருணை கொண்டு கூனியின் வலது காலை தம் வலது கால் பெருவிரலால் மிதித்துக் கொண்டு உச்சி முடியை தம் அபய கரத்தால் பற்றி இழுத்து கூனை நிமிர்த்தினான் பிரபு! அவள் கூன் நிமிர்ந்து சுந்தர வடிவம் பெற்றாள்.

ஸ்ரீபரமாத்மாவின் ஸ்பரிசத்தால் அவள் பூர்வ ஜன்ம வாசனை அவளுக்கு உணர்த்தப்பட்டது. ஸ்ரீராமாவதார காலத்தில் அவள் மந்தாரை என்ற கூனியாக இருந்தாள்.

ஸ்ரீஜானகிராமனை வனத்திற்கு அனுப்ப மூலகாரணமாக இருந்தாள். இதை உணர்ந்து ஸ்ரீகண்ணனை வணங்கி, ஹே பிரபோ! ஜன்மம் போதும் ஸ்வாமி, அடியாளை கரையேற்று! என பிரார்த்திக்க, கருணைக் கடலும் உன் எண்ணம் இந்த ஜன்மாவில் ஈடேறாது, அடுத்த ஜன்மாவில் முடியும். அப்பொழுது ஜனாபாய் என்ற நாமத்தில் ஓர் பக்தையாக எம் அருஞ்செல்வன் நாமதேவருக்கு உண்மை சிஷ்யையாகி உனக்கு முக்தி கிடைக்கும் என சாதித்தான்.

அத்துடன் அரண்மனை வாசலை அடைந்தார்கள். அரண்மனை வாசலில் கம்சனின் ஏற்பட்டால் குவலயாபீடம் என்ற யானை ஒன்று மதம் பிடித்த நிலையில் நின்றிருந்தது. யானைப் பாகன் ஏவுதலால் வழிவிட மறுக்க அந்த யானையையும்,

Koviloor Digital Library

யானைப் பாகனையும் வதம் செய்து அந்த யானையின் தந்தங்களை ஒடித்து ஆளுக்கு ஒரு ஆயுதமாக தோளில் ஏந்திக் கொண்டு அரண்மனையினுள் சென்றார்கள். அங்கு ஓர் மைதானத்தில் சாணுரன், முஷ்டிகன் என்ற யுத்த மல்லர்களை கம்சன் நிறுத்தி வைத்திருந்தான். அவர்களையும் விளையாட்டார்த்தமாக வதம் செய்தனர். கம்சனின் சபை நடுவே எம்பிரானும், பலராமனும் வந்து நின்றார்கள். கம்சனின் கண்களுக்கு ஸ்ரீகண்ணன் எமனாக தென்பட்டான். காணும் உள்ளங்களுக்கு அவரவர் நிலைக்கு தக்கபடி காட்சி அளித்தானாம் எம் பிரபு. யோகீஸ்வரர்களுக்கு வாசுதேவனாகவும், பக்தர்களுக்கு ஸ்ரீபகவானாகவும், பாமரர்களுக்கு இடைச் சிறுவனாகவும், வயதில் பெரியவர்களுக்கு ஓர் குழந்தையாகவும், கொடியவர்களுக்கு பகைவனாகவும் காட்சி அளித்தான்.

ஸ்ரீகண்ணனைக் கண்ட கம்சன் குபீர் என சிம்மாசனத்தை விட்டு எழுந்தான். அந்நிகழ்ச்சி ஸ்ரீகண்ணனுக்கு மரியாதை கொடுப்பதைப் போல் இருந்தது. ஸ்ரீகண்ணன் சிம்மாசனத்தின் படிகளில் ஏறி வரும் போது மரண பீதியுற்றான் கம்சன். ஸ்ரீகண்ணன் கம்சன் அருகில் சென்றதும் கம்சனின் மகுடத்தை தட்டி விட்டான்.

இடக்கரத்தால் அவன் முடியைப் பற்றி இழுத்து கீழே உருட்டி விட்டான். படிகளின் வழியே கடகடவென உருண்டு கீழே விழுந்தவன் எழுந்திருக்கவே இல்லை. அவன் ஜீவன் ஜோதி வடிவில் ஸ்ரீபரமாத்மாவின் திருவடியில் ஐக்கியமானதாம். கம்சனை அப்படி கீழே இழுத்துப் போட காரணம் யாதெனில், முன்பு ஓர் சமயம் அவன் தங்கை திருமண ஊர்வலத்தில் அசரீரி வாக்கு கேட்டவுடன் தங்கையை கொல்ல வேண்டும் என்ற ஆத்திரத்துடன் அவள் முடியைப் பற்றி ரதத்தில் இருந்து கீழே இழுத்துப் போட்டான். ஓர் பக்தையை அபசாரம் பண்ணிய பாபத்திற்காக தானும் அதே விதத்தில் இழுத்து எறியப்பட்டான்.

Koviloor Digital Library

ஸ்ரீகண்ணனும், ஸ்ரீபலராமனும் முதலில் தம் தாய் தந்தை, தாத்தாவாகிய உக்ரசேனன் முதலியோரை சிறையில் இருந்து மீட்டனர். ஸ்ரீதாய் தந்தையின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினர். இதற்கு முன்பே ஸ்ரீநாரத பகவானால் ஸ்ரீ கண்ணனைப் பற்றியும், பலராமனைப் பற்றியும் வசுதேவரும், தேவகியும் சகல விபரமும் அறிந்திருந்தனர். தேவகிக்கும், வசுதேவருக்கும் புத்திர வாத்ஸல்யத்தைத் தான் கொடுத்தானே தவிர உண்மையை உணர ஒட்டாமல் மறைத்து விட்டான் எம் ஸ்ரீபிரபு.

தம் தாத்தாவாகிய உக்ரசேனன் மகாராஜனுக்கு முடி சூட்டினான். வாயு பகவானை வரவழைத்து தேவேந்திரனிடம் இருக்கும் சுதர்ஸனம் என்னும் சபையை வரவழைத்தான். அச்சுதர்ஸன சபையைக் கூட்டி அதில் உக்ரசேனன் என்னும் பதுமையை அமரச் செய்து தாம் அந்தர்யாமியாக இருந்து செயல்பட்டான்.

ஸ்ரீமாதா பிதா இருவரும் ஸ்ரீகண்ணனுக்கும், பலராமனுக்கும் உபநயனம் செய்யக் கருதி ஆச்சாரியர் கார்க்கரை வரவழைத்து முறைப்படி செய்தனர். கார்க்கரும் அரண்மனையில் தங்கி இருக்கும்போது தமக்கென ஒதுக்கப்பட்ட ஓர் அறையில் தங்கிக் கொண்டார். அவர் ஸ்ரீகண்ணனை சரிவர உணராத தன்மையினால் தம் அறையில் பூஜை செய்யும்போது சகல பதார்த்தங்களையும் ஸ்வாமி முன் படைத்து நிவேதனம் செய்யும்போது கோவிந்தா! வைகுந்தா! நாராயணா! என பரம்பொருளின் நாமாவை மந்திரப் பூர்வமாக சொல்ல, இதை அறிந்த ஸ்ரீகண்ணன் கார்க்காச்சாரியார் மேல் திருவுள்ளம் கொண்டு அவர் படைத்திருந்த பலகாரங்களை புசிக்க ஆரம்பித்தான்.

கண்களை திறந்து பார்த்த ஆச்சாரியார் திடுக்கிட்டு, அடே கண்ணா! இப்படி இறைவனுக்கு வைத்திருக்கும் நிவேதனத்தை எச்சில் படுத்தலாமா?நீயோ ஓர் குழந்தை. உனக்கு விபரம் தெரியாததால் உன்னை மன்னித்தேன், இனி இவ்வாறு செய்யாதே

Koviloor Digital Library
என சொல்லி, அவனை பிடித்து வெளியே அனுப்பிவிட்டு, கதவுகளை மூடி வேறு புதிதாக பலகாரங்கள் செய்து பூஜையை ஆரம்பித்தார். அந்த முறையும் ஸ்ரீபகவான் நாமாவை ஆச்சாரியார் சொல்ல, மறுமுறையும் ஸ்ரீகண்ணன் வந்து சாப்பிடலானான். அவருக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

அடே கண்ணா! நீ தாழ்த்தப்பட்டவன். இடையர் ஜாதி. நீ என்னுடைய மேலான குலதர்மத்தை கெடுக்கிறாயே. இனி ஒருமுறை இப்படி செய்தால் சபித்து விடுவேன் என எச்சரித்து, அவனை அனுப்பி விட்டு மறுபடியும் சுத்தமாக வேறு பலகாரங்கள் செய்து ஸ்ரீபகவான் முன் படைத்து மந்திரங்களை சொன்னார். மூன்றாம் முறையும் ஸ்ரீகண்ணன் நேரில் வந்து நிவேதனத்தை உட்கொண்டான். கார்க்கருக்கு தாங்கமுடியாத கோபம் வந்துவிட்டது. ஓர் இடையனுக்கு இவ்வளவு துணிச்சலா? என சொல்லி உன்னை என்ன செய்கிறேன் பார்? என எழுந்தார். ஸ்ரீகண்ணனும் நிதானமாக ஆச்சாரியார் திருவடியை பற்றி வணங்கினான். பிறகு, ஸ்வாமி! தாங்கள் தானே அழைத்தீர்கள், நீங்கள் கூப்பிடாமல் வருவேனா? நீங்கள் அழைத்து உண்ணும்படி ஆணையிட்டீர்கள், யாம் உண்டோம்! இதில் என்ன தவறு இருக்கிறது? என கேட்டான். ஆச்சாரியார், அடே திருடா! உன்னை யார் அழைத்தது? நீ ஆயர்பாடியில் பெண்களிடம் திருடி உண்டதாக கேள்விப்பட்டிருக்கிறேன். அந்த முறையை இங்கும் கையாளுகிறாய் போல் தெரிகிறது என்றார். அதற்கு ஸ்ரீகண்ணன், ஸ்வாமி ! தாங்கள் அழைக்காமல் யாம் வரவில்லை என்றான். அவரும் உன்னை யாரடா அழைத்தது? என்றார். ஸ்ரீகண்ணனும் எங்கே உங்கள் மந்திரத்தை சொல்லுங்கள் பார்ப்போம் என்றான். ஆச்சாரியாரும், கோவிந்தா! என்றார். ஸ்ரீகண்ணனும், பசுவும் அதன் பக்கத்தில் ஸ்ரீபரமாத்மாவாகவும் நின்று காட்சி கொடுத்தான். வைகுந்தா! என்றார். ஸ்ரீவைகுந்த பதியாக காட்சி கொடுத்தான். திரிவிக்ரமா! என்றார். விண்ணளாவி நின்று திருவிக்ரமனாக காட்சி கொடுத்தான் எம் பிரபு. தஸ்கரணம்பதி என்றார். சகல

Koviloor Digital Library
ஜீவராசிகளுக்குள்ளும், தனக்குள்ளும் ஸ்ரீபகவானை கண்டு உணர்ந்தார். அந்த ஆனந்தத்தில் மெய் மறந்தார். வினைகள் எல்லாம் சாம்பலாயின. ஆனந்த பாஷ்பம் ஒழுக ஸ்ரீபிரபுவின் திருவடியை பற்றி கதறினார். ஹே பிரபு! உன்னை இடையன் என்றும், தாழ்ந்தவன் என்றும் தூஷித்துவிட்டேனே! என் பிழை பொறுத்தருளும், உம்மை உணராமல் நான் பெரும் பிழை செய்து விட்டேன் என உருகினார்.

ஸ்ரீகண்ணனும் ஆச்சாரியாரை ஆரத்தழுவி சாந்தப் படுத்தினான். இதில் உமது தவறு ஒன்றுமில்லை. உம் வினை போகம் அறிய ஒட்டாமல் தடுக்கிறது. இங்கு நீர் கண்டவை அனைத்தும் ரகசியமாக இருக்கட்டும் என மறைத்தானாம் எம் ஸ்ரீபிரபு.

அடுத்து குருகுல வாசம் செய்வதற்காக ஸ்ரீசாந்தீப முனிவரிடம் ஸ்ரீமாதா பிதாக்கள் அழைத்துச் சென்றனர். ஸ்ரீசாந்தீப முனிவரைக் கண்டதும் ஸ்ரீகண்ணனும், பலராமனும் ஸ்ரீகுருதேவர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி திருவடித்தூளி சென்னி சூடி நின்றனர். ஸ்ரீகுருநாதனும் கிருபையுடன் இருவருக்கும் சகல கலைகளையும் போதித்தார். சகலமும் கற்று முடிந்தவுடன் ஸ்ரீகுரு தட்சணையாக பிரபாச தீர்த்தத்தில் முன்பு இறந்த மகனை மீண்டும் உயிர்ப்பித்துக் கொடுத்தான் ஸ்ரீகண்ணன்.

ஞானக் குழந்தைகளே!

பூமிபாரம் தீர்ப்பதற்காகவே வந்த இறைவன் நல்லோரைக் காத்து, தீயோரை அழித்து முறைப்படி ஸ்ரீஆச்சாரியாரிடம் பணி புரிந்து உபதேசமும் பெற்று, தாமும் ஸ்ரீஆச்சாரிய பட்டம் பெற திருவுள்ளம் கொண்டு பார்த்தனுக்கு ஸ்ரீகீதோபதேசம் செய்து ஸ்ரீகீதாச்சாரியன் என்ற பட்டமும் பெற்றான்.

Koviloor Digital Library

ஸ்ரீ சக்குபாயின் திடபக்தி

எம் அன்பின் குழந்தாய் சாந்தசக்கு!

உனக்கு மங்களம் உண்டாகுக! உன் ஸ்ரீ சத்குருநாதனாகிய ஸ்ரீகமலக்கண்ணன் கிருபையினால் சகல ஞான வைராக்கியங்களும் சித்திப்பதாக! உன் ஸ்ரீ சத்குரு பக்தியால் அஞ்ஞானம் அகன்று மெய்ஞானம் பிரகாசிப்பதாக! ஸ்ரீ சத்குரு பாத கமலங்களை பற்றிய காரணத்தினால் காரிய வஸ்துக்களான பாதக மலங்கள் பஸ்பமாவதாக! ஸ்ரீபரமாத்மா திருவடியை உன் ஹிருதயத்தில் தரித்துக் கொண்டதாலும், உன் சகஸ்ராரத்தில் திருவடித்தூளியை தரித்து கொண்டதாலும், உடல் உபாதைகளும், உணர்வுகளும் அகன்று, சுய அனுபவ ஞான உணர்வுகள் பெருகுவதாக! உன் சுய அனுபூதிக்காகவே இங்கு ஸ்ரீசக்குபாய் சரித்திரத்தை சுருக்கமாகத் தருகிறோம். அது உன் வரலாறே. அதை ஸ்ரீசத்குரு சத்சிஷ்யை என்ற உரையாடலாக தருகிறோம். அவ்விதமே ஸ்ரீபரமாத்மாவிடம் உறவு வைத்து, கரைந்து மயமாவாயாக! இனி கதையை கேளாய்!

பண்டரிபுரம் அருகே ஓர் கிராமத்தில், கங்காதர ராவ் என்பவரும், கமலாபாய் என்னும் அம்மையாரும் ஸ்ரீதெய்வ கிருபையால் மணம் முடித்து தம்பதிகளாக வாழ்ந்து வந்தார்கள். இல்லறத்தை நல்லறமாக கொண்ட தம்பதிகளுக்கு வெகு காலம் புத்திர பேறு இல்லாமல் இருந்து, ஸ்ரீபரமாத்மா கிருபையினால் ஓர் பெண் மகவு பிறந்தது. அதற்கு சக்குபாய் என நாமகரணம் இட்டு அன்புடன் வளர்த்து வந்தனர். சக்குபாய் 5 வயது சிறுமியாக இருந்த போது ஒரு சமயம் தன் வயது குழந்தைகளுடன் தெருவில் மணல் வீடு கட்டி விளையாடிக் கொண்டிருந்தாள். ஸ்ரீபாண்டுரங்கன் இந்த குழந்தையை கடைத்தேற்றும் பொருட்டு, ஓர் விருத்தாப்ய பக்தன் (வயோதிக) வடிவெடுத்து, ஒரு கையில் சிப்ளாவும், ஒரு கையில் தம்புராவும் தாங்கிய வண்ணம், தன் நாமாவை தானே புகழ்ந்த வண்ணம் பாடி ஆடிக் கொண்டு, சக்கு விளையாடிக் கொண்டிருந்த வீதி வழியே வந்து கொண்டிருந்தார். ஸ்ரீபக்தர்

Koviloor Digital Library

திருவடி பட்டு, சக்கு கட்டியிருந்த மணல் வீடு கலைந்தது. சக்குவிற்கு ஆத்திரம் வந்தது. கோபத்துடன் ஸ்ரீபகவான் கரத்தைப் பற்றினாள்.

சக்கு: ஐயா பெரியவரே! இது என்ன அக்கிரமம்? என் வீட்டை குலைத்து விட்டீரே? கொஞ்சம் கூட புத்தி இல்லாமல் இப்படி வீட்டை கலைக்கலாமா? பிறர் காரியங்களில் தலையிட்டு வீண் சண்டை இழுப்பதில் சமர்த்தர் போலும்? என் வீட்டிற்கு வகை சொல்லி விட்டு போங்கள்.

ஸ்ரீபகவான்: குழந்தாய்! பகவான் மீது ஸ்மரணையாக இருப்பதால் உலக பொருள்கள் என்ன ஆகின்றன, என தோற்றுவதில்லை. ஆனந்தம் மேலிட்டு, நர்த்தனம் செய்த வண்ணமாக நடந்ததால், உன் மண்வீடு கலைந்திருக்கலாம். அது என் குற்றம் இல்லை அம்மா.

சக்கு: ஐயா நன்றாக இருக்கிறது உங்கள் கதை! இவர் ஆடிக் கொண்டே போவாராம், வீடு கலைந்துவிடுவாம். அது உம் குற்றம் இல்லையோ? ஒழுங்காக வீட்டை கட்டிக் கொடுத்து விட்டு மறு காரியம் பாருங்கள்.

ஸ்ரீபகவான்: உன் வீடு கட்டும் நேரம் வியர்த்தமாகி விடும். ஸ்ரீபகவான் நாமஸ்மரணை விட்டு போகும். என் வழியில் என்னை விட்டு விடு. நீ சமத்துப்பிள்ளை அல்லவா?

சக்கு: நான் சமத்துப் பிள்ளையா? இல்லையா? என்பதை பிறகு அறிவீர். இப்பொழுது இதற்கு ஏதேனும் வகை செய்யாமல் உம்மை விடுவதில்லை.

ஸ்ரீபகவான்: இது என்ன வல்லடி வழக்கமாக இருக்கிறது? நீ பொதுவான இடத்தில் வீடு கட்டினால் அது அழியாமல் என்ன செய்யும்? உனக்கு சொந்தமான இடத்தில் கட்டியிருந்தால், நீ என்னைக் கேட்க வேண்டியது நியாயமே. வீதியில் வீடு கட்டி விளையாடினால் இதற்கு யார் பொறுப்பு ஏற்க முடியும்?

Koviloor Digital Library

சக்கு: ஐயா! உம் வார்த்தை சரி இல்லை, இது பொது இடமாக இருப்பதால், நான் படுத்துக் கொண்டிருந்தால் என்னை மிதித்து விட்டு போனாலும், அது குற்றமில்லை என்பீரா?

ஸ்ரீபகவான்: இது என்ன? நீ குதர்க்கம் உள்ள குழந்தையாக இருக்கிறாயே? வா, உன் வீட்டிற்கு போகலாம். உன் தாய், தந்தையரிடம் நியாயம் கேட்கலாம். அவர்கள் சொன்னால் ஒப்புக் கொள்கிறேன்.

சக்கு: ஐயோ! மக்கு! தாங்கள் புத்திசாலி என்றல்லவா, நினைத்தேன். ஆனால் நிலைமை, அதற்கு மாறாக இருக்கிறதே. கொஞ்சம் கூட உமக்கு புத்தியே இல்லை. ஸ்ரீகண்ணனின் கதை தெரியுமா உங்களுக்கு? நான் என் தந்தை சொல்லக் கேட்டிருக்கிறேன். அதாவது கோகுலத்தில் ஸ்ரீகண்ணன் செய்யும் குறும்புத்தனத்தை யெல்லாம், கோபிகைகள் ஸ்ரீகண்ணனின் தாய் யசோதையிடம் சொல்லுவார்களாம்.

ஆனால் யசோதை தம் குழந்தை மீதுள்ள பிரியத்தால், ஸ்ரீகண்ணனின் குற்றங்களை மறந்து, கோபிகைகளின் மீது பழியைச் சுமத்துவாளாம். நீர் பக்தர் என பேர் பெற்று என்ன செய்வது? இதைக் கூட தெரியாமல் என் பெற்றோரிடம் நியாயம் கேட்போம் என்கிறீரே! கொஞ்சமும் விவஸ்தை இல்லாதவராக இருக்கிறீரே. சரி போனால் போகட்டும்.

என் வீட்டை அழித்ததற்கு பரிகாரமாக உம் கையில் உள்ள தம்பூராவையும், சிப்ளாக் கட்டையையும் கொடுத்து விட்டு போங்கள் அது போதும்.

ஸ்ரீபகவான்: (சக்குவின் வார்த்தையை கேட்டு ஆனந்தம் கொண்டு) ஏனம்மா? நீ என்ன நினைத்துக் கொண்டு இந்த வார்த்தை சொன்னாய்? இது எம் மூதாதையர் சொத்து ஆகும். இந்த உலகையே ஈடாக வைத்தாலும் இதற்கு நிகர் ஆகாது.

சக்கு: ஓ ஸ்வாமி! அப்படி என்ன பெரிய வஸ்து? இது என் வீட்டிற்கு இணையாகுமா? எது எப்படி ஆனாலும் சரி; ஒன்று

Koviloor Digital Library
என் வீட்டை கட்டிக் கொடும் அல்லது இவை இரண்டையும் கொடுத்து விட்டு போம். இரண்டில் ஒன்று இப்பொழுது நடந்தே ஆகணும்.

ஸ்ரீபகவான்: குழந்தாய்! நீ நல்ல பெண்ணாகவும் இருக்கிறாய். அதே நேரத்தில் முரட்டுப் பெண்ணாகவும் இருக்கிறாய், சரி உன் இஷ்டப்படியே, இந்தா தம்பூராவும், சிப்ளாவும் திருப்தி தானே?

சக்கு: ஐயா பெரியவரே! இதை இப்படியே கொடுத்து விட்டுப் போனால் நான் இதை வைத்து என்ன செய்ய வேண்டும் என சொல்ல வேண்டாமா?

ஸ்ரீபகவான்: எம் அருள்செல்வியே! இதற்கு நாள் தோறும் பக்தியுடன் பூஜை செய்வாயாக. இவை பக்தி ரசம் பொருந்திய கீதங்கள் பாடுவதற்கும், சுருதி கூட்டுவதற்கும், தாளம் போடுவதற்கும் உபயோகப்படுத்தும் கருவிகளாகும்.

சக்கு: தந்தையே! நானும் தாங்களைப் போல் பக்தி செய்ய விரும்புகிறேன். அதன் விதத்தை எனக்கு சொல்லி அருள வேண்டும். தாங்கள் சொல்வதில் அணுத்தவற மாட்டேன்.

இதை சொல்லும் போது சக்குவின் கண்களில் கண்ணீர் பனித்து நின்றது. இதை கவனித்த ஸ்ரீபகவான் தாம் எண்ணிய காரியம் பலித்ததென எண்ணி, சந்தோஷமுடன் சக்குவை தம் மடி மீது இருத்திக் கொண்டு, அவள் தலையை பற்றிய வண்ணம்,

ஸ்ரீபகவான்: குழந்தாய்! யாம் சொல்வது அதிக ரகசியமாகும். எவரிடமும் சொல்லக் கூடாது. இதை உன் உயிரினும் மேலாக வைத்துக் காக்க வேண்டும் எனச்சொல்லி, தம் பவள வாயை சக்குவின் காது அருகில் கொண்டு சென்று ஸ்ரீ அஷ்டாட்சர மந்திரத்தை உபதேசித்தார்.

சக்கு: ஸ்வாமி! ஏதோ ரகசியம் என்றும், பெரிய பொருள் என்றும்

Koviloor Digital Library
சொன்ன இந்த வாசகம் கொண்டவர்கள் இந்த ஊரில் அநேகம் பேர் இருக்கிறார்களே, இது அவ்வளவு பெரியதாக தோன்றவில்லையே. இதன் விளக்கத்தை சற்று விபரமாக சொல்லுங்கள்.

ஸ்ரீபகவான்: எம் மழலையே! இதன் பொருளை விளக்கினால் சிறிய பிராயத்தவளாகிய உன்னால் எவ்வாறு அறிந்து கொள்ள முடியும்? இருந்தாலும் நீ கேட்டதால், உனக்கு புரியும்படி கூறுகிறேன். கவனமாகக் கேள். குழந்தே! நம்மையும் நம் கண் முன் தோற்றும் எல்லா பொருட்களையும் அதாவது பூமி, வானம், காற்று, அக்கினி, ஜலம், சூரிய சந்திர நட்சத்திர கூட்டங்கள் இவை அனைத்தையும் உண்டாக்கியவன் ஒருவன் இருக்கிறான். அவைகளுக்கு யாதொரு பங்கம் வராது குறித்த காலம் வரை வைத்திருந்து, பாதுகாத்து, புதுமையாக உண்டாக்குவதற்கு அவைகளை அழித்து விடுகிறான். அவனுடைய பெயர் தான் அது. அந்த பெயருக்கு உரிய அர்த்தத்தைச் சொல்கிறேன், கவனமாகக் கேள்.

எல்லாவற்றையும் அழிக்கும்போது, இந்த உலகம் எல்லாம் ஜலமாகிவிடும். அதில் சயனித்து, அவன் யோக நித்திரை செய்வான். அப்பொழுது சகல ஆத்மாக்களும் அவன் வயிற்றில் பத்திரமாக இருக்கும். அதனால்தான் அவனுக்கு நாராயணன் என்ற பெயர் வந்தது. தன்னை துதிக்கின்ற பக்தர்கள் மனதில் கோயில் கொள்ளும் ஸ்ரீமந் நாராயணனை நீயும் சிரத்தையுடன் துதித்தால் உன் இதயத்திலும் அமர்வான். அப்படி அமர்வதால் அவனுக்கு அந்த பெயர் கிடைத்தது.

சக்கு: ஹே ஸ்வாமி! அர்த்தம் என்னவோ ஒருவாறு தெரிந்து கொண்டேன். அவனைத் துதிப்பதால் என்ன பிரயோஜனம்? அதையும் கிருபை செய்து கூறல் வேண்டும். (இதை சொல்லும் போது சக்குவின் நா தழுதழுத்தது).

ஸ்ரீபகவான்: சக்கு! இதை எல்லாம் பின்னர் விரிவாக அறிந்து

Koviloor Digital Library

கொள்வாய். இப்பொழுது இதை மட்டும் அறிந்து கொள். நாம் பிறந்தபோதே ஓர் சமயம் இறக்க வேண்டும். இறந்தாலும் நமது ஜன்மா தொலைவதில்லை. எத்தனையோ முறை பிறக்கிறோம். இறக்கிறோம். இது மிகுந்த தொல்லையாக இருக்கிறதல்லவா? ஒரு சமயம் சுகத்துடன் வாழ்தல், ஒரு சமயம் பிணியுடன் வாழ்தல், ஒரு சமயம் வறுமையுடன் வாழ்தல், ஒரு சமயம் அறிவு இல்லாத ஜந்துவாக பிறத்தல் இதனால் நாம் என்ன விரும்புகிறோம்? அழியாத சுகத்தையன்றோ?அது இந்த உலகில் இந்த ஜன்மாவில் கிடையாது. அது ஸ்ரீபகவானுடைய பதத்தில்தான் கிடைக்கும். இந்த ஜன்மாவில் அவன் பதத்தை அடைய அவன் நாமாவை துதிக்க வேண்டும் தெரிந்ததா?

சக்கு: ஸ்வாமி! நன்றாகத் தெரிந்து கொண்டேன்! நீங்கள் சொன்னதை மெய்ப்பித்து காண்பிப்பதற்கு ஏதேனும் அத்தாட்சி உண்டா? (என கெஞ்சினாள், கண் அருவி பெருக்கெடுத்தது)

ஸ்ரீபகவான்: (இதைக் கண்ணுற்ற பகவான் கருணையின் பார்வையில்) குழந்தாய்! இந்த நாமத்தை பூஜித்து உயர்ந்தவர் கணக்கில் அடங்கார். உன்னைப் போல வயதில் சிறியவனான துருவன் இகத்தில் கிடைக்கும் ராஜ பதவியினும் மேம்பட்டதான ஸ்ரீ பகவத் பதத்தை வேண்டி 5 வயதிலேயே இந்த நாமத்தை பூஜித்து கடும் தவம் இருந்து அதை பெற்றுக் கொண்டான்.

முதலை வாயில் அகப்பட்ட ஓர் யானையானது மீள முடியாத வேதனை பட்டுக்கொண்டிருந்த நிலையில் ஆதிமூலமே! ஆதிகாரணா! நாராயணா! என கூவி அழைத்தபோது பரிந்தோடி வந்து முதலையை முடித்து, யானையை விடுதலை செய்து காப்பாற்றி அருளினார்.

துச்சாதனன் திரௌபதியை சபையில் அவள் கணவர்கள் முன் துயில் உரித்த போது ஏழைபங்காளா! பதிதபாவனா! ஹே இருதயவாசி! எனக் கதறி அழுது உருகும் போது யாவரும் வியக்கும் வண்ணம் அந்தரத்தில் நின்று, அளவற்ற துகிலை வளர்த்து அவள் மானத்தை காப்பாற்றினான்.

Koviloor Digital Library

தானே முழுமுதற் கடவுளென்றும், தன் நாமாவையே சொல்ல வேண்டுமென்றும், இரண்யன் தன் புதல்வன் பிரகலாதனை பயமுறுத்தினான். அவன் வாக்குக்கு கீழ்படிய மறுத்த பிரகலாதன், ஸ்ரீமந் நாராயண நாமமே இகபர இரண்டிலும் துணையாய் நிற்பது என சொல்ல, அவன் தந்தை பிரகலாதனை பல அவஸ்தைக்குள்ளாக்க, அவை அனைத்தையும் ஸ்ரீபகவான் தன் கிருபையால் நீக்க, முடிவில் அந்த நாராயணன் எங்குள்ளான்? என மிரட்ட அதற்கு பிரகலாதன், ஸ்ரீபகவான் தூணிலும், துரும்பிலும் உள்ளான் என நவில, இந்த தூணில் உள்ளானா? என கேட்டு அந்த தூணை அறைய, தன் பக்தன் வாக்கை காப்பாற்றும் நிமித்தம், அந்த தூணைப் பிளந்து ஸ்ரீநரசிம்மமாகத் தோன்றி இரண்யனை முடித்து, பிரகலாதனைக் காப்பாற்றினான்.

இவை எல்லாம் முன்னர் நடந்தது. இந்த கலியுகத்திலும் ஜெயதேவர், நாமதேவர், கபீர் போன்றவர்கள் இந்த நாம பஜனையினாலேயே ஞானம் அடைந்தனர். அவர்களைப் போன்று நீயும் பக்தி பண்ணக் கடவாய் என ஆசி கூறினார்.

சக்கு: எனது ஜன்மம் ஈடேற்ற வந்த குருபெருமானே! எனது குற்றங்களையெல்லாம் ஒழிக்க வல்ல பெரிய மந்திரத்தை உபதேசித்த பெருந்தகையோனே! கருணாமூர்த்தி! உமது கருணைக்கு எதுவும் ஈடாகாது. என் ஐயனே! நான் சிறியவளாகையால் பக்தி செய்யும் போது அதைக் கெடுப்பதற்கு பல இடைஞ்சல்கள் வருமே. அவற்றோடு போராடுவதற்கு இச்சிறியவளுக்கு ஆற்றல் கிடையாதே. என் செய்வேன் (கேவி கேவி அழுகிறாள்).மேலும் அடிக்கடி தோன்றும் என் சந்தேகங்களை தீர்க்க வல்லார் யார்? ஆகையால் என் குருபெருமானே! தேவரீர் உம் உள்ளம் உவந்து எனது இல்லத்தில் எழுந்தருள வேண்டும்.

அடியாள் உமக்குச் சேவை செய்வதே பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன். அதைவிட சிறந்த பக்தி இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. தினமும் உம் தரிசனத்தில் எனக்கு

Koviloor Digital Library
புதிய சக்தி உண்டாகும். எனது ஐயப்பாடுகள் ஒழியும். அதனால் எனது ஜன்மம் சாபல்யமாகும். கருணை செய்யும் என் ஐயனே!

ஸ்ரீபகவான்: எனதருமைக் குமாரி! நீ யாதொன்றும் சலனம் அடையாதே. நான் கூறிய மொழியை நன்றாக ஞாபகத்தில் வைத்துக் கொள். ஸ்ரீமந் நாராயணனே உனக்குத் துணை. திட நம்பிக்கையுடன் பக்தி செய்வாயாக.

காமம், வெகுளி, மயக்கம் என்னும் விரோதிகளும், ஆணவம், கன்மம், மாயை என்னும் குற்றங்களும் மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை (ஆடவர் பெண்டிர் விஷய ஆசை) போன்ற சர்ப்பங்களும் உன் பக்தியை கெடுக்க முயலும். அவைகளுக்கு ஆளாகாமல், உள்ளக் கசிவுடன் பக்தி செய்வாயாக! எந்த வினாடியும் பக்தர்களிடம் மரியாதையாக நடக்க வேண்டும். அவர்களுக்கு அன்னபானாதிகள் தந்து சேவிக்க வேண்டும். அவர்கள் ஆசியினால் தான் உன் பக்தி மேலும் மேலும் வளரும்.

பக்தர்களிடம் அபசாரமாகவோ, அனாச்சாரமாகவோ நடந்து ஸ்ரீபாகவத அபசாரத்தை தேடிக் கொள்ளக் கூடாது. உனக்கு பிரத்யேக சங்கடங்களும் இருக்கின்றன. நீ பெண் ஜன்மா எடுத்திருக்கிறாய். பக்தி செய்ய பெண்களுக்கு உரிமை இல்லை என்பதையும் ஒப்புக் கொள்கிறேன்.

ஆனால் உன் போன்று தீவிர பக்தி உள்ளவர்களுக்கு அந்த பேதம் கிடையாது. நீ இப்பொழுது உள்ள நிலையில் கல்யாணம் ஆகும் வரை உன் பெற்றோருக்கும், பின்னர் உன் கணவனுக்கும், பிள்ளைகளுக்கும் நீ அடங்கி நடக்க வேண்டும். அவர்களாலும் உன் பக்திக்கு விக்கினம் ஏற்படலாம். இவைகளை எல்லாம் பொருட்படுத்தாது ஸ்ரீமந் நாராயணன் மீது தீவிரபக்தி செலுத்துவாயாக! என போதித்தார்.

சக்கு: ஹே கிருபா நிதி! ஹே தயாநிதி! ஹே தயாசாகரா! ஹே குருதேவா! உண்மையையும் போதித்து, அதை கெடுக்கும் தீமையையும் முறையோடு சொல்லி, அதை நிவர்த்திக்கும்

Koviloor Digital Library

மார்க்கத்தையும் போதிக்கும் உம் கருணையை என்னவென்று சொல்வது?

ஹே கருணாசாகரா! சத்குருவார்யா! அடியாள் திரத்தில் கிருபை செய்வீராக! இந்த அபலையை விட்டு விடாதேயும். உம்மையன்றி எனக்கு வேறு கதிமோட்சம் இல்லை. எப்படியாவது என்னுடன் இருந்து எனது சேவையை ஏற்று என்னைக் கடைத்தேற்ற வேண்டும் என் ஐயனே! அடியாளை உதாசீனம் செய்வீராகில் என் உயிர் தரியாது எனக்கெஞ்சி கதறி அழுகிறாள்.

ஸ்ரீபகவான்: குழந்தாய் சக்கு! எம் அருங்குமாரி! எம் மழலையே! அஞ்சற்க! வருந்தற்க! யாம் ஓர் பக்தன். உனது மொழிகள் எம்மை அப்படியே உருக்கி விட்டது. பக்தனுக்கு ஓர் இடம் சாஸ்வதம் இல்லை. பல பக்குவ ஆன்மாக்களை திருத்துவதற்காக அவனை ஸ்ரீ பகவான் மூலை முடுக்குகளில் எல்லாம் அனுப்பி விடுகிறான். அந்த பக்தனும் ஓர் கருவியாக இயங்குகிறான். அந்நிலையே எம்நிலையும். மேலும் எண்ணற்ற பக்தர்கள் எம்மையே நம்பி அதோ வந்து கொண்டிருக்கிறார்கள். உன் போன்ற பக்தர்களுடன் தான் யாமும் இருக்கிறோம். உன்னையும் மறக்க மாட்டோம் ; அடியேனுக்கு விடை தருவாயாக. கூடிய சீக்கிரம் உன்னை வந்து சந்திக்கிறோம் என பணிந்து ஸ்ரீ திருவடியில் கவனம் வைத்து விடை கேட்கிறான் ஸ்ரீபரமாத்மா! ஸ்ரீகுருதேவர் பிரிந்து போய் விடுவார் என சக்கு உணர்கிறாள். மூர்ச்சையாக அவன் மடியில் விழுந்து விடுகிறாள். அவனும் கபடமாக சிரித்த வண்ணம் சக்குவிற்கு மூர்ச்சை தெளிவித்தான்; அவளும் கண் திறந்து ஸ்ரீ குருதேவரை காண்கிறாள்.

சக்கு: ஹே ப்ரபோ! சீக்கிரம் என்றால் அர்த்தம் புரியவில்லையே ஸ்வாமி? (என கசிந்து உருகிய நிலையில் கேட்கிறாள்)

ஸ்ரீபகவான்: குழந்தாய்! ஐந்து ஆண்டுகளில் வந்து உன்னை சந்திக்கிறேன்.

சக்கு: ஐந்து ஆண்டுகளா? (மூர்ச்சை ஆனாள்) (அவன் மூர்ச்சை தெளிவித்தான்)

Koviloor Digital Library

ஸ்ரீபகவான்: ஐந்து மாதங்களில் வருகிறேன்.

சக்கு: ஐயனே! இந்த ஜீவன் நிலைக்காது.

ஸ்ரீபகவான்: ஐந்து வாரத்தில் வருகிறேன்.

சக்கு: ஊகூம்... ! (ஏக்கம்)

ஸ்ரீபகவான்: ஐந்து தினத்தில் வருகிறேன். சக்குவும் ஸ்ரீ குருதேவரின் வதனத்தை நோக்குகிறாள். அந்த கபட நாடகனின் கண்களிலும் கண்ணீர் பனித்து நிற்கிறதாம். அதைக் கண்ட சக்கு தம் பிஞ்சுக் கரத்தால் அவன் கண்ணீரை துடைக்கிறாள். அந்த மாயவனான ஸ்ரீகுருநாதரும் சக்குவின் கண்களில் ஓடும் கண்ணீரைத் துடைத்தானாம். அவன் அவள் கண்ணீரை துடைத்தானா? களங்கத்தை துடைத்தானா? அல்லது திரையிட்டு மூடினானா? புரியவில்லை. அது ரகசியம். அந்த நிலையில் சக்குவின் கரங்களில் தம்பூராவையும், சிப்ளாவையும் தந்துவிட்டு மறைந்தான்.

குழந்தாய் சாந்த சக்கு!

அந்த சக்கு கண் திறந்து பார்க்கிறாள், ஸ்ரீகுருநாதனை காணவில்லை. அவள் மனம் என்ன பாடுபடும்? ஸ்ரீகுருநாதனாக வந்தவன் ஸ்ரீமந் நாராயணனே என உணர்கிறாள். கதறி துடிக்கிறாள். ஹே பகவான்! ஹே கண்ணா! ஹே தயாநிதி! இது என்ன நாடகம்? உன் நாடகத்தை உணராத பாபி ஆனேனே? உன் மெய் நிலையை கண்டு கொள்ளாமல் என் மனம் போனபடி உம்மை வைதேனே, பெரும் பாபம் பூண்டேனே. அடியாள் தெரியாமல் வீண்ட வார்த்தைகளை அர்ச்சனா மொழியாக ஏற்றுக் கொள்ளும். ஹே பக்த வத்ஸலா! உம் விஷயம் அறிந்திருந்தால் தாங்களை நான் விட்டிருப்பேனா? அடியாள் அகத்தில் தாங்கள் எழுந்தருள என்ன தடை? என் வசம் என்ன குற்றம் கண்டீர்? ஏன் இப்படி நடுத்தெருவில் தவிக்க விட்டு ஓடிவிட்டீரே? நீர் என் அருகில் வீற்றிருக்க அடியாள் பாக்கியம் செய்யவில்லை

Koviloor Digital Library
போலும். உம்மை விட்டுப் பிரிந்திருக்க முடியவில்லையே. ஐந்து தினங்களும் ஒவ்வொரு யுகமாக அன்றோ தோன்றும், என் ஐயனே! உம் வரவை வழி மேல்விழி வைத்துக் காத்து கொண்டிருப்பேன் என உருகிய வண்ணம் வீடு சென்றாள்.

குழந்தாய் சாந்தா!

ஐந்து தினம் என்று சொன்னவன் 5 தினமும், 5 வாரமும், 5 மாதமும், 5 வருஷமும் போய் 21 வருடங்கள் கழித்து வருகிறான். இதுதான் தெய்வநியதி போலும். **இங்கு காலங்கள் கணக்கில்லை. பக்குவமே கணக்காகும். அதாவது வினையையும், மலத்தையும் கணக்கிட்டு வருவது அந்த ஸ்ரீபக்குவ ஆன்மாவின் உருக்கமே! நீ உருகினால் சகலமும் உருகி கரைந்து விடும் இது உறுதி!**

ஹே சாந்தா! சக்குவிற்கு திருமணமாகி விடுகிறது. அவளும் அவனை நினைக்காத நேரம் இல்லை. மாமி, நாத்தி, கணவன் ஆகியோருடைய தொல்லைகளை பொறுமையில் பூமாதேவி என பொறுத்து வருகிறாள். எதிர்வார்த்தை பேசி அறியாள். இதில் அவள் வார்த்தை மனதில் அடங்கி விடுகிறது. நடப்பவை அனைத்தும் ஸ்ரீநாராயணன் செயல் என ஒன்றி தம்மை கரைத்து விடுகிறாள். அதுவே அவளுக்கு ஔஷதமாகி பிராரப்த வினைகளை தாங்கும் வல்லமை பெறுகிறாள். மாமி, நாத்திகளுடைய கடுஞ்சொல்லும், கடினமான வேலையும் பிராரப்தம் என கருதி அவனை துதித்துக் கொண்டே செய்தாள்; அந்த கடினம் அவளைப் பாதிக்கவில்லை.

சக்குவின் வாசகமாவது: ஹே நாராயணா ! நீ எப்பொழுதும் பக்தர்கள் மனதில் குடி இருப்பவன். நீயே என் குருவாக வந்து எனக்கு அறிவுறுத்தி இருக்கிறாய். நானும் அவ்வார்த்தைகளை உறுதியாக நம்பினேன். இப்பொழுது அதில் சிறிது சந்தேகம் தோன்றுகிறது. நீ என் மனதில் குடியிருப்பது உண்மையானால் நான் விரும்புவதையும் அறிந்திருப்பாய். எண்ணில்லாத

Koviloor Digital Library
பிறவிக்கு அஸ்திவாரமான இந்த சம்ஸாரத்தை நான் விரும்பவில்லை உன்னை அரை நிமிஷமும் மறவாமல் இருக்க விரும்புகிறேன். என்னை பலவந்தமாக இந்த சம்ஸார சேற்றில் தள்ளி விட்டாய். அதில் நான் சிக்குண்டு அவஸ்தைப்படுவதையும் பார்த்துக் கொண்டிருக்கிறாயே. இது நியாயமா? இது தர்மமா? உன்னையே துதி செய்யும் என்னை இப்படி குடும்ப பொறுப்பில் நிர்பந்திக்கிறார்களே. இது உன் சூழ்ச்சி இல்லாமல் நடக்குமா? அன்னம் கேட்டால் மண் அள்ளிக் கொடுக்கிறாய்.

இதுதான் உன் கருணையா? நீயோ கருணைக் கடல் என்று போதித்தாய். துருவன், பிரகலாதன், திரௌபதி, கஜேந்திரன் செய்த பக்தியையும் போதித்தாய். அதைத் தானே நானும் செய்கிறேன். தவறுதல் இருந்தால் சொல்லித் தரலாகாதா? அவர்களிடம் கரைந்த இதயம் என்பால் கல்லாக இருப்பதன் மார்க்கம் தான் என்ன? இன்னும் என் இதயம் பக்குவப்படவில்லையோ?

உனது கிருபையை சம்பாதிப்பதற்கு நான் என்னதான் செய்யவேண்டும்? அதையாவது சற்று தெளிவாக கூறக்கூடாதா? ஸ்ரீ சத்குருவாய் வந்தாயே. அன்று காட்டிய பரிவை இதற்குள் மறந்து விட்டாயே? இப்படி மறந்தால் நீ எப்படி பக்தர்களை ரக்ஷிப்பாய்? எனது மனோபீஷ்டம் நிறைவேறாது போகுமோ? என அச்சப்படுகிறேன். ஹே தயாநிதியே! அடியாளை ஆதரித்து உமது கிருபைக்கும் பாத்திரமாக்கவேண்டும் என பிரார்த்தித்துக் கொண்டே தூலத்தின் வினைகளை செய்து முடிப்பாள்.

ஓர் நாள் சக்குவிற்கு பேய் பிடித்திருக்கிறதென சொல்லி அனேக வைத்தியமும், மாந்திரீகமும் பார்த்து ஒன்றும் பலனளிக்காமல் போக அவளை ஓர் அறையில் வைத்து பூட்டி விட்டனர் இந்த அறியாத மாந்தர். பூட்டிய அறையினுள் இருந்து கசிந்து உருகினாள் சக்கு. அன்றுதான் அவள் குரல் அவன் திருச்செவியில் விழுந்தது போலும். முன்பு போல பக்தனாக வடிவெடுத்து சக்குவிற்கு

Koviloor Digital Library

வைத்தியம் பார்ப்பதாக சொல்லி அவர்களின் அனுமதி பெற்று குளக்கரைக்கு அழைத்துச் சென்றான். அங்கு ஸ்ரீகுருதேவரின் திருவடிகளில் வீழ்ந்து, அழுது கதறி ஓ ஸ்வாமி! ஹே குருநாதா! அடியாள் அறியாதவளாக இருந்த போது எனக்கு தரிசனம் தந்து உமது அஷ்டாட்சர மந்திரத்தையும் உபதேசித்தீர். எனக்கு ஏற்பட்ட சந்தேகத்தையும் நிவர்த்தித்தீர்!

பக்தி மார்க்கத்தையும் காட்டினீர். திடீர் என தங்களை பிரிய நேரிட்டது. எனக்கு சமாதானம் கூறி 5 தினங்களில் வருகிறேன் என சொல்லி மறைந்தீர். உமது கணக்கில் இன்றுதான் ஐந்து தினங்கள் முடிந்தது போலும். ஸ்வாமி! உலக ஜீவகோடிகள் அனைத்தையும் சிருஷ்டித்தும், முறைப்படி ரக்ஷித்தும், அவைகள் ஒழுங்காக நடைபெறுகின்றனவா என கவனிக்கும் தாங்களே இவ்விதம் சொன்னபடி நடக்காவிட்டால் மற்றவர் நிலை என்ன ஆகும்? வேலியே பயிரை மேய்ந்த கதையாக இருக்கிறதே தங்கள் செய்கை.

திக்கற்ற இந்த அபலையிடம் தாங்கள் நடந்து கொண்டது கொஞ்சமும் நியாயம் இல்லை. நீர் வராமல் இருந்து எனக்கு அனாவசியமாக அளவற்ற துக்கத்தை கொடுத்தீர். இதற்கு என்ன சமாதானம் சொல்லப் போகிறீர்? ஹே குருதேவா! அன்ன ஆகார நித்திரையின்றி நான் பட்ட அவஸ்தை நீர் அறியாததா? என்றாவது உம்மை தரிசனம் செய்யமுடியும் என்ற உறுதியான நம்பிக்கையில் தான் இதுவரை உயிரோடு இருக்கிறேன்.

ஸ்ரீபகவான்: பக்தியில் சிறந்தவளே! குழந்தாய் சக்கு! உன்னைப் போல குருதேவரிடம் விசுவாசம் உடையவர்கள் மிகச் சிலரே. உன் மனஉறுதியைக் கண்டு பூரிக்கிறோம். மோட்ச நிலையை அடைவதற்கு பிரம்மச்சரியம், கிரஹஸ்தம், சந்நியாசம், வானப்பிரஸ்தம் என நான்கு நிலைகள் உண்டு. பிரம்மச்சரிய ஆஸ்ரமத்தில் ஸ்ரீகுருவை அடைந்து உபதேசம் பெற வேண்டும். கிரஹஸ்த ஆஸ்ரமத்தில் விவாகம் செய்து சத்திய தர்மத்தோடு சதிபதிகள் ஒத்த மனது உடையவர்களாய் வாழவேண்டும்.

Koviloor Digital Library

சந்நியாச ஆஸ்ரமத்தில் எஞ்சி இருக்கும் உலகப் பற்றையும் விட்டொழிக்க வேண்டும். வானப்பிரஸ்த ஆஸ்ரமத்தில் நாட்டை விட்டுக் காட்டை அடைந்து காய்கனிகளைப் புசித்து தவம் செய்ய வேண்டும்.

நீயோ பிரம்மச்சரிய ஆஸ்ரமத்தில் எம்மிடம் உபதேசம் பெற்று சிறப்பாக கழித்தாய். உடனே மூன்றாவது படியாகிய சந்நியாச ஆஸ்ரமத்தை அடைய முயற்சிக்கிறாய். ஸ்ரீ சுகர் போன்ற மாமுனிவர்களே அவ்வாறு செய்யமுடியும். மோட்சம் அடைவதற்கு உலகப்பற்று நீங்க வேண்டும் என்பது உண்மையே. **உலகப் பற்று திடீர் என நீங்கி விடாது. அதில் கொஞ்ச நாள் ஈடுபட்டு அதன் தன்மையை உணர்ந்து அவையெல்லாம் வெறும் மாயையே! என மெய்யுணர்வால் தெளிந்து அனுபவத்தினால் வருவதே உண்மையான துறவு ஆகும்.** ஆனால் உன் துறவு அப்படியல்ல. இது மின்னலுக்கு சமம், தோன்றி மறையக் கூடியதாகும். இது நிலைக்காது. எவ்வளவு வேகமாக தோன்றுகிறதோ அவ்வளவு வேகமாக மறைந்துவிடும். ஆகையால் இந்த இல்லற வாழ்வில் ஈடுபட்டு சகல துக்கத்தையும் சமமாக அனுபவித்து வருவாயாக! எத்தனையோ மகரிஷிகள் இல்லறத்தில் இருந்தே மோட்சம் எய்தினர். ஆகவே நீயும் இன்னும் கொஞ்ச காலம் இந்த இல்லற சுகத்தை அனுபவிப்பாயாக! என சாதித்து மறைந்தருளினார்.

காலம் சென்றது, சக்குவிற்கு ஸ்ரீகுருநாதனை காணவில்லை என்ற ஏக்கமும் மேலும் இல்லற சுகமும் நரகமாக தோன்றியது. பக்தியின் வேட்கை அதிகமாகியது. ஓர் நாள் ஜலம் எடுக்க குளத்திற்கு சென்று கொண்டிருந்தாள். புலம்பிக் கொண்டே சென்றாள். எம் பெருமானே! பக்தர்கள் சகாயா! குடும்ப வாழ்வு மிகுந்த பற்றுடையதாக இருக்கிறது. அதன் மீது வெறுப்புற்ற என்னை ஏதேதோ சொல்லி மாயம் செய்து இந்த புதை சேற்றில் அமிழ்த்தி விட்டாயே. அதன் பலனை இப்பொழுது தீவிரமாக அனுபவிக்கிறேன்.

Koviloor Digital Library

உன்னுடைய சூதினை இப்பொழுது தான் அறிகிறேன். முக்தி அடைவதற்கு சிறந்த மார்க்கம் இல்லறம் என சொன்னாயே. அப்படி ஒன்றும் பிரமாதமாக இதில் காணவில்லையே? குடும்ப வாழ்வைப் போல பற்றை வளர்ப்பதுவும், ஜனன விருத்தி செய்வதுமான வஸ்து வேறொன்றும் இல்லை. உனக்கு பக்த ரட்சகன் என்ற பெயர் பொய்யா? எந்த விநாடியும் நான் உன்னை மறந்ததுண்டா? உன்னிடம் தான் எவ்வளவு வஞ்சம் உள்ளது?

நான் மட்டும் சர்வசதா உன்னை தியானிப்பது நீ மட்டும் என்னை உதாசீனம் செய்வதா? நான் முறையிடுவது உன் செவியில் விழவில்லையா? நீ தூரத்திலா இருக்கிறாய்? எங்கும் வியாபித்திருக்கிறாயே. எங்கும் உள்ளவனுக்கு எந்நிலை எப்படி தெரியாமல் போகும்? என் குல விளக்கே! என் இதய தெய்வமே! உனக்கு இன்னும் கிருபை உண்டாக வில்லையா? என அழுத வண்ணம் சென்றாள்.

அச்சமயம் ஓர் பஜனை கோஷ்டி அவ்வழியாக ஸ்ரீபண்டரிபுரம் சென்றது. அதில் கபீர்தாசர், ராமதாசர், நாமதேவர் முதலிய ஸ்ரீதாசர்கள் சென்று கொண்டிருந்தார்கள். நம் சக்குவும் அவர்கள் திருவடியில் வீழ்ந்து நமஸ்கரித்து, ஸ்வாமிகள்! சற்று பொறுக்கவும். அடியாள் வீடு சென்று அவரிடம் விடை பெற்று வருகிறேன் என சொல்லி வீட்டிற்கு ஓடினாள். தம் கணவனிடம் பணிந்து விடை கேட்டாள். அவனும் பழையபடி சக்குவிற்கு பிரம்மராட்சஷன் பிடித்து விட்டான் என எண்ணி அவளை இழுத்து சென்று ஓர் அறையில் தள்ளி ஓர் தூணோடு பிணைத்து கட்டி அதை தாளிட்டு விட்டு சென்று விட்டான்.

குழந்தாய் சாந்த சக்கு!

இந்நிலையில் ஓர் பெண்ணின் மனம் என்ன பாடுபடும் சற்று உணர்ந்து பார்? தெய்வம் இப்படியும் சோதிக்கும். இங்கு தான் வைராக்கியம் வேண்டும்.

Koviloor Digital Library

சக்கு: (ஸ்ரீபகவத் சேவைக்கு தடை ஏற்பட்டதால் மிகுந்த ஆயாசப்பட்டாள்) ஏ பக்தர்கள் சகாயா! அடியார்களின் நன்மையைக் கருதுபவனா நீ? மிகுந்த மோசக்காரன். என்னை அடிக்கடி சோதித்து என்ன பலனைக் கண்டாய்? மீண்டும் மீண்டும் என் பக்திக்கு இடையூறு செய்கிறாயே? இது உனக்கு நன்றாக இருக்கிறதா? நீயே ஸ்ரீகுருவாக வந்து உன் மந்திரத்தையும் உபதேசித்தாய். உன் அருளால்தானே உன் பக்தி என்னும் கனல் மூண்டது. அதை பெருகவிடாமல் அணைக்கப் பார்க்கிறாயே? இதுதான் உன் சகாயமா? இப்படித்தான் நீ பக்தர்களை ரட்சிப்பதா? உன் காரியம் அனைத்தும் விபரீதமானது. நல்ல நறுமண மலர் இருக்கும் போது துளசிக் கட்டையும், தாமரை கொட்டைகளிலுமான மாலைகளை அணிகிறாய்.

நீ பிச்சைக்காரன். வீடு, வாசல் இல்லாதவன். நல்ல மாளிகை இருந்தால் பரந்த வெளியிலே குளிரும் பாற்கடலை வாஸஸ்தலமாகக் கொள்வாயா? அழகிய மெத்தை இருந்தால் நாற்றமெடுக்கும் பாம்பை சயனமாக கொள்வாயா? நல்ல உணவு கிடைப்பதாக இருந்தால் சபரி கொடுத்த எச்சிலையும், விதுரன் தந்த புல் அரிசி கஞ்சியையும், பக்தர்கள் உச்சிஷ்டத்தையும் பிடுங்கித் தின்றும், அவைகளை பரமான்னமாகக் கொள்வாயா? உன்னை தகாத பிள்ளையாக கருதியதால் 14 ஆண்டுகள் காட்டுக்கு அடித்து விரட்டினர். போர்திறமை இருந்தால் தாவி ஓடும் வானரங்களை சைனியமாகக் கொள்வாயா?

நீ பக்காத் திருடனாகையால் குளிக்கும் பெண்களின் ஆடையை எடுத்து ஒளித்து வைத்தாய். உன் திருட்டுத் தனத்திற்காக உன் தாய் உன்னை பிடித்து உரலில் கட்டி வைத்தாள். இன்று உன்னை கட்டுவதற்கு ஆள் இல்லை. அதனால் யதேச்சையாக திரிகிறாய். உனக்கு உறவு, பந்தம் என்பதே கிடையாது. தாய்மாமனையும் கொன்று விட்டாய். உன் வாழ்வை அலசிப் பார்த்தால் அப்பப்பா! அத்தனையும்

Koviloor Digital Library

பாதகமான செயல்களே. இப்படி உள்ள நீ பக்தர்களின் துன்பங்களை எப்படி போக்க முடியும்? இவ்வாறு நிந்தாஸ்துதி செய்துவிட்டு பின் வருந்தினாள்.

அந்தோ! விபரீதம் செய்து விட்டேனே! கருணாகரனை, கருணைக்கடலை, பக்தர்கள் சகாயனை, பதித பாவனனை இவ்வாறு தூஷித்து பழியை சுமந்தேனே? பக்தர்களை தன் நிலையில் வைத்துப் பார்க்கும் பரமன் இந்த ஏழை அபலையை கைவிடுவானா? ஹே பரம்பொருளே! அடியாள் பிழையை பொறுத்தருளும். எனது நிந்தனையை துதியாக ஏற்றருளும். உனது தரிசனம் கிடைத்தால் உய்வேன். பண்டரியில் உன் சௌலப்பய தரிசனமும், ஸ்ரீஅடியார்கள் திருவடி தரிசனமும் கிடைக்க அருள் செய்வாய் என பிரார்த்திக்க, ஸ்ரீ கருணாமூர்த்தியும் ஓர் பெண் வடிவம் தாங்கி வந்து கேட்கிறாள்:

பெண்: பக்தியில் சிறந்தவளே! உன்னை ஸ்ரீபகவான் மறந்து விட்டதாக கருதினாயா? அல்லும்பகலும் உன் பக்தியைப் பருகிய வண்ணம் தான் இருக்கிறான். உன் பக்தியில் சிக்குண்ட அவன் உன்னை கைவிடுவானா? நீ ஏன் கட்டுண்டு கிடக்கிறாய்?

சக்கு: நான் பண்டரிபுரம் போக வேண்டும். அடியார்கள் எனக்காக காத்திருக்கிறார்கள். என் கணவர் என்னை செல்லக் கூடாது என கட்டிப் போட்டு சென்று விட்டார்.

பெண்: கவலைப்படாதே! நான் உன் அண்டை வீட்டுக்காரி. நான் உன்னை அவிழ்த்து விடுகிறேன். நீ சுகமாக பண்டரி சென்று அவனை தரிசித்து விட்டு வா. நீ வரும்வரை உனக்கான வேலைகளை நான் பார்த்துக் கொள்கிறேன். பெண் உள்ளத்தை பெண்தான் புரிந்து கொள்ள முடியும். உன்னைப் பற்றியும், உன் கணவனைப் பற்றியும் நான் நன்கு அறிவேன். நீ சென்று வரலாம்.

சக்கு: கிருபா நிதியாகிய ஸ்ரீகண்ணன் போன்றவளே! என் மீது இவ்வளவு அன்பு பூண்டு அரிய பெரிய காரியத்தை செய்ய துணிகிறாயே. உன்னைப் பற்றி சரியாக புரிந்து கொள்ள முடியவில்லையே?

Koviloor Digital Library

பெண்: அம்மையே! இருட்டினாலும், பக்தியில் சோர்ந்து போனதாலும் என்னை அறிந்து கொள்ள முடியவில்லை. உன் கணவனை சமாதானப்படுத்தும் வன்மை எனக்கு உண்டு, உன் காரியத்தில் எனக்கு எந்த துன்பம் வந்தாலும் அதை சமாளிக்கும் தன்மையும், தாங்கும் சக்தியையும் ஸ்ரீபகவான் கொடுத்திருக்கிறார்.

சக்கு: அம்மா! என் பொருட்டு எந்த கதிக்கு ஆளானாலும் சரி என்று நீ சொல்வது சரி இல்லை. ஸ்ரீபகவானுக்கு கிருபை உள்ளதாகில் இக்காரியம் நடைபெறட்டும். வீணாக உனக்கு இக்கஷ்டத்தை எப்படி கொடுப்பது?

பெண்: உன் ஸ்ரீபகவானே என்னை அனுப்பியிருக்கிறான் என வைத்துக் கொள். அவ்வளவு சாமர்த்தியம் இல்லாமல் இக்காரியத்தில் பிரவேசிக்கமாட்டேன் எனச்சொல்லி சக்குவின் கட்டுகளை தம் அபயகரத்தால் அவிழ்த்து அதே நிலையில் தாம் நின்று கொண்டு அதே கயிற்றால் தம்மைப் பிணைக்கும்படி ஆணையிடுகிறான் ஸ்ரீபரமாத்மா. அந்த பேதைப் பெண்ணும் அவனைப் பிணைக்கிறாள். அவனும் அந்த அபலையின் இருதயத்தில் சிறைப்பட்டான்.

ஹே சாந்த சக்கு!

உனக்கும் யாம் ஒன்று உரைக்கிறோம். உள்ளம் கசிந்து உருகிய நிலையே எம்மை பிணைப்பதாகும். வேறு எந்த நிலையிலும் யாம் அடங்கோம். மந்திரமோ, யோகமோ, ஆச்சார அனுஷ்டானங்களோ எம்மை உள்ளபடி உணர்த்தாது. உருகி கரைந்து மயமாகும் நிலை நீ என்று பெறுகிறாயோ அன்று நீயும் எம் திருவடியின் தாரா தாரா என்ற ராதா ஆகமுடியும்.

குழந்தாய் சாந்தா!

பக்தியின் முதிர்ச்சியே ஞானமாகும். பொருள் பற்றை விடுவதைவிட பொருளின் தன்மையை அதாவது அதன் குணத்தை விட்டுவிடு. அதாவது இது இத்தன்மையதே இது நம்மை கெடுக்கும், இது அசிங்கமானது, இது அனாச்சாரமானது என பேத உணர்வோடு கூடி பயம் உண்டானால் அந்த பயமே காலன் ஆகும்.

Koviloor Digital Library

எம் அன்னாய்!

ஸ்ரீபதிசேவையே ஸ்ரீசத்குரு சேவையாகும்! ஸ்ரீபதிசேவையே ஸ்ரீயப்பதி சேவையாகும். கணவனையும், குழந்தைகளையும், இன ஜனங்களையும் பிரிய வாஸனையோடு நோக்காதே. ஸ்ரீபகவானாக உணர். எதிலும் களங்கம் காணாதே. எதிலும் போதும் என்ற நிறைவு கொள். எந்நிலையிலும் தன் நிலை மாறாத உணர்வுடன் அன்பு, சாந்தம், சகிப்புத்தன்மை, அமைதி, மௌனம், ஆனந்தம் இவைகளுடனே கூடி வாழ்வாயாக !

-தூளி

..OOR ANDAVAR
A. No. 12368
LIBRARY, KOVILOOR

Koviloor Digital Library

ஸ்ரீநரசிம்மமேதாவின் திடஞானம்

அருள் ஞானக் குழந்தைகளே!

ஸ்ரீ அவன் அருளால் அவன்தாள் வணங்கி என்றபடி ஸ்ரீபக்த விஜயத்திலிருந்தும், ஸ்ரீபாகவதத்திலிருந்தும், ஸ்ரீபகவான் ராமகிருஷ்ண பரஹம்சருடைய உபதேசக் கிரமத்திலிருந்தும் உங்கள் அனுபவ ஞானத்திற்கு ஸ்ரீமஹான்கள் வாயிலாக கேட்டு உணர்ந்த கதைகளை சுருக்கமாகத் தருகிறோம்.

நீங்கள் அனைவரும் கதை கேட்கும் குழந்தைகள். ஆகவே இதை கவனத்துடன் படித்து ஓர்மித்த புத்தியுடன், பக்தி கலந்த ஞானத்தில் உணர்வுடன் கரைந்து ஒன்றுக. இவைகளை வெறும் கதையாக படிக்காமல் அதன் பாத்திரமாகவே ஆகி உங்களை அதுவாகப் பண்ணவும்.

குருர் பிரம்மா குருர் விஷ்ணு
குருர் தேவோ மஹேஸ்வரஹ: |
குருர் சாக்ஷாத் பரப்பிரம்மம்
தஸ்மை ஸ்ரீகுரவே நமஹ: ||

எல்லாம் வல்ல பரம்பொருளின் கிருபையால் சகல ஞான வைராக்கியங்களும் சித்திப்பதாக! ஸ்ரீசர்வேஸ்வரனின் கபட நாடகத்தால் அனைத்து ஜீவர்களும் துக்கத்தை சுகமாக அனுபவிக்கிறார்கள். இதில் சந்தேகமே இல்லை. விசாரணை செய்து பார்த்தால் உண்மை புரியும்.

பொய்யை பொய் யென்றறியும் போதகத்துக்கு ஆதரவு
உன் மெய்யருளேயன்றோ விளம்பாய் பராபரமே

என்றபடி பொய்யாகிய மெய்யை (தூலத்தை) நான் அல்லவென தள்ளி அனுபவித்த மெய்யடியாராகிய ஸ்ரீநரசிம்ம மேதா எனப்பட்ட தாஸர் விரக்தி ஏற்பட்டு கானகம் சென்றார். அடர்ந்த

Koviloor Digital Library
கானகத்தில் வந்ததும் வைராக்கியமாக பிடிப்பு ஏற்பட்டு நிர்கதி ஆனார். அந்த காட்டில் ஒரு சிவன் கோவிலைக் கண்டார்.

கோவிலினுள் பிரவேசித்து ஸ்ரீசிவபெருமான் திருவடியின் கீழ் அமர்ந்து தரிசனார்த்தத்திற்காக அழுது புலம்பினார். 10 தினங்கள் அன்னபானம் இல்லாமல் வேண்டி அழுததால் ஸ்ரீஜடாதாரியும் அருள் சுரந்து காட்சி தந்தார்.

நரசிம்மா! உனக்கு என்ன வேண்டும்? என கேட்டார். ஐயனே உமக்கு பிரியமானது எதுவோ, நீர் அனுபவிப்பது எதுவோ அதைக் கொடும் என வேண்டினார். ஸ்ரீகங்காதரனும் அகமகிழ்ந்து பக்தனை யமுனை ஆற்றங்கரைக்கு அழைத்துச் சென்றார். அங்கு ஸ்ரீகண்ணன் நடத்திய ராஜகிரீடையை இருவரும் அனுபவித்தனர். முடிவில் சிவபெருமான் ஜீவாத்ம பரமாத்ம ஐக்கிய தத்துவத்தை விளக்கினார். ஸ்ரீகண்ணன் இவர்களிடம் வந்ததும் கண்ணன் வசம் நரசிம்ம மேதாவை ஒப்படைத்தார்.

ஸ்ரீசர்வேஸ்வரன் குருவாகவும், ஸ்ரீஜனார்த்தனன் தெய்வமாகவும் இருந்து நரசிம்மன் என்ற ஜீவனை ஆட்கொண்டார்கள். ஸ்ரீசத்குருவும் உபாசனா மூர்த்தியும் சேர்ந்து ஐக்கியமான தன்மையினால் அது மஹத்தாகியது. பிராரப்தாதீனமாக ஒரு மனைவியும், ஒரு பையனும் அமைந்தார்கள். ஸ்வாமிகள் எதிலும் பிடிப்பு இல்லாமல் ஸ்ரீகண்ணன் திருவடியைப் பற்றிக் கொண்டு உஞ்ச விருத்தி செய்து அதிதிகளுக்குப் படைத்து தானும், மனைவியும், குழந்தையுமாக ஆனந்தமாய் அனுபவித்து வந்தார்கள்.

பையனுக்கு திருமண வயது வந்தது. அவனைப் பற்றிய எண்ணமே ஸ்வாமிகளுக்கு இல்லை. இவர்கள் இருப்பது புராதனகடம் என்ற ஓர் கிராமம். பக்கத்தில் சியாமளபுரம் என்ற சிற்றூர் ஒன்று இருந்தது. அதில் திரிபுராந்தகன் என்ற ஒரு கோடீஸ்வரன் இருந்தான். அவனுக்கு ஒரு மகள் செல்வச் சிறப்போடு வளர்ந்து வந்தாள். அதே ஊரில் கிருஷ்ணபட்டர் என்ற ஓர் விஷ்ணு பக்தர் வாழ்ந்து வந்தார்.

Koviloor Digital Library

கிருஷ்ண பட்டர் பக்தி மார்க்கத்தில் ஈடுபட்டு வந்தாலும், உலகத்தொழிலில் பெண்ணிற்கும், மாப்பிள்ளைக்கும் பொருத்தம் பார்த்து சேர்த்து(தரகு) வைக்கும் தொழில் செய்து வந்தார். அவர் புரோகிதரும் கூட. இவருக்கும் திரிபுராந்தகனுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. கிருஷ்ண பட்டர் திரிபுராந்தகன் மகளுக்கு வரன் தேடிப் புறப்பட்டார். பல இடங்களிலும் அலைந்து முடிவில் நரசிம்ம மேதாவைக் கேள்விபட்டு புரோதனகடம் வந்தார். ஸ்வாமிகளைப் பார்த்தார். ஸ்வாமிகளைப் பற்றி பரிபூரணமாக அறிந்தவர் ஆதலின் இப்பொழுது நேரில் கண்டவுடன் மெய் சிலிர்த்துப் போனார். இப்படிப்பட்ட மஹான் வீட்டில் சம்பந்தம் செய்து கொள்ள திரிபுராந்தகன் கொடுத்து வைத்திருக்க வேண்டும் என முடிவு பண்ணினார். உடனே ஸ்வாமிகளின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார். ஸ்வாமிகளும் கிருஷ்ண பட்டர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார். இருவரும் க்ஷேமலாபம் விசாரித்தார்கள். பட்டர் தன்னுடைய விருப்பத்தைச் சொன்னார்.

நரசிம்ம மேதா: அன்புடையீர்! அடியேனுக்கு யாதொரு ஆட்சேபணையும் இல்லை. தேவரீருக்குத் திருப்தியாக இருப்பது எல்லாம் அடியேனுக்கும் திருப்தியே. ஆனால் ஒரு விஷயம் அடியேன் பரமதரித்திரன், திரிபுராந்தகனோ பரம பாக்கியவான். திருமகளே அவனிடம் வசிக்கிறாள். வரிசை முதலியவைகளை அடியேனிடத்தில் எதிர்பார்ப்பது தவறு. மேலும் கல்யாண குழப்பத்தில் அடியேன் பக்தி தடைபடும். எல்லாவற்றையும் ஸ்ரீகண்ணன் வசம் ஒப்படைத்து விட்டேன். தங்கள் உசிதம் போல் செய்யவும் என்று சொல்லிவிட்டு தியானத்தில் ஆழ்ந்து விட்டார்.

கிருஷ்ண பட்டர் பரமதிருப்தி கொண்டார். சியாமளபுரம் சென்றார். திரிபுராந்தகனிடம் வரனைப் பற்றி தெரிவித்தார். அவர் வார்த்தையைக் கேட்டதும் திரிபுராந்தகனுக்கு தூக்கி வாரிப் போட்டது. (மனத்திற்குள்ளேயே சிந்திக்கிறான். இந்த பிராமணன் நம் விஷயத்தில் அசிரத்தையாக நடந்து

Koviloor Digital Library

கொண்டானே. என் அந்தஸ்திற்கேற்றபடி சீர்வரிசை செய்யமுடியுமா அவனால்? தம்பூரா, சிப்ளா, ஜால்ரா, அட்சய பாத்திரம் இவைகளையே கொண்டு வருவான். ஒரு பரம தரித்திரன் நமக்கு சம்பந்தியாக வருவதா? இதைக் குலைக்க வேண்டுமென முடிவு செய்தான்) பட்டர் ஸ்வாமிகளே!

தாங்கள் நல்வரனைத் தான் தேடி வந்தீர்கள். பரம திருப்தி அடைந்தேன். நாட்களைப் போக்க நான் விரும்பவில்லை. தேவரீர் இன்றே புராதனகடம் போய் நாளையே முகூர்த்தம் என உறுதி பண்ணி என் அந்தஸ்திற்கேற்றபடி சீர்வரிசைகள் எடுத்துக் கொண்டு இஷ்ட ஜன பந்துக்களுடன் நாளையே வரச் சொல்லுங்கள் என சொன்னான். கிருஷ்ணபட்டரும் திரிபுராந்தகனின் வாசக நுட்பத்தை அறிந்து கொண்டு இவன் சரியானபடி அவமானபடப் போகிறான். இவன் அழியும் செல்வ செருக்கால் பேசுகிறான். ஸ்வாமிகளோ திருமகளை உடையவனைப் பற்றி இருக்கிறார். அவரின் பெருமை இந்த கசடனுக்கு எங்கே தெரியும்? என வியந்து உடனே புராதனகடம் சென்றார்.

தாஸரைக் கண்டார். நமஸ்கரித்தார். பிரம்ம ஞானியே! அதிர்ஷ்ட வசத்தால் விவாகம் நாளையே நடைபெற வேண்டியதாக இருக்கிறது. வர்த்தகன் தன் நிலைக்கேற்றபடி சீர்வரிசையுடன் கால தாமதமின்றி புறப்பட்டு வரச்சொல்லி இருக்கிறான். தங்கள் திருவுள்ளம் அறிந்து போக வந்தேன் என்றார்.

நரசிம்ம மேதா: ஸ்வாமிகளே! உமது நண்பன் நம் சம்பந்தம் விரும்புவதாக தெரியவில்லை என்று அறிகிறேன். அடியேன் என்ன சீர்வரிசை கொண்டு வரப் போகிறேன். ஸ்ரீகிருஷ்ணன் மீது பாடும் சாஹித்ய சீரும், தாள வரிசைகளும் தான் என்னிடம் உள்ளன. எம் ஸ்ரீகண்ணன் திருவுள்ளப்படியே சகலமும் திருப்தியாக நடக்கும் என்றார்.

கிருஷ்ணபட்டர் மிகுந்த மகிழ்ச்சியுற்றார். நரசிம்மமேதா,

Koviloor Digital Library

ஸ்ரீகண்ணன் வசம் பொறுப்பை ஒப்படைத்து விட்டார். திரிபுராந்தகன் அசிரத்தையாக இருப்பானாகில் குலத்திற்கே பெரும் பழியை தேடிக்கொள்வான் என எண்ணி திரிபுராந்தகனிடம் சென்றார்.

கிருஷ்ணபட்டர்: நண்பா! உனது அபிப்பிராயத்தை பாகவதோத்தமருக்கு அறிவித்தேன். உன் விருப்பப்படியே அதிகாலையிலேயே வந்து விடுவதாக சொல்லி அனுப்பினார்.

திரிபுராந்தகன்: என்ன ஸ்வாமிகளே! தாங்களும் அறிவில்லாமல் பைத்தியகாரனாகிய நரசிம்மமேதாவின் வார்த்தையை நம்பிக்கொண்டீர்? அட்சய பாத்திரம் ஏந்தி பிச்சையெடுக்கும் பேர்வழி எனக்கு சம்பந்தியாக வர அருகதை உள்ளவனா?

போங்காணும் உமது வேலையை பார்த்துக் கொண்டு. அந்த பேர்வழி எனக்கு சீர்வரிசை கொண்டு வருவானா? இந்த விஷயம் நமக்குள் இருக்கட்டும். பறையடித்து விடாதீர். அப்படியே நாளை அவர்கள் இங்கு வந்தாலும் சங்கடமாகத் தான் இருக்கும். தன்னைப் போன்ற சோத்துக்கு வழி இல்லாத சோம்பேறிகளுடன் வந்தால், என் மானமே போய்விடும்.

இந்த விஷயத்தில் நரசிம்ம மேதா புத்திசாலித்தனமாக நடந்து கொள்வான் என நினைக்கிறேன். நாளை அவன் வரப் போவதில்லை. இந்த திருமணம் நாளை நடைபெறப்போவதும் இல்லை. உமது சிரமத்திற்கு மிகுந்த வந்தனம் என்றான்.

கிருஷ்ணபட்டர்: வாயில் வந்தவைகளை எல்லாம் பேசாதே. நாளை அவருடன் வரும் பொருள்களுக்கு மதிப்பு கூற என்னால் முடியாது. உலகத்தையே விலைக்கு வாங்கும் அளவுக்கு உன் மகளுக்கு சீர் கிடைக்கப் போகிறது. அவரோடு வரும் ஜனங்களுக்கு தங்க இந்த ஊர் இடம் போதாது. அவர்களை உபசரிக்க உன்னால் முடியாது. உனக்கும், உன் குமாரிக்கும் வரப்போகும் பாக்கியத்தை வீணாக்காதே என்றார்.

Koviloor Digital Library

திரிபுராந்தகன்: ஓய்! கனவிலும் கருத முடியாத காரியத்தை சொல்கிறீர். கந்தலை உடுத்தியிருப்பவனும், பிச்சையெடுப்பவனும் ஆகிய ஒரு தரித்திரத்தை எனக்கு சம்பந்தியாகப் பேச வந்தீர். அதுவே எனக்கு சஞ்சலத்தை கொடுக்கிறது. மேலும் மேலும் கட்டுக்கதைகள் சொல்லி என்னை முட்டாளாக்காதீர். போங்காணும்! இந்த கதையை வேறு எவரிடமாவது சொல்லும் என்று எள்ளி நகையாடினான்.

கிருஷ்ணபட்டர்: சர்வ சங்க பரித்தியாகியை பைத்தியக் காரனென்றும், பிச்சைக்காரனென்றும் ஏளனம் செய்து கெடுகிறாய். அவரைப் போன்ற புண்ணிய புருஷர் சகவாசம் உனக்கு சாமானியமாகக் கிடைக்காது. மேலும் உன்னைத் திருப்திப்படுத்தவே அவர் ஒப்புக்கொண்டார்.

ஸ்ரீகண்ணபிரான் அருளால் நடக்கும் என்று உன்னிடம் சொல்லச் சொன்னார். அதனால் தான் நான் உனக்கு உறுதி கூறுகிறேன். இனி ஆக வேண்டிய காரியத்தை கவனிப்பாய். பின்னால் வருந்த நேரிடும் என்றார்.

திரிபுராந்தகன்: (முரண் சாதித்தான்) ஓய் கிருஷ்ண பட்டரே! உமக்கேன் மனஸ்தாபம்; நாளை அப்படித்தான் நினைத்தபடி அவன் கொண்டு வந்தாலும் வதுவை செய்து முடித்து விடுகிறேன். நம்மிடம் ஆட்கள் நிறைய இருக்கிறார்கள். அவர் சீர் கொண்டு வந்தால் நம்மிடம் தேவையான சாமான்களும், ஆட்களும் இருக்கும்போது பிறகு என்னையா கவலை? பேசாமல் போய் தூங்கும் என்றான்.

படுக்கையில் தூக்கம் வராது கிருஷ்ணபட்டர் புலம்பினார். திரிபுராந்தகன் மொழிகளால் இந்த விவகாரத்தில் அகப்பட்டு விழிக்கிறேன்; நாளை அவர்கள் வந்து விட்டால் இவர்களை லேசில் விட மாட்டார்கள். இவனும் லச்சையின்றி மறுத்துவிட்டால் ஒரு பாகவதோத்தமருக்கு சங்கடம் விளைவித்த பழி என் மீது சாருமே, கண்ணா! கருணைக்கடலே! நீதான்

Koviloor Digital Library

சகலத்திற்கும் பொறுப்பு என்று அவன் வசம் பொறுப்பை ஒப்படைத்து விட்டு தூங்கி விட்டார்.

அங்கு நரசிம்ம மேதா கல்யாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்யத் தொடங்கினார். அவரும் அவர் மனைவியும் அவ்வூர் மக்களிடம் தம் மகன் கல்யாணத்தைப் பற்றி சொல்லி புறப்படத் தயார்படுத்தினர். அவ்வூர் பாகவத கோஷ்டிகளும், ஏனைய கிராமஜனங்களும் ஸ்வாமிகளுடன் செல்லத் தயார் ஆனார்கள்.

ஸ்வாமிகளும் அவர் மனைவியும், புத்திரனும் கிழிந்த ஆடைகளில் சிறந்தனவற்றை எடுத்து உடுத்திக் கொண்டனர். புதிதாகச் செய்யப்பட்ட துளசிமணி மாலையை எடுத்து அணிந்து கொண்டனர்.

தம்பூரா, சிப்ளா, பண்டரிஜால்ரா, தீர்த்தச் செம்புகளும், மடிசஞ்சியும், அட்சய பாத்திரமும் எடுத்துக் கொண்டனர். மருமகளுக்கு சீராக ஸ்ரீகண்ணன் திருஆராதன பெட்டி எடுத்துக் கொண்டனர். தாமே இயற்றிய பக்தி ரச கீதங்களை உருக்கமுடன் பாடிக் கொண்டே நர்த்தனம் செய்த வண்ணமாக புறப்பட்டனர். இந்த கோஷ்டியை கவனித்தால் பண்டரியை நோக்கிப் போகும் தீர்த்த யாத்திரை கோஷ்டியாக தோன்றியதேயல்லாது, கல்யாண கோஷ்டியாகத் தெரியவில்லை. இந்நிலையை ஸ்ரீகண்ணன் உணர்ந்தான். வர்த்தகன் ஏற்படுத்திய திட்டத்தை கவனியாது நரசிம்மமேதா எம்மையே துதித்துக்கொண்டு போகிறான்.

அவனை அப்படியே விட்டு விட்டால் அவமானப்படுவான். அது தகாது; அவன் மானமும், அவமானமும் நம்முடையது என திருஉள்ளம் பற்றி தம் துணைவியார் ருக்மணி, சத்யபாமா சகிதமாக ஓர் மானிட வேடம் தாங்கி நரசிம்மமேதா கூட்டத்தோடு கலந்து கொண்டார்.

இந்த கல்யாண கோஷ்டியின் மஹத்துவத்தை

Koviloor Digital Library
ஸ்திரப்படுத்தும்படி ஸ்ரீபரமேஸ்வரன் ஸ்ரீபார்வதியுடனும், ஸ்ரீபிரம்ம தேவர் ஸ்ரீசரஸ்வதியுடனும் கலந்து கொண்டனர். இதை அறிந்த இந்திரன், இந்திராணி மற்றும் தேவர்களும் குபேரன், நாரதாதி ரிஷீஸ்வரர்கள் சகலரும், ரம்பை, ஊர்வசி, திலோத்தமை ஆகிய தேவமாதர்களும் நர்த்தனம் பாடிக் கொண்டே வந்து சேர்ந்தனர். மஹரிஷிகள் வேத வித்துக்களாக மாறி வேத பாராயணம் செய்து கொண்டும், தேவதுந்துபிகள், மங்கள வாத்தியம் முழங்கிக் கொண்டும் அரச பரம்பரையினராக மஹா வைபோகத்துடன் சென்றனர்.

குபேரன் ஸ்ரீபகவானின் திருவுள்ளம் அறிந்தான். சங்க நிதி, பதுமநிதி வரவழைத்தான். தங்க, வெள்ளிப் பாத்திரங்களும், பட்டு பீதாம்பரங்களும், காஷ்மீர் சால்வைகளும், பட்டுப் புடவைகளும், ஜரிகை வேஷ்டிகளும் பல வண்டிகளில் தொடரச் செய்தான். உற்றுப் பார்த்தால் ஸ்ரீபகவான் ஒரு பெரிய வர்த்தகனாகவும், குபேரன் பொறுப்பாளராகவும், இந்திரன் காரியஸ்தனாகவும் அமைந்திருந்தனர்.

இந்திரன்: (நரசிம்ம மேதாவிடம் சென்று) தேவரீர்! திருக்குமாரன் வதுவை முடிக்க சென்று கொண்டிருப்பதாக அறிந்து, எனது எஜமானர் தமது பரிவாரங்களுடன் துவாரகையிலிருந்து புறப்பட்டு, உமது கூட்டத்தில் வந்து சேர்ந்தார். அவர் உமது பக்திப் பிரபாவத்தில் மிகவும் ஈடுபட்டவர். எந்த நேரத்திலும் உம்மையே அதிக பிரேம பாவத்துடன் கருதுபவர். உம்முடைய குமாரனின் கல்யாணத்தை தம் குமாரனின் கல்யாணமாகவே கருதியிருக்கிறார். நீர் பரம பக்தராகையால் உம்மிடம் பணம் குறைவு. அதை நிறைவு செய்யவும், கல்யாணம் சீர்வரிசையுடன் மங்களஹரமாக நடைபெறவும், அதைக் கண்டு இன்புறவும் வந்திருக்கிறார் என அறிவித்தான்.

நரசிம்மமேதா ஞான சீலராகையால் வந்திருப்பவர் ஸ்ரீபகவான் என உணர்ந்தார். முதலில் சத்குரு நாதனாகிய

Koviloor Digital Library
ஸ்ரீஹரனை வணங்கி, உபாசனாமூர்த்தியாகிய ஸ்ரீஹரியை வணங்கி மற்றும் உள்ள ஸ்ரீபிரம்மதேவனையும் வணங்கினார். அவர்களும் ஸ்வாமிகள் கண்களுக்கு மட்டும் பிரத்தியட்சமானார்கள். மற்றவர்களுக்கு மானிடர்களாகவே தென்பட்டனர்.

ஸ்ரீகண்ணன்: வத்ஸ! எமக்கு தெரிவிக்காமலேயே ஏது இப்படி துரிதமாக புறப்பட்டு விட்டாய்? உம் குமாரனின் திருமணத்தை நாம் காணலாகாதா? உமக்கு மகன் என்றால் அவன் எமக்கும் மகன் இல்லையா? அப்படியானால் எம் மருமகளுக்கு சீர்வரிசை யாம் முறைப்படி செய்ய வேண்டாமா என்று புன்முறுவலுடன் கேட்டார்.

தாஸர்: கார்வண்ணா! கமலக் கண்ணா! கோபாலா! கோவிந்தா! மதுசூதனா! நீயோ கபட நாடக சூத்திரதாரி. உமக்குத் தெரியாமல் எந்த காரியம்தான் நடக்கும்? உம்மையல்லாமல் எமக்கு வேறு கதி எது? இந்த கல்யாண பொறுப்பை எல்லாம் அன்றே உம்மிடம் ஒப்புவித்து விட்டேன்! இது என்ன கேள்வி?

ஸ்ரீகண்ணன்: நரசிம்மா! நீயும் உமது புதல்வனும் எமது ரதத்தில் ஆரோகணிப்பீர்களாக என்றார்.

தாஸர்: கண்ணா! உமது புத்திரனை வேண்டுமானால் உமது பக்கத்தில் வைத்துக் கொள்ளும்! நான் அடியார்களுடன் நடந்தே வருகிறேன். அடியேனை தாங்கிக் கொள்ள அன்னை பூதேவி இருக்கிறாள்.

ஒரு பெரிய அரசன் தன் மகனுக்கு திருமணம் செய்து வைக்க மற்றோர் தேசத்திற்குப் போய்க் கொண்டிருக்கிறார் என்றனர் மக்கள். சிலருக்கு மட்டுமே திரிபுராந்தகன் மகளுக்கும், நரசிம்ம மேதா மகனுக்கும் திருமணம் என்று தெரிந்தது. வழி நெடுக கேட்கப்பட்ட மக்களுக்கும், எளிய ஜனங்களுக்கும் தங்க நாணயங்களும், பட்டு சேலைகளும், பட்டு வேஷ்டிகளும், பீதாம்பரங்களும் அள்ளி அள்ளி கொடுத்த வண்ணமாக குபேரன் வந்து கொண்டிருந்தான்.

Koviloor Digital Library

கிருஷ்ணபட்டர் அதிகாலையில் எழுந்தார். கண்ணா! என்னை கைவிட்டுவிடாதே என்று துதித்த வண்ணம் வெளியே வந்தார். ஊரின் கீழ்த்திசையிலிருந்து கோடி சூரியன்கள் உதித்தால் எப்படியோ அவ்வளவு தேஜோ மயமாக இருந்தது. கிருஷ்ணபட்டர் புரிந்து கொண்டார்.

உடனே கூட்டத்தை நோக்கி ஓடாமல் திரிபுராந்தகன் வீட்டை நோக்கி ஓடினார். படுக்கையிலேயே இருந்த திரிபுராந்தகனுக்கு அவனது ஆட்கள் சென்று நரசிம்ம மேதா பெருத்த வைபவத்துடன் வந்து கொண்டு இருக்கிறார் என்றும் அவர்களுடன் வரும் அந்தணர்களுக்கு கணக்கே கிடையாது என்றும், இவ்வூர் மக்களும் மற்றும் யார் கேட்டாலும் இல்லையென்று சொல்லாது நல்லாடைகளும், ஆபரணங்களும், பொன், பொருள்களும் வாரிவாரி கொடுத்துக் கொண்டே வருகிறார்கள் என்றும் சொன்னார்கள்.

பதறி எழுந்தான் திரிபுராந்தகன். மதி மோசம் போனேனே, கிருஷ்ண பட்டர் வார்த்தையை அலட்சியம் செய்தேனே, அவமானப்படுவேனே, ஒரு ஏற்பாடும் செய்யவில்லையே; பந்தலும் போடவில்லையே; ஊரார் என்ன சொல்ல போகிறார்களோ? என மனம் சங்கடம் அடைந்து ஆடைகளையும் சரிசெய்யாமல் அலங்கோலமாய் கிருஷ்ணபட்டர் வீட்டை நோக்கி ஓடினான். இருவரும் வழியில் சந்தித்தனர். கிருஷ்ணபட்டரைப் பார்த்ததும் வெட்கித் தலை குனிந்து அடியற்ற மரம் போல் வீழ்ந்தான். அடியேனை மன்னிக்க வேண்டும் என கதறினான்.

கிருஷ்ணபட்டரும், திரிபுராந்தகா! எனக்கென்ன அபராதம் செய்தாய்? இப்போது நரசிம்ம மேதா வந்துவிட்டார். உன் விருப்படி சீர் கொண்டு வருகிறார். அவைகளை வாங்கி எங்கே வைக்கப் போகிறாய்? விவாக ஏற்பாடுகள் அனைத்தும் செய்து விட்டாயா? பந்தல் வேயப்பட்டதா? அவர்கள் தங்குவதற்கு ஏற்பாடுகள் செய்திருக்கிறாயா? சீக்கிரம் சொல். நாம் அனைவரும் அவமானப்பட வேண்டி வரும் என்றார்.

Koviloor Digital Library

இந்த கேள்விகள் திரிபுராந்தகன் செவிகளில் வீழ்ந்ததும், மற்றோர் செவி மூலம் உயிர் போவது போல உணர்ந்தான்.

திரிபுராந்தகன்: ஸ்வாமி! அந்தோ! ஒன்றும் செய்யவில்லையே. வர மாட்டார்கள் என்றல்லவா இருந்து விட்டேன். நிர்சிந்தையாய் இதுவரை தூங்கி விட்டேனே ஸ்வாமி! தாங்கள் தான் என்னை எவ்விதத்திலாவது காப்பாற்ற வேண்டும் என்று அவர் திருவடியைப் பற்றிக் கொண்டான்.

கிருஷ்ணபட்டர்: (திரிபுராந்தகனைத் தூக்கி)

நண்பா! கவலைபடாதே, பக்தர் பிரான் வெகுளார். உற்றது சொன்னால் பொறுப்பார். உன்னால் என்ன செய்ய முடியும்? இந்த உலகில் உள்ள செல்வங்களை எல்லாம் உன்னிடம் தந்து, வந்தவர்கள் மனம் குளிர அலங்கார விசேஷங்கள் செய்ய ஒரு வருஷமானாலும் முடியாது. வருபவர்கள் உடன் வரும் பொருள்களையும், அவர்கள் அணிந்திருக்கும் ஆபரணங்களையும் கவனித்தால் உன் செல்வம் முழுவதும் சமுத்திரத்தின் முன்னால் ஒரு துளி நீருக்குச் சமம். இன்று உன் குமாரியின் விவாகம் மூவரும், தேவரும் சேர்ந்து நடத்தி வைக்கிறார்கள். நீ ஒரு காசும் செலவழிக்க வேண்டியதில்லை. வா, எதற்கும் உன் அபிப்பிராயத்தை அவர்களிடம் தெரிவிக்கலாம் என்று கையை பிடித்து அழைத்து வந்தார். (கிருஷ்ணபட்டர் நரசிம்ம மேதாவை ஆலிங்கனம் செய்து கொண்டார்).

நரசிம்ம மேதா: உமது ஆக்ஞைப்படி அடியேன் வந்து சேர்ந்தேன். நான் அட்சய பாத்திரம், சிப்ளா, ஜால்ரா இவைகளையே சீராக கொண்டு வந்திருக்கிறேன் என்றார்.

ஸ்ரீபகவான்: (தான் முந்திக் கொண்டு) சீர் வரிசையைப் பற்றி அவரிடம் கேட்க வேண்டாம். விவாக காரியம் அனைத்தும் செய்வதற்கு அடியேன் காத்திருக்கிறேன் என்றார்.

கிருஷ்ணபட்டர் ஞான சீலராகையால் பேசினவர்

Koviloor Digital Library

சாட்ஷாத் ஸ்ரீகண்ணனே என தெரிந்து கொண்டார். மனதிற்குள்ளாகவே ஸ்ரீபகவானும் வெளிக்காட்டி கொள்ளாதே என்று உணர்த்தவும், ஒன்றும் பேசாதவராய் பட்டரும், மனதினாலேயே அஞ்சலி செய்து மகிழ்ந்தார். மேலும் பட்டர் சொன்னார்,இப்போது அடியேன் சீர்வரிசையைப் பற்றி பிரஸ்தாபிக்கவில்லை. நரசிம்ம மேதாவையும், தங்களையும் எதிர் கொள்ளவே வந்தோம் என்றார்.

ஸ்ரீபகவான் திரிபுராந்தகனைப் பார்த்து, தாங்கள் தான் நரசிம்ம மேதாவின் சம்பந்தியா? என்ன ஸ்வாமி விவாக நெருக்கத்தால் இன்னும் தந்த சுத்தி கூட செய்யவில்லை போல் தெரிகிறது என்று கேட்டார். திரிபுராந்தகன் ஒன்றும் சொல்ல முடியாமல் தலை குனிந்தான்.

கிருஷ்ணபட்டர் குறுக்கிட்டு நடந்த விஷயங்களை விவரித்தார். சிறுமதியால் இவன் செய்த அபசாரத்தை மன்னித்தருள வேண்டுமென நரசிம்ம மேதாவை வேண்டினார். உடனே திரிபுராந்தகனும் நரசிம்ம மேதாவின் திருவடிகளில் வீழ்ந்தான்.

கிருஷ்ணபட்டர் சொல்கிறார்: ஸ்வாமி! முகூர்த்தத்தை வேறு ஒரு நாள் தள்ளி வைக்க திரிபுராந்தகன் விரும்புகிறான் என்று சொல்லவும், ஸ்ரீபகவான் குறுக்கிட்டு ஏன் அப்படிச் செய்ய வேண்டும்? இன்றைய முகூர்த்தம் அவ்வளவு விசேஷம் இல்லையா ? என்றார்.

திரிபுராந்தகனுக்கு சங்கடமாக இருந்தது. இந்த பிராமணன் எதற்கெடுத்தாலும் முந்துகிறானே, இவனைப் பார்த்தால் இவனைப் போல தனவந்தன் இந்த உலகத்திலேயே கிடையாது எனத் தெரிகிறது என்று சிந்தித்து, நரசிம்மமேதாவை நோக்கி, தாங்களை அறிகிறேன், இத்தேவரீர் யாரோ? என்று கேட்டான்.

ஸ்ரீபகவான்: இந்த மஹானுபாவராகிய நரசிம்ம மேதாவுக்கு

Koviloor Digital Library

நாடெங்கும் நூற்றுக்கணக்கான வர்த்தகசாலைகள் இருக்கின்றன. அவற்றில் துவாரகையில் இருப்பனவற்றிற்கு அடியேன் காரியஸ்தன். முக்கிய சந்தர்ப்பங்களில், அடியேன் அந்தரங்க காரியதரிசியாக அமைவேன். இப்பொழுது விவாக காரியங்களை நானே முன் நின்று நடத்துகிறேன். முகூர்த்த நாழிகை தவறாது செம்மையாக நடத்த முற்படுத்துவீராக.

திரிபுராந்தகன்: இவ்வளவு கூட்டத்தையும் எங்கே தங்க வைப்பது? எப்படி உபசரிப்பது? இதற்குப் போதிய பணமும், ஆட்களும் இல்லையே! என சிந்தித்து, ஸ்வாமி! பந்தலும் போட வில்லையே என பரிதாபமாகச் சொன்னான்.

ஸ்ரீபகவான்: அதைப் பற்றி நீங்கள் கவலைப் பட வேண்டாம். அகத்திற்குப் போங்கள்; கூப்பிடும் போது வாருங்கள். இந்த வைபவத்திற்கு நீங்கள் ஒரு பைசாவும் செலவு செய்ய வேண்டாம். ஒரு விஷயம் அந்த வண்டிகளைப் பாருங்கள். அவை தான் உமது செல்வ குமாரிக்கு வேண்டியனவெல்லாம்; சரியாக இருக்கிறதா? என்று பாருங்கள். இன்னும் தேவையானால் சொல்லுங்கள்.

ஆமாம்! நீங்கள் மாப்பிள்ளைக்கு என்ன செய்யப் போகிறீர்கள்? என்றார். (திரிபுராந்தகன் செத்தவன் போல் ஆனான்) சஞ்சலப்படாதீர், இவ்விவாக விஷயத்தில் உமக்கு ஒரு உபத்திரவமும் இன்றி நடத்தி வைக்கிறேன். உம்முடைய குமாரத்தியின் திருமணம் எம்முடைய சொந்த விஷயம் என்று தேற்றி அனுப்பினார்.

ஸ்ரீபகவான் விஸ்வகர்மாவை நினைத்தருளினார். அவன் வந்து அஞ்சலியஸ்தனாய் நிற்க, ஸ்ரீபகவான் விவாக மஹோத்ஸவத்திற்கு துரிதமாக ஆவன செய்வாயாக என்றார். காமதேனுவை வரவழைத்து உனது வள்ளல் தன்மையை பயன்படுத்துக என்றார். குபேரனைக் கூப்பிட்டு தட்சணைகளும், பரிசுகளும் தாரளமாக நடக்கட்டும் என்றார். இந்திரனைக்

Koviloor Digital Library
கூப்பிட்டு விருந்தினரை உபசரிக்கச் சொன்னார். பகவான் சொன்னதுதான் தாமதம், திரிபுராந்தகன் வீடு ஒரு நொடியில் புதுப்பிக்கப்பட்டது. எதிரே ஒரு மாளிகை தோன்றியது. அது மாப்பிள்ளை வீட்டாருடையது போலும்.

நரசிம்ம மேதாவும், ஸ்ரீபகவானும் உடன் வந்தவர்களும் புதிய மாளிகையில் தங்கினார்கள். சிற்றுண்டி முடிந்தது. முகூர்த்தம் ஆரம்பிப்பதற்கு இன்னும் சற்று நேரமேயுள்ளது என்று புரோகிதர் கிருஷ்ண பட்டர் ஸ்ரீபகவானுக்கு அறிவித்தார். ஸ்ரீகண்ணன் உடனே குபேரனை அழைத்து கிருஷ்ண பட்டருக்கு சால்வை கொடுக்க சொல்லி விட்டு, இந்திரனை அழைத்து மாப்பிள்ளை பையனை அலங்காரம் செய்யச் சொன்னார்.

மணப்பெண்ணை அலங்கரிக்க அன்னை ருக்மணி தேவி, இந்திராணி, திலோத்தமை, ஊர்வசி, ரம்பை இவர்களை நியமித்தார். அனைத்தும் குறைவின்றி நிறைவேறின. திருமணம் முடிந்ததும் அனைத்து வகுப்பாருக்கும் போஜனம் முடித்து, தாம்பூலம் கொடுத்து எல்லோருக்கும் பிரத்யேகமாக விலை மதிப்பிற்கரிய துப்பட்டா, சால்வை, பட்டு பீதாம்பரம், தங்கம், வெள்ளி, வகையறாக்கள் தாராளமாக வழங்கினார்கள். திருமணம் முடிந்தது. கூட்டம் கலைந்தது. அதனதன் யதாஸ்தானம் சென்றுவிட்டன.

குழந்தைகளே!

செய்கையும் செய்விப்பதும் அதன் மூல காரணத்தோடு மறந்து, அவன் வசம் ஒப்படைத்தால் அன்று என்ன? இன்றும், இப்பொழுதே, இந்த நிமிஷமே அவன் செய்யக் காத்திருக்கிறான் இது உறுதி. மாயை, மித்யை, கானல் ஜலம், இந்திர ஜாலம் இவை உங்களை மயக்கும். ஆகையால் இதில் மயங்க வேண்டாம். அவனுள் கலந்து விடுங்கள். அதற்கான பாடம் தானே இப்பொழுது நடந்து கொண்டு வருகிறது.

Koviloor Digital Library

ஸ்ரீ துகாராமின் திடவைராக்கியம்

இந்த பகுதியில் அடியார் துகாராம் ஸ்வாமிகளுக்கும் அவர் மனைவி கமலாவுக்கும் இடையே நடந்த ஒரு சிறு உரையாடல் இடம் பெறுகிறது. இடையே ஒரு வர்த்தகனும் சேர்ந்து கொள்கிறான். இம்மூவர் சம்பாஷனையையும் சிரத்தையுடன் படித்து, மனதை ஆவன செய்யுங்கள்.

கமலா: நாதா! சமைப்பதற்கு ஒரு பொருளும் இல்லை. என்ன செய்வது?

துகாராம்: உத்தமம்.

கமலா: ஸ்வாமி! ஒன்றுமில்லை என்று சொன்னால் ஒரு கவலையும் இன்றி உத்தமம் என்று சொல்லிவிட்டு பேசாதிருந்தால் இது உத்தமம் அன்று. உமது குழந்தைகளும், தாங்களும் பசியால் வருந்துகிறீர்கள் என்ற கவலை என்னை வெகுவாக பீடிக்கிறது. தாங்கள் ஒரு விசாரமும் இன்றி சும்மா இருந்தால் நிலைமை என்ன ஆவது?

துகாராம்: வனிதையே! நீ ஏன் வீணாக வருந்துகிறாய்? நமது வினை அப்படி இருந்தால் நாம் என்ன செய்வோம்? ஸ்ரீபகவானும் நாம் அல்லல்படுவோம் என்று கிருபை செய்து பொருளும் கொடுத்துப் பார்த்தார். நாம் பசியால் வருந்த வேண்டும் என்று விதி உள்ளது. அதற்கு என்ன செய்யலாம்? ஊழ் வினையிலும் பலம் பொருந்தியது வேறு ஒன்றுமில்லை.

அதற்கு மாறாக நாம் வேறு ஒன்று செய்ய முற்பட்டாலும், நமது ஊழ்வினை நம் முன் வந்து நிற்கும். ஸ்ரீபகவான் உலகங்கள் எல்லாவற்றையும் ஆக்கி எடுத்து, எவ்வழி நடத்த வேண்டும் என விதித்திருக்கும் வகையில் தானே எதுவும் நடக்க முடியும். கோடி கோடியாக ஒருவன் ஐஸ்வர்யம் தேடி வைத்திருந்தாலும் அனுபவிப்பதற்கு

Koviloor Digital Library

வினை இல்லையாயின் அவன் எப்பாடு பட்டாலும் அதை அவன் அனுபவிக்க முடியாது. அனுபவிக்க வேண்டியதை அப்பால் கொண்டு விட்டாலும் அது நம்மை விட்டு நீங்காது.

அனுபவிப்பதை அனுபவித்தே தீர வேண்டும். ஆதலின் நாம் பட்டினி கிடக்க வேண்டும் என்ற வினை இருந்தால் இருந்துதான் ஆக வேண்டும். நல்ல பாக்கியம் கிடைக்கும்போது சந்தோஷப்படுபவன், துரதிஷ்டம் வரும்போது துயரப்படுவது எதற்காக? என்று கேட்கிறார் ஒரு பெரியவர். நீ என்ன செய்கிறாய்? ஸ்ரீ பகவான் பணம் கொடுக்கும்போது ஆனந்தம் கொண்டாய். நல்ல உண்டிகள் சமைத்து, எமக்கும் மக்களுக்கும் சந்தோஷமுடன் படைத்து மகிழ்வுற்றாய். இப்போது பணம் கையில் இல்லாததால் வருந்துகிறாய். இது நல்லதல்ல. சுகமும், துக்கமும் ஒத்த தன்மையில் கருதப்பட வேண்டும். நமது விதியின் தன்மையை நம்மால் அறிய முடியாது. ஆதலால் நீ துன்பமடையாமல் ஸ்ரீபகவானை நம்பு. அவரே நம்மை காத்து ரட்சிப்பார்.

கமலா: ஸ்வாமி! தாங்கள் சொல்வது ஆச்சர்யமாக இருக்கிறது. நாம் பிரயத்தனப்படாது போனால், எடுத்த காரியம் சித்தியாகாது. நாம் பேசாதிருந்தால் ஸ்ரீபகவான் என்ன செய்வார்? மனிதன் முயற்சியினால் அன்றோ ஸ்ரீபகவான் உதவி செய்வார். தளிகை செய்து வைத்துவிட்டு ஓர் இடத்தில் அமர்ந்து விட்டால் ஸ்ரீபகவான் வந்து ஊட்டி விடுவாரா? கைகளின் உதவி கொண்டு உண்டால் அல்லவோ பசி தீரும். வீட்டில் தளிகை செய்வதற்கு ஒன்றுமில்லையே என்று மூலையில் உட்கார்ந்துவிட்டால் உணவு பொருள்கள் தாமே வீடு தேடி வருமா? வெளியில் சென்று முயற்சி செய்தாலன்றி பொருள்கள் வீடு தேடி வராது.

நாம் பட்டினி கிடக்க வேண்டுமென்று விதி இருந்தால் இருந்துதான் ஆக வேண்டும் என்ற தேவரீரது அபிப்பிராயம் எனக்குப் பிடிக்கவில்லை. எந்த காரியமும் முடியாது என்று சந்தேகப்படக் கூடாது. முயற்சி பெருமையைத்

Koviloor Digital Library

தரும். தாங்கள் பக்தர்களை உபசரிக்கும் விருப்பமுடையவர். அதற்கு முயற்சி செய்து தேவைக்கு பொருள் சேகரிக்க வேண்டாமா?

நம் குடும்பம் எப்படி ஆனாலும் கவலை இல்லை. பக்தர்களுக்கு உதவும்படியாகும் பொருட்டு செய்யும் முயற்சி பெருமை பொருந்தியிருக்கிறது. நமது குடும்ப க்ஷேமத்தை கருதாது பக்தர்கள் உபகாரத்திற்காக முயற்சி செய்வீராகில் உலகத்திற்கே பெரும் தூணாக அமைவீர். முயற்சி லக்ஷ்மிகரத்தை உண்டாக்கும். முயற்சி இல்லாமை தரித்திரத்தில் கொண்டு போய் விடும். பிரயத்தனம் செய்பவனிடத்தில் லக்ஷ்மி குடியிருப்பாள். சோம்பேறியிடத்தில் மூதேவி குடியிருப்பாள் என்றும், தெய்வத்தால் ஒரு காரியம் சித்திக்காது எனினும் சிறந்த தன்முயற்சி கஷ்டப்படுவதற்குத் தகுந்த பலனைத் தரும் எனவும், சிதைவுறாது இடையறாது முயற்சி செய்பவர் விதியையும் கடந்து விடுவர் என்றும் இத்தகைய அரிய தத்துவங்களை ஆதிகாலத்தில் அடியாளுக்கு போதித்திருக்கிறீர். அப்படி இருக்க தாங்களே ஒரு பிரயத்தனமும் செய்யாது, பட்டினி கிடப்பதுமல்லாது நமது குழந்தைகளையும் அவஸ்தைபடும்படி விடலாகாது.

அடியாள் சொன்னவைகளை தாங்களுக்கு போதனை செய்யும் தோரணையில் கருத வேண்டாம்; தேவரீர் மீதுள்ள பிரியத்தாலும், தங்கள் வாழ்க்கை துணைவி ஆக இருப்பதாலும், இதை எல்லாம் சொல்ல வந்தேன். பிழையிருந்தால், அடியாளை மன்னிக்க வேண்டும்.

துகாராம்: பெண்ணே ஆச்சர்யம்! அருமையான கொள்கையை வெளியிட்டாய். இத்தகைய அறிவுடையவள் சிறிது கஷ்டம் தோன்றியவுடனே மனம் உடைந்து போகிறாயே. அதுதான் என்னவென்று யோசிக்கிறேன். நீ சொன்னவைகள் எல்லாம் நம்மைத் தவிர்த்து சாதாரண மக்களுக்கே. என் உள்ளத்தின் கருத்தை நீ இன்னும் சரியாக அறிந்து கொள்ளவில்லை.

Koviloor Digital Library

இப்பொழுது பொருள் சம்பாதிக்க முற்படுவேனாகில் எனது ஸ்ரீ பகவத்தியானம் காற்றாய் பறந்து விடும்.எல்லா காரியத்தையும் அவன் பொறுப்பில் விட்டு விட்டேன். அவனுக்கு விருப்பமாகில் நம்மை போஷிக்கும் மார்க்கத்தை அவன் தேடிக் கொள்ளட்டும். எதையும் சிந்தியாது நேரம் முழுவதையும் அவனை பூஜிப்பதற்கே செலவழிக்க எமது விருப்பம்.

நமக்கு அன்னம் அளிப்பது அவன் வேலை. எதுவும் நம்மால் ஆகிறது என்ற எண்ணம் நமக்குத் தேவையில்லை. அந்த எண்ணம் நம் போன்றவர்களுக்கு தகாது. உலக மக்களுக்கு பொருந்தும். உலகத்தையும், உயிர் இனங்களையும் படைத்தவனுக்கு பாதுகாக்கவும் தெரியும். கல்லினுள் தேரைக்கும், கருப்பையில் உள்ள உயிருக்கும் படியளக்கும் பரமன் நம்மை கைவிட மாட்டான். உதாரணமாகப் பார். நான் யாதொரு திக்கின்றி அவனையே பூஜித்து இந்த பாறையிலேயே அமர்ந்துவிட்டேன். குடும்பத்தை போஷிக்கும் பாரத்தை அவனே எடுத்துக் கொண்டான். அவனது கிருபையினாலேயே குடும்பம் நடந்தேருகிறது. என்னால் என்ன ஆக போகிறது? அவனை துதிப்பதிலேயே காலத்தைக் கழிப்போம். நீ அவனை துதிப்பதிலேயே காலம் கழித்திருப்பாயாகில் உன்னை இந்நிலைக்கு விட்டிருக்க மாட்டான். அவனை தீவிரமாகத் தொழும் பக்தர்களுக்கு தன் விஷயத்தில் கவலையே கூடாது. அதை கவனிக்க அவன் இருக்கிறான் என்று உண்மை பக்தன் சும்மா இருந்து விடுகிறான்.

பக்தனுக்கு அவனை சிந்தித்தல், அவன் கிருபை பெறுதல், அவனோடு ஐக்கியமாகுதல் முதலிய ஆத்மீக விஷயங்களில் கவலை. ஸ்ரீ பகவானோ பக்தனுடைய ஒவ்வொரு சௌக்கியத்தையும் கண்ணும் கருத்துமாக கவனிக்கும் வேலையில் கவலையுடன் இருக்கிறான். பக்தனுக்கு என்ன கஷ்டம் நேருமோ? என்ன தேவையோ? என்று ஒவ்வொரு வினாடியும் கண்ணும் கருத்துமாக கவலையுடன் இருக்கிறான்.

Koviloor Digital Library
பக்தன் பேரிலேயே சிரத்தை உள்ளவனாக இருக்கிறான். பக்தனுக்கு அடிமையாக பணிகள் பல புரிகிறான். பக்தன் சுகவாழ்வு, தன் சுக வாழ்வு என கருதுகிறான்.

அப்படிப்பட்ட பாக்கியத்தை நீ பெற வேண்டும் என்பதே என் விருப்பம். பக்தியில் இறங்கி விடுவாயாகில் தளிகை வேலையும் அவனே செய்து விடுவான் அல்லது அவன் உன் இதயத்தில் குடி கொண்டு விட்டால், உனக்கு பசியே தோற்றாது. ஸ்ரீகண்ணபிரான் நினைத்த மாத்திரத்திலேயே துர்வாசர் முதலிய நூறு பேர் பசி உடனே அடங்க வில்லையா? அவன் நினைத்தால் உனக்கு ஒரு குறையும் வராது. அது இல்லை இது இல்லை என்று அனாவசியமாக சலனத்தை வளர்க்காதே! அது சஞ்சலத்தை உண்டாக்கி விடும். இன்னும் நீ சம்சாரத்தில் பற்றுடையவளாகி சாமான்யர் போன்று இல்லையே என் செய்வேன் என்று ஏங்குகிறாயே? இந்நிலை உள்ளவர்கள் தான் தன் முயற்சியின் தத்துவங்களைப் பற்றி சிந்தனை செய்யவேண்டும். அது நமக்கு வேண்டாம்.

ஒரு முகமாக அவன் திருவடி சேரவும், இப்பிறவியோடு பற்றொழிந்து மீளாப் பதவி பெறவும் முயற்சி செய்ய வேண்டுமே தவிர ரொட்டியைப் பற்றிய சிந்தனையை விட்டு விடுவோமாக. கிடைத்தால் உண்போம். இல்லாவிடில் அவனையே துதிப்போம். துதிப்பதினால் ஏற்படும் இன்பத்தினால் பசியே தெரியாது. அவனையே நினைத்து அவனையே துணையாக அவன் பாதங்களையே பற்றுவோம்.

கமலா: சுவாமி! அடியாள் அறிந்து கொள்ள முடியாத தத்துவங்களை போதிக்கிறீர். ஸ்ரீபகவான் நம் விஷயத்தில் அவ்வளவு அக்கறை உடையவர் என்பது சத்தியம் என்று நான் நம்பினால் தேவரீர் அருளியபடி செய்கிறேன். இப்பொழுது வீட்டிற்கு எழுந்து வாருங்கள். நானும் உம்மோடு சேர்ந்து பக்தி செய்ய முயலுகிறேன். அடியாளும் உம்மைப்போல் ஆனால் உமக்குப் பெருமை தானே.

Koviloor Digital Library

அடியாள் உம்மை ஒருபோதும் உபத்திரவிக்க மாட்டேன். தாங்கள் வீட்டிற்கு வந்தாலே போதும். ஞானி வீட்டிலும் இருப்பான், கும்பலிலும் இருப்பான் என்று தேவரீரே கூறி இருக்கிறீர். ஞானி மற்றோர் செய்வதைப் போல் தானும் செய்வான் என்றும், இருப்பினும் அவன் காரியத்திலேயே அவன் கண்ணாக இருப்பான் என்றும் தாங்களே கூறி இருக்கிறீர்கள். ஆகவே அகத்திற்கெழுந்தருளி உம் விருப்பம் போல் பக்தி செய்யலாம் என அழைத்து வந்தாள்.

அடுத்த வீட்டில் பொருள் கடன் வாங்கி அமுது ஆக்கி பதிக்கும், குழந்தைகளுக்கும் கொடுத்து தானும் பசியாறினாள். அந்த ஊரில் ஒரு வணிகன் இருந்தான். அவனுக்கு நிலப்பரப்பு அதிகம். அதிலுள்ள புஞ்சை நிலத்தில் சோளம்,கம்பு, தினை முதலியன பயிரிட்டு இருந்தான். அவைகளை விலங்குகளிடம் இருந்தும், பறவைகளிடம் இருந்தும் பாதுகாக்க ஒரு ஆள் தேவைப்பட்டது.

துகாராம் ஸ்வாமிகளுடைய பெருமை தெரிந்தவன். ஆதலினால் அவரிடம் சென்று பணிந்து ஸ்வாமி! தாங்கள் ஒரு வேலையும் இன்றி சும்மா இருக்கிறீர்களே இது நன்மையா! என கேட்டான்.

துகாராம்: அன்புடையீர், பகவானின் கிருபையை சம்பாதிக்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கிறேன். அவனில் ஐக்கியமாகும் வழியை நாடுகிறேன்.

வர்த்தகன்: ஸ்வாமி! அந்த தொழில் செய்வது நல்லதே. உதரபோஷனைக்கு ஒரு உபாயமும் தேடவில்லையே. அதுவும் அவன் வேலை தானே! பசியைப் போக்கி கவலை இன்றி ஸ்ரீபகவானை துதிப்பதற்கு மார்க்கம் தேட வேண்டாமா? தொழிலைத் தொடங்கி நடத்தாமல் போனால் மனிதன் செயலற்ற நிலையை அடைவது இல்லை. துறவினாலேயே மனிதன் ஈடேறிவிட மாட்டான்.

Koviloor Digital Library

எவனும் ஒரு நிமிஷ நேரமேனும் செயலற்று இருப்பதில்லை. இயற்கையில் விளையும் குணங்களே, எல்லா உயிர்களையும் அவசரமாக தொழில் புரிய வைக்கிறது. மனதால் எவன் இந்திரியங்களை கட்டுப்படுத்திக் கொண்டு கர்மயோகம் பண்ணுகிறானோ அவனே சிறந்தவன். தொழிலின்றி இருந்தால் உடம்பைக் கூட நடக்க வைக்க இயலாமல் போய்விடும்.

செல்வத்தில் பற்றைக்குறைத்து தொழில் செய்தால் என்ன குற்றம்? சொல்லுங்கள். செய்கை பரப்பிரம்மத்தினின்றும் பிறக்கிறது. தன்னில் தான் இன்புறுபவன், தன்னிலே தான் திருப்தி அடைபவனுக்கு செய்கையில் யாதொரு பயனும் இல்லை. ஆனால் செயலின்றி இருப்பதினாலும் அவனுக்குப் பயனில்லை. எவ்வித பயனையும் கருதி எந்த உயிரையும் அவன் சார்ந்திருப்பதில்லை. எப்பொழுதும் பற்று நீக்கி செய்யும் தொழிலால் நலமன்றோ. தமக்கு பற்றில்லாமல் தொழில் செய்து கொண்டிருக்கும் மனிதன் பரம்பொருளை அடைகிறான்.

உலக நன்மையைக் கருதி தாங்கள் தொழில் செய்தால் தகும். எதனை உயர்ந்தோன் செய்கிறானோ, அதனையே மாந்தரும் செய்கின்றனர். மூன்று உலகத்திலும் ஸ்ரீபகவானுக்கு யாதொரு கடமையும் இல்லை. இருந்தாலும் அவன் பெறாத பேறும் இல்லை. என்றாலும் அவன் தொழிலில் தான் இயங்குகிறான். அவன் சோம்பலின்றி தொழில் செய்யாவிடில் இந்த ஜனங்கள் எல்லாம் அழிந்து போவார்கள். குழப்பத்தை அவன் ஆக்கியோன் ஆவான். அவன் அடியார்களாகிய தாங்களும் தொழில் புரியாது போனால் பாமரர்களாகிய நாங்களும் உங்கள் வழியைப் பின்பற்றி பின்னர் அழிந்து போவோம். இவற்றை எல்லாம் தங்களைப் போன்ற உத்தம புருஷர்கள் பகவத் கீதை மூலம் படித்து எனக்கு அறிவுறுத்தினார்கள். தங்களைப் போன்றவன் அல்ல, நான் வெறும் சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை தான். மேலும் கற்றதைத் தங்கள் முன் சொன்னேன்;

Koviloor Digital Library
உங்களுக்கு அறிவுரை கூற அடியேன் அருகதன் அல்லன். இம்மொழிகளைக் கேட்ட துகாராம் சந்தோஷம் கொண்டார். ஸ்ரீபகவானைப் பாடுதல், தியானித்தல், ஆடுதல் முதலிய தொழில் செய்து கொண்டிருந்தவர், அவர் மனதில் இருப்பதை வணிகன் மூலம் ஸ்ரீபகவான் சொல்வித்தான் என ஏற்றுக் கொண்டு ஆனந்தம் கொண்டார். சுவாமிகள் தூய மனத்தவர், குழந்தைகள் சொன்னாலும் ஆனந்தமாக ஏற்பார். அவருக்குத் தெரியாதது ஒன்றும் இல்லை. வேதங்களையே கரை கண்டவர். யார் எதை லௌகீகமாக சொன்னாலும், வேறுவிதமாகக் கொள்ளாமல் இதமாகவே ஏற்பார்.

சுவாமி! அடியேன் தங்களுக்கு சுலபமாக ஓர் வேலை தருகிறேன். எனக்கு கொஞ்சம் புஞ்சை நிலம் உண்டு. அதில் கம்பு, சோளம், தினை பயிரிட்டிருக்கிறேன். தேவரீர் ஆங்கு எழுந்தருளி பறவைகளை ஓட்டி காவல் புரிந்து வருவீராக! விளைவதில் எட்டில் ஒரு பங்கு தருகிறேன் என்றான்.

அவன் கொடுப்பதாக சொன்னதை கவனித்தார் இல்லை. வீட்டில் இருந்தால் பக்திக்கு தடை உண்டாகும்; ஏகாந்தமான இடத்தை நாட வேண்டுமென ஆலோசித்துக் கொண்டிருந்தவருக்கு இந்த அழைப்பு ஸ்ரீபாண்டுரங்கனே வந்து அழைத்தது போல இருந்தது. உடனே புறப்பட்டு விட்டார். வணிகனும் அவரை அழைத்துக் கொண்டு போய் வயலின் பரப்பைக் காட்டி பின் மத்திபாகத்தில் அமைத்திருக்கும் உயரமான பரண் மீது அமரச் செய்து கவண் கல்லையும் கையில் கொடுத்து குருவி முதலியன வந்தால் ஆயல் ஓட்டுக! எனச்சொல்லி தம் வீடு ஏகினான்.

துகாராம் பரண் மீது ஏறினார். உயர்ந்த இடம்; ஏகாந்தம் சூழ்ந்து அவரை எல்லையற்ற பக்தி கொள்ளச் செய்தது. கவணைச் சுற்றினாரேனும் கல் ஒன்றும் செல்லவில்லை. திருவாய் ஸ்ரீபகவானையே பாடிக்கொண்டிருந்தது. நாள்தோறும் வணிகன் கமலா பாயிடம் நித்தியப்படி கொடுத்து வந்தான்.

Koviloor Digital Library

அவளும் அமுது ஆக்கி பார்த்தாவிடம் போய் அமுது படைத்து குழந்தைகளுக்கும் ஊட்டி தானும் பசியாறினாள். சுவாமிகளோ உலகை மறந்தார். பரணை மறந்தார். கவணை மறந்தார். தன்னை மறந்தார். எனினும் ஸ்ரீபகவானை மறவார். இனிய குரலில் கீதங்கள் பாடுவார். அந்த கீதங்களைக் கேட்டு கோடிக்கணக்கான பறவைகள் வயலில் கூடி விட்டன. தம் பசியை போக்குவதற்குத் தேவையான கதிர்களைத் தின்று தீர்த்து விட்டு செவியின் பசியை போக்குவதற்கு பக்தரின் இனிய கீதங்களைக் கேட்டு ஆனந்திக்கும்;சுவாமிகள் மௌனமாக தியானத்தில் இருக்கும் சமயம், பறவைகள் கதிர்களைத் தின்னும். அவர் பாட ஆரம்பித்ததும், சித்திரப் பதுமை போல் மூக்கில் உள்ள தானியமணிகளைக்கூட விழுங்க முடியாமல், அசைவற்றிருக்கும். இப்படி இரண்டு மாதங்கள் கழிந்தன.

வணிகனும் வயலை சரிபார்க்கும் நிமித்தம் வந்து பார்த்தான். சங்கதி அறிந்தான். வயல்களை ஒரு முறை சுற்றிப் பார்த்தான். கதிரில் ஒரு மணிகூட இல்லை. அளவில்லா வேதனையுற்றான். உத்தமன், சத்யசந்தன் என நினைத்து இவ்வேலையிட்டேன். அறுவடையில் பத்தில் ஒரு பங்காவது கிட்டாது போல் உள்ளதே. அந்தோ! தலை விதியோ என நொந்து ஊருக்குள் வந்தான். வேலைக்கு அமர்த்தும் போது இருந்த ஞானம் இப்பொழுது மறந்து விட்டது போலும். பல்லோரிடத்தும் நிகழ்ந்ததைச் சொன்னான். பழித்துப் பேசலானான். நித்தியப்படி கொடுத்ததெல்லாம் வீணாயிற்றே. ருத்திராட்சப் பூனை என்று அறியாது போனேனே. மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கிய கதை ஆகிவிட்டதே என புலம்பினான்.

சில பெரியவர்கள் அவனைத்தடுத்து பாகவத அபசாரம் செய்யாதே, பக்தர்கள் நன்மை புரிவார்களே தவிர தீமை செய்ய மாட்டார்கள். உன் தானியமணிகளுக்கு ஒரு குறைவும் வராது. அறுவடை செய்து அளந்து பார். மகசூல் குறைந்தால்

Koviloor Digital Library

நாம் அனைவரும் சேர்ந்து இதற்கு என்ன வழி செய்யப் போகிறீர்கள் என கேட்போம்? உத்தமர் ஆகையால் ஏதாவது மார்க்கம் தருவார். உன் குறைகளைத் தீர்ப்பார். வீணாக சங்கடப்படாதே என தேற்றினார்கள்.

இவ்வாறுதலைக் கேட்டு ஒருவாறு தேறி அறுவடை செய்தான். களத்தில் கதிரை அடித்து, அளந்து பார்த்தான். எதிர்பார்த்ததைவிட நான்கு மடங்கு அதிகமாகவே இருந்தது. ஆச்சர்யமும், ஆனந்தமும் கொண்டு, ஸ்வாமிகளின் திருப்பாதங்களில் வீழ்ந்து, சுவாமி! தேவரீர் பெருமை தெரியாது தாங்களைப் பழித்து அபசாரப்பட்டேன். என்னை மன்னிக்க வேண்டும் என வேண்டினான். அவருக்கு சொன்னதைக் காட்டிலும் தேறியதில் நான்கில் ஒரு பங்கு கொடுத்தான். சுவாமிகளும் தானிய முழுவதையும் ஏழை, எளியவர்க்கு பகிர்ந்து கொடுத்து விட்டார்.

இதைக் கண்ட வணிகன் இப்பேர்பட்ட மஹான் எங்கும் கிடையாது என எண்ணி உவகை பூத்து தினசரி நித்தியப்படி தவறாது, அவர் வீட்டில் கொண்டு கொடுத்து வந்தான்; சுவாமிகள் அருளாலேயே அத்தியந்த பக்தனானான்.

Koviloor Digital Library

குழந்தைகளே!

அன்பு மெய்யடியார்களாகிய ஸ்ரீநாம தேவர், ஸ்ரீஞானேஸ்வரர், ஸ்ரீபாண்டுரங்கன், ஸ்ரீருக்மணி பிராட்டியார் ஆகியோரின் உரையாடலை கீழே தருகிறது. இதில் அடியார்கள் மீது ஸ்ரீபரந்தாமன் வைக்கும் கருணையும், பக்தர்கள் ஸ்ரீபகவான் மீது வைக்கும் வைராக்கிய பிடிப்பும், இந்த இருவரும் பிரியும் சமயம் பிரிவாற்றாமையால் தவிக்கும் தவிப்பும், அதில் அவன் நடத்தும் திருக்கூத்தும் (கபட நாடக சூத்திரதாரி) உணர்ந்து அனுபவித்துப் படிக்கவும்.

இதைப் படிக்கும்போது, நீங்கள் வேறு பரமன் வேறு அல்ல என்பதை உணரவேண்டும். உணர முடியும். அந்த நிலைக்கு உங்களை மேல் நிலையில் வைத்துப் பார்த்து அவனோடு உறவாடுங்கள்.

நாமதேவரை பகவான் அம்சமான ஞானேஸ்வரர், தன்னுடன் யாத்திரை செய்வதற்காக கூப்பிட பண்டரிபுரம் வந்து (ஞானேஸ்வரர் இருப்பிடம் அலங்காவதி, பண்டரியில் இருந்து 40 கி.மீ) நாமதேவரைக் கண்டு மெய் மறந்து நிற்க, நாமதேவர் ஞானேஸ்வரரைப் பார்த்ததும், அவரைப் புரிந்து கொண்டு சிரசாஸ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்து, திருப்பாதங்களில் இரு நயனங்களையும் அணிந்து கிடக்க, ஞானேஸ்வரர் அவரை இரு கரம் கொண்டு தூக்கி மார்புற இருகத் தழுவிச் சொல்கிறார்.

ஞானேஸ்வரர்: ஸ்ரீபாண்டுரங்கனின் முழு அருளைப் பெற்ற புண்ணியா! இத்தலத்தில் இருவரும் அமர்ந்து, நான் வந்த காரியம் பற்றி ஆலோசிப்போம்.நெடுநாளாக உன்னுடைய சேவை பெற வேண்டுமென்று ஆசை இருந்தது. அது இன்று முற்றுப்பெற்றது. இந்த மாபெரும் பாக்கியம் உன்னால் கிடைக்க, அதை யாம் பெற என்ன புண்ணியம் செய்திருக்க வேண்டும். மேலும் தீர்த்தயாத்திரை செய்ய எமக்கு ஆவலாக

Koviloor Digital Library

உள்ளது. அதை நிறைவேற்ற உன்னால்தான் முடியும்; நான் தனியே போய் வர மனம் இடம் தரவில்லை. பல க்ஷேத்திரங்களுக்கு சென்று வர பல தினங்கள் ஆகும். வழியில் தனியே சென்றால் சாரமில்லை.

உம்மைப் போன்ற பக்தர் துணை இருந்தால், எவ்வளவு மேன்மையாகவும்,ஆனந்தமாகவும் இருக்கும்? இருவரும் சத்விஷயங்களை விவாதித்துக் கொண்டும், தியானத்தில் ஆழ்ந்த வண்ணமாகவும் யாத்திரை செய்தால் எவ்வளவு மங்களகரமாக இருக்கும்? தேவரீர் திருவுள்ளம் என்னவோ?

நாமதேவர் திடுக்கிட்டுப் போனார். பண்டரியைத் தவிர்த்து, வேறு தலத்தை அறியாதவர்; அதையே வைகுந்தம் என கருதுபவர், ஸ்ரீபண்டரி நாதனையே பெரும் துணையாக நம்பி இருப்பவர். ஸ்ரீபாண்டுரங்கனே உயிராகவும், அந்த உயிர் இயங்கும் உடலாக தன்னையும் நினைத்திருப்பவர் தீர்த்த யாத்திரைக்கு தன்னை அழைத்ததும் பெரும் துயர் கொண்டார்.

அதுவும் மஹாபெருமை வாய்ந்த ஞானேஸ்வரரே யாத்திரைக்கு அழைத்தார் என்றால் என்ன பாடுபடுவார்? நாமதேவர் மறுத்தால் பாகவத அபசாரம். இசைந்தால் ஸ்ரீபாண்டுரங்க சேவை நஷ்டம். ஸ்ரீபண்டரிநாதனைப் பிரிந்து உயிர் வாழ முடியுமோ? என்று கண்ணீர் சிந்தி புலம்புகிறார்.

நாமதேவர்: அன்புடையீர்! ஞான சித்தி பெற்ற பின்னரும் தேவரீர் தீர்த்த யாத்திரை செய்யவும் வேண்டுமா? இருந்த இடத்திலேயே பிரம்மானந்தம் அனுபவிக்கக்கூடிய தாங்கள் தீர்த்த யாத்திரை செய்து என்ன பிரயோஜனம் அடையப் போகிறீர்கள்? புண்ணியம் தேட விரும்புவோர் தீர்த்த யாத்திரை செய்ய வேண்டும்.

Koviloor Digital Library

புண்ணியம் தேடுவதால், அதை அனுபவிக்க பிறவி எடுக்க வேண்டும் அதை தேவரீர் விரும்பலாமா? தாங்கள் மஹான்; பிரம்ம ஞானி நீங்கள் செய்யலாம்; அடியேனையும் ஏன் அழைக்கிறீர்? இந்த கோயிலைக் காட்டிலும் சிறப்புடையனவா, பிற கோயில்கள்? இந்த புரியை வைகுந்தமாகக் கருதுபவன், உம்முடன் வர இசைவேனோ? ஸ்ரீபாண்டுரங்கனே உயிர். இந்த உடல் ஸ்ரீபண்டரிநாதனுக்கு சொந்தம். இந்த உடல் பண்டரியை விட்டு எங்கும் செல்லாது. அடியேனை மன்னிப்பீராக என்றார்.

ஞானேஸ்வரர்: ஸ்ரீபாண்டுரங்கனின் காதலா! தாங்கள் கூறியது உண்மையே. பிரம்ம ஞானிகளுக்கு யாத்திரை அவசியம் இல்லை. ஆனாலும் அவன் அசைவற்று கிடக்கிறான் இல்லை. நாடெங்கும் சென்று மக்களுக்கு அறிவுறுத்த விரும்புகிறான். அவன் யாத்திரை செய்வது புண்ணியத்திற்காக அல்ல. பல க்ஷேத்திரங்களில் பல மஹான்களை தரிசிக்கலாம். அவர்கள் சேவை பெறலாம்.

அவர்கள் பஜனையை கேட்கலாம்; அவர்களோடு ஞான ரசத்தைப் பருகலாம். இதை எல்லாம் தாங்கள் பெற வேண்டாமா? நீங்கள் வழிபடும் ஸ்ரீபாண்டுரங்கன் இங்குதான் உள்ளானா? ஸ்ரீரங்கத்தில் பள்ளி கொள்ளும் ஸ்ரீஅரங்கனும், வேங்கடத்தில் உள்ள ஸ்ரீநிவாசனும், ஸ்ரீகாஞ்சி வரதனும், ஸ்ரீசிவனும், வானோரும் மற்றும் எல்லா ஜீவர்களும் ஸ்ரீபாண்டுரங்கன் தானே? இதை மறந்தீரா? அண்டசராச்சரங்களும் அவனால் வியாபிக்கப் பட்டிருக்கின்றன அன்றோ? இதை எல்லாம் அறிந்த மஹானாகிய தாங்களே மயங்கினால் மற்றோர் என் செய்வர்?

நாமதேவர்: (தாங்கவொண்ணா துயர் உற்றார்) சுவாமி! அடியேனுக்கு என்னவோ இந்த பண்டரியை விட்டுப் போக மனமில்லை. இறந்தாலும் இந்த பண்டரியிலேயே இறப்பேன். பிறந்தாலும் இந்த சந்திரபாகா நதியில் மீனாகவோ,

Koviloor Digital Library

படிக்கல்லாகவோ பிறப்பேன். தேவரீர் சொன்னப்படி வேறு தேவாலயங்களில் கூடும் அடியார்கள் கூட்டம் இங்கு இருப்பதை விட சிறப்புற்றதா? எது எப்படி இருப்பினும் தேவரீர் கட்டளையை மீறுதற்கு பெரிதும் வருந்துகிறேன். உடல், பொருள், ஆவி இந்த மூன்றையும் ஸ்ரீபாண்டுரங்கனுக்கே அர்ப்பணம் செய்து விட்டேன். ஆதலால் இந்த உடல் மீது அடியேனுக்கு ஆதிக்கம் இல்லை. அவனுக்கு அடிமைப்பட்டவன் அவன் அனுமதி இன்றி இடம் பெயரேன்.

ஸ்ரீபாண்டுரங்கன் நம்மை கண்டிப்பாக அனுப்பமாட்டார். இருவரும் ஒருவருக்கொருவர் அன்னம் ஊட்டுதல், அடைக்கா இலை மென்று தாம்பூல உச்சிஷ்டம் பெறுதல், துணிமணி மாற்றுதல் இத்தகைய பாந்தவ்யம் இருந்ததால் நம்மை விட மாட்டார் என்று எண்ணியிருந்தார். (ஆனால் ஞானேஸ்வரருக்கு கடைசி வாக்கியம் மகிழ்வை தந்தது)

ஞானேஸ்வரர்: நாமதேவரே! தாங்கள் ஸ்ரீபகவானின் அடிமை என்று இயம்பினீர் அல்லவா? ஸ்ரீபாண்டுரங்கனையே கேட்கலாம் வருக என்று கோவிலுக்குள் அழைத்துச் சென்றார்.

முன்னர் வெகுநாள் நட்பு பூண்டு பிரிந்தவர் போன்றவராயினர் ஸ்ரீபகவானும், ஞானேஸ்வரரும். பகவான், வருக! என்று மகிழ்ச்சியுடன் வரவேற்றார். ஞானேஸ்வரர் ஸ்ரீபாண்டுரங்கனின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினார். தம் ஆனந்தக் கண்ணீரால் ஸ்ரீபகவான் பாதங்களை அலம்பினார். ஸ்ரீபகவான் அன்போடு அன்பனை வாரியெடுத்து உச்சி மோந்து மார்போடு அணைத்துக் கொண்டு தம் அடிகளில் வீழ்ந்து வணங்கி நின்ற நாமதேவரை பார்த்து சொல்கிறார்.

ஸ்ரீபகவான்: வத்ச! இப்புண்ணியவான் யார் என நினைத்தாய். எமது அம்சம். பிரம்ம ஞானம் பெற்றவரில் இவர் முதன்மை ஆனவர். இவரது சகவாசத்தால் நன்மை அடைவாய், (ஞானேஸ்வரரைப்

Koviloor Digital Library

பார்த்து) அன்ப! உன்னை ஆலிங்கனம் செய்து இறுமாப்பெய்தும் பெருமையை எமக்குக் கொடுத்தாய். நீ தன்யன். உன் வாழ்க்கை மங்களகரமாக முடியும்.

ஞானேஸ்வரர்: பரமனே! அடியேன் ஒரு ஆவல் கொண்டேன்! தீர்த்த யாத்திரை செய்ய உத்தேசித்தேன். மேலும் தர்ம அதர்மத்தை மக்கள் எவ்வாறு அனுஷ்டிக்கிறார்கள் என தேசம் தோறும் திரிந்து பார்க்க வேண்டும். பற்பல க்ஷேத்திரங்களில் புண்ணிய தீர்த்தங்களில் படிந்து தேவரீரது விதவிதமான அர்ச்சாவதாரங்களை கண்குளிர காண ஆசை கொண்டேன். ஆங்காங்கே கூடும் பாகவத கோஷ்டிகளின் பாதஸ்பரிசம் தரிசித்து சேவை செய்து பாக்கியம் பெற இஷ்டம் கொண்டேன். இந்த விருப்பத்தை நாமதேவர் கிருபையால் பூர்த்தி செய்ய வேண்டும். அடியேன் விண்ணப்பத்தை அன்னார் அடியோடு மறுத்து விட்டார். தேவரீர் அடிமையாதலால், தங்கள் கட்டளை இன்றி ஸ்ரீபண்டரி தலத்தை விடேன் என்று கூறி விட்டார்.

சுவாமி! தாங்கள் தான் அடியேன் மீது தயை செய்து, உமது புத்திரனை என்னுடன் அனுப்ப வேண்டும். அவரால் தான் யாத்திரை இனிது முடியும்.

ஸ்ரீபகவான்: ஞானேஸ்வரா! நீ நினைத்தது யுக்தமானதே! நாம தேவன், நம்மீதுள்ள வாத்ஸல்யத்தினால் உம்முடன் வருவதற்கு இசைவானோ? அறியேன்.

தனய நாமதேவ்! ஞானேஸ்வரரின் இஷ்டத்தை பூர்த்தி செய்வதில் உனக்கென்ன ஆட்சேபம்?

நாமதேவர்: (கண்ணீர் சொரிய) சுவாமி! தேவரீரை நான் இளமை முதற்கொண்டு ஒரு விநாடியும் பிரிந்ததுண்டா? உம்மை பிரிந்தால் உயிர் நிலைக்குமா? அடியேனை எவ்விதத்திலாவது உம்முடனே இருக்குமாறு நிறுத்தி விடுங்கள். இந்த மஹானுக்கு ஏதேனும் சமாதானம் சொல்லி அனுப்பி

Koviloor Digital Library

விடுவீராக. (என தேம்பித் தேம்பி அழுதார்)

ஸ்ரீபகவான்: (புன்னகை செய்து, ஆலிங்கனம் செய்து உச்சி மோந்து பரிவுடன் சொன்னார்) புத்திரா! நாமும் உம்மை விட்டு பிரிய மனம் இல்லாதவராக இருக்கிறோம். நீ இல்லாது போனால் நாம் யாருடன் உணவருந்தப் போகிறோம்? உன் சுவை உள்ள கீர்த்தனைகள் கேட்டு மகிழ்ந்தவனுக்கு வேற்றோரின் கீர்த்தனைகள் ரசிக்குமா? உன்னால் ஆலிங்கனம் செய்யப்படாத இந்த உடல் மரத்துப் போகுமன்றோ?

எம்மினும் உனது தாய் ருக்மணியே கன்றினை இழந்த பசுபோல் பரிதவிப்பாள்? ஆனால் ஞானேஸ்வரரின் விருப்பத்தையும் மறுக்கலாகாது. அவர் சாட்சாத் பரப்பிரம்ம சொரூபம். அதாவது எமது பூரண அம்சம். நீ எம்மிடம் இருப்பதும், அவருடன் இருப்பதும் ஒன்றே! நீ யாத்திரை சென்றால் உன்னை மறந்துவிடுவோம் என்று நினையாதே; நீதான் அதிஜாக்ரதையாக இருக்க வேண்டும். எல்லா இடங்களிலும், எல்லா சமயங்களிலும் நீ எம்மை மறந்து விடாதே.

எமது நெஞ்சில் உனக்கு எப்போதும் இடம் உண்டு. அதுபோலவே உன் நெஞ்சிலும், நாம் எப்போதும் குடி கொண்டிருப்போம். எந்த இடத்திலும், எப்பொருளிலும் நாம் வியாபித்திருப்பதை நீ உணர்ந்திருந்தும் வியாகூலப்படுவது நலனன்று. என்றும் பண்டரி தலத்திலேயே இருப்பாயாகில் பியோஜனமில்லை.

மக்களுடன் பழகி அனுபவம் பெற வேண்டும். அப்பொழுதுதான் ஞானம் பூர்த்தியாகும். பல நாடுகளில் பல அடியார்களைக் காண்பாய். அவர்களுடன் சேர்ந்து பஜனை செய்வதில் எவ்வளவு ஆனந்தம் இருக்கும் தெரியுமா? தனய நாமதேவ்! அடியோர்களோடு கூடி பஜனை செய்வதில் எம்மை மறந்து விடாதே. பஜனையில் ஈடுபடுவாயாகில் பண்டரிபுரத்தையே

Koviloor Digital Library

மறந்துவிடுவாய். அதிக நாட்கள் யாத்திரையில் களிக்கலாகாது. வெகு துரிதமாக வர வேண்டும். உன்னைக் கண்ட பிறகுதான் எமக்கு உயிர் மீண்டது போலிருக்கும் என்றார்.

ஞானேஸ்வரா!

நாமதேவன் எம் செல்லப் புதல்வன். எல்லாப் பிள்ளைகளிலும் இவனே சிறந்தவன்; இவனுக்கு யாத்திரா மார்க்கத்தில் ஆயாசம் தோன்றாதவாறு பாதுகாக்க வேண்டும். யாதொரு துன்பமும் இவனை பீடிக்காதவாறு பாதுகாக்க வேண்டும். அதிக கால தாமதம் செய்ய வேண்டாம், சீக்கிரமாக எம் குமாரனை கொண்டு வந்து சேர்ப்பீராக.

இவனுக்குத் தந்தையும் நீரே! உமக்கிவனை அடைக்கலமாக ஒப்படைக்கிறேன். ஞானேஸ்வரா! எம் குமாரன் பேரிலுள்ள பிரியம் எமக்குத்தான் தெரியும்! எம் குமாரனை விட்டு இனி எப்படி உண்ணப் போகிறோமோ? உறங்கப் போகிறோமோ? நாமதேவனின் தாய் ருக்மணி தேவியார் அதிகாலையில் வந்து குமாரனை எங்கே என்று கேட்டால் என்ன பதில் சொல்வோம்? எம்மிலும் அவள் அதிக துயர் அடைவாளே; அவளுடைய துயரத்தை எப்படிப் போக்குவது? என உள்ளம் கசிந்து கண்ணீர் ஆறாகப் பெருக, நாமதேவர் கரத்தைப் பிடித்து ஞானேஸ்வரர் கரத்தில் ஒப்படைத்தார்.

ஞானேஸ்வரர் கண்களிலும் கண்ணீர் பெருக்கெடுத்தோடியது. நாமதேவர் கதறுகிறார்.

குழந்தைகளே!

இம்மூவர் நிலையையும் எப்படி எழுதுவது? இவர்களைத் தேற்றுவது யார்? அந்த இடத்தில் அன்னை ருக்மணிதேவி இல்லை போலும், இருந்தாலும் ருக்மணிதேவி அன்னையும் பிரிவாற்றாமையால் அழுதுதான் தீர வேண்டும். மூவரும் ஒருவருக்கொருவர் கண்ணீரை துடைத்து விடுகின்றனர்.

Koviloor Digital Library
என்னே உன் நடிப்பு! சர்வ ஜீவ தயாபரா! நடத்து உன் நாடகத்தை!

அன்புச் செல்வங்களே!

ஸ்ரீபரம்பொருளின் தன்மையை உணருங்கள். ப்ரபோ! உன் பக்த வாத்ஸல்யத்தை, பக்த பரிபாலனத்தை, பக்த பராதீனத்தை எழுதவோ, சொல்லவோ முடியாது. அதற்கு வார்த்தைகள் இல்லை. குழந்தைகளே! நீங்களும் அனுபவியுங்கள்; அனுபவிக்க உங்களால் முடியும்; இது உறுதி!!!

அன்புச் செல்வங்களே!

நன்கு உணர்ந்து பாருங்கள். அந்த பரப்பிரம்மம் (ஸ்ரீபரமாத்மா) ஞானேஸ்வரரை வலப்பக்கத்திலும், நாமதேவரை இடப்பக்கத்திலுமாக வைத்து இருகரமும் தோள்களில் போட்டபடி, தான் மத்தியிலுமாக இருந்து வழி நடத்தி சந்திரபாகா நதிக்கரை வரையில் வழி அனுப்ப வந்தார்.

இந்த காட்சியை உற்று நோக்கும்போது ஜீவாத்மா (நாம தேவராகவும்) ஸ்ரீபரமாத்மா (ஞானேஸ்வரராகவும்) பரப்பிரம்மம் (ஸ்ரீபாண்டுரங்கனாகவும்) காட்சி கொடுக்கிறது.

இந்த மூன்றிலும் பிரிவு என்ற சங்கல்ப ரூபத்தில் மாயை மூடியிருக்கிறது. ஒன்றுக்குள் ஒன்று ஐக்கியம். ஆனால் வாசனாரூபத்தில் ஒட்டாததை ஒட்டுவதைப் போல் காட்டி பிரமிக்க வைக்கும் சாமார்த்தியம். நதிக்கரைக்கு வந்ததும் மூவரும் சங்கல்பம் செய்கின்றனர். அவர்கள் சங்கல்பத்தின் விளக்கம் அவர்களுக்கே தெரியும்.

சங்கல்பம் முடிந்ததும், ஸ்ரீபகவான் திருவடிகளில் ஸ்ரீஞானேஸ்வரரும், நாமதேவரும் வீழ்ந்து வணங்கி ஸ்ரீபரம்பொருள் திருவடிகளில் இரு நயனங்களையும் அணிந்து திருவடி தூளி சிரமேற்கொண்டு இருவரும் பிரியாவிடை கொள்கின்றனர்.

ஞானேஸ்வரர் நாமதேவரை இடையைத் தாங்கிய வண்ணம் அழைத்துச் செல்ல, நாமதேவரால் நடக்கக்கூட

Koviloor Digital Library

முடியவில்லை. நாமதேவரை பச்சைக் குழந்தையைப் போல் அணைத்தவண்ணம், ஞானேஸ்வரர் செல்ல நாமதேவர் இரு கரத்தையும் ஸ்ரீபகவானை நோக்கி நீட்டிய வண்ணம் அன்னாய்! எந்தையே! உன்னையும் விட்டுப்பிரியும் காலம் வந்ததே? உன் பிரிவை நான் எப்படி சகிப்பேன்? இனி உன்னை நான் என்று காண்பேன்? என்று குமுறிச் செல்வதையும், ஸ்ரீபகவான் இருகரம் நீட்டி ஆசி கூறியவண்ணம் உடலில் இருந்து உயிர் பிரிந்து போகும் பான்மையிலும், குழந்தையைப் பறிகொடுத்த தாய் போலும் நிற்கும் காட்சியும், கண்களிலிருந்து கண்ணீர் கரை புரண்டு ஓடும் காட்சியும், ஞானேஸ்வரர் இந்த இரு நிலைகளையும் கண்டு அப்பால் நின்று ஆனந்திக்கும் நிலையையும் உணர்வதால் எழுத முடியவில்லை. ஸ்ரீபரம்பொருள் மாயையின் தன்மையில் நடித்துக்காட்டுகிறது. இது உண்மை அல்ல, அத்தனையும் நடிப்பு, ஜீவர்களை மயக்கும் வேஷம். அது நடத்தட்டும்.

அதிகாலையில் அன்னை ருக்மணி பிராட்டியார், ஸ்ரீபகவானின் திருவடிகளை சுத்திகரிப்பதற்காக ஜலத்துடன் வருகிறாள்; ஸ்ரீபகவானை இருப்பிடத்தில் காணோம். திகைக்கிறாள்; நோக்கினாள், புரிந்தது. ஆற்றங்கரைக்கு வருகிறாள். ஸ்ரீபகவான் நதியின் எதிர்கரையைப் பார்த்த வண்ணம் ஸ்தம்பித்து நிற்பதையும், ஸ்ரீபகவானின் திருக்கண்களிலிருந்து கண்ணீர் அருவி பாய்ந்து சந்திரபாகா நதியுடன் கலப்பதையும் கண்டு, தன் புடவைத் தலைப்பால் ஸ்ரீபகவானின் கண்ணீரைத் துடைத்து சுவாமி! உலகங்கள் நிலைபேரினும் கலங்கா நெஞ்சம் படைத்தவர் இன்று கண்ணீர் விடுவதன் காரணம் என்ன? இத்தகைய கலக்கம் நடப்பதற்கு இங்கு என்ன நடந்தது? உயிருக்கு உயிராய் மதிக்கும் பக்தர் எவரேனும் தங்களை விட்டுப்பிரிந்தாரோ? அல்லது அவனுக்கு ஏதேனும் விபத்து நடந்துவிட்டதா? இயம்புவீராக என அன்புடன் கேட்டாள்.

Koviloor Digital Library

ஸ்ரீபகவான்: பிரியே! நமது புத்திரனாகிய நாமதேவர் நம்மை விட்டுப் பிரிந்து ஞானேஸ்வரருடன் தீர்த்த யாத்திரைக்குச் சென்று விட்டான். அதனால் அளவில்லா துன்பம் அடைந்தேன். அவன் நம் பக்கம் இருப்பது இணை கூற முடியாத இன்பம் தந்தது. அவன், நாரத கானத்தையும் பழிக்கும் மதுரத் துவனியிலே பாட கேட்டு மகிழ்ந்தோம்.

இனி அந்த இசையை எப்பொழுது கேட்கப்போகிறோம்? நம் பிரிய மகன் நாமதேவனால் ஆலிங்கனம் பண்ணப்படாத உடல் இனி மரத்துப் போகுமன்றோ? சகல பொருட்களையும் ஸ்ரீபாண்டுரங்கனாகவே மதிப்பவன், சகலத்தையும் நமக்கே தியாகம் செய்தவன் ஆகிய மஹானை பிரிந்து இனி எப்படி இருப்பேன்? அவனது உச்சிஷ்டம் தேவாம்ருதம் என உண்டு வந்தேன். இனி எனக்கு பசி அமர்த்துகிறவர் யாவர்? அவன் இல்லாமல் அர்ச்சகர்கள் செய்யும் சாத்துப்படி வெறும் பாரமாக அன்றோ இருக்கும். நம் மகனைப் பிரியும் காலமும் வந்து விட்டதே! எனக்கதறி அழுதார்.

ருக்மணி: (கபட நாடகத்தை உணர்ந்தாள். புன்முறுவலுடன் மீண்டும் ஸ்ரீ பகவானின் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே) பிராண நேசா! பிரபோ!! அடியவர்க்கடியவா!!! தேவரீர் நாடகம் வெகு அழகாக இருக்கிறது, மாயையின் சாயையே நான். என்னையும் மிஞ்சி விட்டீர். என்னே உம் நடிப்பு? தேவரீர் இவ்விதம் சித்தம் கலங்குவது அழகல்ல? நாமதேவன் நம் அருங்குமரன் தான் அதில் சந்தேகமில்லை.உம் புத்திரர்களில் அதிக பிரியம் உள்ளவனென்று அவனை விரும்பினால் உலகத்தோர் உம்மை பாரபட்சம் உள்ளவன் என்று சொல்லுவார்கள். உமது நிலைக்கு அது ஏற்றதன்று. நாமதேவனைப் போலவே பக்தி, பஜனை பண்ணுவதில் சிறந்த பக்தர்கள் எவ்வளவோ பேர் இருக்கிறார்கள்.

Koviloor Digital Library

அவர்களையும் பரிபாலிக்க வேண்டியது, உமது கடமையன்றோ? நாமதேவன் பேரிலேயே எண்ணம் உள்ளவராக இருந்தால மற்ற பக்தர்களை கவனிக்கும் தன்மை விட்டுப் போகும். உமக்கு உள்ள (தஸ்கரனாம்பதி) அடியார்கள் உள்ளத்தில் நிறைந்தவன் என்ற நாமம் பொய்யாகி விடும். இத்திருக்கோவிலில் தான் தேவரீர் எழுந்தருளி இருக்கிறீர் என்று நினைத்து விட்டீர் போலும். சராசரங்கள் யாவும் தனது சரீரமாகவும், தாங்கள் அவற்றுள் இயங்கும் ஆன்மாவாகவும் வியாபித்திருக்கும்போது நாமதேவரை விட்டு பிரிந்ததாக அதிக துயரத்தால் வருந்துதல் எதற்காக? ஸ்தலங்கள் அனைத்திலும் தாங்களே இருக்க, மீண்டும் நாமதேவரை காணுவது எப்போது? என்று ஏக்கம் ஏன்? சுவாமி! அடியார் மேல் உமக்குள்ள அன்பாலும், அதிவாத்ஸல்யத்தாலும் இவ்விதம் புகல்கிறீர். தேவரீர் இல்லாத இடம் இல்லை. அறியா பொருள் இல்லை. ஆதலால் துக்கத்தை விடுத்து, நம்மை தரிசிக்க வரும் அடியார்கள் வேண்டுமென வேண்டியதை அருள்பாலிப்பீராக! என்று இயம்பி அன்னை அப்பனை திருக்கோவிலுக்கு அழைத்துச் சென்றார்.

அன்புக்குழந்தைகளே!

பக்திப் பெருக்கில் நீங்கள் மூழ்கி விட்டீர்களானால், அந்த ஸ்ரீபரமாத்மா உங்களிடம் அத்தனை வாத்ஸல்யம் வைத்து விடுவான். அவன் உங்கள் வசம் வைத்திருக்கும் அன்பை, பரிவை, பாசத்தை, கடாட்சத்தை, அருள் பிரவாகத்தை, வாத்ஸல்யத்தை, பிணைப்பை,கருணையை கடல் மடை திறந்த வெள்ளம் போல் ஆக்கிக் கொள்வான். அதை நீங்கள் எல்லோரும் அனுபவிக்க வேண்டும். அனுபவிக்க முடியும். அனுபவியுங்கள்.

அருட்குழந்தைகளே!

பக்தவத்ஸலன், பதிதபாவனன், அடியவர்க்கு அடியவன் ஆகிய அந்த பரம்பொருள் ஞானேஸ்வரர் (ஸ்ரீபரமாத்மாவாக)

Koviloor Digital Library
நாமதேவரை(ஜீவாத்மாவை) அழைத்துச் செல்லும் போது சில ஞான ரசத்தை ஊட்டிக் கொண்டே சென்றது. நாமதேவரை தனதாக்கிக் கொண்டது.என்னே கருணையின் மஹத்துவம் அந்த அருளுரையை அவன் அருளால் தருகிறது. உணர்ந்து அனுபவியுங்கள்.

விம்மி விம்மி அழும் நாமதேவரை ஞானேஸ்வரர் தழுவி கண்ணீரைத் துடைத்து, அன்ப! மஹான்! இவ்விதம் வீணாக வருந்தலாமா? நீர் வழிபடும் பரம்பொருளாகிய ஸ்ரீபாண்டுரங்கன் தொட்ட தொட்ட இடம் எல்லாம் இருக்க விட்டுப் பிரிகின்றோமே என ஏன் வருந்த வேண்டும்?

ஏனெனில் தாங்கள் இந்த புண்ணிய தலத்தை விட்டு அகன்றதில்லை. ஆதலால் அடங்காத் துயர் கொள்கிறீர். எங்கு சென்றாலும் அவனையே தரிசிக்கப் போகிறோம். அவனையே பாடப் போகிறோம். அவனையே புகழப்போகிறோம் என்பதை மறந்து விடாதீர்.

அன்ப! உமது வாழ்வு அற்புதமானது. நீர் பிரிந்தால் உயிர் பிரிகிறதென ஸ்ரீபகவான் வருந்துகிறார். அவருடைய திரு உள்ளத்தை நீர் கவர்ந்து விட்டதால், பகவானுக்கு வழங்கும்படியான தஸ்கரனாம்பதி என்ற நாமம் உம்முடையதாகி விட்டது. நீர் என்னுடன் வந்து விட்டதால் ஏனைய பக்தர்களின் பஜனைகளைக் கேளாமலும், உம் உச்சிஷ்டத்தை சுவைத்த எம்பிரான், அர்ச்சகர்கள் ஆராதிக்கும் அறுசுவை பதார்த்தங்களை ஏறிட்டுப் பார்க்காமலும் இருக்க அன்னை ருக்மணி பிராட்டியார் தேற்றிக் கொண்டு வருகிறார்.

அன்ப! தன்னைத் தான் அறிந்து ஜெயித்தோன், பொறிகளை அடக்கியோன், எல்லா உயிர்களிலும் தானே ஆனவன், தொழில் செய்து கொண்டிருப்பினும் அதில் அவன் ஒட்டுவதில்லை. தன்னை அறிந்த ஞானி தான் எதைச் செய்தாலும்,

Koviloor Digital Library

செய்வதாக எண்ணுகிறான் இல்லை. பார்த்தாலும், கேட்டாலும், ஸ்பரிசித்தாலும், உயிர்த்தாலும், உண்டாலும், உறங்கினாலும், நடந்தாலும், விழுந்தாலும், விழித்தாலும், புலம்பினாலும் எந்த காரியத்திலும் கருவி கரணாதிகள் செய்கின்றன என கருதுகிறான்.

உண்மை சந்நியாசிகள், யோகிகள் பற்றுகளைத் தொலைத்து ஆத்ம சுத்தியின் பொருட்டு சரீரத்தாலும், மனத்தாலும், புத்தியாலும் இன்றி இயந்திரமாக தொழில் செய்வர். தன்னை வசம் கொண்ட ஆன்மா, எல்லா கர்மங்களையும் மனத்தால் துறந்து எதனையும் செய்வதும் இன்றி, செய்விப்பதும் இன்றி ஒன்பது வாயில் கோட்டையில் இன்புற்று இருக்கிறான்.

செய்கை, செய்கையின் தன்மை, செய்கையின் பயன் இந்த மூன்றும் இறைவன் நமக்குத் தரவில்லை. இயற்கையே இயல்பாக நடைபெறுகிறது. எவனையும் பாபி என்றோ, நற்செய்கை உடையவனென்றோ கடவுள் ஏற்பதில்லை. அஞ்ஞானத்தால் ஞானம் சூழப்பட்டு இருக்கிறது. அதனால் ஜனங்கள் மயங்குகிறார்கள். அந்த அஞ்ஞானத்தை ஆத்ம ஞானத்தால் அழித்தவர்களுடைய ஞானம், சூரியனைப் போன்றதாய் பரம்பொருளை ஒளியுறக் காட்டுகிறது.

பிரம்மத்தில் புத்தியை நாட்டி அதுவே தானாய் அதில் நிஷ்டை எய்தி ஈடுபட்டோர், பாபங்களை எல்லாம் கழுவப் பெற்றோர் ஆவர். கல்வியும், வியாஜ்யமும் கற்ற பிராமணனிடத்தும் நாயைத் தின்னும் புலையனிடத்ததும், வாஸனைத் திரவியங்களிடத்தும், மலத்தினிடத்தும், பொன், பொருள்களிடத்தும், மண்ணிடத்தும், சம பார்வை உடையவன் மனம் கழுவப் பெற்றோர் ஆவர். சரீரம் நீங்கு முன்னர் இவ்வுலகத்திலேயே விருப்பாலும், வெறுப்பாலும், சினத்தாலும், காமத்தாலும் விளையும் வேகத்தை எவன் பொறுக்க வல்லானோ அவனே யோகி. மற்றையோர் போகி.

Koviloor Digital Library

இந்த உலக பிரேமையை எப்படி விடுவது?

கண்களுக்கும், காதுகளுக்கும், வாய்க்கும், நாசிக்கும் சுவையாக இருந்து இனிமையை சதாவும் கொடுக்கும் இந்த வஸ்துக்களை எப்படி மறப்பது? இதைவிட நலம் கொடுக்கப்பட்டது வேறு உண்டோ? இந்த புத்திர, மந்திர, களத்ராதிகளால் எவ்வளவு சுகம் அனுபவிக்கிறோம்? நம் பிள்ளைகள், நம் மீது எவ்வளவு பாசம் உள்ளவர்களாக இருக்கிறார்கள். "கடந்த ஞானியும் கடப்பரோ மக்கள் மேல் காதல்" என்றபடி இந்த குழந்தை செல்வங்களை எப்படி மறக்க முடியும்? என ஜீவர்கள் மயங்குகிறார்கள். அந்த மயக்கத்தை தீர்க்க ஓர் கதை சொல்கிறோம். கருத்துடன் கேட்பீர்களாக:

ஒரு ஊரில் ஒரு மிட்டாய் கடை வியாபாரி இருந்தான். பக்தி சிரத்தையிலும், ஸ்ரீ சாதுக்களை உபசரிப்பதிலும் மிகுந்த ஈடுபாட்டுடன் காணப்பட்டான். ஒரு சமயம் ஓர் சாது மதியம் வெயில் தாளாமல், அவன் கடை நிழலில் நின்றார். அந்த வர்த்தகன் சாதுவை வணங்கி, ஸ்வாமி! ஏதாவது பசிக்கு உணவு ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று பணிவாக வேண்டினான். அவரும் அவனை உற்றுணர்ந்து நோக்கி சம்மதித்தார். ஆகாரம் உண்டவுடன் சிரம பரிகாரமாக சற்று அமர்ந்தார்.

அவனும் ஸ்வாமி! இன்னும் ஏதேனும் வேண்டுமா? எனக் கேட்டான். அவரும், ஐயா! இந்தத் துணியை கொஞ்சம் தைக்க வேண்டும். இரவில் கொசு உபத்திரவம் அதிகமாக இருக்கிறது என்றார். அதற்கு அவனும் அதை வாங்கி தைத்து பணிவுடன் கொடுத்தான். அந்த சாதுவும் அவன் மனோநிலையை உணர்ந்தார். பேருபகாரியாக இருக்கிறானே, இவனுக்கு எதைக்கொடுப்பது? என சிந்தித்தார். பிறகு அந்த வியாபாரியிடம், குழந்தாய்! உன்னுடைய உபகாரம் போற்றுதற்குரியது. உன்னை ஸ்ரீவைகுண்டம் அழைத்துச் செல்கிறேன். வருகிறாயா? நீ செய்யும் தருமங்கள் அதிக முக்கியத்துவம் பெற்றன. ஆகையால் உன்னை அங்கு அனுப்புகிறோம். நீ என்ன சொல்லுகிறாய்? என்றார்.

Koviloor Digital Library

அவனும் அவர்தாள் பணிந்து, ஸ்வாமி! கிடைத்தற்கரிய இடத்தை அடியேனுக்குத் தர தாங்கள் இசைக்கிறீர்கள். ஆனால் நான் அந்த அளவுக்கு தகுதி வாய்ந்தவன் அல்ல. காரணம் எனக்கு இரண்டு குமாரர்கள் இருக்கிறார்கள். அவர்கள் ஓரளவு என் நிலைக்கு வந்து இந்த பொறுப்புகளை ஏற்றுக் கொண்டால் எனக்கு விடுதலை கிடைக்கும். என்னை யாரும் தேட மாட்டார்கள். ஆகவே, ஸ்வாமி! ஒரு பத்து வருஷங்கள் கழித்து தாங்கள் வந்தால் அவசியம் நான் தங்களுடன் வந்து விடுவேன் என பணிந்து கூறினான். சாதுவும் அவன் பாசத்தின் நிலை கண்டு பரிதாபத்துடன் பத்து வருடங்கள் கழித்து வருவதாக சொல்லிச் சென்றார்.

அடுத்து பத்து வருடங்கள் கழித்து அந்த சாது அந்த வியாபாரியைத் தேடி அங்கு வந்தார். அங்கு நிலமைகள் மாறி இருந்தன. வியாபாரியைக் காணவில்லை. அந்த இடத்தில் ஒரு சிறிய கடையை வைத்து வியாபாரியின் மகன் ஒருவன் அமர்ந்திருந்தான். ஒருவன் எதிரில் உள்ள ஓர் நிலத்தை இரு மாடுகள் பூட்டி உழுது கொண்டிருந்தான்.

அந்த சாதுவும் அவர்களை அணுகி விபரம் கேட்டார். அவர்களில் மூத்தவன் சொன்னான், ஸ்வாமி! அன்று நாங்கள் சிறுவர்களாக இருந்தோம், அன்று எங்கள் தந்தை எங்களை நன்கு கவனித்து வந்தார். சுமார் 6 வருடங்களுக்கு முன் இறந்து விட்டார். இந்த கடையும், இந்த நிலமும் தான் எங்கள் தந்தை கொடுத்த சொத்து. இதை வைத்து கஷ்ட ஜீவனம் செய்து கொண்டிருக்கிறோம். இந்த இரண்டு மாடுகளில் இந்த மாடு எங்களுக்காக உயிரைக் கொடுத்து பாடுபடுகிறது. சரியாக உணவு அருந்துவது இல்லை. நீர் அருந்துவது இல்லை. கடுமையாக உழைக்கிறது எனச்சொல்லி முடித்தான்.

அந்த சாதுவும் அந்த எருதுவை கவனித்தார். அந்த பையன்கள் இல்லாத சமயம் அந்த எருதுவின் சமீபம்

Koviloor Digital Library

போய், அடப்பாவமே! இப்படி மாறி விட்டானே? என ஆச்சரியப்பட்டு, அதன் தலையில் தீர்த்தத்தை புரோட்சித்து, எம் அருமை குழந்தாய்! இந்நிலைக்கு ஆளாகி விட்டாயே? ஏன் இப்படி சிரமப்படுகிறாய்? நடந்ததை மறந்து விடு. இப்பொழுது சொல். நீ சம்மதித்தால் உன்னை ஸ்ரீவைகுண்டம் கூட்டிச் செல்கிறோம் என கூறினார். அவனும் எருது வடிவில் இருந்து கொண்டே அவர்தாள் பணிந்து, ஸ்வாமி! என் குழந்தைகள் நிலையைக் கண்டீர்களா, அவர்கள் நிலையைக் கண்டும் என்னை அழைக்கிறீர்களே? என் குழந்தைகள் படும் துயரம் என்னால் தாள முடியவில்லை. என்னுடைய முயற்சியால் அவர்கள் துயரத்தை போக்கி விடுவேன். ஒரு ஐந்து வருடங்கள் கழித்து வந்தால் அவசியம் நான் தங்களுடன் வந்து விடுவேன். என்னை மன்னித்து விடுங்கள் என வேண்டினான். சாதுவும் அவன் நிலை கண்டு வருந்தி, இந்நிலையிலும் மக்கள் மேல் பிடிப்பை விட முடியாமல் தவிக்கிறானே இந்த ஜீவனின் நிலைதான் என்ன? என வியந்து சென்றார்.

அடுத்து ஓர் ஐந்து ஆண்டுகள் கழித்து வந்தார் சாது. நிலைமை மிகவும் மோசமாக இருந்தது. கடையையும் காணவில்லை. மாட்டுத் தொழுவத்தில் மாடுகளும் இல்லை. அந்த பையன்கள் இருவரும் வீட்டினுள் இருந்தனர் போலும்.

வாசலில் ஒரு நாய் படுத்திருந்தது. சாதுவைக் கண்டதும் சப்தித்து குறைத்தது. நாயின் குரல் கேட்டதும், பையன்கள் இருவரும் வெளியே வந்தனர். மிகுந்த வறுமையுடன் காணப் பட்டனர். வேண்டா வெறுப்பாக பேசினார்கள், ஸ்வாமி! உண்மையாக உழைத்த மாடு இரை தின்னாமல், ஜலம் அருந்தாமல் உழைத்து உழைத்து இறந்துவிட்டது. அடுத்த மாட்டை விற்றுவிட்டோம். இப்பொழுது இந்த நாய் தான் எங்களைக் காப்பாற்றி வருகிறது. நன்றி உள்ள நாயாக இருக்கிறது.

Koviloor Digital Library

எங்காவது வெளி இடங்களுக்குச் சென்று ஏதாவது தின்று விடும். எங்களை தொந்தரவு செய்யாது. இரவும், பகலும் இங்கு தான் காவல் காத்து வருகிறது என நாயைப் புகழ்ந்தும், தங்கள் வறுமைக்கு வருந்தியும் சென்று விட்டார்கள். சாதுவும் நாயைக் கண்டு ஆச்சர்யம் அடைந்தார். அதே வியாபாரியே நாயாக பிறந்திருக்கிறான் என உணர்ந்தார். நாயின் தலையில் தீர்த்தத்தை புரோட்சித்து பேசும் தன்மையை உணர்த்தினார்.

அந்த நாயும் அவர் திருவடியில் பணிந்து எழுந்து கண்ணீரைப் பெருக்கி, ஸ்வாமி! என் குழந்தைகள் நிலையைக் கண்டீர்களா? தெய்வம் இப்படியும் சோதிக்குமா? என் குழந்தைகளைக் காப்பவர் இனி யார்? என பிரலாபித்து அழுதான். சாதுவும் அவன் நிலை கண்டு, குழந்தாய்! உன் நிலை பரிதாபமாக இருக்கிறது. அவர்களுக்காக நீ வருந்தாதே அவர்கள் உன்னை நினைக்கிறார்களா? நீ உன் தூலத்தை விட்ட அன்றே உன்னை மறந்து விட்டார்கள். ஆனால் உன்னால் தான் மறக்க முடியவில்லை. நீ அவர்களை மறந்தால் ஆனந்தமாக வாழலாம். நீ செய்த தருமம் உன்னை ஒவ்வொரு ஜன்மாவிலும் கடைத்தேற்ற வருகிறது. குழந்தாய்! இந்த நிமிஷமாவது அவர்கள் உன் பிள்ளைகள் அல்ல என்று உணர்; எம்முடன் வந்து விடு; அவர்களை காப்பாற்றுகிறவன் காப்பாற்றுவான். உன் முயற்சி தேவையில்லை. நீ வருகிறாயா? என அழைத்தார். அவனும், ஸ்வாமி! இன்னும் மூன்று ஆண்டுகள் கழித்து வந்தால் அதற்குள் என் குழந்தைகளுக்கு ஓர் நல்ல காலம் வந்து விடாதா? அன்று அவசியம் நான் தங்களுடன் வந்து விடுவேன் எனச்சொல்லி அவரை அனுப்பி வைத்தான்.

அந்த சாதுவும் அவன் புத்திர பாசத்தையும், பற்றுதலான பிடிப்பையும், ஜீவர்களின் நிலையையும் கண்டு வியந்து சென்று மூன்று ஆண்டுகள் கழித்து வந்தார். அந்த நாயையும் காணவில்லை. அவர்கள் அதிகமாக நொந்து

Koviloor Digital Library

போயிருந்தனர். அவர்கள் சாதுவைக் கண்டதும், கோபத்துடன் உமக்கு வேறு வேலை கிடையதா? இத்துடன் நான்கு முறை வந்திருக்கிறீர்?

ஒவ்வொரு முறையும் நீர் வந்து செல்லும்போது எல்லாம் மேலும் மேலும் வறுமையைத் தான் கொண்டு வந்து கொடுத்துச் செல்கிறீர். அதற்கு நாங்கள் தானா அகப்பட்டோம்? உமக்கு வேறு இடம் கிடையாதா? இனி இங்கு வந்தால் தொலைத்து விடுவோம் என பயமுறுத்தினர். அவரும் புன்முறுவலுடன், குழந்தைகளே! வறுமையின் காரணமாக இப்படிப் பேசுகிறீர்கள். உங்கள் நிலைமை மிகவும் பரிதாபகரமாக இருக்கிறது. உங்கள் நிலைக்கு இரங்கி உங்களுக்கு ஓர் உபகாரம் செய்யவே இப்பொழுது வந்திருக்கிறோம். ஆத்திரம் கொள்ளாதீர்கள் என்றார்.

அவர்களும் சாந்தம் அடைந்து நாங்கள் என்ன செய்ய வேண்டும்? எங்கள் கஷ்டம் தீர ஓர் வழி சொல்லுங்கள் என வேண்டினார்கள். அவரும் புன்முறுவலுடன் உங்கள் நாய் என்ன ஆயிற்று? என கேட்டார். அது ஒரு வருடத்திற்கு முன் இறந்துவிட்டது. அதை அந்த குப்பைக் குழியில் போட்டு மூடிவிட்டோம் என சொன்னார்கள். அவர்களை ஓர் மண் வெட்டி கொண்டு வரும்படி செய்து, அந்த இடத்தை தோண்டும்படி ஆணையிட்டார். அவர்களும் அதைத் தோண்டினார்கள். சற்று தூரம் தோண்டியதும் நவரத்தினம் நிறைந்த ஓர் பாத்திரம் தென்பட்டது. அதன்மேல் ஓர் நாகம் படுத்திருந்தது. சாது அதை வியாபாரி தான் என உணர்ந்தார். உடனே இருவரிடமும் ஆளுக்கு ஓர் கழியை கொடுத்து இதைக்கொண்டு அந்த சர்ப்பத்தை அடித்துக் கொல்ல வேண்டும். அதை அடிக்கும் போது சீ, சனியனே தொலைந்து போ என சொல்லிச் சொல்லி அடிக்க வேண்டும் என சொன்னார்.

Koviloor Digital Library

அவர்களும் அதே வார்த்தையை சொல்லிச் சொல்லி அந்த சர்ப்பத்தை அடித்துத் தூக்கி எறிந்து விட்டு அந்த பொக்கிஷத்தை எடுத்துக் கொண்டு சாதுவுக்கு நன்றி கூட சொல்லாமல் ஆசையின் காரணமாக சென்று விட்டனர்.

சாதுவும் அந்த சர்ப்பத்தின் அருகில் அமர்ந்து கொண்டு, மகனே! வசனங்களும், அடிகளும் போதுமா? இன்னும் வேண்டுமா? என கனிவுடன் கேட்டார். அந்த சர்ப்பமாகிய வியாபாரியும் சோர்ந்த நிலையில் புத்திர பாசம் அற்ற நிலையில், ஸ்வாமி! போதும், போதும் இந்த வாழ்க்கை. இந்த நான்கு ஜன்மாவிலும் என் குழந்தைகள், நானே காப்பாற்ற வேண்டும் என்ற பந்த பாச உணர்ச்சிக்கு நல்ல, உயர்ந்த சன்மானமாக ‘‘சீ, சனியனே தொலைந்து போ’’ என்ற வார்த்தை கிடைக்கப் பெற்றேன்.

இது போதும் ஸ்வாமி! உடனே என்னை அழைத்துச் செல்லுங்கள், இனி உம்மையல்லால் வேறு கதியில்லை என சரண் அடைந்தான். எந்நிலையிலும் தம்மை சரண் அடைந்தவனை அது காப்பாற்றியே தீரும். இது உறுதி.

குழந்தைகளே!

பாசத்தின் பிடிப்பை உணருங்கள். இப்படி ஒரு வாழ்வு தேவையா? பொன்னுக்கும், பொருளுக்கும், புகழுக்கும், கௌரவத்திற்கும் அடிமை ஆக வேண்டாம். உங்கள் பாசத்தின்படி பிறவி அமைகிறது. பிறவியின்படி குணம் அமைகிறது. உங்கள் குணத்திற்கேற்ப குழந்தைகளும், உறவு சுற்றமும் அமைகிறது. அந்த உறவும், சுற்றமும் உலகமாகிறது. இந்த ஜகத்தின் நிலையில் ஒரு க்ஷணமும் பாவனை வேண்டாம்.

உங்கள் உலக பாவனையை விட்டுவிட்டால் உலகம் மறையும். நிதானமாக, அமைதியாக, ஓர்மையாக, அடக்கமாக, சகிப்புத் தன்மையுடன் மஹா சாந்தியாக, மஹா மௌனமாக இருக்கப் பழகுங்கள்.

Koviloor Digital Library

சிறுத்தன பெருக்கும் பெருத்தன சிறுக்கும்
தோன்றின மறையும் மறைந்தன தோன்றும்
காண்பன அழியும் கேட்பன மறையும்
உண்டன மலமாம் உடுப்பன அழுக்காம்
கொன்றன அனைத்தும் அனைத்தும் நினைக் கொன்றன
தின்றன அனைத்தும் அனைத்தும் நினைத் தின்றன
பெற்றன அனைத்தும் அனைத்தும் நினைப் பெற்றன
ஓம்பின அனைத்தும் அனைத்தும் நினை ஓம்பின

- என ஒரு ஞானி புலம்புகிறார்.

எந்நிலையிலும் தன்னிலை மாறாதிருப்பவனே ஞானி என சத்துக்கள் சொல்லுவார்கள்.

குழந்தைகளே!

எந்த நேரமும் பொறுமையாக இருங்கள்; அமைதியாக இருங்கள்; சகிப்புத் தன்மையுடன் இருங்கள்; மௌனமாக இருங்கள்; ஆனந்தமாக இருங்கள்; கோப, தாப, வேகம் வேண்டாம்; நம்பிக்கை வீண் போகாது; இவ்வாறெல்லாம் சொல்லப்படுகிறதே, நம்மால் இருக்க முடியவில்லையே நம் நிலையில் குடும்பம். குழந்தைகள், ஏற்றத்தாழ்வு, கஷ்டம், கவலை, உடல் உபாதை, தொழில், சம்சாரம், பந்தம் இப்படி மாயையின் வடிவில் வந்து துன்புறுத்துகிறதே. நாம் என்ன செய்வது? அப்படியே கடின முயற்சி செய்து, பொறுமையாக இருந்தால் இந்த உலகம் என்ன சொல்லும்? சோம்பேறி, கையாலாகாதவன், சூடு சுரணை அற்ற ஜடம், மக்கு என்றுதானே பெயர் எடுக்க வேண்டியிருக்கிறது.

நம் நிலைக்கு தகுந்தபடி சற்று பொறுமையாக இருந்தால் நலமாக இருக்குமே! அப்படி பொறுமையாக இருந்தால் என்ன கிடைக்கும்? அதில் என்ன லாபம்? பொறுமையில் என்ன சம்பாதிக்கப் போகிறோம்? அதில் என்ன சாதிக்கப் போகிறோம்? என எண்ணுகிறீர்கள் அல்லவா? அந்த பொறுமையைப் பற்றி ஓர் கதை சொல்கிறோம். நீங்கள் கதை கேட்கும் குழந்தைகள்.

Koviloor Digital Library
உங்கள் வழியிலேயே ஒரு கதை சொல்லி உங்களை திருத்துவோம். இதில் கதாபாத்திரமாகவே மாறி ஒன்றி கேட்க வேண்டும். அப்பொழுது தான் பொறுமையின் பெருமை தெரியும்.

குழந்தைகளே!

ஒரு குளத்தில் அனேக மீன்கள் வசித்து வந்தன. வறட்சியின் காரணமாக குளத்தில் ஜலம் வற்ற ஆரம்பித்தது. ஜலம் வற்றும் நிலை தெரிந்ததும், அனேக மீன்கள் பூமியின் கீழ் உள்ள நீரோட்டத்தில் சேர்ந்து பெரிய குளங்களுக்கும், பெரிய கிணறுகளுக்கும் சென்றுவிட்டன. சில மீன்கள் பறவைகளுக்கு இரையாயின. சில மீன்கள் வலைஞர்கள் வலையில் அகப்பட்டு கதையை முடித்துக் கொண்டன.

தெய்வாதீனமாக இரு பெரிய மீன்கள் மட்டும் மிஞ்சியது. அதில் ஆண் மீன் தெய்வ நம்பிக்கை உடையது. பெண் மீன் சபலமும், அச்சமும் கொண்டது. அது ஆண் மீனைப் பார்த்து, ஸ்வாமி! நம் இனம் அழிந்து வருகிறது. இனி மழை பெய்யப் போவதில்லை. நம் குழந்தைகள், இன ஜன பந்துக்கள் தம் இடத்தை காலி செய்து வேறு இடத்திற்கு பத்திரமாகச் சென்று விட்டார்கள். நாமும் சென்று விடலாம். இனத்தோடு சேர்ந்து வாழ்வது தான் நல்லது. ஊரோடு ஒத்துப் போக வேண்டும்.

என்ன தான் பக்தி இருந்தாலும், நமக்கென பகுத்தறிவு இருக்கிறதல்லவா? அது இறைவன் கொடுத்ததாகும். அதை இந்நிலையில் பயன்படுத்த வேண்டும். பயன்படுத்த வில்லையானால் அழிவது நிச்சயம். மற்றவர்கள் செல்லும் பாதையை தெய்வம் நமக்கு சூட்சுமமாகக் காட்டுகிறது. நம் புத்தி சாதுர்யத்தால் நாம் தப்பிக்க முடியவில்லையானால் தெய்வம் நேரில் வந்து ரட்சிக்காது.

Koviloor Digital Library

என் வார்த்தையை கேளுங்கள். பிறகு வருந்திப் பயன் இல்லை. வெள்ளம் வருமுன் அணை போடுபவனே விவேகி; நாம் அசிரத்தையாக இருந்தால் தெய்வத்தை நொந்து பயன் இல்லை என அடக்கமாக, பணிவாக தன் கருத்தைச் சொல்லியது. அதற்கு ஆண் மீன் சொல்லியது, பிரியே! உன்னையும், என்னையும், இந்த உலகத்தையும் சிருஷ்டித்தவன் இருக்கிறான் அல்லவா? அவனுக்கு இல்லாத அக்கறை நமக்கென்ன? பெண்ணே! அவன் ராஜ்ஜியம் தானே நடக்கிறது. இதில் உனக்கு பயம் எதற்கு? உலக ஜீவர்கள் நிலை வேறு! நம் நிலை வேறு!

பரிபூரண நம்பிக்கைக்கு என்றுமே பங்கம் வராது. எந்தெந்த நிலையில் எது மரணம் அடைய வேண்டுமோ, அதன்படி நடந்தே தீரும். நமக்கும் எந்நிலை விதித்திருக்கிறானோ? அதை மீறமுடியுமா? அவனையே சிந்தித்துக்குக் கொண்டு அமைதியாக இரு. உன் மனம் போன போக்கில் கற்பனை செய்து, சந்தேகங்களை வளர்த்து என்ன ஆகுமோ? ஏது ஆகுமோ? என அச்சம் அடையாதே.

சோகம், மோகம், பயம் இந்த மூன்றும் நமக்கு வேண்டாம். அதை பின்பற்றும் ஜீவர்கள் அதை பின்பற்றட்டும். உள்ளத்தில் உறுதியில்லாதவன் இருந்தும் இறந்தவனே. சகல பொறுப்புகளையும் அவன் வசம் ஒப்புவித்து விட்டு ஆனந்தமாக இரு. எந்த கவலையும் நமக்குத் தேவையில்லை என ஆறுதல் வார்த்தைகள் சொல்லி சமாதானப்படுத்தி, அமைதியாக, ஆனந்தமாக, சிருஷ்டித்தவனையே சிந்தித்த வண்ணம் இருந்தது.

ஸ்ரீஅடியார்களாகிய உங்களை ஏற்றிச் செல்லும் ஓர் ஓடமாகவோ, அல்லது நீங்கள் ஏறிச்செல்லும் படிக்கட்டுகளாகவோ ஸ்ரீசத்குருநாதரை மாற்றவும். எந்நிலையிலும் உங்கள் திருவடிக் கமலங்களின் தூசி இதன் சிரசில் படவேண்டும். அந்நிலையினை நீங்கள் அனைவரும் அடைந்து, ஆனந்திக்கும் பிரம்மானந்த

Koviloor Digital Library
நிலை பெற வேண்டுமென பிரார்த்திக்கிறது. இனி கதைக்கு வருவோம்.

அந்த குளத்தில் நீர் வற்றி விட்டது. சகதிதான் மீதி இருந்தது. ஒரு ஜீவராசியும் அந்த குளத்தில் இல்லை; எல்லாவற்றினுடைய கதையும் முடிந்து விட்டது. இந்த இரண்டு மீன்களும் ஜலத்திற்குள் போக முடியாமலும், வெளியே வர முடியாமலும் திணறின.

அந்நிலையில் பெண் மீன் சொல்லுகிறது, ஸ்வாமி! பொறுமை பொறுமை என்கிறீர்களே, பொறுமைக்கு எங்கே இருக்கிறது பெருமை? இனி நம் கதையும் முடிந்தது தான். இன்னும் ஒரு நாளோ? இரண்டு நாளோ? நான் சொன்னதை முன்பே கேட்டிருந்தால் இந்நிலை நேர்ந்திருக்குமா? இனி தெய்வம் என் செய்யும்? நமக்கு அவகாசம் கொடுத்துப் பார்த்தது, நாம் அதைப் பயன்படுத்தவில்லை. விதியின் வழியே மதி செல்லும் என்ற பழமொழிப்படி நம் விதி முடிந்தது என இரங்கி கூறிற்று.

அந்நிலையிலும் ஆண்மீன் ஆத்திரமோ, கோபமோ இல்லாமல் அமைதியாகச் சொன்னது: கண்மணி! இப்பொழுது என்ன நடந்து விட்டது? ஏன் ஆத்திரப் படுகிறாய்? அவன் கருணையினால் எது நடக்குமோ அது நடந்தே தீரும். பொறுமை கடலினும் பெரிது; அதை விளக்க முடியாது; சற்று பொறு, அமைதியாக ஆனந்தமாக இருக்கப் பழகு. இறைவன் உன்னை கை விட மாட்டான் என்றது.

காலை புலர்ந்தது. ஒரு வலைஞன் வந்தான். இரு மீன்களும் சகதியின் மேல் கிடந்ததால் இரண்டையும் தூக்கி கூடைக்குள் போட்டுக் கொண்டு, இன்று நாம் நரி முகத்தில் விழித்திருக்கிறோம், நமக்கு நல்ல வேட்டை என எண்ணிக் கொண்டு வீட்டிற்குச் சென்றான்.

Koviloor Digital Library

கூடைக்குள் இருந்தபடியே பெண்மீன் சொல்கிறது, பிராணநாயகா! உமது பக்தி என்ன ஆயிற்று? உமது நம்பிக்கை என்ன ஆயிற்று? இனி இறைவன் என்ன செய்வார்? நம் கதை இன்னும் சில மணிநேரங்களில் முடியப் போகிறது? இறைவனை நம்பி என்ன சுகத்தைக் கண்டோம்? என வருந்திற்று.

அதற்கு ஆண் மீன் சொன்னது, பெண் பாவாய்! ஏன் சந்தேகங்களை உண்டு பண்ணி உன் கற்பனை மூலம் கலங்குகிறாய்? ஏன் பதறுகிறாய்? இறைவன் கருணையை என்னவென்று சொல்வது? இறைவன் நம் நிலை கண்டு இறங்கி வலைஞனாக வந்து நம்மை தூக்கிச் செல்கிறான். யாருக்குமே கிடைக்காத பேறு நமக்கு வாய்த்திருக்கிறது. பெண்களின் நாயகமே! **அமைதியாக இரு, ஆனந்தமாக இரு, பொறுமையே உனக்கு அணிகலன். அவனை நம்பினார் கெடுவதில்லை. இது நான்கு வேதத்தின் தீர்ப்பாகும் என அமைதிப்படுத்தி இறை சிந்தனையில் மூழ்கியது.**

வலைஞன் வீட்டிற்கு வந்தான். தன் மனைவியை, அடியே! இங்கு வா என அழைத்தான். நமக்கு இன்று நல்ல வேட்டை. இரண்டு பெரிய மீன்கள் கிடைத்திருக்கிறது. பொரித்து வை. நான் நதியில் நீராடி விட்டு வருகிறேன் என சொல்லிச் சென்றான். அவன் மனைவியும் ஓர் மண் சட்டியை எடுத்து அதில் மீன்களை போட்டு, அவை மூழ்கும் அளவுக்கு ஜலம் விட்டு வீட்டு முற்றத்தில் வைத்துவிட்டு அரிவாள்மனையைத் தேடிச் சென்றாள்.

ஜலம் இல்லாததால் பாதி உயிர் போன மீன்கள் ஜலம் விட்டதும் புத்துயிர் பெற்றன. அந்நிலையில் பெண்மீன் சொன்னது, ஸ்வாமி! சட்டி அளவு வந்து விட்டோம். அம்மணி அரிவாள் மனையை தேடி எடுக்கச் சென்றுவிட்டாள். இன்னும் இரண்டொரு நிமிடங்களில் நம் கதை முடிந்து விடும். நீங்கள் சொல்லிய உயரிய கருத்துக்கள் அனைத்தும் வீண். இந்நிலையில்

Koviloor Digital Library

வந்து எந்த இறைவன் எப்படிக் காப்பாற்றுவார்? வீணாக தெய்வ பலத்தை நம்பி கெட்டுப் போனோம். பொறுமை, அமைதி, சாந்தம், சகிப்புத்தன்மை, நம்பிக்கை இவை அனைத்தும் வார்த்தை அளவே, அவை உண்மை அல்ல. யாரோ எழுதி வைத்தார்கள். அதை நம்பி நீங்களும், நானும் கெட்டுப் போனோம். அவை நடைமுறைக்கு ஒத்துவராதவை, இவை அனைத்தும் நம் துன்பத்தின் மூலம் நம் தூல அவஸ்தையால் பொய் என உணர்கிறேன் எனச் சொல்லி அழுதது.

பெண் மீனின் துயரத்தைக் கண்டு ஆண் மீன் ஒரு புன்முறுவலுடன் பேதாய்! பெண்புத்தி பின் புத்தி என காட்டிவிட்டாயே. உன் தூல உணர்வுக்கு அடிமையாகி சர்வ ஜீவதயாபரனை இகழ ஆரம்பித்தனையே. அவன் கருணையை நீ உணராய் போலும்? இப்பொழுது என்ன நடக்கிறது என உணர்ந்தாயா?

அடிபேதைப் பெண்ணே! நம் அன்னை ஸ்ரீலோகமாதா எவ்வளவு கருணையுடன் நாம் இறவாவண்ணம், இந்த மண்சட்டியில் வைத்து, நம் உயிர்நாடியாகிய ஜலத்தை விட்டிருக்கிறாளே! அப்படி கருணை உள்ளம் கொண்டவளை புகழாமல் இகழ்கிறாயே? உன் மனோ கற்பனையே உன்னை சிரமப்படுத்துகிறது. அந்த கற்பனையை உயரிய கருத்தாக எடுத்தால் உனக்கு துன்பம் தோற்றாது.

பெண்ணே! நம் ஐயனும், அன்னையும் எவ்வளவு கருணை உள்ளவர்கள் என்பதை நீ உணராய் போலும். ஒவ்வொரு விநாடியும் தன்னை நம்பும் அடியார்களுக்கு வேண்டுவன கொடுத்து போஷிப்பதில் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள்.

வீணே தூல நோவால் அதிர்ந்து, மனதை சந்தேக வீபரீதத்திற்கு உள்ளாக்கி, தனக்கு கொடுத்திருக்கும் ஒரு பங்கு

Koviloor Digital Library

முயற்சியையும் அவன் சார்பில் விடாமல் அபிமான அஹங்காரத்துடன் தன்னை தானே காப்பாற்றிக் கொள்வதாக சங்கல்பித்து, வீண் சிரமங்களை தனக்குத்தானே உண்டு பண்ணிக் கொண்டு அவதிப்படுகிறார்கள். அந்த ஒரு பங்கு முயற்சியையும், அவன் சார்பில் விட்டு விட்டால் அவன் கருணை ஒன்பது பங்கும் சேர்ந்து நம்மை காப்பாற்றும்.

பேதையே! சற்று பொறு, அமைதியாக இரு. அவன் அருள்படி தானே நடக்கும் என உரைத்துக் கொண்டிருக்கும் போதே திடீர் என மேகம் குமுறி இடிஇடித்து கருணை மழை சோ..வென கொட்டியது. இறைவன் கருணை மழையால் ஓட்டின் ஜலம் சட்டியில் வேகமாக விழ, சட்டி நிறைந்து கவிழ இரு மீன்களும் அந்த ஜலத்தின் வேகத்தால் தெருத் தண்ணீருக்கு வந்து விடுகிறது. தெருத் தண்ணீர் காண் தண்ணீருடன் சேர்ந்தது. காண் தண்ணீர் ஓடையில் சேர்ந்தது. ஓடை நதியில் சேர்ந்தது. நதி சமுத்திரத்தில் கலந்தது. இறை கருணையால் அந்த இரு மீன்களும் ஆனந்த சமுத்திரத்தை சேர்ந்து பிரம்மானந்தத்தை அனுபவித்தது.

குளம், ஓடை, நதி வற்றலாம். சமுத்திரம் வற்றுமா? இத்தன்மையதே உங்கள் நிலையும். இனியாவது அமைதியாக, பொறுமையாக, சாந்தியாக, மிகுந்த சகிப்புத் தன்மையுடன் ஆனந்தமாக உலகக் காட்சிகளை பார்த்து கொண்டிருக்கப் பழகுங்கள்.அந்த பழக்கத்தினால் ஆனந்த சமுத்திரத்திற்கு செல்லலாம்.

குழந்தைகளே!

இது கதையல்ல. உங்களுக்காக உங்கள் மனோ நிலைக்காக, உங்கள் கேள்விகளுக்காக, உங்கள் வேண்டாத கற்பனைகளுக்காக உங்கள் ஸ்ரீஅன்னை தந்தையர் தந்த வரப்பிரசாதமாகும். தூல வேதனைகளுக்கும், குடும்ப பாரத்திற்கும் நீங்கள் காரணம் அல்ல. வினையை தூலம் அனுபவித்தே தீரும். அதை மறக்க ஸ்ரீஅன்னையின் கருணையை

Koviloor Digital Library

நாடுங்கள். ஆனால் கேட்பது அழியும். கேட்பது அபிமானத்தையும், ஆணவத்தையும் உண்டு பண்ணும். உங்கள் பிரார்த்தனையாவது:

ஸ்ரீஅன்னையே! மஹாமாயை கழன்ற இடத்தில் உன் நிலை எதுவோ அதை உணர்த்துவாய். அம்மா! நீயும் நானும் கனியே. நம் இருவருக்கும் நடுநாயகமாய் இருப்பது சுவையே. அந்த சுவையே ஸ்ரீசிவமாகும். அந்த சுவையாகிய ஸ்ரீசிவமாக மாற்று என உருகி வேண்டவும். கருணையின் அன்னை கொடுக்க காத்துக் கொண்டிருக்கிறாள்.

குழந்தாய்! ஸ்ரீ திருமாலின் 10 அவதாரங்களை அனேக தரம் படித்திருப்பாய். கேட்டிருப்பாய். மனப்பாடமாக கிளிப்பிள்ளையைப் போல் சொல்லவும் கற்றிருப்பாய். அந்த பத்து அவதாரத்தையும் (குறிப்பாக எட்டில் பூர்த்தி ஆகிறது) ஜீவகளை களைந்த உன் சுயரூபமாக உணர வேண்டும். இது ஸ்ரீகண்ணன் கூற்று! உணர்க!

1) மத்ஸய அவதாரம்:

ஒரு ஜீவனானவன் சதா இச்சையின் வழியில் மனதை செலுத்தி, மலத்தை யாசித்த வண்டு போல சர்வ சதா ஸ்தீரியாதி போக போக்கியங்களில் ஆழ்ந்திருப்பவன் என கொள்க. மீனுக்கு ஜலம் தவிர வேறு இடத்தில் இருக்க முடியாது. இருந்தால் உயிர் தரியாது. இந்நிலையை இந்த அவதாரத்தில் உணர்க.

2) கூர்ம அவதாரம்:

அந்த சகதியில் உழன்றாலும் தான் அனுபவித்தது போக மிச்ச மீதியை பிற ஜீவர்களுக்கும் கொடுத்து, கொஞ்சம் புண்ணியத்தை தேடிக் கொள்ளுதல் எனக் கொள்க. ஆமை தண்ணீரிலும் வாழும்; தரையிலும் வாழும்; இதை இந்த அவதாரத்தில் உணர்க.

Koviloor Digital Library

3) வராக அவதாரம்:

அந்த சகதியில் முழுக்க மூழ்காமல் இருந்தாலும், அது சம்பந்தப்பட்ட(கழிவுகளை தரையில் கீறி எடுத்து உண்பது போல) துர்தேவதைகளை உபாசனை பண்ணி அதனால் பிற ஜீவர்களை துன்பப்படுத்தி, அதை துன்பம் என உணராமல் ஆனந்திப்பவன் எனக் கொள்க. பன்றி சகதிகளையும், குப்பைகளையும் தான் கிளறும். அதைப் போலவே கோரமான வழிபாடுகள் என உணர இந்த அவதாரம் என உணர்க.

4) நரசிம்ம அவதாரம்:

அதிலும் சற்று தெளிவடைந்து கருணை, அகிம்சை இவைகளோடு கூடியிருந்தாலும் சினம், அபிமானம், அஹங்கார, மமஹாரத்தோடு கூடினவனாய் முழு ஜீவத்தன்மையும் இல்லாமல் அரைகுறை வேதம் கற்றவனாய், ஒரு சில ஜீவர்களுக்கு நன்மை செய்து கொண்டு, அந்த புண்ணியத்தின் பயனாக மனுஷ்ய ஜன்மா பெற தகுதி ஆகிறான்.

5) வாமன அவதாரம்:

மனுஷ்ய ஜன்மா பெற்றவன் வேதம், சாஸ்திரம், புராணம், இதிகாசம், மந்திரம் இவைகளை கற்றுக் கொண்டு மெய்யுணர்வு இல்லாமல் சில ஜீவர்களை திருப்திபடுத்த, சில ஜீவர்களை அழித்து அந்த கர்மாவை எஃயத்தின் மூலமாக மறைத்து, மறைந்த கர்மா அடுத்த ஜன்மாவுக்கு வழி வகுத்துக் கொடுக்க, அதை உணர்ந்து தம் பிறவியின் காரணத்தை அறிந்து அந்த பிறவி நீக்கத்தை தெரிந்து கொள்ள அடுத்து ஓர் புனித பிறவி! எடுக்கிறான். அதை இந்த அவதாரம் உணர்த்துகிறது.

6) பரசுராம அவதாரம்:

புனிதமான பிறவி எடுத்தவன், சகல கலை ஞான சாஸ்திரங்களையும் கற்று குறைவற நிறைவு செய்து, ஸ்ரீபரம்பொருள் அனுக்ரஹத்தால், ஸ்ரீமாதா, பிதா சேவை செய்து தன்னை முழுமையாக அர்ப்பணித்து

Koviloor Digital Library
மஹாதபஸ்வியாய், சகல சக்திகளையும் பெற்று பேரானந்தம் அடைந்து, பிரம்மானந்தம் கிட்டாமல், அதை அடைய தடை செய்வது எது? என உணர்ந்து கொள்ள ஸ்ரீபரம்பொருளை வேண்ட, இவன் தகுதி கண்டு ஸ்ரீபரம்பொருள் இவன் ஸ்ரீமாதா பிதா சேவையை முடித்து விட்டான்; மேலும் சகல சக்திகளையும் பெற்றிருந்தாலும் மனம் அழிவதற்கு ஸ்ரீசத்குரு சேவையும், அவர் பரிபூரண ஆசியும் பெறவேண்டும் என திருவுள்ளம் கொண்டு, அவனுக்கு அடுத்து ஓர் ஜீவ ஆன்மாவாக பிறவி கொடுக்கிறது என இந்த அவதாரம் உணர்த்துகிறது.

7) ஸ்ரீ ராம அவதாரம் :

ஞான அமிர்தத்தில் (பாயசம்) தோன்றிய ஸ்ரீராமன் முன்ஜன்ம தொடர்பை உணர்ந்து ஸ்ரீமாதா பிதா சேவையை முன்பே பூர்த்தி செய்து விட்டோம்; இனி ஸ்ரீசத்குரு சேவையும், அவர் உபதேசமும் பெற வேண்டும் என்ற உறுதியுடன் ஸ்ரீசத்குரு சேவையில் ஈடுபட்டு, அந்த சேவையின் பயனாக பணிவு, அடக்கம், பக்தி, சிரத்தை, ஞானம், ஆனந்தம், மஹாசாந்தம், சகிப்புத்தன்மை, புலன் அடக்கம், சகலத் தியாகம் இவைகளை வழிமுறையாக ஸ்ரீசத்குருவிடம் இருந்து கற்று, அவர் பரிபூரண ஆசி பெற்று, உலகியல் ஜீவர்களுக்கு வழி காட்டுவதற்காக (கற்றாலும், கேட்டாலும் ஒருவருக்கு சொன்னாலும் போதாது) அதை அனுபவ ரீதியாக வாழ்ந்து, தாம் ஸ்ரீபரம்பொருளாக இருந்தாலும் (இந்நிலையை அடைந்தாலே அவன் ஸ்ரீபரம்பொருள்தான்! ஆங்கு மனம் இல்லை) அதை உலகுக்கு காட்டாமல், தாம் சக்கரவர்த்தி குமாரன் என உரைத்து, தம்மை மறைத்து தேவர்களுக்கும், தேவ ரிஷிகளுக்கும் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து, அவர்கள் ஆசி பெற்று ஸ்ரீசத்குரு பரிபூரண கடாட்சத்தினாலும், ஸ்ரீமஹான்கள் பரிபூரண ஆசியினாலும் ஜீவ களை களையப் பெற்று ஸ்ரீஆத்மா ராமன் ஆகிறான்.

Koviloor Digital Library

8) ஸ்ரீ கிருஷ்ணாவதாரம்:

மனம் இறந்து ஆத்ம சொரூபம் பெற்றாலே அது ஸ்ரீபரமாத்மாதான். இதை உணர்த்தும் நிமித்தம் அயோனி சம்பந்தனாய், கர்ம சம்பந்தம் இல்லாமல் மாயா சரீரம் எடுத்து எம்மை பின்பற்றினால் நீங்களும் எம்போல் மாயாசரீரம் எடுக்க முடியும், இந்நிலையில் யோக மாயை உங்கள் பிடியில் இருக்கும், சர்வ அண்டங்களிலும் நிறைந்து இருக்கும் தன்மையைப் பெறுவீர்கள் என உணர்த்தி இந்நிலையில் எவ்வளவு சித்துக்கள் நடந்தாலும் அவை மாயாமாயம் என அறிவுறுத்தி சர்வ பரிபூரணானந்த ஆத்மசாக்ஷாத்காரம் ஆகுதல் எனக் கொள்க.

Koviloor Digital Library

முடிவுரை

அன்பின் செல்வங்களே!

இந்த கலியுகத்தின் கோரப்பிடியில் எந்த வல்லமைகளும் தோற்றக் கூடாது. ஓர் ஞானி எப்படி இருக்க வேண்டும் என்றால், ஆள் அரவம் கேட்டவுடன் ஆமை எப்படி தன்பொறிகளை உள் இழுத்துக் கொண்டு, ஓடு மாத்திரமாக தோற்றுகிறதோ, அப்படி தனக்குள்ளேயே ஒடுங்கிக் கொள்ள வேண்டும். இந்த உலக மாந்தருக்கு காட்டக் கூடாது.

அடக்கம், பணிவு, சாந்தம், மஹா சாந்தி, ஓர்மை, சகிப்புத் தன்மை, ஆனந்தம் இவைகளைக் கொண்டு உன்னை மூடிக்கொள், முத்து தானே விளையும்.

- தூளி

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 12368

Koviloor Digital Library

Koviloor Digital Library